திருக்குறள்

வாழ்வியல் உரை



மதுரை இளங்குமரனார்

திருக்குறள்

(நம் மறை)

வாழ்வியல் உரை

உரை

செந்தமிழ் அந்தணர்

மதுரை இளங்குமரனார்

வெளியீடு

திருவள்ளுவர் நிலையம்

7, இராமன் தெரு, திருநகர், மதுரை - 625 006.

நூல் விளக்கம்

நூலின் பெயர் — **"திருக்குறள் (நம் மறை) வாழ்வியலுரை"**

ஆசிரியர் — **செந்தமிழ் அந்தணர் மதுரை இளங்குமரனார்**

மொழி — தமிழ்

மறுபதிப்பு — தி.ஆ : 2048 (கி.பி. 2017)

தாள் — 18.6 மேப்லிதோ

புத்தக அளவு — தெம்மி (1/8)

பக்க அளவு — (௫௨)+292=344

படிகள் — 800

விலை — உருவா. 150/-

கணினி அச்சும் & அச்சாக்கமும் : **தி பிரிண்டிங் அவுசு,**
6, ரேசுகோர்சு ரோடு,
திருச்சி - 23, தமிழ்நாடு, இந்தியா
தொலை பேசி : 0431-2420121

வெளியீடு — **திருவள்ளுவர் நிலையம்**
7, இராமன் தெரு, திருநகர், மதுரை - 625 006.

திருக்குறள் பயன்

மாந்தனை மாந்தன் ஆக்குவது திருக்குறள்;

மாந்தனைச் சான்றோன் ஆக்குவது திருக்குறள்;

மாந்தனைத் தெய்வம் ஆக்குவது திருக்குறள்;

மாந்தனை இறைவன் ஆக்குவது திருக்குறள்;

மாந்தனைப் பெயராக் கடவுட் பெருநிலையில்

ஒன்றச் செய்வதும் திருக்குறள்

திருக்குறள் செம்பொருள் நுகர்வு

"மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்"

"நன்றின்பால் உய்ப்ப தறிவு"

திருக்குறள் முழக்கங்கள்

"ஒத்த தறிவான் உயிர்வாழ்வான்"

"அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை"

திருக்குறள் நம் மறை.

நம் மறை - முதற் பதிப்புரை

"அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை" என்னும் மூல முழக்கத்தைக் கொண்ட திருக்குறள், நம் வாழ்வியல் நூல் எனக் கண்டுணர்ந்தோம்.

அந்நோக்குடன், இருபதாம் நூற்றாண்டில் 'திருக்குறள் நம்மறை' என்னும் ஒரே அடிப்படைக் குறிக்கோளொடு தோன்றியனவே குறளியமும் - குறளாயமும்.

தெய்வப் புலவர் அருளிய திருக்குறள் நேரிய வாழ்வியல் நெறியைக் காட்டியும் இதுகாறும் தோன்றியுள்ள உரைகள் மக்களையும் கைக்கொளப்புகும் எம்மனோரையும் குழப்பத்தில் ஆழ்த்தின.

கரணியம், அவ்வுரைகள் அவரவர் மேற்கொண்ட சமயச் சார்பு அழுத்தங்கள், இறையிலிக் கொள்கைகள் என்னும் அடிப்படையில் அமைந்தமையேயாம். உரைகள் இவ்வாறாகவே மொழி பெயர்ப்புகளும் இவ்வாறே அமைந்தன.

புதுமை நோக்கால் குறுக்கியும் நீக்கியும் பிரித்தும் மாற்றியும் உரையில் தம் புலமையைக் காட்டிய சிலவும் பயனிலவாயின.

இவற்றால் திருக்குறளின் குறிக்கோளைக் கண்டுணர்ந்து வாழ்ந்தோராக நாம் மலர்ந்தோமில்லை.

வாழ்வியலுக் குரியதாகவும் இறைமைக் கொள்கைக்கு வழிகாட்டுவதாகவும் திருக்குறளைக் காணும் போதுதான் அது நம்மோடும் ஒட்டும்.

இவ்வுண்மையையே நெஞ்சில் நிறுத்திப் பெருந்தமிழ்ப் புலமை, பல்துறை அறிவு, சங்க நூல் ஆய்வு, சொல்லாக்கத் திறம், அருளுடை அந்தண்மை ஆகியவற்றோடு இலங்குபவர் ஒருவரால் தாம் இவ்வுரை வழங்க முடியும் என்பதை உணர்ந்து காத்திருந்தோம்.

இயற்கை எங்களுடன் இயங்கியது. எங்கள் நல்லாகூழ் - நற்பேறு, மேற்குறித்த பண்புகளை முழுதுறப் பெற்ற பெருமகனார் இலக்கியச் செம்மல் மதுரை இளங்குமரனார் திருக்குறள் (நம் மறை) வாழ்வியல் உரை வழங்க எங்கட்கு அமைந்தார். குறளாயத்திலும் பொறுப்பேற்றார்.

குறளாய அறிஞர் அவையில் வாழ்வியலுரை எழுத்துப் படிவம் அரங்கேற்றப்பட்டு - சிந்திக்கப்பட்டு - ஒப்புதல் தரப்பட்டது.

வாழ்வியலுரை வழங்கிய இலக்கியச் செம்மல் அவர்கள், தெய்வப் புலவர் பெற்ற அறிவார்ந்த மக்கட் பேறுகளில் நல்லிடம் பெறுகிறார். நாமும், நாடும், உலகும் நன்றிக் கடன் கொள்கிறோம்.

இந்நூலை அச்சிடத் தாளும் அச்சுச் செலவும் ஏற்ற 'வேலா அறக்கட்டளை'யின் காப்பாளர்களாகிய வேலா சந்திரா அம்மையார். மா.சக்திவேலர், ச.வேல் பூங்கொடி, வேல் மலர்கொடி, வேல் சுடர்க்கொடி, செந்தில், வேலரசு ஆகிய எழுவருக்கும் 'உயிர்க்கு ஊதியம்' என்னும் தெய்வப் புலவரின் நல்வாக்குச் சேர்வது காண நாம் பேருவப்பு அடைகிறோம்.

திருக்குறட் செந்நெறியைச் சார்வதற்கும் துய்ப்பதற்கும் அணியமாவோம்.

திருக்குறள் குடும்பம் திருக்குறள்வழிக் குமுகாயம் திருக்குறள் நெறிப் பேராட்சி ஆகிய இன்னவையே குறளியம், குறளாயம்!

நண்புடன்

வேலா அரசமாணிக்கம்

ஆசிரியர் - குறளியம்

அறிவாண்மைத் திங்களிதழ்;

தலைமை அமைப்பாளர் - குறளாயம்,

அறிவாண்மை இயக்கம்.

ஈரோடு

3.10.90

உள்ளுறை

பொருள்	பக்கம்
1. நம்மறை - முதற்பதிப்புரை	
2. திருக்குறள் அதிகார அகராதி	எ
3. திருவள்ளுவர் வரலாறு	கூ
4. திருவள்ளுவர் ஆண்டும் நாளும்	ம
5. திருவள்ளுவரைக் குறிக்கும் பிறபெயர்கள்	மக
6. திருக்குறளைக் குறிக்கும் பிறபெயர்கள்	மஉ
7. திருக்குறளைத் தம்மில் ஒரு பகுதியாக வைத்துப் போற்றும் விளக்க நூல்கள்	மரு
8. புகழ் மாலை	மசு
9. வள்ளுவத்தின் வான்புகழ்	உஉ
10. வாழ்வியலுரைக்கு ஒரு முன்னோட்டம்	உரு
நூல் : அறத்துப்பால்	1
பொருட்பால்	79
இன்பத்துப்பால்	221
செய்யுள் முதற்குறிப்பு அகர வரிசை	272

திருக்குறள் அதிகார அகராதி

எண் - அதிகார எண்

அடக்கமுடைமை	13	ஒழுக்கமுடைமை	14
அமைச்சு	64	ஒற்றாடல்	59
அரண்	75	கண்ணோட்டம்	58
அருளுடைமை	25	கண் விதுப்பு அழிதல்	118
அலர் அறிவுறுத்தல்	115	கயமை	108
அவர்வயின் விதும்பல்	127	கல்லாமை	41
அவா அறுத்தல்	37	கல்வி	40
அவை அஞ்சாமை	73	கள்ளாமை	29
அவை அறிதல்	72	கள்ளுண்ணாமை	93
அழுக்காறாமை	17	கனவுநிலை உரைத்தல்	122
அறன் வலியுறுத்தல்	4	காதல் சிறப்பு உரைத்தல்	113
அறிவுடைமை	43	காலம் அறிதல்	49
அன்புடைமை	8	குடி செயல் வகை	103
ஆள்வினை உடைமை	62	குடிமை	96
இகல்	86	குறிப்பறிதல் (பொருள்)	71
இடன் அறிதல்	50	குறிப்பறிதல் (இன்பம்)	110
இடுக்கண் அழியாமை	63	குறிப்பு அறிவுறுத்தல்	128
இரவு	106	குற்றம் கடிதல்	44
இரவச்சம்	107	கூடா ஒழுக்கம்	28
இல்வாழ்க்கை	5	கூடா நட்பு	83
இறை மாட்சி	39	கேள்வி	42
இறை வணக்கம்	1	கொடுங்கோன்மை	56
இனியவை கூறல்	10	கொல்லாமை	33
இன்னாசெய்யாமை	32	சான்றாண்மை	99
ஈகை	23	சிற்றினம் சேராமை	46
உட்பகை	89	சுற்றம் தழால்	53
உழவு	104	சூது	94
உறுப்புநலன் அழிதல்	124	செங்கோன்மை	55
ஊக்கம் உடைமை	60	செய்ந்நன்றி அறிதல்	11
ஊடல் உவகை	133	சொல்வன்மை	65
ஊழ்	38	தகையணங்குறுத்தல்	109
ஒப்புரவு அறிதல்	22	தவம்	27

தனிப்படர் மிகுதி	120	புணர்ச்சி மகிழ்தல்	111
தீ நட்பு	82	புணர்ச்சி விதும்பல்	129
தீவினையச்சம்	21	புலவி	131
துறவு	35	புலவி நுணுக்கம்	132
தூது	69	புலால் மறுத்தல்	26
தெரிந்து செயல்வகை	47	புல்லறிவாண்மை	85
தெரிந்து தெளிதல்	51	புறங்கூறாமை	19
தெரிந்து வினையாடல்	52	பெண்வழிச் சேறல்	91
நடுவு நிலைமை	12	பெரியாரைத் துணைக்கோடல்	45
நட்பு	79	பெரியாரைப் பிழையாமை	90
நட்பு ஆராய்தல்	80	பெருமை	98
நலம்புனைந்துரைத்தல்	112	பேதைமை	84
நல்குரவு	105	பொச்சாவாமை	54
நன்றியில்செல்வம்	101	பொருள் செயல்வகை	76
நாடு	74	பொழுது கண்டு இரங்கல்	123
நாணுடைமை	102	பொறையுடைமை	16
நாணுத்துறவு உரைத்தல்	114	மக்கட் பேறு	7
நிலையாமை	34	மடி இன்மை	61
நிறை அழிதல்	126	மருந்து	95
நினைந்தவர் புலம்பல்	121	மன்னரைச் சேர்ந்தொழுகல்	70
நீத்தார் பெருமை	3	மானம்	97
நெஞ்சொடு கிளத்தல்	125	மெய்யுணர்தல்	36
நெஞ்சொடு புலத்தல்	130	வரைவின் மகளிர்	92
பகைத்திறம் தெரிதல்	88	வலியறிதல்	48
பகை மாட்சி	87	வாய்மை	30
பசப்புறு பருவரல்	119	வாழ்க்கைத் துணைநலம்	6
படர்மெலிந்து இரங்கல்	117	வான்சிறப்பு	2
படைச்செருக்கு	78	விருந்தோம்பல்	9
படை மாட்சி	77	வினைசெயல்வகை	68
பண்புடைமை	100	வினைத்திட்பம்	67
பயனில சொல்லாமை	20	வினைத்தூய்மை	66
பழைமை	81	வெஃகாமை	18
பிரிவாற்றாமை	116	வெகுளாமை	31
பிறன் இல் விழையாமை	15		
புகழ்	24		

திருவள்ளுவர் வரலாறு

திருவள்ளுவர் ஒப்பற்ற ஓர் உலகம்; அவர், வாழும் உலகத்தைத் தம்முள் கொண்டு, அவ்வுலகுக்காகத் தம் வாழ்வை ஒப்படைத்து, ஒப்பற்ற ஒரு நூலை ஆக்கிய பெருமகனார்.

திருவள்ளுவர் தமிழகத்தில் தோன்றியவர்; தமிழகத்தில் வாழ்ந்தவர்; "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்", "ஒத்த தறிவான் உயிர் வாழ்வான்", "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படும்" என்னும் இத்தகைய பெருநெறி பற்றியவர். இறைமை முதல் எல்லாம் எல்லாம் பொதுமைக் கண் கொண்டு நோக்கியவர்; மாந்தரைத் தெய்வ நிலைக்கு ஏற்றும் மாணெறி படைத்த தெய்வர்.

திருவள்ளுவர் பன்மொழிப் புலமையர்; தம் காலத்து வழங்கிய நூற் பரப்புகளையெல்லாம் கண்டவர்; உலகியல், உயிரியல், உணர்வியல், உடலியல், குடியியல், படையியல், பொருளியல், தொழிலியல், அரசியல், மருத்துவ இயல், அருளியல், மெய்யியல் முதலாம் பல்வகை இயல்களில் திறமான புலமையுற்றவர்.

திருவள்ளுவர் இயற்கை இன்ப இல்வாழ்வை ஏற்று, அறவழி நின்று, பொருளீட்டி, இன்பந் துய்த்து, அறிவறிந்த நன்மக்களைப் பெற்று, எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு, குடும்பக் கடமையும் நாட்டுக் கடமையும் நானிலக் கடமையும் சீருறச் செய்து சிறந்த செவ்வியர்.

சான்றோர்க்கு எந்நாடும் தம் நாடே என்றும், எவ்வூரும் தம் ஊரே என்றும், அறிவறிந்த நன்மக்கட்பேறு தம் பெற்றோரினும் இப்பேருலகுக்குப் பெருநலம் செய்யுமென்றும் உலகளாவிய பெருநெறி காட்டியவர்.

பெருமூதாளராக இலங்கிய நிலையில் தம் உண்மையறிவும் படிப்பறிவும் பட்டறிவும் மெய்யுணர்வுமாகிய எல்லாம் உலகை உய்விக்குமென்னும் அருளுள்ளத்தால் திருக்குறளை உலகுக்குத் தந்து தெய்வமாப் புகழ் எய்திய இறைமையர்.

இவை வள்ளுவ வழிக் கண்டவை.

திருவள்ளுவர் ஆண்டும் நாளும்

கி.பி. 1966 சுறவ (தை)த் திங்கள் ஐந்தாம் நாள் (18-01-1935) திருவள்ளுவர் திருநாள் கழகத்தினர் நடத்திய திருவிழாவில் தலைமை பூண்டருளிய மறைமலை அடிகள், "கிறித்து பிறப்பதற்கு 30 ஆண்டுகளுக்கு முன் திருவள்ளுவர் பிறந்தார் என்பது நான் ஆராய்ந்து கண்ட முடிவாகும்" என்று அறிவித்துத் திருவள்ளுவர் ஆண்டைத் தொடங்கி வைத்தார். "திருவள்ளுவர் ஆண்டைக் கிறித்து ஆண்டுடன் 31 ஆண்டைக் கூட்டிக் கணக்கிட வேண்டும்" என்பது அடிகள் குறிப்பு. அதனை அறிஞர் அவை ஏற்றுக் கொண்டது. அன்று தொட்டு அறிஞர்களால் அவ்வாண்டு நடைமுறைப் படுத்தப்படலாயிற்று.

- திருவள்ளுவர் நினைவு மலர், பக்.117

1969 - இல் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டு ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பின் பொங்கலுக்கு அடுத்த நாளைத் திருவள்ளுவர் நாளாகக் கொண்டு அரசு விடுமுறை அளிப்பது என்றும் 1-1-1970 முதல் இது நடைமுறைக்கு வருமென்றும் ஆணை இட்டார்.

சுறவ (தை)த் திங்கள் இரண்டாம் நாளைத் திருவள்ளுவர் நாள் என்று அரசு 1974 முதல் கொண்டாடி வருகின்றது.

திருவள்ளுவர் ஆண்டு முறையைத் தமிழ்நாடு அரசு ஏற்று 1971 முதல் அரசு நாட்குறிப்பிலும், 1972 முதல் அரசிதழிலும், 1981 முதல் அனைத்து அலுவல்களிலும் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

திருவள்ளுவரைக் குறிக்கும் பிற பெயர்கள்

செந்நாப் புலவர்

செந்நாப் போதார்

திருத்தகு தெய்வத் திருவள்ளுவர்

தெய்வத் திருவள்ளுவர்

தெய்வப் புலமைத் திருவள்ளுவர்

தெய்வப் புலவர்

தேவர்

தேவர் திருவள்ளுவர்

தேவிற் சிறந்த திருவள்ளுவர்

நாயனார்

புலவர்

பெருநாவலர்

பொய்யா மொழியார்

பொய்யில் புலவர்

மாதாநுபங்கியார்

முதற் பாவலர்

வள்ளுவ தேவன் (ர்)

வள்ளுவர்

வாலறிவன்

திருக்குறளைக் குறிக்கும் பிற பெயர்கள்

அறம்

இரண்டு

உத்தரவேதம்

எழுதுண்டமறை

குறள்

தமிழ்மறை

திருவள்ளுவப் பயன்

திருவள்ளுவர்

தெய்வ நூல்

தெய்வமாமறை

நம் மறை

பழமொழி

பால்முறை

புகழ்ச்சி நூல்

பொதுமறை

பொய்யா மொழி

பொருளுரை

முதுநெறி

முதுமொழி

முப்பால்

முப்பொருள்

மெய் வைத்த சொல்

வள்ளுவ தேவன் வசனம்

வள்ளுவம்

வள்ளுவ மாலை

வள்ளுவர்

வள்ளுவர் வாய்மொழி

வள்ளுவர் வைப்பு

வள்ளுவன் வாய்ச் சொல்

வாய்மை

வாயுறை வாழ்த்து

திருக்குறளைத் தம்மில் ஒரு பகுதியாக வைத்துப் போற்றும் விளக்க நூல்கள்

இரங்கேச வெண்பா

சிவசிவ வெண்பா

சினேந்திர வெண்பா

சோமேசர் முதுமொழி வெண்பா

திருக்குறள் குமரேச வெண்பா

திருக்குறள் விளக்க வெண்பா

திருத்தொண்டர் வெண்பா

திருப் புல்லாணி மாலை

திருமலை வெண்பா

தினகர வெண்பா

பழைய விருத்த நூல்

முதுமொழி மேல் வைப்பு

முருகேசர் முதுநெறி வெண்பா

வடமலை வெண்பா

வள்ளுவர் நேரிசை

புகழ் மாலை

(திருவள்ளுவ மாலைத் தொகுப்பு)

என்றும் புலராது யாணர்நாள் செல்லுகினும்
நின்றலர்ந்து தேன்பிலிற்றும் நீர்மையது. - **இறையனார்**

தினையளவு போதாச் சிறுபுல்நீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தால். - **கபிலர்**

வள்ளுவரும் தம்குறள்வெண் பாவடியால் வையத்தார்
உள்ளுவ வெல் லாம்அளந்தார் ஓர்ந்து. - **பரணர்**

தானே முழுதுணர்ந்து தண்தமிழின் வெண்குறளால்
ஆனா அறமுதலா அந்நான்கும் – ஏனோருக்(கு)
ஊழின் உரைத்தாற்கும் ஒண்ணீர் முகிலுக்கும்
வாழிஉல கென்னாற்றும் மற்று. - **நக்கீரர்**

பரந்த பொருளெல்லாம் பாரறிய வேறு
தெரிந்து திறந்தொறும் சேரச் – சுருங்கிய
சொல்லால் விரித்துப் பொருள்விளங்கச் சொல்லுதல்
வல்லாரார் வள்ளுவரல் லால். - **அரிசில் கிழார்**

ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்ததற்பின் – போயொருத்தர்
வாய்க்கேட்க நூலுளவோ மன்னு தமிழ்ப்புலவ
ராய்க்கேட்க வீற்றிருக்க லாம். - **நத்தத்தனார்**

ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித்–தீதற்றோர்
உள்ளுதொ றுள்ளுதொ றுள்ளம் உருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு. - **மாங்குடி மருதனார்**

எல்லாப் பொருளும் இதன்பால் உளதிதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால் - சொல்லால்
பரந்தபா வால்என் பயன்வள் ளுவனார்
கரந்தபா வையத் துணை. - **மதுரைத் தமிழ்நாகனார்**

அறந்தகளி ஆன்ற பொருள்திரி இன்பு
சிறந்தநெய் செஞ்சொல் தீத் தண்டு - குறும்பாவா
வள்ளுவனார் ஏற்றினார் வையத்து வாழ்வார்கள்
உள்ளிருள் நீக்கும் விளக்கு. - **நப்பாலத்தனார்**

பொய்ப்பால பொய்யேயாய்ப் போயினபொய் அல்லாத
மெய்ப்பால மெய்யாய் விளங்கினவே - முப்பாலின்
தெய்வத் திருவள் ளுவர்செப் பியகுறளால்
வையத்து வாழ்வார் மனத்து. - **தேனீக்குடிக் கீரனார்**

அறனறிந்தேம் ஆன்ற பொருளறிந்தேம் இன்பின்
திறனறிந்தேம் வீடு தெளிந்தேம்-மறனெறிந்த
வாளார் நெடுமாற வள்ளுவனார் தம் வாயால்
கேளா தனவெல்லாம் கேட்டு. - **கொடிஞாழல் மாணிபூதனார்**

சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய
வந்த இருவினைக்கு மாமருந்து-முந்திய
நன்னெறி நாமறிய நாப்புலமை வள்ளுவனார்
பன்னிய இன்குறள்வெண் பா. - **கவுணியனார்**

கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள். - **இடைக்காடர்**

அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள். - **ஔவையார்**

இடைக்கால - பிற்காலப் புலவர்கள் இயம்புவன - பாடல்

சமயக் கணக்கர் மதிவழி கூறாது
உலகியல் கூறிப் பொருளிது என்ற வள்ளுவன். - **கல்லாடனார்**

என்னடிகள் வெண்குறள் நேர் அடியிரண்டும்
என்றலையில் இருத்தும் இறை. - **சிவப்பிரகாசர்**

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு.

திருக்குறள் உறுதியும் தெளிவும் பொருளின்
ஆழமும் விரிவும் அழகு கருதியும். - **பாரதியார்**

வள்ளுவர் செய் திருக்குறளை
மறுவற நன்குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மநுவாதி
ஒருகுலத்துக் கொருநீதி. - **பேராசிரியர் பெ.சுந்தரனார்**

வள்ளுவர் தந்த திருமறையைத் – தமிழ்
மாதின் இனிய உயிர்நிலையை
உள்ளம் தெளிவுறப் போற்றுவமே – என்றும்
உத்தமராகி ஒழுகுவமே.

புத்தகம் நூறு புரட்டிக் களைப்புற்றுச்
சித்தம் கலங்கித் திகைப்பதேன் – வித்தகன்
தெய்வப் புலவன் திருவள்ளுவன் சொன்ன
பொய்யில் மொழியிருக்கும் போது. - **கவிமணி**

தெள்ளு தமிழ்நடை சின்னஞ்சிறிய இரண்டடிகள்
அள்ளு தொறுஞ் சுவை உள்ளு தொறுணர் வாகும்வண்ணம்
கொள்ளு மறம்பொருள் இன்ப மனைத்தும் கொடுத்ததிரு
வள்ளு வனைப்பெற்ற தாற்பெற்ற தேபுகழ் வையகமே.

வானுக்குச் செங்கதிர் ஒன்று – புனல்
வண்மைக்குக் காவிரி ஒன்றுண்டுநல்ல
மானத்தைக் காத்துவாழ என்றுமிந்த
வையத்துக் கொன்று திருக்குறள். - **பாவேந்தர்**

உரைநடை

திருவள்ளுவர் நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற முப்பாலால் ஆக்கப்பட்டது. அறமும் பொருளும் காதலும் ஒரு வகுப்பார்க்கோ ஒருமதத்தார்க்கோ ஒரு நிறத்தார்க்கோ ஒரு மொழியார்க்கோ ஒரு நாட்டார்க்கோ உரியன அல்ல. அவை மன்பதைக்கு - உலகுக்குப் பொது.

திருவள்ளுவர் என்னும் நினைவு தோன்றும் போதே, உலகமும் உடன் தோன்றுகிறது. இவ்வாறு தோன்றுதற்குக் காரணமென்ன? திருவள்ளுவர் உலகையே குறளாக எழுதினார். உலகின் எழுத்தோவியம் திருக்குறள் என்று கூறலாம்.

திருவள்ளுவர் உலகுக்கு என்றே பயின்றார்; உலகுக்கு என்றே வாழ்ந்தார்; அதனால் அவர்தம் உள்ளத்தில் உலகம் நின்றது. அவர் உலகம் ஆயினார். உலகம் அவராயிற்று. இத்தகைய ஒருவரிடமிருந்து பரிணமித்த ஒரு நூல் எந்நினைவை யூட்டும்? அஃது உலக நினைவை ஊட்டுதல் இயல்பே. ஆகவே திருவள்ளுவர் நினைவு தோன்றும் போது உலகமும் உடன் தோன்றுவதில் வியப்பொன்றும் இல்லை.

திருவள்ளுவர் அருளிய திருக்குறள் என்னும் தெய்வ மறையினிடத்தில் எனக்குத் தணியாக் காதல் உண்டு. காரணம் பலப்பல. சில வருமாறு : திருவள்ளுவர் முப்பால் கூறி வீட்டுப்பால் விடுத்தது. அறப்பேற்றுக்கு இல்வாழ்க்கையைக் குறித்தது. பெண்ணை வெறுத்தல் முதலிய போலித் துறவுகளைக் கடிந்தது. மனமாசு அகற்றலே துறவென்று இயற்கை நுட்பத்தை விளக்கியது. இயற்கைப் பொதுநெறியை அறிவுறுத்தியது. இன்ன பிற.

- திரு.வி.க

செயலுக்கு வரும் அறம் கரைவது திருக்குறள்; மக்கள் வாழ வழி வகுப்பது திருக்குறள்; பல நிலை அறம் தழுவியது திருக்குறள்; எந்நிலைய மாந்தரையும் முன்னேற்றுவது திருக்குறள்; உலகு ஒட்டும், நெறிகாட்டுவது திருக்குறள்; ஒருவன் வாழ்க்கை அவனைப் பொறுத்தது என்ற உண்மை அறைவது திருக்குறள்;

வள்ளுவர் தனிப்பொது நெஞ்சம் யாது?

செயல், செயல், செயல், சொல்வது செயலுக்கு வரவேண்டும். செயலுக்கு வருமாறு சொல்ல வேண்டும் என்னும் ஓர் அடிப்படைக் கருத்தினைத் தம் நெஞ்சில் நீளஇருத்திக் கொண்டே குறள் எழுதியவர் வள்ளுவர். செயல் அடிப்படையை யாண்டும் மறவா உள்ளத்தினர் அப்பெருமகன். ஆதலால் செயலே வள்ளுவம் எனச் செய்க.

திருக்குறள் கருத்து வகையால் உலக மக்கட்கு எல்லாம் உரியது எனினும், மொழிகாரணமாய் நமக்கு உறவுடையது. ஆதலின் அதனை உள்ளவாறு நாம் உணர்தலும், உணர்ந்தவாறு மொழிபெயர்த்து உலகிடைப் பரப்பலும் நம் கடன். ஞாலத் திருக்குறளை உரிய தமிழ் வாயிலாகக் கற்க முயலுமின்! முயலுமின்! என்ற உணர்ச்சியைப் பிறமொழி மாந்தர்க்கு ஊட்டலும் நம் பொறுப்பு!

- மூதறிஞர் வ.சுப.மாணிக்கனார்

திருக்குறள் ஒரு தனித்தமிழ் நூலாகும். திருக்குறள் அயற்கொள்கை எதிர்ப்பு நூலேயன்றி எந்த ஓர் அயற் கொள்கையையும் உடன்பட்டுக் கூறும் நூல் அன்று, 'தமிழர் வாழ்வே திருக்குறள். திருக்குறளே தமிழர் வாழ்வு' என்னும் அவ்வளவு இன்றியமையாச் சிறப்பினையுடைய நூல் திருக்குறள்.

- திருவள்ளுவர் செய்த திருக்குறள் (நூல்)

தீங்கனியாகிய ஒரு மாம்பழத்தைப் பிழிந்தால் எவ்வளவு சாறு தேறும்? சிறு அளவிற்றாய சாற்றினைச் சுண்டக் காய்ச்சிக் கற்கண்டு சேர்த்து துண்டாக்கினால் ஒக்க, திரண்ட காப்பியங்களையெல்லாம் பிழிந்து வடித்துக் காய்ச்சித் திரட்டிய தீந்தமிழ்ச் சாற்றுக் கட்டியே திருக்குறள்.

- மறைமலையடிகளார்

தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் மக்கள் உய்யத் திருவாய் மலர்ந்தருளிய தமிழ்மறை, உலகிருள் அகற்ற வந்த ஒற்றைத் தனியாழிப் பரிதி என்னின்; 'மனத்துக் கண் மாசிலனாதல் அனைத்தறன்' என்னும் குறட்பா அவ்வாழியின் அச்சாணி எனத்தக்க அருமை உடையதாதல் கண்டு உணர்ந்து உளங்கொளற் பாற்று.

- நாகை சொ. தண்டபாணியார்

வள்ளுவர் குறள் தமிழில் தனிமுதல் அறநூலே.

- நாவலர் பாரதியார்

உலகப் பெருஞ்சான்றோர்கள் உரைப்பன

திருக்குறளைப் பற்றிச் சில செம்மொழிகள் உங்கள் வரவேற்பில் மிளிர்கின்றன. இருபது ஆண்டுகளுக்கு முன்னரே யான் தமிழ் பயிலத் தொடங்கியதற்குக் காரணம் திருக்குறள் மூலத்தையே நேராகப் படித்தல் வேண்டும் என்று என் உள்ளத்தில் எழுந்த ஆர்வமேயாம்.

- காந்தியடிகளார்

வள்ளுவர் தம் குறளில் எளிய உயரிய வாழ்க்கையை இயல்பாகச் சிந்தித்துள்ளார். மாந்தன் தனக்குத்தானே செய்து கொள்ள வேண்டிய கடமைகள் உலகத்திற்குச் செய்ய வேண்டிய கடமைகள் முதலிய பலதரப்பட்ட கேள்விகளுக்கு வள்ளுவர் தரும் விடைகள் பெருந்தன்மையுடையன;

அறிவுக்குப் பொருந்துவன. இத்தகைய உயரிய அறிவு நிறை முதுமொழிகளை உலக இலக்கியங்கள் எவற்றினும் காண இயலாது.

- ஆல்பர்ட்டு சுவைட்சர்

திருக்குறளை நன்றாய்க் கற்பவர்களுக்கு வேறு கல்வி வேண்டியது இல்லை என்பது என் துணிவு. பேரறிஞர் மெக்காலே பிரபுவின் புத்தகக் களஞ்சியம் முழுவதையும் விட இவ்வியப்புக்குரிய நூல் ஒன்று மட்டும் சாலச் சிறந்தது என்றும், மாந்தர் இனத்திற்கு மிக நன்மை பயக்கக் கூடியது என்றும் எண்ணுகின்றேன்.

தமிழர்களாகிய நாம் நம்முடைய பழந்தமிழ் நாகரிகத்தை எல்லாம் இழந்து வருவதாகப் பகர்கிறோம். பொருநை காவிரி முதலிய ஆறுகளையோ, திருக்கோயில்களையோ அரண்மனைகளையோ பிற வளங்களையோ இழக்க நேர்ந்தாலும் திருக்குறளை இழக்க மாட்டோம்.

- எம்.எசு.மைக்கேல்

ஒரு பிரிவினர்க்கே உரிய கோட்பாடுகளைக் கொள்ளாது விலக்கி, உலகமக்கள் அனைவருக்கும் ஒருங்கே பொருந்தும் உண்மைகளையே தெரிந்தெடுத்துத் திருவள்ளுவர் மொழிந்துள்ளார். இவ்விரிந்த உணர்வால் மற்றை மனு முதலிய நூல்களில் கூறப்பெறும் கண்மூடித்தனம் எதுவும் இன்றி நூல் மேலோங்கித் திகழ்கின்றது.

- அறிஞர் துறு

இன்பத்துப்பாலை அனைவரும் குற்றமற்ற முறையில் படித்து இன்புறுமாறு எழுதப்பட்டிருத்தல் பாராட்டத்தக்கது.

- போப் ஐயர்

திருக்குறள் அமைப்பு வகையாலும் பாவகையாலும் வடமொழித் தொடர்பு சிறிதும் இல்லாமல் தனித்தியங்கும் தனிப் பெருமையுடையது.

- இராபர்ட்டு கால்டுவெல்

திருக்குறள் மேலும் விரித்துரைக்க இயலாத கட்டுத்திட்ட அமைப்புடையது. அது சீரிய பளிங்குக் கல்பரப்பு. அதன் ஒரு சிறு கல்லின் அமைப்பிலோ வடிவிலோ வண்ணத்திலோ சிறியதொரு மாற்றம் செய்தாலும் அப்பரப்பின் முழுதுறு அழகும் பழுதுறும். குறள் தூய செந்தமிழால் இயன்றதொரு நூல். நல்லொழுக்கமே விளை நிலமாய் அமைந்த ஒரு நாட்டிலன்றி இத்தகைய நூல் தோன்றாது.

- முனைவர் இலாசரசு

திருக்குறள் வழங்கும் செவ்விய இன்பம் இத்தகையது என்று எந்த மொழி பெயர்ப்பாலும் ஒரு சிறிதாயினும் கொடுக்க இயலாது. திருக்குறள் உண்மையாகவே வெள்ளியால் செய்யப் பெற்ற எழிற்பேழையில் இட்டு வைக்கப் பெற்ற பொன் ஆப்பிள் பழம் போன்றது ஆகும்.

- முனைவர் கிரௌல்

ஒருநாள் வழக்கப்படி திருக்குறள் படித்த போது 'தாமின் புறுவ துலகின் புறக்கண்டு காமுறுவர் கற்றறிந் தார்' எனக் குறள் ஒன்று தென்பட்டது. அதைப் பார்த்துத் தமிழர்கள் திருக்குறளைப் படித்துச் சுவைப்பது போல் உருசியக்காரர்களும் படித்துச் சுவைக்குமாறு ஏற்பாடு செய்யலாமா என்று நினைத்துக் கொண்டேன்.

- எம். அந்திரோனவ்

திருக்குறளை ஓதி உணர்ந்தால் அல்லது எவனும் தமிழறிந்தவன் என்று கூறிக்கொள்ள முடியாது.

- பிரடெரிக்கு பின்காட்டு

வள்ளுவத்தின் வான் புகழ்

தால்சுதாய் 1906-இல் 'இந்து ஒருவருக்கு எழுதப்படும் கடிதம்' என்பதை எழுதியுள்ளார். அதில் திருக்குறளை 'இந்துக்களின் குறள்' என்கிறார். அதில் தம் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்த திருக்குறட்பாக்கள் சிலவற்றை மேற்கோளாகக் காட்டியுள்ளார். அவை இன்னா செய்யாமை என்னும் அதிகாரத்தில் உள்ள குறட்பாக்கள் ஆகும். குறட்பாக்களைக் குறிப்பிடுவதுடன் விளக்கவுரையும் வரைகின்றார். இக்குறட்பாக்கள் தால்சுதாயின் இன்னா செய்யாமை (அகிம்சை)க் கொள்கையை உருவாக்க உதவியுள்ளன. அறநெறியில் போராடுவதைப் பற்றிய அவருடைய சிந்தனைக்கு உரமாக அமைந்தன. தால்சுதாயின் இக்கடிதத்தினால்தான் காந்தியடிகள் திருக்குறளை அறிந்து கொண்டு, ஏரியல் என்பார் மொழி பெயர்த்த பிரெஞ்சு மொழி பெயர்ப்பு நூலைப் படித்து அதன் சிறப்புணர்ந்தார்.

"உறங்குவது போலும் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு" - 339

என்னும் குறளைக் காட்டி "இதைவிடத் தெளிவாக இறப்பைப் பற்றிக் கூற இயலுமா?" என வினாவுகிறார்.

இங்கர்சால் என்னும் பகுத்தறிவாளர் திருக்குறளிடத்துப் பேரீடுபாடு கொண்டு இருந்தார். திருவள்ளுவருடைய கட்டற்ற சிந்தனைப் போக்கும், அறிவை முதன்மையாகப் போற்றும் பண்பும் இங்கர்சாலின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தன.

"அறிவு அற்றம் காக்கும் கருவி" - 421

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப் பொருள் காண்ப தறிவு." - 355

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு." - 423

என்னும் குறட்பாக்களை இங்கர்சால் அடிக்கடி மேற்கோளாகக் காட்டி எழுதியும் பேசியும் வந்துள்ளார்.

- சான்றோர் கண்ட திருவள்ளுவர் 328

"இருநோக் கிவளுண்கண் உள்ள தொருநோக்கு
நோய்நோக்கு ஒன்றந்நோய் மருந்து"

என்னும் பாடலைச் செருமானிய அறிஞர் கால் கிரௌல் என்பவர் அறிந்தார். அதன் பொருள் ஆழத்திலும் கலை அழகிலும் ஈடுபட்டுத் திருக்குறளை முழுமையாகக் கற்றார். பின்னர் 1754இல் செருமானிய மொழியிலும் 1856 இல் இலத்தீன் மொழியிலும் திருக்குறளை மொழி பெயர்த்தார்.

♦✦♦

உருசிய நாட்டுக் கிரெம்ளின் மாளிகையில் அமைந்துள்ள அணுத்துளையாச் சுரங்கப் பாதுகாப்புப் பெட்டகத்தில் வைக்கப்பட்டுள்ள அருநூல்களுள் ஒன்று திருக்குறள் ஆகும்.

♦✦♦

விக்டோரியாப் பேரரசியார் தம் மறை நூலைப் போலப் போற்றி வைத்திருந்த நூல் திருக்குறள். காலையில் கண் விழித்ததும் கற்கும் நூலாகத் திருக்குறளைக் கொண்டு இருந்தார் என்பது அவரது பெருநிலைச் சான்றாவதுடன் திருக்குறளின் பெருமைச் சான்றுமாகும்.

♦✦♦

இங்கிலாந்து நாட்டுக் காட்சிச்சாலையில் விவிலியத்துடன் வைத்துப் போற்றப்படும் திருநூல் திருக்குறள் ஆகும் என்பர்.

♦✦♦

திருக்குறளால் தோன்றிய நூலகம்

தஞ்சைப் பகுதியை ஆட்சி செய்த சரபோசி மன்னர் ஒரு முறை காசிக்குச் சென்றார். அப்படியே கல்கத்தாவில் இருந்த அரசப் பேராளரைக் கண்டு மகிழ்ந்தார். அரசப் பேராளர் திருக்குறளை ஆங்கில மொழி பெயர்ப்பு வழியாகக் கற்றிருந்தவர். அதனால் தமிழ்ப் பகுதியில் ஆட்சி நடத்தும் சரபோசியின் வழியே திருக்குறளைப் பற்றி அறிய விரும்பினார். அதுவரை அதைப் பற்றி அறியாதிருந்த சரபோசி, “நான் ஊர் போய்ச் சேர்ந்ததும் அப்புத்தகத்தை அனுப்பி வைக்கிறேன்” என்று விடை பெற்றுக் கொண்டார். அதன் பின்னரே தமிழ்ச் சுவடிகளைத் தொகுக்கத் தொடங்கினார். ‘சரசுவதி மால்’ என்னும் கலைக் கருவூலம் தோன்றுவதற்கு மூலமாக இருந்தது இத்தூண்டலேயாகும்.

திருக்குறள் வாழ்வியல் உரைக்கு ஒரு முன்னோட்டம்

வெண்பா வகையுள் ஒன்று குறள் வெண்பா; அது குறுவெண் பாட்டு என்று தொல்காப்பியத்தில் குறிக்கப்படும். அப் பாவகையைக் கொண்டு எழுந்த நூல் 'குறள்' என வழங்கப்பட்டது. அதன் சிறப்புக் கருதிப் பின்னே 'திருக்குறள்' என வழங்கப்பட்டது.

முப்பொருள்

தமிழில் பொருள் இலக்கணம் தனிச் சிறப்பினது. அது அகப் பொருள், புறப்பொருள் என்னும் இரண்டாகும். அகப்பொருள், இன்பப்பொருளாயினும் அதுவே, உலகியல் அறம்தழைக்க வழியும் வகையுமாய் அமைவது. ஆதலின் அகமாம் இன்பத்தில் அறமும் இயல்வது இயற்கையாயிற்று. புறப்பொருள் என்பது பொதுவகையில் 'பொருள்' எனக் குறிக்கப்படலாயிற்று. இம்முப் பொருள் பாகுபாடு தொல்காப்பியர் காலத்திலேயே பெருவழக்குப் பெற்றிருந்தது. அதனால், "அறம் முதலாகிய மும்முதற்பொருள்" என்றும் "இன்பமும் பொருளும் அறமும்" என்றும் இருவகையாகவும் அவர் குறித்தார். சங்கத்தார் காலத்திலும், இம்முப்பொருள் வழக்காறு சிறந்துநின்றது.

முப்பால்

அறம், பொருள், இன்பம் ஆகிய முப்பொருள்களையும் தனித்தனிப் பகுப்பாக்கித் தம் நூலை முப்பாலாக்கியவர் திருவள்ளுவர். அதனால் திருக்குறளுக்கு 'முப்பால்' என்னும் பெயரும் பெருக வழங்கலாயிற்று 'அறம் பொருள் இன்பம்' என்னும் முறையொழுங்கும் குறளில் (501) இடம் பெறலாயிற்று.

அறம்

'அறம்' என்னும் பெயராலும் திருக்குறள் வழங்கப்பட்டது. வழங்கப்பட்டும் வருகின்றது. முதற்பாலாக அறத்துப்பால் அமைந்திருக்கின்றது என்பது குறித்து எழுந்த பெயரன்று அது. அதுவே நூலின் ஊடகப் பொருளாகவும் அமைந்துள்ளமையால் அப்பெயர் பெறுகின்றது. அறத்தால் பொருள் தேடி அப்பொருளால் இன்புறுதல் எனத் தொகுத்துக் கூறுதல் ஒருமுறை. எனினும், அறத்தில் அறமும், பொருளில் அறமும், இன்பத்தில் அறமும் ஆக முப்பால் முழு வோட்டத்திலும் அறம் ஊடகமாக இருத்தல் மேலோட்டமாகக் காணக் கூடியது.

அதிகாரம்

திருக்குறள் 'முப்பால்' 133 அதிகாரங்களுடையது. 133 அதிகாரங்களும் அதிகாரத்திற்குப் பத்துப்பாடல்களாக 1330 பாடல்களையுடையது. அப் பத்துப் பாடல்களில் உரையாசிரியர்கள் தம் பொருள் முறை வைப்புக்குத் தக்கவாறு அவ்வதிகாரத்தின் அளவில் முன்பின்னாக இடப் பெயர்வுகள் செய்துள்ளமை உண்டு. இப் பெயர்ச்சியால் அதிகாரத்திற்குப் பத்துப் பாடல்கள் என்னும் அளவீட்டில் மாறுதல் இல்லை. அம்மாறுதல், வள்ளுவர் உள்ளத்திற்கு ஏற்புடையதாக இருந்திருக்கு மெனில் நூலின் அமைப்பே வேறு வகையாக இருந்திருக்கும்! நட்பு, நட்பாராய்தல், பழமை, தீ நட்பு, கூடா நட்பு என்பன ஐம்பகுப்புப் பெற்றிராமல் ஒரு பகுப்பில் முறைப்படுத்தப் பெற்றிருக்கும். இத்தகையன பிறவும் உள.

இறைவணக்கம், வான்சிறப்பு என்பவற்றுள் பத்துப் பகுப்பை விடுத்து எங்கு இணைக்கக்கூடும்? அரண், அறிவுடைமை, இகல், உழவு, ஒற்று, சூது, சொல்வன்மை, நாடு, மடியின்மை, மருந்து, வெஃகாமை என்பவற்றை ஒரு முறை நோக்கிய அளவில் பதின்மை வரம்பே உறுதியாம். இன்பத்துப் பாலோ உரிப் பொருள்கள் ஐந்தனுக்கும் (புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல்) ஐந்தைந்து அதிகாரங்களாய்

ஐம்பது ஐம்பது பாடல்களாய் அமைக்கப்பட்ட இருபத்தைந் ததிகாரங்களையுடையது. ஆகலின், அதிகார வரம்பு "பத்து" என்பது தெளிவே.

அதிகாரப் பெயர்

அதிகாரப் பெயர்களுள், கடவுள் வாழ்த்து என்பதில் கடவுள் என்பதும் இல்லை; வாழ்த்து என்பதும் இல்லை; கடவுள் என்னும் சொல் திருக்குறளில் வேறு எவ்விடத்தும் இடம் பெறவும் இல்லை. இறையும் வணக்கமும் உள்ளமையால் 'இறைவணக்கம்' என்று இவ்வுரையில் அமைக்கப்பட்டுள்ளது.

புதல்வரைப் பெறுதல் என்பதில் உள்ள புதல்வர் அவ்வதிகாரத்தில் இடம் பெறவில்லை என்பதுடன், நூலிலும் இடம் பெறவில்லை. அதிலுள்ள 'மக்கட்பேறு' என்பது அதிகாரப் பெயராகிப் பெருவழக்கும் கொண்டது. இதற்கு வலிவான சான்று.

கூடா ஒழுக்கம் என்பதில் 'கூடா' என்பது இல்லை. 'படிற்றொழுக்கம்' 'வஞ்சம்' என்பவை இடம் பெற்றுள.

'செங்கோன்மை' என்பதில் முறை, கோல் என்பவை இடம் பெற்றுள. கொடுங்கோன்மை என்பதில் செங்கோன்மை ஆளப் பட்டுள்ளது.

'வினைத் தூய்மை'யில் 'வினை நலம்' என்பது உள்ளது

'நன்றியில் செல்வத்தில்' 'ஏதம் பெருஞ்செல்வம்' வந்துள்ளது

இரவச்சத்தில் 'அச்சம்' இல்லை.

நலம் புனைந்துரைத்தல், காதற் சிறப்புரைத்தல், குறிப்பறிவுறுத்தல், புலவிநுணுக்கம் என்பன கருத்து வாங்கிக் கொண்டு வரைந்த அல்லது அமைத்த தலைப்புகள்.

படர்மெலிந்திரங்கல், தனிப்படர் என்பவற்றில் உள்ள 'படர்' திருக்குறளில் துன்பப்பொருளில் ஆளப்படாத சொல்.

அவர்வயின் 'விதும்பல்' புணர்ச்சி 'விதும்பல்' என்பவற்றில் உள்ள விதும்பல் முன் அதிகாரத்தில் இடம் பெறவில்லை எனினும் பின் அதிகார இறுதிப் பாடலில் இடம் பெற்றுள்ளது.

வள்ளுவர் நோக்கு

திருக்குறளில் 'பயனில சொல்லாமை' என்பது அறத்துப் பாலில் இல்லற இயலில் இடம் பெற்ற அதிகாரம், பயனில கூறுவானை மகனெனக் கூறுவதையும் ஒப்பாதது திருக்குறள். நயனில கூறுதல் ஆகும் என்பதுடன் சீர்மை சிறப்பொடு நீங்கச் செய்வதும் பயனில கூறுதலே என்பது அது பயனில கூறுதல் என்பது ஆதலால் வள்ளுவக் கருத்து பயன் மிக்கவை என்பதும், பயன்பாடு கருதியே செய்யப்பட்டவை என்பதும் தெளிவாம்.

உரை

திருக்குறள் வாய்ப்பறை அறைய எழுந்த நூல் அன்று; மேற்கோள் காட்டி மேடைக்கலைப் பொருளாக்க எழுந்த நூல் அன்று; படிப்பாளன் என்னப் படங்காட்டிக் கொள்ள எழுந்த நூலும் அன்று; அறஞ்சார்ந்த குமுகாயத்தைப் படைக்க எழுந்த நூல். ஆதலால் குறள் நெறி, வாழ்வியல் நெறியாகக் கொண்டொழுகப்படுதல் வேண்டும். அதனைக் கருத்தில் கொண்டு, தமிழ் மரபு, மாந்தநேயம், வள்ளுவர் உள்ளம், வாழ்வியல் பயன்பாடு என்பவற்றை உட்கொண்டு குறளாயம் அமையும் பெருநோக்கில் வரையப்பட்ட உரை இது.

இறைமை

திருக்குறள் இறைமையை ஏற்றுப் போற்றும் நூல். இறையின்மைக் கொள்கையைத் திருக்குறள் ஏற்பது இல்லை. ஆயின், வள்ளுவ இறைமைக் கொள்கை தனியுயர் சிறப்பினது. மெய்யுணர்தலாலும், அவாவறுத்தலாலும் பேரா இயற்கையாம் செம் பொருளைக் கண்டு கொள்ள வழிவகுப்பது அது.

மாந்த உயர் குணங்கள்

தூய அறிவு, மென்மை, விருப்பு வெறுப்பு இன்மை, இன்பு துன்பு கருதாமை, ஐந்தவித்தல், ஒப்பின்மை, அந்தண்மை, நிறைவு என்பன வாழ்வாங்கு வாழ்ந்தோர் உயர்குணங்களாம்.

தாள் தொழுதல், அடிசேர்தல், தாளை வணங்கல் என்பவற்றின் பொருளை விளக்குவார் போலப் 'பொய்தீர் ஒழுக்க நெறி நிற்றல்' என்பார் திருவள்ளுவர்.

தடம் காணல் அல்லது சுவடுகாணல் என்பது ஓர் அகத்துறை; தலைவி சென்ற வழித்தடத்தைக் கண்டு செவிலித் தாய் தொடர்ந்து செல்லுதலே அது. அதுபோல் உயர் குணங்களைக் கண்டு அத்தடத்தில் செல்லுதலே அடி சேர்தல், தாள் சேர்தல் என்க.

தெய்வம்

கடவுள் என்பாரும் தெய்வம் என்பாரும் 'முனிவர்' எனப்படுதல் சங்க நூல் வழக்கு. வள்ளுவரைத் 'தெய்வப் புலவர்' என்பது பழவழக்கே, தெய்வமுனிவர் என்பதும் தொல்வழக்கே. இந்நாளிலும் 'தங்களைக் கண்டது தெய்வத்தைக் கண்டதுபோல்' "தங்கள் வாக்கு தெய்வவாக்கு" என்பவை நேரிடைக் கேட்கும் உரைகளே.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவனைத் தெய்வநிலையில் கண்ட திருவள்ளுவர், ஐயப்பாடு இல்லாமல் ஒருவர் உள்ளத்தை அறிந்து கொள்ளவல்லாரைத் தெய்வத்தோடு ஒப்பக் கொண்டார் (702). விருந்தோம்புதற்கு உரியவருள் ஒருவர் தெய்வம் என்றும் திருவள்ளுவர் கூறுகிறார் (43) முயற்சியாளனுக்கு மாந்தத் தெய்வம் தானே வந்து உதவும் என்பதையும் குறிக்கிறார் (1023).

அமரர்

அமரர் என்பது தேவர் என்னும் பொருளது. 'அமர்' என்பது போர்; போர்க்களத்தில் சிறப்பக் கடனாற்றி மறைந்தார்க்குக் கல்லெடுத்து அவர்தம் பெயரும் பெருமையும் எழுதிப் படையலிட்டு வழிபடுதலால் அவர் 'அமரர்' ஆனார். அவர் குடிவழியினரால் இனியராகக் கொள்ளப்பட்டமையால் 'தேவர்' என்றும் சொல்லப்பட்டார்.

இறந்தார்

'இறந்தார்' எனில் கடந்தார் என்பதே பொருள். வரை இறந்த, அளவிறந்த என்பவற்றில் உள்ள இறந்த என்பதற்குக் கடத்தல் பொருள் உண்மை விளங்கும். அவர், உலகைக் கடந்து உடலில் இருந்து உயிர் பிரிந்து செல்லும் நிலையில் சிறந்தாராக மதிக்கப்பட்டார். ஆதலால், இறந்தார் என்பதற்குக் கடந்தார் இறப்புற்றார் என்பவற்றுடன் சிறந்தார் என்னும் பொருளும் உண்டாயிற்று. இம்முப்பொருள் வகையும் குறளினகத்துக் காணக் கூடியனவே.

ஆன்றோர்

இறந்தார் என்பது போன்றதொரு சொல்லே 'ஆன்றோர்' என்னும் சொல்லும், 'அகன்றோர்' என்பதே சொல்லியல் முறைப்படி ஆன்றோர் ஆயது. 'ஆன்றோர்' என்பது விரிந்த அறிவாளரைக் குறிப்பதுடன் இறந்தவரையும் குறிக்கப் பயன்பட்டது (திருக்குறள் 413). அதனால் அவர் உரையாளர்களால் தேவர் எனப்பட்டார். அவர், 'பேருண்டியர்' என்பது இக்குறள் வழி அறியும் பொருளாம்.

இமையார்

இறந்தவர் கண், இமையாடுவது இல்லை. ஆதலால், அவர் 'இமையார்' எனப்பட்டார். இமையார் என்பதையும் தேவர் என்னும் பொருளில் திருக்குறள் ஆள்கின்றது (906) .

வானவர், வானம்

வான் என்பது உயரம், கோழி போல்வதோர் உயிரி இவண் இறக்குமதி ஆனதைக் கண்ட அறிவறிந்த தமிழர் அதனை 'வான்கோழி' என்றனர். ஔவையார் பாடலிலே, 'கானமயில் ஆடக் கண்டிருந்த வான்கோழி' இடம் பெற்றது. அவர்தம் தனிப்பாடல் ஒன்றில், "வான் குருவியின் கூடு" இடம் பெற்றது. 'வானம்பாடி' என்பதொரு பறவை அறியாததன்று; வானவர் என்பார் சேரர். அவர் நாடு மலைநாடு. ஆதலால் அவ்வுயர்வு கருதி அப்பெயருற்றார்; வானளாவிய காடும் வானம் பார்த்த நிலமும் வானப் பொருள் காட்டுகின்றனவே.

புகையும் புழுதியும் தூசியும் தும்பும் காற்றில் மேலே எழக் கண்ட மாந்தர், இறந்தோர் உயிரும் மேலே போவதெனக் கொண்டனர். உயர்ந்து செல்லும் ஆவியாகிவிட்ட அவரை 'வானவர்' என்றனர்; மேலோர் என்றும் கூறினர். விசும்புளார் என்பவரும் அவர்.

புலமையாளர், மதித்து வணங்கப்படுதல் உலகு தழுவிய ஒரு நெறி. அவ்வகையில் புலமைமிக்கார் 'புலவர்' எனப்பட்டதுடன், அவர் இறந்த பின்னரும் புகழ் நிலைபேற்றினால் அவர் அழியா வாழ்வுற்றனர். அதனால், புலவர் என்பதற்குத் 'தேவர்' (234) என்னும் பொருளுண்டாயிற்று.

புத்தேளிர்

ஒரு காலத்தில் தமிழகத்திற்குப் புதிதாக வந்தவரைப் 'புத்தேள்' என்றும் 'புத்தேளிர்' என்றும் வழங்கினர். அவர்கள் நாடு 'புத்தேளிர் நாடு' எனப்பட்டது. அந்நாடு அம்மக்களால் மிகஉயர்வாகக் கூறப்பட்டமையால், அது ஒரு தனிப்புகழ் உலகமாகவே இந்நாட்டவரால் போற்றப்பட்டது; அதன் விரிவே 'புத்தேளிர்' என்பதற்குத் 'தேவர்' என்னும் பொருளும், புத்தேளிர் உலகம் என்பதற்கு 'வானவர் உலகம்' என்னும் பொருளும் தந்ததாம். புத்தேள் என்பதன் பொருள் புதுமையாதலைக் கலித்தொகை 82-இன் நச்சினார்க்கினியர் உரையில் கண்டு கொள்க. புத்தேளிர் என்பது பல இடங்களில்

(58, 213, 234, 290, 966, 1323) ஆளப்படுகின்றது. ஆங்கில ஆடவரையும் மகளிரையும் 'துரை' 'துரைசானி' என வழங்கிப் பெருமைப்படுத்திய பின்னாள் வழக்கொடு, இம்முன்னாள் வழக்கு எண்ணத்தக்கது.

இந்திரன்

ஐம்புல அடக்கத்திற்கு எடுத்துக்காட்டாகக் காட்டப்படுபவன் இந்திரன், அடக்கம் அமரருள் உய்க்கும் என்பதால் அடக்கம் தெய்வ நிலையாதல் விளங்கும். ஐம்புலன்களையும் நெறிமுறையால் அடக்கிய மேலோன் ஒருவனே 'இந்திரன்' என்பான்; அவன் செய்ததாகச் சொல்லப்படும் நூலே 'ஐந்திரம்'. அதனைத் தெரிந்துணர்ந்த தேர்ச்சியர் ஆதலால், 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' எனத் தொல்காப்பியப்பாயிரம் கூறிற்று. ஐம்புல அடக்கத்தால் தெய்வமாகத் தெய்வத் தலைவனாகப் போற்றப்பட்டவனைத் தொன்மக் கதைகள், இழிபழிக்கு ஆளாக்கிக், கழிசடைக்குக் காட்டாக்கிக், கோதமன் கதையைத் தூக்கி நிறுத்தி விட்டன.

அமிழ்து

இந்திரன் கதை போன்ற கதை வழிப்பட்டதே அமிழ்து கடைந்த பாற்கடற்கதை. இவ்வொட்டா ஒட்டை ஒட்டிக் கொள்ள வேண்டா என்னுமாறு போல், "வான் நின்று உலகம் வழங்கி வருதலால் தான் அமிழ்தம்" என்றார் திருவள்ளுவர். அவர் கூழ் அமிழ்தாதலை மக்கட் பேற்றிலே காட்டினார்; சொல்லமுதச் சுவையையும், நல்லமுதால் ஆகிய நங்கையையும் (120, 1106) குறித்தார்; உயிர் தளிர்க்கச் செய்யும் உயரமிழ்து தன் உரிமைத் தலைவியே என்பதையும் நிறுவினார். (1106) பாலமுது, கண்ணமுது, அமிர்தப்பால் என்பன பாற்கடற்கதையொடு தொடர்புடையவையா? இல்லையே.

கூற்று

உடலில் இருந்து உயிர் பிரிவது ஓர் இயற்கை ஒழுங்கு; ஒன்றைப் பகுத்தல், கூறுவைத்தல், கூறுபோடல் எனப்படும்.

உடலில் இருந்து உயிர் பகுத்து அல்லது பிரிந்து செல்லும் நிலையைக் கூற்று எனல் மரபு; அதனை உருவக வகையால் 'கூற்றுவன்' எனலும் வழக்கே. அவ்வழக்கு திருவள்ளுவரால் போற்றப்படுகிறது. மருந்தில் 'அப்பால்' நாற் கூற்றே மருந்து என்பதில் பகுப்பு என்னும் முதற்பொருளும், வேறிடங்களில் (269, 326, 765, 894, 1083, 1085) கூற்றுவன் என்னும் பொருளும் இடம் பெற்றுள. கூற்றமும் அஞ்சும், கூற்றமும் ஒடும் என்றெல்லாம் அவர் கூறுதலும், உறக்கத்திற்கு ஒப்பாக இறப்பையும், கூட்டிலிருந்து பறவை பறப்பதற்கு ஒப்பாக உயிர் பிரிதலையும் அவர் கூறுதலும் அவர் எத்தகு தெளிந்து தேர்ந்த மீமிசை மாந்தர் என்பதைத் தெளிவிக்கும்.

காமன்

காமமாம் தன்மையைக் காமன் என்றதும் (1197) நிலத்தை நல்லாள் என்றதும் (1050) இவ்வகைப் பட்டனவே. நிலவுடைமையாளன் நிலக்கிழான் ஆகலின், நிலம் இல்லாளாக ஊடிவிடும் எனப் பொருந்தும் வகையில் அவர் உருவகப் புனைவு செய்தமை எண்ணி எண்ணி இன்புறத் தக்கதாம்.

சிறப்பும், பொதுவும்

உழவு எனச்சிறப்புத் தொழிலை வள்ளுவர் குறிப்பினும் தொழிற் பொதுமைக்குக் கொள்ளத்தக்க செய்திப் பெருமையுடையது அது; அவ்வாறே கள்ளுண்ணாமை என்பது மதுப் பொதுமைக்கும், சூது என்பது பொய், வஞ்சம் ஏமாற்று, களிப்பு - ஆட்டப் பொதுமைகளுக்கும் சிறப்புச் செய்தியாய், அமைந்த தகுதியுடையவை. இவ்வாறே ஏர், வேல் என்னும் கருவிக்குறிப்புகள் உழுகலப் படைக்கலப் பொதுமைக் குறிப்பெனப் போற்றிக் கொள்ளத்தக்கவை. இவ்வாறே இவ்வுரைப் பொருள் இவண் இயல்கின்றது!

வேள்வி

வேள் என்பது விரும்புதல் பொருளது. வேள் வழியாக வந்த சொல்லே வேள்வி. அது 'யாகப்' பொருள் தருவது அன்று

: ‘விருந்து என்னும் வேள்வி’ என்பது வள்ளுவம் (87-88), அவி சொரிந்து ஆயிரம் வேட்டலினும் ஒன்றன் உயிர் செகுத் துண்ணாமையைப் போற்றுவது திருக்குறள். புதல்மறைந்து வேட்டுவன் வேட்டையாடுதலைக் கூடா ஒழுக்கத்திற்கு எடுத்துக்காட்டு ஆக்குவது திருக்குறள். புலை, கொலை நீக்கம் விழையும் புகழ்நூல் ஆகிய திருக்குறளில், கொலை வேள்வியாம் யாகத்திற்கு இடமில்லை! ‘அவி’ என்பது அவித்துப் படைத்தலையும் ‘பலி’ என்பது சோறும் நீரும் பூவும் படைத்தலையும் குறித்தது தமிழ் வழக்கு.‘குழவி பலி’ என்பது வறியோர் இல்லத்து இளங்குழவிக்கு, வளமையாளர் வழங்கும் குழந்தைச் சோறே; அல்லது பிள்ளைச் சோறே; அதனைக் குழவிப் பலியாக்கி, உயிர்ப்பலி இட்ட கொடுமை, தட்டுக் கெட்ட தமிழர்தம் பின்நாளைச் செயற்பாடு.

தவம், துறவு

தவம் என்பது தன்துயர் பொறுத்தலும், பிறவுயிர்க்குத் துயர் செய்யாமையுமாம் மாண்பினது; வீடு துறத்தலும் மனை மக்கள் துறத்தலும் காடுபுகலும் கடுநோன்பு கொள்ளலும் வள்ளுவ வழியுமன்று; பழந்தமிழ்நெறியுமன்று; இல்லறம் ஒன்றே அறம்! ‘அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை’, ‘அறத்தான் வருவதே இன்பம்’ என்பன குறளியல். துறவோ எனின், இல்லறஞ் சிறந்த நாளில் கணவன், தன் மனைவியொடும் மக்களொடும் இருந்து செய்யும் பொதுநலச் செய்கை; அதனால், ‘துறவறம்’ என்னார் திருவள்ளுவர். ‘துறவு’ இல்வாழ்வின் முதிர்ந்த நிலையேயன்றி ‘அறம்’ அன்றாம்! துறவியல் பெயரீட்டில் உள்ள அறம் பிற்சேர்ப்பு ஆகும்! துறவியல் என்பது தகும். பள்ளிக் கல்வி தேர்ந்தார். கல்லூரிக் கல்வி கற்றலைப் போல அமைந்த வளர்நிலையே - இல்லறச் செயற்பாட்டின் மேலோங்கிய துறவு நிலை என்க.

இதனைத் தொல்காப்பியக் கற்பியல்,

“காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி

அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"

என்று கூறும் (51), சிறந்தது பயிற்றல் என்றதே தவம். இறந்ததன் பயன், அதுகாறும் வாழ்ந்த இல்வாழ்வின் பயன்.

நோன்பு

நோன்பு என்பது 'நோல்' என்னும் உறுதிப்பொருள் வழியது. "உற்ற நோய் நோன்றல்" "கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின் ஆற்றல் தலைப்பட்டவர்க்கு" என்பவற்றில் வரும் நோன்பு உறுதிப் பொருளதாதல் தெளிவாம்.

அந்தணர்

அந்தணர் என்பது இந்நாள் கொள்ளும் குலப்பெயர் அன்று. அருள் ஒழுக்கத்தால் எவரும் அடையத்தக்க பண்பியற் பெயர் அது.

"அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்"

என்னும் குறள் இதனைத் தெளிவிக்கும். அகம் தண்ணியர் அந்தணர் ஆவர்.

பார்ப்பான்

பார்த்தான், பார்க்கிறான், பார்ப்பான் எனப் பார்த்தல் தொழிலின், கால அடைவு வழி வந்த சொல்லே பார்ப்பான் என்னும் சொல். அது இந்நாள் கூறுவது போல் ஒரு குலப்பெயரன்று; நூல் கற்பார்க்கு வாய்ந்த பெயர், 'ஓதுவார்' என்பது போலப் பொதுமை சுட்டும் பெயரே; "பொச்சாப்புப் பார்ப்பார்", (285) என்பதில் வந்துள்ள 'பார்ப்பார்' என்ன பொருளைத் தருமோ, அதே பொருளையே 'பார்ப்பான் என்பதும் (134) தரும். நூல் (பொத்தகம்) படிப்பவன், கணியம் பார்ப்பவன், ஏடு பார்ப்பவன், தொடுகுறி பார்ப்பவன் என்பன போல ஆசிரியத் தொழில் பார்ப்பவனைக் குறித்தது'.

மறுமை

பொறை நிலை என்பது பொறுமையாம்; அவ்வாறே மறை நிலை என்பது மறுமையாம். இம்மை என்பது இவ்வுலகில் வாழும் கால அளவினையும் மறுமை என்பது உடலின் நின்று உயிர் நீங்கிய பிற்றை நிலையையும் குறிக்கும். இம்மை உலகு இவ்வுலகு என்றும், இறப்பின் பின்னைப் பெறும் எச்சங்களே மறுமை உலகு, அவ்வுலகு என்று கூறப்படுதல் நூல் வழக்கு. இவை சுட்டு வழிப் பெயர்கள்.

எழுமை

"எழுமை எழு பிறப்பும் உள்ளுவர்" "ஒருமைக்கண் தான் கற்ற கல்வி எழுமையும் ஏமாப்புடைத்து" என்பனவற்றை நோக்க ஒரு பிறப்பில் அமையும் வளர் நிலையே சுட்டப்படுகின்றன என்பது விளங்குகின்றது. நம் இளந்தைப் பருவத்தில் கற்ற கல்வியும் பெற்ற நலங்களும் இறப்பின் காறும் தொடர்ந்து வருதலால் இது விளங்கும். முந்தைப் பிறப்பு எப்பிறப்பு, பிந்தைப் பிறப்பு எப்பிறப்பு என்பதையே அறிவரா நிலையில், அக்காலத்து நிகழ்ந்தவையை மறவாது போற்றுதல் என்பது எப்படி? நன்றி அறிதல் என்பது எப்படி?

ஒருமைக்கண் என்பது ஒருப்பட்ட நோக்கில் என்றும், ஒருமை என்பது ஒருப்பட்ட தன்மையில் என்றும், வள்ளுவப் பொருளாட்சி இருத்தல் நோக்க வேண்டியதாகியுள்ளது. 'அறிதோறும் அறியாமை கண்டற்று' என்பதால் அறிவின் வளர்நிலை தெளிவாகும்.

இரு பிறப்பாளர்

இரு பிறப்பாளர் என்பது உடற்பிறப்பு, அறிவுப்பிறப்பு என இருமை குறித்தலும், மன்னரும் துறவரும் இருபிறப்புப் பேறு கருதிப் பின்னொரு பெயர் பெறுதலும் எண்ணத்தக்கன. "பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா பிற்பகல் தாமே வரும்" என மறுநாளுக்கும் செல்லா அமைவு, அப்பிறப்பை விடுத்து - அப்பிறப்பை அறிந்துணரவும் கூடா

அயற்பிறப்பில் வருதலினும் அப்பிறப்பிலேயே அடைவன அடைதல் முறையெனக் கொள்ளத் தூண்டுகின்றன.

ஒரு பிறப்பில் வந்த இக்கட்டைத் தாண்டி விட்டால், 'மறுபிறவி எடுத்தான்' என்றும் 'முப்பிறவி கண்டான்' என்றும், 'பிழைத்தது புதுப்பிறப்புத்தான்' என்றும் வரும் வழக்காறுகள் எண்ணத்தக்கன.

"பாளையாம் தன்மை செத்தும்
பாலனாம் தன்மை செத்தும்
காளையாம் தன்மை செத்தும்
காமுறும் இளமை செத்தும்
மீளுமிவ் வியல்பும் இன்னே
மேல்வரு மூப்பு மாகி
நாளுநாம் சாகின் றோமால்
நமக்கு நாம் அழாத தென்னே"

என்னும் குண்டலகேசிப் பாட்டும், ஒரு பிறப்பிலேயே எழுபிறப்பும் உண்டு என்னும் **வள்ளலார்** கருத்தும், ஏழு திரை விலக்கி ஒளி காணும் ஏற்பாடும் கருதினால், சில தெளிவுகள் உண்டாம்.

சட்டம் எப்படி ஒருவர் பிறப்பு, இறப்பு எல்லைக் கூறுபட நின்று ஒழுங்குறுத்தத் தீர்மானிக்கின்றதோ, அப்படியே இயற்கைச் சட்டமாம் அறமும் தீர்மானிக்கின்றது எனல் சாலும்,

வீடு, நிரயம்

வீடு என்பது இறப்பின் பின் எய்துவதன்று; அஃதொரு தனி இடமுமன்று; நிரயம் என்பதும் இறப்பின் பின் எய்துவதன்று; அஃதொரு தனியிடமுமன்று. ஒருவர் தாமே விடுபெற்றுப் பேரா இயற்கை நிலையை அடையவும், தாமே நிரயத்தில் அழுந்தவும் தம் வாழ்வே இடமாக அமைகின்றது.

சேற்றிலே குற்றவாளிகளை அமிழ்த்துதலும், இருட்டறையுள் போட்டுத் துன்புறுத்துதலும் உலகியல்.

ஆதலான், நிரயம் 'அளறு' என்றும், 'ஆரிருள்' என்றும் (121) கூறப்படுகின்றன. (255, 835, 919)

உருவகம்

தாமரையினாள், செய்யாள், திரு என்பனவெல்லாம் செல்வம்/நன்மை ஆகியவற்றின் உருவகச் செய்தி (617, 167, 84) செய்யவளுக்கு எதிரிடையாகச் சொல்லப்படுவது முகடி, தவ்வை (617, 937) என்பன. மூடிக்கிடத்தலை 'மூதேவி' என்னும் வழக்கு போல்வது. இது 'தவ்' என்பது கருங்குதல் பொருளது. அப்பொருளில் வள்ளுவர் வழங்குகிறார் (1144). ஆக்கம் சுருங்குதற்குச் சோம்பலிடமாக இருத்தலின் அச்சோம்பல் (மடி) 'தவ்வை' எனப்பட்டது. அத்தவ்வைக்கு 'அக்கை' என்னும் பொருள் காணப்பட்டது. தொன்மக் கதை வழியே ஆகும். அக்காள், தங்கை (மூதேவி, சீதேவி) கதையைப் பொருத்திப் பொருள் காண்பது வள்ளுவ வழியதன்று.

இன்பத் துய்ப்பிடம் 'தாமரைக் கண்ணான் உலகு' என இவண் பேசப்பட்டது. அச்செய்திகள் மறுப்பாக வெளிப்பட்டது. "தாம் வீழ்வார் மென்தோள் துயிலின் இனிது கொல் தாமரைக் கண்ணான் உலகு?" என்பது. இது கண்ணிடைக் காணும் சான்றைக் காட்டி மெய்ப்பித்தது. அடியளந்தான் தாஅயது என்பதும் வள்ளுவர் கேட்டறிந்த புனைவுச் செய்தியே. (610)

பேய், அலகை

இயல்பல்லா ஒலியும், இயல்பல்லா அசைவும் அச்சம் உண்டாக்குதல், அவையும் இரவிலுண்டாக்குதல் கண்கூடு. ஆதலின் அவ்வழிப்பட்ட பேய், அலகை என்னும் சொற்கள் தமிழிலுண்டாயின. 'நாமம்' என்பதும் அச்சப் பொருள் தருவதே (149) பெயர் என்னும் பொருள் தரல் தமிழிலில்லை. திருக்குறளில் அச்சப் பொருள் தரும் அச்சொல்லைப் பெயர்ப் பொருளில் குறித்தமை உரைத்தவறாம் (360) 'பேம் நாம் உரும்' அச்சமென்பது தொல்காப்பியம் (உரி : 67)

ஊழ்

ஊழ் என்பது திருக்குறளில் ஓரதிகாரப் பெயர். அதில் ஆகூழ், போகூழ், இழவூழ், ஆகலூழ்; என ஆள்கின்றார். உலகத்து இயற்கையே ஊழாம். அதனையே 'இருவேறு உலகத்து இயற்கை' என ஊழில், எண்ணிக்கை கூறினார். அவ்விருவகையே ஆகூழ், போகூழ் என்பன. பால், வகை என்பனவும் ஊழ்ப்பகுதி, ஊழ்வகை என்னும் இவ்விரண்டைக் குறிப்பனவே. 'கெடுப்பதும் கெட்டார்க்குச் சார்வாய் எடுப்பதும்' ஆகிய ஊழியலை வான்சிறப்பில் பேசினார் வள்ளுவர்.

உலகத்து இயற்கை ஆக்கமுமாம்; அழிவுமாம். ஆக்கப் பொழுதில் எதிரிடை விளைவுமுண்டு; அழிவுப் பொழுதில் எதிரிடை விளைவுமுண்டு. அவற்றை வெற்றி காணல் கூடும்! அஃதவர் தம் ஊக்கத்தான் அறிவுத் திறத்தான் உண்டாக்குவது; அவற்றுக்கு ஈடு தர முடியாமல் சோர்ந்து விடலுமுண்டு. முன்னது முயற்சியின் வெற்றி! பின்னது ஊழின் வெற்றி. ஊழ்த்தலென்பது முதிர்தல் பொருளது. மலர் ஊழ்த்தல் வள்ளுவரால் பேசப்படுகின்றது (650). பருவ முற்ற மலர் ஊழ்முகை (புறம் 399; நற். 115) 'ஊழ்படு முதுகாய்' (குறுந். 68) 'ஊழணிதைவரல்' (தொல். பொருள். மெய்ப். 14) என்பன நல்வினை தீ வினையோடு பட்ட ஊழ்கள் அல்லவாம். இயற்கை முறையும் ஒழுங்குமேயாம். ஊழை வெல்லுதற்கன்றே, அறிவுடைமை, தெரிந்து செயல் வகை, ஊக்கமுடைமை, மடியின்மை, ஆள்வினையுடைமை, இடுக்கண் அழியாமை, வினைத்திட்பம்-இன்ன பல அதிகாரங்களை வகுத்துரைத்தார் வள்ளுவர். அறிவியல் உலகம் மேற்செலும் தீயைக் கீழ்ப் பாய வைக்கிறது. கீழ்ப் பாயும் நீரை மேற்செலுத்துகிறது. காற்றிலா இடத்தை அமைக்கிறது. காற்றைக் கடிதெழும்பச் செய்கிறது. நீரில் நெருப்பைக் காண்கிறது. ஏறாவிண்ணில் ஏறுகிறது. ஆயினும், இவ்வியற்கை வெற்றிகள் எல்லாம் சில வேளைகளில் தோல்வியாய் முடிகின்றனவே. இந்நிலையிலேயே, 'ஊழையும் உப்பக்கம் காண்பர்' (620) என்பதும் 'ஊழிற் பெருவலி யாவுள?' (380) என்பதும் மாறி மாறி ஒளி செய்வனவாகின்றன.

தமிழ் நெறி

திருக்குறள் தமிழில் தோன்றிய நூல். தமிழ் நெறியில் தோய்ந்து முழுதுற ஆய்ந்த பேராசிரியப் பெருமகனாரால் செய்யப்பட்ட நூல்; நூலோர் தொகுத்தவற்றையெல்லாம் கொண்டு மெய்ப்பொருள் இவையெனக் காட்டிய நூல். வாழ்ந்து காட்டிய பெருமகனாரால் வாழ்வார்க்கு வழி காட்டியாய் வகுக்கப்பட்ட நூல். தமிழர் நெறிப் பாதுகாப்பாக என்றும் எங்கும் பயன்படும் வகையில் உலகப் பெரு நோக்கில் இயற்றப்பட்ட நூல்.

மறை

வேண்டா நெறி புகா வகையில் பாதுகாக்கும் நூலானமையின் அது மறை எனப்பட்டது. மறையாவது பாதுகாப்பு. 'மெய்ம்மறை' என்பது உடலை - மார்பை - மறைத்துப் பகையிடமிருந்து காக்கும் காவல். வெயில்மறை என்பது குடை; வளிமறை என்பது இல்லம்; இப்படியே மறைகள் - பாதுகாப்புகள் உள. தமிழ் நெறியைப் பாதுகாக்கும் நூலாதலின் 'தமிழ் மறை' எனவும் உலகப் பொதுமை கருதுவதாகலின் 'பொதுமறை' எனவும் வழங்கப்பட்டது. ஆனால், நாம் நமக்குக் காவலாகக் கொண்டொழுக வேண்டிய கடப்பாட்டை வலியுறுத்துவதற்காகக் குறளாயம் 'நம்மறை' எனக் கொள்வதாயிற்று. நம் பொருளை - நம் செல்வத்தை - நம் உடைமையை எப்படிப் போற்றிக் காக்கின்றோம்! அப்படிக் காத்தல் வேண்டி வைக்கப்பட்ட புதுமை நோக்கினது இது. எனினும் 'நம் ஆழ்வார்', 'நம்பியார்' 'நம் பெருமாள்', 'நம்சுந்தரர்', 'நம்மவர்' என்பன போலும் பழமை வழிப்பட்ட புதுமை ஆட்சியே இது.

திருக்குறளின் சிறப்பு

திருக்குறளின் தனிச் சிறப்புகள் பல; அவற்றுள் தலையாய ஒன்று பிறப்பில் ஏற்றத் தாழ்வு காணாத ஒரு சமனிலைப் பார்வை உடைமையாகும். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்னும் ஒருமைப்பாடு உலகப் புதுமை! உயிர் ஒருமைகாணும் இந்நெறி, உலகம் உள்ளவரை அழியாத நெறியுமாம்!

இந்நெறியே இற்றை நாள் அறிவியலார் புதுக் கண்டுபிடிப்பாக உலகம் கூறுகின்றது என்பது அறியத்தக்கது.

தொழிலால் ஏற்றத் தாழ்வு கொள்ளல் பரந்த உலகியல் காட்சியில் இன்றும் உள்ளதே. இத்தொழில் வழியிலும் ஏற்றத் தாழ்வு காணல் கருதாத பார்வையது திருக்குறள். தொழிலால் வேற்றுமை இல்லை. தொழிற்சிறப்பில் கூடுதல் குறைதல் இல்லை. ஆனால், தொழில் செய்யும் செம்முறை அன்முறைகளால் சிறப்பு நிலை ஒப்பாயிருப்பதில்லை என்பதைச் "சிறப்பொவ்வா செய் தொழில் வேற்றுமையான்" என்கிறது திருக்குறள்.

பிறப்பிலே வேற்றுமை இல்லை எனில், குலப்பகுப்பு, ஏற்றத் தாழ்வு, ஆண்டான் அடிமை ஆகியவற்றுக்கு இடனுண்டோ? குடிமையும் குடிசெயல் வகையும் கொண்டது திருக்குறள். ஒரு குடியில் வேற்றுமை அமையுமோ? அக்குடி, கொண்டு கொடுத்தலால் உண்டாம் குலத்தில் வேற்றுமை அமையுமோ? 'குலமும் ஒன்றே குடியும் ஒன்றே' என்னும் தமிழ் நெறியே தனிக்குறள் நெறியாம்.

திருக்குறளில் வரும் 'இனம்' இரண்டே. ஒன்று மேன்மைக் குணமமைந்த மேலினம்; மற்றொன்று கீழ்மைக் குணம் கொண்ட கீழினம்; இவை மேல், கீழ் என்றும்,பெரியர், சிறியர் என்றும், பேரினம் சிற்றினம் என்றும் வழங்கப்படும். பெரியாரைத் துணைக் கோடல், சிற்றினம் சேராமை இவற்றின் விரி.

ஆடவர் பெண்டிர் சமன்மை கருதுவது திருக்குறள். 'வாழ்க்கைத் துணை நலம்' என்னும் ஆட்சியே இதனை நன்கு விளக்கும். வாழ்க்கைக்கு அவன் துணையா, அவள் துணையா? ஒருவருக்கு ஒருவர் துணையே வாழ்க்கைத் துணை! ஒருவர்க்கு ஒரு நிலையில் ஒருவர் துணையாதலே வாழ்க்கைத் துணை! அகவாழ்வில் தலைவிக்குத் தலைவன் வாழ்க்கைத் துணை! புற வாழ்வில் தலைவனுக்குத் தலைவி வாழ்க்கைத் துணை! ஆகலான், கல்வியும் பொதுப்பொருளே அன்றித் தனிப் பொருள் அன்று கல்வி, கல்லாமைகளின் தொடக்க முடிவுகள்.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

"விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்"

என்பனவாதல் அறிக.

'இல்லதென் இல்லவள் மாண்பானால்'

என்பது துணைவியின் சிறப்பே இல்லறம் எனல் தெளிவிக்கும். அவள் சிறப்பே.

'இகழ்வார்முன் ஏறுபோல் பீடு நடை'

அவனுக்குத் தரும் என்பதால் மனைமாண்பின் வழிப்பட்டதே எனை மாண்பும் என்பதை விளக்கும்.

அரசு, ஆட்சி

வள்ளுவர் காலம் முடிமன்னர் ஆட்சிக் காலம். அதனால் மன்னர், அரசன், வேந்தன்,இறைவன் என்னும் சொற்களை ஆண்டுள்ளார். ஆனால் அரசும் ஆள்வோரும் என்றும் மாறாப் பொருள்கள் அல்லவோ! மன்னன், அரசன், வேந்தன், இறைவன் எனவரும் இடங்களில் ஆட்சியாளன் ஆள்வோன் எனப்பொருள் கொள்ளல் தகவென இவ்வுரைக்கண் ஆளப்பட்டதாம். அரசும், ஆளுதலும் கிடந்தவாறே பொருள் கொள்ளுதற்கு உரியவைதாமே?

முடியாட்சிக் காலத்திலேயே முறைகேடாம் அரசை அழித்தலைத் துணிந்து கூறுவது வள்ளுவம். அக்கருத்து இல்லையேல் 'கொடுங்கோன்மை' என்னும் அதிகாரம் தோன்றியிராது. அல்லல் பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் அரசை அழிக்கும் மக்கள் வலிமையை மறைப்பின்றி வெளிப்படுத்தியது குறள். இரந்தும் உயிர் வாழும் வகையில் அரசியல் விதிமுறை இருக்கும் எனில், அதனை இயற்றியவன் அழிந்தொழிவானாக என்று சாவிப்பது குறள். கொடுங்கோலன் ஆட்சிக்கும் கொள்ளையடிப்பவன் கொடுமைக்கும் வேற்றுமை இல்லை

என்பதைக் குறித்துக் காட்டுவது திருக்குறள். இவை வள்ளுவர் பேரருட் பார்வை மட்டும் காட்டுவனவோ? பேருரத்தையும் அல்லவோ காட்டுவன! அவன் செந்தண்மையாளன் எனின் 'இறை' என்று வைக்கப்படும் என்று கூறும் திருநெறிய உள்ளத்திற்குத் தானே, அவன் தீயனெனின் தீரப் பழித்து மாற்றும் திட்பமும் உண்டாகி இருக்கக் கூடும்? நல்லோன் ஒருவன், தனக்குவரும் கேட்டைத் தான் ஏற்பினும், அந்நிலை நாட்டுக்கு நன்றாகாது; அரசின் முறையுமாகாது என்பதைத் தீயோனிடம் செல்வம் குவிதலையும் நல்லோனிடம் வறுமை சூழ்தலையும் சுட்டிக் காட்டி 'நினைக்கப்படும்' என்பதால் தெரிவிக்கிறார்.

தீயோனிடம் செல்வம் குவிந்தாலும் அவன் போதுமென நிறைமனத்தனாய்த் 'தான் செல்வன்' எனும் எண்ணத்தனாய் வாழ்கின்றானா? இல்லையே! அவன் வறியனினும் வறியனாக அன்றோ பொருளை மேலும் மேலும் வாரிக் கொள்ள ஏங்குகிறான்; அவன் ஆக்கம் ஆக்கமா?

நல்லோனிடம் செல்வம் அறவே இல்லாநிலையிலும் அதனைப் பற்றி அவலங் கொள்கின்றானா? தான் வறுமையாளன் என்பதை எண்ணி நைந்து நலிகின்றானா? இல்லையே! அவன் கேடு கேடா?

இவற்றைத் தனிநிலையில் எண்ணி 'இது ஆக்கமும் அன்று; இது கேடும் அன்று' என்று விடுதல் அரசு ஆகாது! முறை ஆகாது! தீயோனிடம் செல்வம் சேர்ந்த, சேர்கின்ற வழி என்ன என்பதை ஆய்ந்து தடுத்தே ஆகவேண்டும்! நல்லோனிடம் வறுமை வந்த வருகின்ற வழி என்ன என்பதை ஆய்ந்து நிறுத்தியே ஆகவேண்டும்!

இவை ஆள்வோர் கடமை! இவற்றை எண்ணிச் செயல் படாக்கால் என்ன ஆகும்! நல்லோர் தாழ்ந்து கெட அல்லோர் கொடிகட்டிப் பறக்க வழியாகி உலகியல் அழிந்து போகும்! "பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்; அப்பண்புடையோர் பட்டழியின் பண்பாடு பட்டழியும்! உலகியல் நெறிமுறை முற்றாக அழிந்துபடும்" அதனால்,

"அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்" (169)

என்கிறார். தனிமாந்தன் தனக்குவரும் கேட்டைத் தான் தாங்கிக் கொள்ள இருப்பான் எனினும் அந்நிலையை ஏற்காதே; மாற்றியமை! உலகியல் அறம்பேணு! என்பது வள்ளுவம். விரிய விரிய விரியும் விரிவைத் தன்னுள் ஒடுக்குவது 'வினைமாட்சி' என்னும் சொல்லாட்சி! இற்றை வானூர்தி, ஏவுகணை, எரிகுண்டு இன்னவெல்லாம் வினை மாட்சித் திறம்தானே!

அரசின் உறுப்புகள்

இனி அரசின் உறுப்புகள் படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் ஆறெனப் பகுத்தல் வள்ளுவம். ஈராயிரம் ஆண்டுகளின் பின்னரும் இவை நிற்குமா? என்பார் உளராயின், இவற்றுள் அடங்காதன எவை? எனில், மறுமொழி வாயாதாம். அடிப்பொருள் பற்றிய ஆய்வு விரிகள் எத்துணை ஆயினும் அவையெல்லாம் அவ்வடிப் பொருள்களுள் ஒடுங்கும் உண்மை காண்போர் மேலோட்டமாக ஒன்றை உரையார்!

நாற்படை கொண்ட காலத்து 'அரண்', வான்படையொடு வாய்த்த இக்காலத்துக்கு ஒவ்வுமோ என ஐயுறல் உண்டு.

அரண், கோட்டை மட்டுமன்று; காப்பு என்னும் (421) பொருளதே; நீர், மண், மலை, காடு என்பன அரணாகக் கொள்ளப்படுதலை அறியின் இவற்றொடு வானையும் இணைத்துக் கோடல் நன்முறையாம் அரணில் இறுதியாகிய,

"எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
இல்லார்கண் இல்லது அரண்".

என்பதிலுள்ள வினைமாட்சி எவ்வளவு விரிவுடையது?

நுண்ணிய பார்வை

காலப்பார்வை, இடப்பார்வை, சூழல் பார்வை, உலகியல் போக்கு என்பவற்றைக் கடந்து கருதிப் பார்க்கும் நுணுக்கப் பார்வையும் சிலர்க்கு அமையும். அவ்வாறு அமைந்தவரில்

தலையாய ஒருவர் திருவள்ளுவர். ஆதலால் சங்கத்தார் காலத்தில் பெருவரவாகச் சொல்லப்பட்ட, 'பரத்தையிற் பிரிவை' அறவே தவிர்த்தார்! தலைவன் தலைவியர் இயலும் செயலும் உள்ளமும் உணர்வும் ஒன்று படுத்தற்குரிய வாழ்க்கைத் துணை நலம் வைத்தார்; பிறர் மனை நயவாமை, வரைவின் மகளிர், பெண்வழிச் சேறல் என்பவற்றையும் வைத்தார். மட்டுண்டு மகிழ்தல் வட்டாடிக் களித்தல் என்பவற்றை விலக்கி ஒழித்தற்காகக் 'கள்ளுண்ணாமை', 'சூது' ஆகியவற்றை வைத்தார். அருள்நெறித் தலைப்பாடுடைய மேலோர் 'கொல்லாமை' 'புலால் உண்ணாமை' என்பவற்றைக் கொள்ள வலியுறுத்தினார். இவை சங்கக் காலத்தினர் கருதிப் பாராதவையாம்.

மறைப்பு

திருக்குறள் எளியது; இனியது; பழுத்த அறிவின் பிழிவாய் வெளிவந்தது; புதியதோர் குமுகாயம் படைக்க - பொதுநலக் குமுகாயம் படைக்க - எழுந்த நூல். அதனைப் புலவர் போற்றினர்; உரையாளர் போற்றினர்; பொழிவர் போற்றினர்; ஆனால், ஆள்வோர் கண்டு கொள்ளவில்லை! கருதிக் கொள்ளவும் இல்லை! அந்நிலை எப்படி ஆயிற்று?

ஆள்வோர் தமிழர்! ஆளப்படுவோரும் தமிழர்! ஆகவும், தமிழ்நெறி தழையாமை ஏன்? தழையாமைத் தடை என்ன? இற்றைத் தமிழர் அயன்மொழி ஆங்கிலத்தில் கொண்டுள்ள பற்றுமை போல், அற்றைத் தமிழர் அயன்மொழி ஆரியத்தில் பற்றுமை கொண்டனர்! இறைவன் முன்னரும் அம்மொழியில் ஓதலே உய்வு நெறி என்னும் ஏமாற்றுரைக்கு இடந்தந்தனர். இற்றை நாள்வரை, ஒழிக்க ஒண்ணா ஒரு கொடு நிலைக்கு முற்றாக இடந்தந்து விட்டனர்! அவர்கள் கூறிய தேவமொழி, பூதேவர் என்னும் புனை மயக்கில் புவியாள்வோர் மயங்கினர்; தம்மை மறந்தனர்; தமிழ்நெறி மறந்தனர்; 'மனுநெறி மாண்நெறி' எனக் கொண்டனர்; வள்ளுவம் மூலையில் வைக்கப்பட்டது! முடக்கி வைக்கப்பட்டது. மூச்சுப் போகாமல் காக்க மட்டுமே புலமையாளர்களால் முடிந்தது! அவ்வளவே!

ஒளிபரவல்

மேலையர் கண்ட அச்சுப்பொறி உதவியால் திருக்குறள் 1812-இல் இருபதிப்புகளைக் கொண்டது; அவை நெல்லை அம்பலவாணக் கவிராயரின் 'திருக்குறள் - நாலடியார் மூலப்பதிப்பு'; எல்லிசு என்பார் பதித்த 'உரைவிளக்க மொழியாக்க விரிவுப்பதிப்பு'. அதன்மேல் திருக்குறள் ஒளி, சென்னைக்கல்விச் சங்கத்தில் அறநெறிக் கல்வி புகட்ட உதவியது. வள்ளலார் திருக்குறள் வகுப்புத் தொடங்கினார். பல்லபலர் புத்துரை காணவும், எண்கவனகம் முதலாம் பல்வகைக் கவனகம் செய்யவும் வாய்த்தது. பின்னர்ப் பல்வேறு பதிப்புகளும், ஆய்வுகளும் வெளியீடுகளும் அறக் கட்டளைகளும், மன்ற - கழக அமைப்புகளும் பரப்பவைகளும் உருவாயின.

திருக்குறள் நாள்காட்டி, திருக்குறள் நாட்குறிப்பு, திருவள்ளுவர் திருநாட்கழகம், திருக்குறள் நெறிபரப்பு இதழ்கள், திருக்குறள் நெறி பரப்பு மையம், வள்ளுவர் கோட்டம், திருக்குறள் பேரவை, குறளாயம் என்பன உருக் கொண்டன. 'திருக்குறள் வாழ்வியல் நூல்' என்னும் கருத்து சான்றோர்களிடையே எழுந்தது; அதனை நடைமுறைப்படுத்தி மெய்ப்பிப்பதற்கெனவே தோன்றிய அமைப்பு 'குறளாயம்' ஆயிற்று.

குறளாயம்

குறளாய நிறுவனர் - அமைப்பாளர் - நெறியாளர் - ஈரோடு வேலா அரசமாணிக்கனார். அவ்வமைப்பின் முரசு 'குறளியம்' என்னும் திங்கள் இதழ். குறளியம் தமிழகத்துச் சான்றோர் கருத்துகளைத் தாங்கித் திருக்குறளை நடைமுறைப் படுத்துதல் என்னும் கொள்கை யூற்றத்தில் வெளிப்பட்டுத் தொடர்ந்து தொண்டாற்றுகின்றது.

முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதனார், மூதறிஞர் வ.சுப.மாணிக்கனார், திருக்குறளார் வி.முனுசாமியார், பெரும்புலவர் மீ.தங்கவேலனார், பேரா.

உ.பாலசுப்பிரமணியனார், சிந்தனைச் செம்மல் ஆனந்தனார், பாவலர் ஈவப்பனார். படைமேல்நர் த.சாமிநாதன், புரட்சிக்கனல் இரகுபதி, இன்னோர் அரவணைப்பிலும், வளர்ப்பிலும் உறுதிப்பாட்டிலும் தமிழ்கூறு நல்லுலகப் பொருளாக விளங்கி வந்தது; மேலும் விளங்கியும் வருகின்றது. பத்து ஆண்டுகளாக அது செய்து வரும் அரும் பணி மிகப் பெரியது;

குறளியம் மட்டுமோ குறளாய வெளியீடு, அறிக்கைகள் எத்தனை? வேண்டுகைகள் எத்தனை? சுவர் விளம்பரங்கள் எத்தனை? கூட்டங்கள் எத்தனை? நிலாப் பொழிவுகள் - மாநில மாவட்ட மாநாடுகள் - கருத்தரங்குகள் - ஊர்வலங்கள் எத்தனை எத்தனை - இவற்றின் உயிர்ப்பு - உணர்வு - உறுபொருள் - உழைப்பு, எல்லாம் எல்லாம் ஒரு 'வேலா'வை நடுவமாகக் கொண்டவை எனின் - இருகருத்துக்கு இடமில்லை 'அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு' என்பதன் பொருளே வேலா அரசமாணிக்கர் எனின் தகும்.

குறளாயம்,

"மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்"

"நன்றின்பால் உய்ப்ப தறிவு"

என்னும் மணிகளைச் செம்பொருள் நுகர்வாகக் கொண்டது.

"திருக்குறள் கற்பவன் மாந்தன் ஆவான்"

"திருக்குறள் ஆய்பவன் அறிஞன் ஆவான்"

"திருக்குறள்வழி வாழ்பவன் தெய்வம் ஆவான்"

என்னும் மும்முத்துகளை முழக்கங்களாகக் கொண்டது.

"பழியில்லாது வாழ்த்தல்"

"புகழுண்டாக வாழ்தல்"

"புகழும் கருதாது வாழ்தல்"

என்னும் முவ்வயிரங்களை வாழ்வியல் படிநிலை வளர்ச்சியாக ஓதி, ஒழுகக் காண விரும்புவது.

உரையும் விளக்கமும்

பள்ளிப் பருவநாள் தொட்டே என் உள்ளங் கொண்டது குறள்; இளந்தைப் பருவத்தே வரப்படுத்திய அது புலமைத் தேர்வால் மேலும் பொலிவுற்றது. பொழிவும் நூலும் அதனை மேலும் வளர்த்தன; சிலச்சில குறள்களில் உண்டாகிய உரை வேற்றுமைகள், 'செல்வி'யில் கட்டுரைகள் ஆயின; எழுத்துருப் பெறாவாய்க் கருத்துருவில் அமைந்துளவும் உள. இவ்வுரை வேற்றுமைக் குறள்களை மட்டும் தொகையாக்கி உரையெழுத அவாவிய என்னை, முழு நூலுக்கும் உரையும் விளக்கமும் காண ஏவியது குறளாயம். உரைப்பகுதி மட்டும் முன்னோட்டமாக இதுகால் வெளி வருகின்றது. விளக்கத்தொடு கூடிய உரை அடுத்தே வெளிப்படும். அதில் பொருள் மூலக் குறிப்பும் எடுத்துக்காட்டும் மேற்கோளும் வழங்கியலும் காட்டப்படும். தொகை, வகை, விரி என முப்பாலும் கொள்ளத்தக்கதன்றோ முப்பால்.

நன்றி

இவ்வுரை என் தனித்திறத்தால் இயன்றதோ? இல்லை! எவர் உரையும் அவர்தம் தனித்திறத்தால் இயன்றதன்று. நம் ஊணில் உடையில் உறையுளில் நம் உழைப்புப் பங்கு எவ்வளவு? அவ்வளவு போல்வதே, மொழித்திறத்தில் ஒருவர் காட்டும் உழைப்புப் பங்கும்! எத்தனை பேர்களின் மூளைக் கூர்ப்பும் நமக்கு உந்துகோள் ஆகியுள்ளன! அவற்றை எண்ணி எண்ணிக், கழித்துக் கழித்துக் கொண்டே வருவோமாயின் நம் பங்கு என என்ன எஞ்சும்? அக்கொடைஞர் கொடையை நாம் ஒதுக்கிப் பார்த்தால், நாம் தனிப் பெருமையுற என்ன உண்டு?

குறளாய நிறுவனர் வேலா சீரிய சிந்தனையாளர் - ஓயாச் சிந்தனையாளர் - உலகியல் உண்மை வழியில் உயிரோட்டச் சிந்தனையாளர்; நீரோடும் ஓட்டத்தில் ஓடும் சருகு ஆகாமல் நீரை எதிர்த்தோடும் மீன் அன்ன சிந்தனையாளர்; குறளாயஞ்சார்

அறிஞர்களும் ஆழ்ந்து எண்ணி அருமையுரைக்கும் பெற்றியர். அவர்களோடு பல்கால் கலந்துரையாடியும் உரையை முற்றாக அரங்கேற்றியும் பெற்ற கருத்துக்கள் மிகப் பல; ஆகலின், கருத்துக் கொடை தமிழ் கூறு நல்லுலகுக்கும், எழுத்துக் கொடை எனக்கும் உரியவை எனின் தகும்.

இனியும் ஒரு கருத்தை உரைத்தல் வேண்டும். உரை காண்பார்க்கு இருக்க வேண்டியது சொல்லாய்வுப் புலமை. அப்புலமையே நூலாசிரியன் நெஞ்சத்தை - நூற்பொருளை - கால நிலையை - வரலாற்றியலை வகுத்துக் கொள்வதற்கு உதவியாவது. அச்சொற் புலமையால் பொருள் வரையறை செய்வதற்குக் கிட்டும் வாய்ப்பு மிகப்பெரியது! அதற்கு வழி காட்டியாய் வாய்த்து, வழிகூட்டியாயும் திகழ்ந்த மொழி ஞாயிறு பாவாணரை நினைவு கூர்தல் கடனாம்!

குறளாயத் தொண்டில் ஈடுபட்டு வரும் என்னை இக்குறளுரை எழுதத் தூண்டியதுடன், நூலாக்கப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்ட குறளாயத்திற்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

திருக்குறள் நம் மறை!

இன்பமே சூழ்க!

தமிழ்த்தொண்டன்

இரா. இளங்குமரன்

உரைபற்றி உறுதி அறிவிப்பு

இலக்கியச் செம்மல் மதுரை இளங்குமரனார் அவர்களின் உரைக்கு அமைந்துள்ள 'ஒரு முன்னோட்டம்' முற்றாகத் தரப்பட்டுள்ளது.

திருக்குறள் இறைமை உணர்வை ஒப்பிய பகுத்தறிவு நூல். கடந்த கால நம்புமத, நம்பாமதத் திருக்குறள் உரையாசிரியர்களால் விளைவிக்கப் பெற்ற களங்கம் இவ்வுரையால் முற்றும் நீங்கியது. குறளாயம் இவ்வுரையை முழுதும் சிந்தித்து ஆய்ந்து வெளியிடுகிறது. இதுவே தெய்வப் புலவரின் நெஞ்சமாகத் திகழும் வண்ணம் நம் இளங்குமரனார் தாம் பெற்ற கல்வியறிவையும், பட்டறிவையும், புலமையையும், சிந்தனையையும், சொல்லாய்வையும் இவற்றிற்கெல்லாம் மேம்பட்ட மெய்யுணர்வையும், இவ்வுரைக்குச் செலவிட்டுள்ளதை உணர உணர நாம் பேருவகை எய்துகிறோம். கலந்துரையாடல் வழி பெற்ற இவ்வுரை அனைவருக்கும் கலங்கரை விளக்கமாக அமைகிறது. இதுவே உரியதும், ஏற்றதும், உறுதியானதுமான உரை என நம்புகிறோம்.

கடந்த கால உரைகளிலிருந்து நாம் சரியான பாதைக்கு வர எவ்வெச் சொற்களுக்கு இதில் முறையான செவ்விய பொருள் தரப் பெற்றுள்ளது என்பதை நாங்கள் உணர்ந்தது போலத் தாங்களும் உணரவே குறளியத்தில் வெளிவந்த இம்முன்னோட்டமும் இங்கு வெளியிடப்பட்டுள்ளது.

- வேலா

பிறசொற் கலப்பிலா நூலும் உரையும்

"திருக்குறள் அமைப்பு வகையாலும் பாவகையாலும் வடமொழித் தொடர்பு சிறிதும் இல்லாமல் தனித்தியங்கும் தனிப் பெருமையுடையது" என்றார் ஒப்பிலக்கண நூல் செய்த அறிஞர் கால்டு வெலார்.

திருக்குறளில் வடசொற் கலப்பு உண்டெனக் கூறியதுடன் நூற்றுக்கு மேலும் பட்டியலிட்டுக் காட்டினாரும், ஓரைம்பதென உரைத்தாரும் உளர். மொழி ஞாயிறு பாவாணர் திருக்குறளில் உள்ள வடசொற்கள் சிலவற்றைச் சுட்டிக் காட்டியதுடன், அவற்றை விலக்கி விட்டும் திருக்குறள் இயலும் என்பதை நிலை நாட்டினார். இவ் வாழ்வியல் உரையின் பொருள்நிலை திருக்குறளில் உள்ள சொற்கள் எல்லாமும் தமிழ்நெறிப் பொருள் விளக்க வகையால் தமிழே என்பதை உறுதிப் படுத்துகிறது.

எ-டு : "காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன் நாமம்" என்பதிலுள்ள 'நாமம்' என்பதற்குப் 'பெயர்' எனப் பொருள் கொண்டமையால் வடசொல் என்றனர். அது 'பேம் நாம் உரும் அச்சம்' என்னும் தொல்லாசிரியர் ஆணைப்படி அச்சப்பொருள் தருவதாகலின் தூயதென் சொல்லே ஆயிற்று.

"அச்சமே கீழ்களது ஆசாரம்" என்பதிலுள்ள ஆசாரத்திற்கு ஒழுக்கப் பொருள் கண்டு வடசொல்லாக்கினர். அது பற்றாக, ஆசிடை எதுகை என்பவற்றிலுள்ள ஆசு போல் பற்றுக்கோடு என்னும் பொருளது ஆகலின் செவ்விய தென்சொல்லாம். இவ்வாறே பிறவுமாம். ஆதலால் "திருக்குறள் நூலிலும் இவ்வாழ்வியல் உரையிலும் ஒருசொல்தானும் பிறசொற் கலப்பு இல்லை" என உறுதிப்படுத்தப்படுகிறதாம்.

வாழ்வியல் இறைவணக்கம்

இறையாவது தங்குதல். இவண் நினைப்பவர் மனத்திலும் சொல்லிலும் செயலிலும் தங்குதல். இறைமைக் குணங்களைத் தன்னிடத்துத் தங்க வைத்துக் கொண்டவன் இறைவன். அவன் வணங்குதலுக்கும் பின்பற்றுதலுக்கும் உரியவன்.

இறைமை இயல்பை அறிந்து, அவ்விறைமையைப் பெறுமாறு இறைமையைப் பின்பற்றி வணங்குதல் இறைவணக்கம். இறையும் வணக்கமும் அதிகாரச் சொல்லாட்சி பெற்றுள்ளமையால் இறைவணக்கம் என அதிகாரப் பெயர் ஆயிற்று.

வாழ்வியலுக்குப் பகுத்து வழங்கிய முதல்வரையும், அறிவரையும், துறவரையும், தவத்தரையும், அறவரையும், பண்பரையும் வணங்கி வழிபடுதல் உலகியல் நடைமுறை. அவரை நினைத்தலும் அவர் புகழ் கூறலும் அவர் வழியைப் பற்றி நடத்தலும் வணங்கலும் தனி வாழ்வுக்கும் பொது வாழ்வுக்கும் நலம் பயப்பன. இவ்விறைமையுடையவரின் பன்மையை விலக்கி ஒருமையிலும், சிறப்புப் பெயரை விலக்கிப் பொதுப் பெயரிலும் இவ்விறைமைக் குணங்களுக்கு மூலமாம் இறையை அக்குணங்களாக வணங்கி வழிபட்டுப் பின்பற்றிப் பெயராப் பெருநிலை எய்தும் வழி நிலைமைக் கூறிற்று இது.

திருக்குறள் வாழ்வியலுரை

அறம்

உயிரின் இயக்கமே
உடலின் இயக்கம்,
அறத்தின் இயக்கமே
வாழ்வின் இயக்கம்.

1. இறை வணக்கம்

(ஒப்பற்ற நல்லியல்புகளைக் கொண்டவர் வழியில் நடத்தல்)

1. **அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.**

எழுத்துக்கள் எல்லாம் 'அ' என்னும் எழுத்தையே முதலாக உடையன. அதுபோல, உலகம் முதற்பகவனையே (வாழ்வியலுக்குப் பகுத்து வழங்கியவனையே) முதலாக உடையது. 1

2. **கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.**

தூய அறிவின் வடிவானவனின் நல்ல அடிகளை வணங்குவதைக் கல்லாதவர், கற்ற பிற கல்வியால் எப்பயனும் இல்லை. 2

3. **மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.**

மெல்லிய மலரினும் மெல்லிய இயல்பை மேற்கொண்டவனின் சிறந்த வழிகளைப் பற்றி நடந்தவர், உலகில் நெடுங்காலம் வாழ்வார். 3

4. **வேண்டுதல்வேண் டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.**

விருப்பு வெறுப்பு இல்லாதவன் வழியில் நடப்பவர்க்கு எக்காலத்தும் எவ்விடத்தும் துன்பம் இல்லை. 4

5. **இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.**

இறைவனின் (நல்லியல்புகளைத் தன்னிடத்துக் கொண்டவனின்) அழிவற்ற புகழ் வழியை விரும்பி நடப்பவரிடத்து, அறிவை மயக்கும் நல்வினைகளும் தீவினைகளும் சேர மாட்டா. 5

6. பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

ஐம்பொறிகளின் வழியாக ஏற்படும் உணர்வுகளைப் பக்குவப்படுத்தியவனின் மெய்யான வழியில் நின்றவர் நெடுங்காலம் வாழ்வர். 6

7. தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.

இவனுக்கு இவனே உவமை எனத்தக்க இயல்புடையவனின் வழியைப் பின்பற்றாதவர், தமக்கு உண்டாகும் மனக்கவலையை மாற்றிக் கொள்ள முடியாது. 7

8. அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

அறக்கடலாக விளங்கும் அருளாளன் வழியைப் பின்பற்றி நடவாதவர் அறமல்லாத தீய பழிக் கடலை நீந்திக் கடக்க முடியாது. 8

9. கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

இயக்கம் இல்லாத பொறிகளால் பயனில்லை; அதுபோல், எண்ணிப் போற்றும் நற்குணங்களை யெல்லாம் ஒருங்கே கொண்டவனை வணங்காத தலையாலும் பயனில்லை. 9

10. பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.

இறைவனின் வழியைப் பின்பற்றிக் கொண்டவர், பேதைமை (அறியாமை) என்று சொல்லப்படும் பெரிய கடலை எளிதில் கடப்பர்; பிறர் கடவார். 10

உ. வான் சிறப்பு

(மழையின் சிறப்பு)

1. **வானின் றுலகம் வழங்கி வருதலால்**
தானமிழ்தம் என்றுணரற் பாற்று.

மழை பொழிந்து உலகுக்கு வேண்டும் நலங்களை வழங்கி வருவதால், அம்மழையே உலகுக்கு அமிழ்தம் என்று உணர்தற்கு உரியது. 11

2. **துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்**
துப்பாய தூஉம் மழை.

உண்பவர்க்கு வேண்டிய உணவுப் பொருள்களை உண்டாக்கித் தருவதுடன் உண்பவர்க்குக் 'குடிநீர்' என்னும் உணவாக இருப்பதும் மழையேயாம். 12

3. **விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்**
துண்ணின் றுடற்றும் பசி.

வேண்டிய காலத்தில் மழைபெய்யத் தவறி விடுமானால் பரந்த கடல் சூழ்ந்த உலகத்துள்ள உயிர்களையெல்லாம் பசி நீங்காமல் துன்புறுத்தும். 13

4. **ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்**
வாரி வளங்குன்றிக் கால்.

மழையென்னும் சிறந்த வருமானம் குறைந்து போகும் காலம் உண்டாகுமானால், உழவர் தம் ஏரைப் பூட்டி உழவுத் தொழில் செய்யவும் மாட்டார். 14

5. **கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே**
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

பெய்யாமல் கேடு செய்யவும் மழையால் முடியும்; அவ்வாறு தன்னால் கெட்டுப் போனவர்க்குத் துணையாக நின்று பெய்து, நன்மை செய்யவும் மழையால் முடியும். 15

6. **விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே**
பசும்புல் தலைகாண் பரிது.

வானில் இருந்து மழைத்துளி விழுந்தால் அல்லாமல் அத்துளி வீழாத இடத்தில் பசும்புல் முளைத்தலையும் பார்க்க முடியாது. **16**

7. **நெடுங்கடலும் தன்னீர்மை குன்றும், தடிந்தெழிலி**
தானல்கா தாகி விடின்.

கடலில் முகந்த நீரை முகில் மழையாக மீண்டும் வழங்காது என்றால் பெரிய அக்கடலில் கிடைக்கும் வளங்கள் எல்லாமும் குறைந்து போகும். **17**

8. **சிறப்பொடு பூசனை செல்லாது, வானம்**
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு.

மழை பெய்யாமல் போகுமானால் புகழ் நிலையர்களுக்கு இங்கு நடத்தப்படும் சிறப்பு விழாக்களோடு நாள் வழிபாடுகளும் நடைபெற மாட்டா. **18**

9. **தானம் தவமிரண்டும் தங்கா, வியனுலகம்**
வானம் வழங்கா தெனின்.

இப்பெரிய உலகத்தில் மழைபெய்யாது என்றால் கொடை, தவம் (தன் துயர் தாங்கிப் பிறிது உயிர்க்குத் துன்பம் செய்யாமை) என்னும் இரண்டும் அவற்றைச் செய்வார் இல்லாமல் நீங்கும். **19**

10. **நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்**
வானின் றமையா தொழுக்கு.

நீரில்லாமல் உலகவாழ்வு நடைபெறாது என்றால், அம்மழை இல்லாமல் எத்தகைய உயர்ந்தவரிடத்தும் ஒழுங்கு இல்லாமல் போய்விடும். **20**

3. நீத்தார் பெருமை

(பற்றற்ற துறவோர் - முனிவர் - சித்தர் - பெருமை)

1. **ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு.**

ஒழுக்கத்தில் நிலைபெற்றுத் துறந்தவர் பெருமையே பெருமைக் குரியன பலவற்றுள்ளும் சிறந்தது என்பது உயர்ந்த நூல்களின் முடிபாகும். 21

2. **துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை எண்ணிக்கொண் டற்று.**

துறவோர் பெருமைக்கு அளவில்லை. அதனை அளவிட்டுக் கூறுவதாயின் 'இவ்வுலகில் இப்பொழுது வரை இறந்து போனவர் எத்தனை பேர்' என எண்ணத் தொடங்கி முடியாமல் கைவிடுவது போன்றது. 22

3. **இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு.**

இருவேறு இயல்புடைய இவ் வுலகியல் தெரிந்து பற்றறுத்தல் என்னும் அறத்தைக் கொண்டவர் பெருமை, உலகில் விளங்கும் எப்பெருமையினும் பெருமையுடையதாகும். (இருவேறு இயல்பு: ஆக்கமும் கேடும்). 23

4. **உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து.**

அறிவு என்னும் துறட்டியால் (தோட்டியால்) பொறிகளாகிய யானைகள் ஐந்தையும் அடக்கிக் காப்பவன், ஆக்கம் என்னும் களஞ்சியத்தை நிரப்பும் ஒப்பற்ற நல்ல மணிகளைத் தரும் பொறுக்குமணி ஆவன். 24

5. **ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலும் கரி.**

ஐம்புலன்களையும் அடக்கிய நீத்தார் திறத்திற்கு எண்ணற்ற புகழுடம்பாளர்க்கு ஒரு பெருந் தலைவனாகக் கூறப்படும் ஐந்திரனே (இந்திரனே) சிறந்த சான்றாவான். (ஐந்தவித்தவன் ஐந்திரன்) 25

6. **செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியர்**
செயற்கரிய செய்கலா தார்.

பிறரால் செய்தற்கு அரிய நல்ல செயல்களைச் செய்பவரே பெரியவர்; அவ்வாறு செய்தற்கு அரிய செயல்களைச் செய்யாதவர் சிறியவர். **26**

7. **சுவையொளி ஊறோசை நாற்றமென் றைந்தின்**
வகைதெரிவான் கட்டே உலகு.

சுவை, ஒளி, ஊறு (தொடுதலுணர்வு), ஓசை, மணம் என்னும் ஐந்தின் விரிவுகளைத் தெரிந்த நீத்தாரிடத்தேதான் உலகியக்கம் அடங்கியுள்ளது. **27**

8. **நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து**
மறைமொழி காட்டி விடும்.

சொல்லியது சொல்லியவாறே நிறைவேறும் சொற்களைச் சொல்லும் நீத்தார் பெருமையை, இவ்வுலகைக் கட்டிக் காக்கும் அவர்தம் பாதுகாப்பு மொழிகளே காண்பித்து விடும். **28**

9. **குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி**
கணமேயும் காத்தல் அரிது.

உயர்குணம் என்னும் மலையின்மேல் ஏறிநின்ற நீத்தார் கொண்ட சீற்றம் ஒரு நொடிப் பொழுது அளவு கூடத் தங்காது. **29**

10. **அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்**
செந்தண்மை பூண்டொழுக லான்.

எல்லா உயிர்களிடத்தும் அருள் கொண்டு நடத்தலால் அந்தணர் என்பவர் நீத்தாரே ஆவர். (அருள்நெறி பேணாதவர் அந்தணர் ஆகார்) **30**

4. அறன் வலியுறுத்தல்

(அறத்தின் தேவையை வற்புறுத்துதல்)

1. **சிறப்பீனும் செல்வமும் ஈனும்; அறத்தினூஉங்
காக்கம் எவனோ உயிர்க்கு?**

சிறந்த புகழைத் தருவதும் நிறைந்த பொருளைத் தருவதும் அறமேயாகும். ஆதலால், அந்த அறத்தைக் காட்டிலும் உயிர்க்கு நலம் செய்வது வேறொன்றும் இல்லை. 31

2. **அறத்தினூஉங் காக்கமும் இல்லை; அதனை
மறத்தலி னூங்கில்லை கேடு.**

அறஞ் செய்தலினும் ஒருவனுக்கு நன்மையாவது எதுவும் இல்லை; அதுபோல் அவ்வறத்தை மறத்தலினும் கேடாவதும் எதுவும் இல்லை. 32

3. **ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல்.**

பொருந்தும் வகையால் அறச்செயல்களை இடைவிடாமல், முடியும் இடங்களி லெல்லாம் செய்தல் ஒவ்வொருவருக்கும் கடமையாம். 33

4. **மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற.**

மனத்தில் குற்றம் இல்லாதவன் ஆகுதலே எல்லா அறங்களுக்கும் மூலமாகும். மற்றவை ஆக்கம் கெடுப்பவை யாம். 34

5. **அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம்.**

பொறாமை ஆசை சீற்றம் கடுஞ்சொல் என்னும் தீயதன்மைகள் நான்கையும் விட்டு நீங்கி நடப்பதே அறமாகும். 35

6. **'அன்றறிவாம்' என்னா தறம்செய்க; மற்றது**
பொன்றுங்கால் பொன்றாத் துணை.

பின்னே செய்யலாம் என்று காலம் கழியாமல் உடனே அறம் செய்தல் வேண்டும். ஏனெனில், அவ்வறமே இறக்கும் பொழுதும் இறவாத் துணையாக இருக்கும். **36**

7. **அறத்தா றிதுவென வேண்டா, சிவிகை**
பொறுத்தானோ டூர்ந்தான் இடை.

பல்லக்கைச் சுமந்து செல்பவனுக்கும் அதன்மேல் அமர்ந்து செல்பவனுக்கும் இடையேயுள்ள வேறுபாடு அறத்தின் பயன் என எண்ணவே வேண்டா. (அது பொருட் செல்வத்தால் ஏற்பட்டதாகும்) **37**

8. **வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்**
வாழ்நாள் வழியடைக்கும் கல்.

வீணாகக் கழியும் நாள் ஆகாமல் ஒருவன் நல்ல அறச் செயல்களைச் செய்தால் அது அவன் வாழ்நாள் ஆற்றை அடைத்துக் காக்கும் அணையாகும். **38**

9. **அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்**
புறத்த புகழும் இல.

அறவழியால் வரும் இன்பமே இன்பமாம்; மற்றை வழியால் வருவன (இன்பம் உண்டாவன போல் தோன்றினும்) துன்பமேயாம்; மேலும் புகழும் இல்லாதனவுமாம். **39**

10. **செயற்பால தோரும் அறனே; ஒருவற்**
குயற்பால தோரும் பழி.

ஒருவன் செய்யத் தக்கவை நல்லறச் செயல்களே; அவ்வாறே அவன் செய்யாமல் விடத்தக்கவை பழிச் செயல்களே. **40**

5. இல்வாழ்க்கை

(துணைவன் துணைவியர் கூடி நடத்தும் குடும்ப வாழ்வு)

1. **இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்**
நல்லாற்றின் நின்ற துணை.

இல்லற வாழ்வு வாழ்பவன் என்பவன் இயற்கைத் தொடர்பால் அமைந்த தாய் தந்தை மனைவி ஆகிய மூவர்க்கும் நல்வழியில் நிலைபெற்ற துணை ஆவான். 41

2. **துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்**
இல்வாழ்வான் என்பான் துணை.

இல்லற வாழ்வு வாழ்பவன் தூய துறவியர்க்கும் உணவுக்கு வழியில்லாமல் இருப்பவர்க்கும் பாதுகாப்பு இல்லாமல் வீட்டை விட்டு வெளியேறியவர்க்கும் துணையாவான். 42

3. **தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தான்என்றாங்**
கைம்புலத்தா றோம்பல் தலை.

தெளிந்த அறிவினர், வாழ்வாங்கு வாழ்பவர், விருந்தினர், சுற்றத்தினர், இவர்களைப் பேணும் தான் என்னும் ஐந்திடத்தாரையும் பேணல் இல்வாழ்வான் சிறந்த கடமையாம். 43

4. **பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை**
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்.

ஒருவன் இல்வாழ்க்கை பழிகளுக்கு அஞ்சிப் (பொருள் தேடி அப் பொருளால் வந்த உணவைப்) பகுத்துண்பதைக் கடமையாகக் கொண்டால் அவ் வாழ்வு வாழ்பவனின் வழிகளில் எப்பொழுதும் குறைவுண்டாதல் இல்லை. 44

5. **அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
பண்பும் பயனும் அது.

ஒருவன் இல்வாழ்க்கை அன்புத் தன்மையையும் அறச் செய்கையையும் கொண்டிருக்குமானால் முறையே அவை அவ்வியல்பின் பண்பாகவும் பயனாகவும் விளங்கும் (அன்பே பண்பு. அறமே பயன்). 45

6. **அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின்**
போஒய்ப் பெறுவ தெவன்?

ஒருவன் தன் இல்வாழ்வை அறவழியில் நடத்துவானே -யானால், அந்த இல்வாழ்வு அல்லாத பிறவழிகளில் போய் அவன் அடையத் தக்கது உண்டோ? (எதுவும் இல்லை) **46**

7. **இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்**
முயல்வாருள் எல்லாம் தலை.

இயல்பான அறமுறையில் இல்வாழ்க்கை வாழ்பவன் என்று சொல்லப்படுபவன் (பிறவழிகளில்) தம்மை மேம்படுத்த முயலும் முயற்சியாளர் அனைவரையும் விட முதன்மையானவன் ஆவன். **47**

8. **ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை**
நோற்பாரின் நோன்மை உடைத்து.

பிறரை நல்வழியில் நடக்கச் செய்து தானும் நல்வழியில் தவறாமல் நடப்பவன் இல்வாழ்க்கை கடுந்தவம் செய்பவர் தவத்தினும் வலிமையுடையதாகும். **48**

9. **அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்**
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று.

அறம் என்று நூல்வல்லோரால் சொல்லப்பட்டது இல்வாழ்வே. அவ்வாழ்வு புகழுக்குரியதே எனினும் பிறர் பழித்தற்கும் இடமில்லாது அமைந்தால் மேலும் நல்ல புகழுக்குரியதாம். **49**

10. **வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
தெய்வத்துள் வைக்கப் படும்.

உலகில் வாழவேண்டிய முறைப்படி வாழ்பவன் மேம்பட்ட புகழுலகில் நிலைபெறும் தெய்வங்களுள் ஒரு தெய்வமாக மதிக்கப் படுவான். **50**

6. வாழ்க்கைத் துணைநலம்

(துணைவன் துணைவியர் ஒருவர்க்கு ஒருவர் வாழ்வுத் துணையாகும் நல்ல தன்மை)

1. **மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்**
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

குடும்பத்திற்குத் தக்க நற்குண நற்செயல்கள் உடையவளாய்த் தன் கணவன் நிலைக்குத் தக்க அளவில் குடும்பம் நடத்துபவளே சிறந்த மனைவி ஆவாள். 51

2. **மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை**
எனைமாட்சித் தாயினும் இல்.

மனைவியிடத்து மனைக்குரிய நற்குண நற்செய்கை இல்லை என்றால், அவ்வாழ்க்கை பொருள், கல்வி, பதவி முதலிய எவ்வகையில் சிறப்புடையதாய் இருப்பினும் பயனில்லை. 52

3. **இல்லதென் இல்லவள் மாண்பானால்? உள்ளதென்**
இல்லவள் மாணாக் கடை?

மனைவி, குடும்பத்திற்கு ஏற்ற குணம் உடையவளாக இருந்தால் அவ் வாழ்வில் இல்லாத நலம் என்ன? (எல்லா நலங்களும் உண்டு). அவள் சிறுமைக் குணம் உடையவளாக இருந்தால் அவ்வாழ்வில் இருப்பது என்ன? (எதுவும் இல்லை) 53

4. **பெண்ணிற் பெருந்தக்க யாவுள, கற்பென்னும்**
திண்மையுண் டாகப் பெறின்?

கற்பு என்று சொல்லப்படும் உறுதித் தன்மை ஒரு பெண்ணுக்கு உண்டாகப் பெற்றிருந்தால், அப்பெண்ணினும் பெருமைப்படத் தக்கனவாக வேறு எவையும் இல்லை. 54

5. **தெய்வம் தொழாஅள்; கொழுநற் றொழுதெழுவாள்;**
பெய்யெனப் பெய்யும் மழை.

(திருமணத்தின் முன்பு தான் தொழுத) தெய்வத்தைத் தொழாதவளாய்த் தன் கணவனையே தெய்வமாக நினைந்து துயிலெழும் பெண்மகள் பெய் என்ற அளவில் பெய்யும் மழைக்கு ஒப்பானவள் ஆவள். 55

6. **தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்.**

தன் உடலையும் உள்ளத்தையும் தக்கவாறு காத்து, தன் கணவன் விரும்புமாறு பேணி, தகுதி மிக்க மூத்தோர் மொழிகளைப் போற்றி, சோர்வில்லாமல் கடமை புரிபவளே சிறந்த பெண். 56

7. **சிறைகாக்கும் காப்பெவன் செய்யும்? மகளிர் நிறைகாக்கும் காப்பே தலை.**

பெண்டிரைப் பிறர் அடக்கிக் காக்கும் காவல் என்ன பயன் செய்யும்? அவர் தம்மைத் தாமே அடக்கிக் காக்கும் மனக்காவலே சிறந்த காவலாகும். 57

8. **பெற்றான் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப் புத்தேளிர் வாழும் உலகு.**

தம்மைப் போன்ற நற்குண நற்செயல் அமைந்த கணவரைப் பெற்றால் அப்பெண்டிர் என்றும் புதிது மணந்து கொண்டு வாழும் இன்ப உலகினராகவே பெருஞ் சிறப்பு அடைவர். 58

9. **புகழ்புரிந்த இல்லிலோர்க் கில்லை, இகழ்வார்முன் ஏறுபோல் பீடு நடை.**

பெருமைமிக்க செயல்களைச் செய்யும் மனைவியை அடையாத கணவர்க்குத் தம்மைப் பழித்துக் கூறுபவர் முன் அரிமாவைப் போல் நடக்கும் பெருமித நடை இல்லை. 59

10. **மங்கலம் என்ப மனைமாட்சி, மற்றதன் நன்கலம் நன்மக்கட் பேறு.**

மனையாளின் பெருமையே, ஒருவன் வாழ்வில் எந்நாளும் திருமண விழாப் போன்றது என்பர். அவ்வாழ்வில் பெறும் நல்ல மக்கட் பேறே நல்ல அணிகலம் போன்றது என்பர். 60

7. மக்கட்பேறு

(நன்மக்களைப் பெறுதல்)

1. **பெறுமவற்றுள் யாமறிவ தில்லை, அறிவறிந்த**
மக்கட்பே றல்ல பிற.

இல்லற வாழ்வினர் பெற வேண்டிய பேறுகளுள் அறிய வேண்டியவற்றை அறிந்த நல்ல மக்களைப் பெறும் பேறன்றிச் சிறந்த பேற்றை யாம் அறிந்தது இல்லை. **61**

2. **எழுபிறப்பும் தீயவை தீண்டா, பழிபிறங்காப்**
பண்புடை மக்கட் பெறின்.

பழிவழியில் செல்லாத பண்புடைய நல்ல மக்களை ஒருவர் அடைந்தால், அவர் வழிவழிப் பிறப்பினராலும் அவர்க்குத் தீய பழிகள் நெருங்க மாட்டா. **62**

3. **தம்பொருள் என்பதம் மக்கள்; அவர்பொருள்**
தம்தம் வினையான் வரும்.

தம் பொருள் என்று பெருமையாகச் சொல்லப்படுவது தம் மக்களே. அவருடைய மற்றைப் பொருள்களோ அவரவர் செயலுக்குத் தக்க வகையில் வரும். **63**

4. **அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்**
சிறுகை அளாவிய கூழ்.

தம் குழந்தைகளின் சிறிய கைகளால் பிசையப்பட்ட உணவு சுவைமிக்க உணவுகளிலும் சுவை மிக்கதாகப் பெற்றோர்க்கு இன்பம் தரும். **64**

5. **மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம், மற்றவர்**
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு.

மக்கள் தம் உடலைத் தழுவுதல், பெற்றோர் உடலுக்கு இன்பமாம். அவர்களின் சொற்களைக் கேட்டலோ செவிக்குச் சிறந்த இன்பமாம். **65**

6. **'குழலினிது யாழினிது' என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்.**

தம்மக்களின் இனிய மழலைச் சொற்களைக் கேட்டு மகிழாதவர்களே 'குழலிசை இனியது' என்றும் 'யாழிசை இனியது' என்றும் கூறுவர். 66

7. **தந்தை மகற்காற்றும் நன்றி, அவையத்து
முந்தி இருப்பச் செயல்.**

தந்தை ஒருவர் தம் மகனுக்குச் செய்ய வேண்டிய நல்ல செயல், அவனைக் கற்றறிந்த சான்றோர் அவையில் முதன்மையானவனாக இருக்கச் செய்வதே (மகனுக்கு என்றது மகளுக்கும் பொருந்தும்) 67

8. **தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது.**

தம் அறிவினும் தம் மக்கள் மிக்க அறிவினராக இருத்தல், (தம் குடும்பம் நாடு என்னும் எல்லைகளையும் கடந்து) இவ்வுலகத்து உயிர்களுக்கெல்லாம் இன்பம் தரும். 68

9. **ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும், தன்மகனைச்
'சான்றோன்' எனக்கேட்ட தாய்.**

தன் மகனை (அறிவு குணங்களால் நிறைந்த) சான்றாண்மையாளன் என உயர்ந்தோர் பாராட்டுவதைக் கேட்ட தாய், அவனைப் பெற்ற பொழுதினும் பெரிதும் மகிழ்வாள். 69

10. **மகன்தந்தைக் காற்றும் உதவி, 'இவன் தந்தை
என்நோற்றான் கொல்' எனும் சொல்.**

மகனொருவன் தனக்குப் பலவகையாலும் உதவிய தன் தந்தைக்குச் செய்யும் கைம்மாறு, 'இவனை மகனாகப் பெற இவன் தந்தை என்ன நற்பேறு செய்தானோ' என்று சொல்லும் சொல்லைத் தருவதே. 70

8. அன்புடைமை

(அன்புடையவராக இருத்தல்)

1. **அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ்? ஆர்வலர்**
புன்கணீர் பூசல் தரும்.

ஒருவர் கொண்டுள்ள அன்பினைப் பிறர் அறியாமல் மறைத்து வைக்கும் மறைவு இல்லை. அன்பு செலுத்தத் தக்கவரைக் கண்ட அளவில் அவர் கண்ணில் துளிக்கும் கண்ணீரே அதை வெளிப்படுத்தி விடும். 71

2. **அன்பிலார் எல்லாம் தமக்குரியர்; அன்புடையார்**
என்பும் உரியர் பிறர்க்கு.

அன்பு இல்லாதவர் தாம் கொண்டுள்ள எல்லாப் பொருள்களையும் தமக்கே உரியவையாகக் கொள்வர். ஆனால், அன்புடையவரோ தம் பொருளால் அன்றித் தம் உடலாலும் பிறர்க்குரியவராக இருப்பர். 72

3. **அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்**
கென்போ டியைந்த தொடர்பு.

அருமையாக வாய்த்த உயிர்க்கு உடலோடு கூடிய உறவு, அன்பு செலுத்துதற்கென்றே அமைந்தது என அறிவுடையோர் கூறுவர். 73

4. **அன்பீனும் ஆர்வ முடைமை; அதுஈனும்**
நண்பென்னும் நாடாச் சிறப்பு.

அன்பு முதற்கண் பிறரிடத்து விருப்பத்தைத் தரும்; பின்னர் அவ்விருப்பம், நட்பு என்று சொல்லப்படும். அளவற்ற நன்மையைத் தரும். 74

5. **அன்புற் றமர்ந்த வழக்கென்ப, வையகத்**
தின்புற்றார் எய்தும் சிறப்பு.

*இவ்வுலகத்தில் இன்பமடைந்து வாழ்பவர் பெறும் சிறப்புகள் எல்லாம், அன்பினைப் போற்றி அதில் நிலைத்து அவர் வாழ்ந்த வாழ்வின் பயனென அறிந்தோர் கூறுவர்.*75

6. **அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்;**
மறத்திற்கும் அஃதே துணை.

அன்பியல் அறியாதவரே, அன்பு நற்செயலுக்கு மட்டுமே துணையாகும் என்பர். ஆனால், பாவ, வீரச் செயல்களுக்குக் கூட அவ்வன்பு துணையாதல் உண்டு.76

7. **என்பி லதனை வெயில்போலக் காயுமே,**
அன்பி லதனை அறம்.

எலும்பு இல்லாத புழுக்களை வெயிற்கதிர் சுடுவது போல, அறிவிருந்தும் அன்பில்லாத உயிர்களை அறக்கதிர் சுடும். *77*

8. **அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை, வன்பாற்கண்**
வற்றல் மரம்தளிர்த் தற்று.

அன்பைத் தன்னிடத்துக் கொள்ளாதவர் வாழ்வை, உயிரோடு கூடிய வாழ்வாகக் கூறுவது, வலிய பாறையின் மேல் பட்டமரம் தளிர்த்தது என்று கூறுவது போன்றது (அன்பில்லாத வாழ்வு வாழ்வன்று) *78*

9. **புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும், யாக்கை**
அகத்துறுப் பன்பி லவர்க்கு?

(உயிருக்கு நலஞ்செய்யும்) உடலின் உள்ளுறுப்பாகிய அன்பு இல்லாதவர்க்கு, மற்றை வெளியுறுப்புகளெல்லாம் அழகாக அமைந்திருந்தாலும் அவை என்ன பயன் செய்யும். (பயன்தரா) *79*

10. **அன்பின் வழிய துயிர்நிலை; அஃதிலார்க்**
கென்புதோல் போர்த்த உடம்பு.

அன்புடன் கூடிய உடலே உயிருடன் கூடிய உடல்; அவ்வன்பில்லார் உடலோ, எலும்பும் தோலும் போர்த்துக் கட்டிய உயிரிலா உடல் ஆகும். *80*

9. விருந்தோம்பல்

(புதியவராக வந்தவரைப் பேணல்)

1. **இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம், விருந்தோம்பி**
வேளாண்மை செய்தற் பொருட்டு.

இல்லத்தில் இருந்து குடும்பநலம் பேணி வாழ்க்கை நடத்துவது, தம்மைத் தேடிவரும் விருந்தினரைத் தக்கவாறு பேணி உதவி செய்தற்கேயாம். 81

2. **விருந்து புறத்ததாத் தானுண்டல், சாவா**
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.

விருந்தாக வந்த ஒருவர் வீட்டின் வெளியே இருக்கத் தான் வீட்டின் உள்ளே இருந்து உயிர்தளிர்க்கச் செய்யும் அமிழ்த உணவாக இருந்தாலும் உண்பது விரும்பத் தக்கது அன்று. 82

3. **வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை**
பருவந்து பாழ்படுதல் இன்று.

நாள்தோறும் தன்னிடத்து வரும் விருந்தினரைப் பேணுபவன் இல்வாழ்க்கை, அவ்விருந்து செய்தல் வழியால் துன்புற்றுக் கெட்டுப் போவதில்லை. 83

4. **அகனமர்ந்து செய்யாள் உறையும், முகனமர்ந்து**
நல்விருந்து ஓம்புவான் இல்.

விருந்தினரை முகமலர்ந்து வரவேற்று நன்முறையில் பேணுபவன் இல்லத்தில் செல்வம் என்னும் மகள் தன் முகத்தோடு அகமும் மலரத் தங்கியிருப்பாள். (விருந்தோம்புதலால் செல்வம் குறையாது.) 84

5. **வித்தும் இடல்வேண்டுங் கொல்லோ, விருந்தோம்பி**
மிச்சில் மிசைவான் புலம்?

விருந்தினரைப் பேணி அவருண்ட பின் மீதமாகும் உணவை உண்பவன், தன் நிலத்திற்கு விதை போடுதலையும் விரும்பான். (விதைப்பதனினும் விருந்துக்கே முதன்மை தருவான்.) 85

6. **செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**
நல்விருந்து வானத் தவர்க்கு.

வந்த விருந்தினரைப் பேணி மேலும் வரவிருக்கும் விருந்தினரை எதிர்பார்த்திருப்பவன் மிக மேலோரும் விரும்பும் நல்ல விருந்தாளியாவான். 86

7. **இனைத்துணைத் தென்பதொன் றில்லை; விருந்தின்**
துணைத்துணை வேள்விப் பயன்.

விருந்தோம்புதலால் உண்டாகும் பயன் இவ்வளவினது என்று அளவிட்டுச் சொல்ல ஒரு வகையில்லை; விருந்தாக வந்தவரின் தகுதி அளவே விருந்தின் தகுதி அளவாகும். 87

8. **'பரிந்தோம்பிப் பற்றற்றேம்' என்பர், விருந்தோம்பி**
வேள்வி தலைப்படா தார்.

விருந்தோம்பும் விருப்பமிக்க செயலில் ஈடுபடாதவரே தம் செல்வத்தை வருந்திக் காத்து 'எம்மை விரும்புவார் எவரும் இல்லேம்' என வருந்துவர். 88

9. **உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா**
மடமை; மடவார்கண் உண்டு.

செல்வம் நிரம்ப இருக்கும் போதே இருக்கும் வறுமையாவது, விருந்தினரைப் பேணாத அறியாமையாகும்; இவ்வறியாமை அறிவிலாரிடத்தேதான் உண்டு. 89

10. **மோப்பக் குழையும் அனிச்சம்; முகந்திரிந்து**
நோக்கக் குழையும் விருந்து.

மிக மென்மையான அனிச்சப் பூவும் முகர்ந்து பார்த்த அளவில் தான் வாடும். ஆனால், மானமுள்ள விருந்தினரோ, முகம் மாறுபடப் பார்த்த அளவிலேயே வாடிப் போவர். 90

10. இனியவை கூறல்

(இனிய சொற்களைச் சொல்லுதல்)

1. **இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.**

இரக்கம் கலந்ததாய், வஞ்சனை இல்லாததாய், மெய்ப்பொருள் உணர்ந்த பெருமக்கள் வாயில் இருந்து வரும் சொல்லே இன்சொல்லாகும். 91

2. **அகனமர்ந் தீதலின் நன்றே, முகனமர்ந்
தின்சொல னாகப் பெறின்.**

ஒருவரைப் பார்த்த அளவில் முகமலர்ந்து இனிய சொற்களைச் சொல்லும் இயல்பை ஒருவன் பெற்றால், அது அகமலர்ந்து கொடுக்கும் கொடையினும் நல்லதாகும். 92

3. **முகத்தான் அமர்ந்தினிது நோக்கி, அகத்தானாம்
இன்சொ லினதே அறம்.**

முகமும் முகமும் மலர இனிமையாகப் பார்த்து, உள்ளத்தொடு கூடிய இனிய சொற்களைச் சொல்வதே இனியவை கூறும் அறமாகும். 93

4. **துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும், யார்மட்டும்
இன்புறூஉம் இன்சொ லவர்க்கு.**

எவரிடத்தும் எப்போதும் இன்பம் மிகுவிக்கும் இனிய சொற்களைச் சொல்பவர்க்குத் துன்புறுத்தும் பசிக்கொடுமை இல்லாதொழியும். 94

5. **பணிவுடையன் இன்சொல னாதல், ஒருவற்
கணிஅல்ல மற்றுப் பிற.**

பணிவுடையவனாக இருத்தலும் இனியவை கூறுபவனாக இருத்தலும் ஒருவனுக்கு அணிகலங்கள் போன்றவை. மற்றை அணிகலங்கள் அணிகலங்கள் அல்ல. 95

6. **அல்லவை தேய அறம்பெருகும், நல்லவை**
நாடி இனிய சொலின்.

நல்லவற்றை ஆராய்ந்து அவற்றைக் கேட்பவர் விரும்பச் சொல்லும் இயல்பை ஒருவன் பெற்றால், அவனுக்குத் தீமைகள் சுருங்க நல்லவை பெருகும். 96

7. **நயனீன்று நன்றி பயக்கும், பயனீன்று**
பண்பின் தலைப்பிரியாச் சொல்.

கேட்பவர்க்குப் பெரும் பயன் தந்து இனிமைப் பண்பில் இருந்து நீங்காத சொல், சொல்பவனுக்கும் அப்பொழுதில் இன்பம் தந்து பின்னரும் பெருநலங்களைச் செய்யும். 97

8. **சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்**
இம்மையும் இன்பம் தரும்.

உள்ளத்தில் சிறுமை சிறிதும் இல்லாமல் சொல்லப்படும் இனிய சொல் வாழும் போதே அன்றி மறைந்த பின்னரும் புகழின்பம் தரும். 98

9. **இன்சொல் இனிதீன்றல் காண்பான், எவன்கொலோ**
வன்சொல் வழங்கு வது.

பிறர் சொல்லும் இனிய சொல் தனக்கு இன்பந் தருவதைக் காணும் ஒருவன், பிறரிடத்து, இன்பந் தராத கடுஞ்சொற்களைச் சொல்வது என்ன பயன் கருதியோ?99

10. **இனிய உளவாக இன்னாத கூறல்,**
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

சொல்பவர்க்கும் கேட்பவர்க்கும் இன்பந்தரும் சொற்கள் இருக்கவும் அவற்றை விட்டு இனிமையிலாத சொற்களைச் சொல்வது கனியிருக்கவும் காயைத் திருடித் தின்பது போன்றது. 100

11. செய்ந்நன்றியறிதல்

(பிறர் செய்த நன்மையை மறவாமை)

1. **செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது.**

முன்னர் ஒரு நன்மையும் ஒருவர் செய்யாதிருக்க, அவர்க்கு ஒருவர் செய்த நன்மைக்கு, இம்மண்ணிடமும், விண்ணிடமும் தம் உடைமையாக இருந்து கொடுத்தாலும் இணையாகாது. 101

2. **காலத்தி னற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.**

இக்கட்டான ஒரு பொழுதில் ஒருவர்க்குச் செய்த நன்மை அதன் அளவால் சிறிதாக இருப்பினும், பயனை நோக்க இப்பெரிய உலகினும் அது பெரியதாகும். 102

3. **பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது.**

இதனைச் செய்தால் இன்னபயன் கிடைக்குமென்று எண்ணியும் பாராமல் ஒருவர் செய்த நன்மையை, நன்றாக ஆராய்ந்தால், அந்நன்மை பெரிய கடலினும் பெரிதாகும். 103

4. **தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வார் பயன்தெரி வார்.**

செய்ந்நன்றி அறிதலின் பயனைத் தெரிந்தவர், தமக்கு ஒருவர் தினையளவாம் சிறிய நன்மையைச் செய்தாலும், அதனைப் பனையளவாம் பெரிய நன்மையாகக் கொள்வர். (தினையும் பனையும் அளவுப் பெயர்கள்) 104

5. **உதவி வரைத்தன் றுதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து.**

ஒருவர்க்கு ஒருவர் செய்யும் உதவி, அவ்வுதவியாம் அளவையே அளவாக உடையதன்று, அவ்வுதவியைப் பெற்றவரின் தகுதி அளவையே அளவாக உடையது. 105

6. **மறவற்க மாசற்றார் கேண்மை, துறவற்க**
துன்பத்துள் துப்பாயார் நட்பு.

மனத்தில் கறையில்லாப் பெருமக்களின் உறவை எந் நிலையிலும் மறவாது இருப்பாயாக; அவ்வாறே, தீராத் துன்பத்தில் தாங்குதலாக இருந்தவர் நட்பை எவ்வகையாலும் விடாது இருப்பாயாக. **106**

7. **எழுமை எழுபிறப்பும் உள்ளுவர், தங்கண்**
விழுமம் துடைத்தவர் நட்பு.

தமக்குண்டாகிய கொடிய துயரை முழுமையாக நீக்கியவர் நட்பினைச் செய்ந்நன்றி அறிந்தவர் அக்காலத்தில் மட்டுமன்றிப் பின்வருவார் வழிமுறைக் காலத்தும் நினைவர். **107**

8. **நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்ல**
தன்றே மறப்பது நன்று.

ஒருவர் செய்த நன்மையை மறந்து விடுவது நன்றியறிதல் ஆகாது. ஒருவர் செய்த தீமையைச் செய்த அப்பொழுதே மறந்து விடுவது, (செய்தார் செய்யப்பட்டார் ஆகிய) இருவர்க்கும் நன்மையாகும். **108**

9. **கொன்றன்ன இன்னா செயினும், அவர்செய்த**
ஒன்றுநன் றுள்ளக் கெடும்.

கொலைக்கு ஒப்பான கொடுமையை ஒருவர் செய்தாலும், அவர் செய்த நன்மையொன்று உண்டாயின் அதனை நினைத்துப் பார்த்த அளவால், அக்கொடுமையும் மறைந்து போகும். **109**

10. **எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

அறவோர் அமைத்த எந்த அறத்தை அழித்தவர்க்கும் தப்பும் வழியுண்டு; ஆனால், ஒருவர் தனக்குச் செய்த நன்றியை அழித்தவனுக்கோ தப்பும் வழியே இல்லை. **110**

12. நடுவு நிலைமை

(எவரிடத்தும் ஒப்ப நடக்கும் சமனிலை)

1. **தகுதி யெனஒன்று நன்றே, பகுதியாற்**
பாற்பட் டொழுகப் பெறின்.

ஆராய எடுத்துக் கொண்ட ஒன்றன் பகுதிகளை எல்லாம் தெளிவாக அறிந்து, நடுவு நிலையோடு நடப்பதை முறையாகக் கொண்டால், அந்நடுவு நிலை தகுதி வாய்ந்த ஒப்பற்ற நல்லறமே யாம். 111

2. **செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவின்றி**
எச்சத்திற் கேமாப் புடைத்து.

நடுவு நிலையைக் கடமையாகக் கொண்டவனது செல்வமும் புகழும் அவனொடும் அழிந்து போகாமல் அவன் வழியினர்க்கும் சிறந்த பாதுகாப்பாகும். 112

3. **நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை**
அன்றே ஒழிய விடல்.

பெற்ற அப்பொழுதில் நன்மை தருவது போலத் தோன்றினாலும், நடுவு நிலைமை நீங்கி வரும் நலங்களை விரும்பாமல் அப்பொழுதே விட்டுவிடுக. 113

4. **தக்கார் தகவிலர் என்ப தவரவர்**
எச்சத்தால் காணப் படும்.

'இவர் நடுவு நிலையாளர்', 'இவர் நடுவு நிலையற்றவர்' என்பது, ஒவ்வொருவரும் இவ்வுலகில் வாழ்ந்த போது வைத்துச் சென்ற (மக்கள் புகழ் பழி பொருள் முதலிய) வற்றால் தெரிய வரும். 114

5. **கேடும் பெருக்கமும் இல்லல்ல, நெஞ்சத்துக்**
கோடாமை சான்றோர்க் கணி.

வறுமையும் வளமையும் உலகில் காணாத புதுமைகள் அல்ல; ஆயினும் அவற்றைக் கருதி மனத்தின்கண் நடுவு நிலைமை தவறாது இருத்தலே சான்றோர்க்கு அழகு. 115

6. **'கெடுவல்யான்' என்ப தறிகதன் நெஞ்சம்**
நடுவொரீஇ அல்ல செயின்.

ஒருவன் மனம் நடுவு நிலைமை நீங்கி அதற்கு மாறான தீய செயல்களில் ஈடுபடுமானால், ஈடுபடும் அப்பொழுதே 'யான் கெட்டுப் போவேன்' என்பதை அவன் அறிந்து கொள்வானாக. **116**

7. **கெடுவாக வையா துலகம், நடுவாக**
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு.

நடுவு நிலைமையைப் போற்றி நல்ல வழியிலே நடப்பவனுக்குக் கேடு (வராது; அப்படி ஒருகால் கேடு) வரும் எனினும், அதனைச் சான்றோர் பழித்துக் கூறார். **117**

8. **சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்**
கோடாமை சான்றோர்க் கணி.

முதற்கண் சமமாக நின்று பின் தன்னிடத்து வைக்கப்பட்ட பொருளின் எடையைச் செம்மையாகக் காட்டும் நிறைகோல்; அது போல ஒரு பக்கம் சாயாமல் நடுவு நிலையோடிருத்தல் சான்றோர்க்கு அழகாகும். **118**

9. **சொற்கோட்டம் இல்லது செப்பம்; ஒருதலையா**
உட்கோட்டம் இன்மை பெறின்.

உள்ளத்தில் உறுதியான நடுவு நிலைமை உடையவராக இருந்தால், அவர் சொல்லும் சொல்லிலும் நடுவு நிலைமை நீங்காமல் அமைந்திருக்கும். **119**

10. **வாணிகம் செய்வார்க்கு வாணிகம், பேணிப்**
பிறவும் தமபோல் செயின்.

பிறர் பொருளையும் தம் பொருள் போல் கருதி, நடுவு நிலைமையுடன் கொண்டும் கொடுத்தும் வாணிகம் செய்தால் அஃது அவ்வாணிகர்க்குப் பொருள் வாணிகத்தோடு அற வாணிகமுமாம். **120**

13. அடக்கமுடைமை

(மனம் மொழி மெய்களில் அடக்கமுடையவராதல்)

1. **அடக்கம் அமரருள் உய்க்கும்; அடங்காமை**
ஆரிருள் உய்த்து விடும்.

அடக்கம் என்னும் உயர்தன்மை, ஒருவரை அழியாப் புகழ் நிலையுள் சேர்க்கும்; அடங்காமை என்னும் இழிதன்மை, நீங்காப் பழி என்னும் இருளிடத்துத் தள்ளி விடும். **121**

2. **காக்க பொருளா அடக்கத்தை; ஆக்கம்**
அதனினூஉங் கில்லை உயிர்க்கு.

எப்பொருளினும் உயர்பொருளாக ஒருவன் அடக்கத்தைக் காப்பானாக; அவ்வடக்கத்தினும் உயிர்க்கு மிக நலமாக்குவது வேறொன்றில்லை. **122**

3. **செறிவறிந்து சீர்மை பயக்கும், அறிவறிந்**
தாற்றின் அடங்கப் பெறின்.

அறிய வேண்டியவற்றை அறிந்து, அதன்படி அடக்கத்தைக் கொண்டால், அவ்வடக்கம் அமைந்துள்ள அளவுக்குத் தக்க சிறப்பை அது தரும். **123**

4. **நிலையில் திரியா தடங்கியான் தோற்றம்**
மலையினும் மாணப் பெரிது.

கால இட நிலைகளுக்குத் தக்கவாறு அசையாத அடக்கத்தை உடையவனது உயர்வு, தன்னியற்கையால் உயர்ந்து தோன்றும் மலையினும் மிக உயர்ந்தது. **124**

5. **எல்லார்க்கும் நன்றாம் பணிதல்; அவருள்ளும்**
செல்வர்க்கே செல்வம் தகைத்து.

பணிவு என்னும் உயர்தன்மை பொதுவாக அனைவருக்குமே நன்மையாம். அவ்வனைவ ருள்ளும் செல்வர்களுக்கு அமையும் பணிவோ, மேலுமொரு செல்வமுடைய சிறப்பினது. **125**

**6. ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்க லாற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து.**

ஓர் ஓட்டுள் தன் ஐந்துறுப்புகளையும் அடக்கும் ஆமையைப் போல், ஒருவர், தம் ஐம்பொறிகளையும் அடக்கும் திறம் பெற்றால், அஃது எக்காலத்திற்கும் பாதுகாப்பாகும். **126**

**7. யாகாவா ராயினும் நாகாக்க; காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.**

காக்க வேண்டியவற்றுள் எவற்றைக் காக்கத் தவறினாலும் நாவு ஒன்றையேனும் தவறாமல் பாதுகாக்க; அவ்வாறு காக்கத் தவறினால், அவர் தம் சொல்லில் குற்றம் உண்டாக்கப் பட்டுத் துன்புறுவர். **127**

**8. ஒன்றானும் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்
நன்றாகா தாகி விடும்.**

ஒருவன் சொல்லும் சொற்களில் ஒரு சொல்லாயினும் தீய பயனைத் தருவதாக அமைந்து விடுமானால், அவனுக்கு அமைந்த மற்றை நல்லவையும், நல்லவை அல்லாதவை ஆகிவிடும். **128**

**9. தீயினால் சுட்டபுண் உள்ஆறும்; ஆறாதே
நாவினால் சுட்ட வடு.**

கொள்ளியால் ஒருவன் சுட்டபுண் வெளியே ஆறுவதுடன் உள்ளும் ஒருநாள் ஆறிப் போகும்; ஆனால், நா என்னும் கொள்ளியால் சுட்ட புண்ணோ என்றும் மாறாத தழும்பாக நிலைத்து விடும். **129**

**10. கதம்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து.**

குற்றமறக் கற்று, சீற்றத்தைக் காத்து, அடக்கத்தைப் போற்றுபவனைக் கண்டு மகிழும் நற்பொழுதுக்காக, அறம் உரிய வழியைக் கூர்மையாகப் பார்த்துக் கொண்டிருக்கும். **130**

14. ஒழுக்கமுடைமை

(நல்ல நடத்தை உடையவராதல்)

1. **ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
உயிரினும் ஓம்பப் படும்.

ஒருவர் பெற வேண்டும் சிறப்புகள் அனைத்தையும் தருவது ஒழுக்கமே; ஆதலால் அவ்வொழுக்கம் உயிரினும் மேலானதாகக் காக்கப்படும். ***131***

2. **பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம்; தெரிந்தோம்பித்**
தேரினும் அஃதே துணை.

காப்பதற்குக் கடினமானது என்றாலும் ஒழுக்கத்தை வருந்திக் காத்தல் வேண்டும். ஏனெனில், எவ்வெவ் வழிகளால் ஆராய்ந்தாலும் அவ்வொழுக்கமே நல்ல துணையாகும். ***132***

3. **ஒழுக்க முடைமை குடிமை; இழுக்கம்**
இழிந்த பிறப்பாய் விடும்.

ஒழுக்கமுடைமையே உயர்குடித் தன்மையாகும். அவ்வொழுக்கத்தின் நீங்குதல் எவரையும் இழிகுடிப் பிறப்பினர் ஆக்கி விடும். ***133***

4. **மறப்பினும் ஓத்துக் கொளலாகும்; பார்ப்பான்**
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்.

நூலாய்பவன் தான் கற்ற கல்வியை மறந்து போனாலும் திரும்பவும் கற்றுக் கொள்ளலாம். ஆனால் ஒழுக்கம் குறைதலால், சிறந்த அவன் குடிப்பிறப்பு அழிந்து போகும். ***134***

5. **அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை**
ஒழுக்கம் இலான்கண் உயர்வு.

பொறாமையுடையவனிடத்தில் நலங்கள் இல்லை. அது போல், ஒழுக்கத்தைப் போற்றிக் கொள்ளாதவனிடத்து உயர்வு இல்லை. ***135***

6. **ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர், இழுக்கத்தின்**
ஏதம் படுபாக் கறிந்து.

ஒழுக்கம் தவறுதலால் பழியும் துயரும் உண்டாதலை அறிந்த உறுதிப்பாட்டாளர், அவ்வொழுக்க நெறியில் இருந்து சிறிதும் தளர மாட்டார். *136*

7. **ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை; இழுக்கத்தின்**
எய்துவர் எய்தாப் பழி.

ஒழுக்கத்தைக் கடைப்பிடியாகக் கொள்வதால் எவரும் மேன்மை அடைவர்; அவ்வொழுக்கத்தைக் கடைப்பிடியாமையால், அடையக் கூடாத பழிகளை எல்லாம் அடைவர். *137*

8. **நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்**
என்றும் இடும்பை தரும்.

நன்மை என்னும் விளைவு பெறுவதற்காக விதைக்கப்படும் விதை நல்லொழுக்கமாகும்; தீய ஒழுக்கமோ, அப்பொழுதே அன்றி எப்பொழுதும் துன்பமே தரும். *138*

9. **ஒழுக்க முடையவர்க்கு ஒல்லாவே, தீய**
வழுக்கியும் வாயாற் சொலல்.

ஒழுக்கத்தைத் தம் உயிரினும் உயர்வாகப் போற்றுவோர், தீமை தரும் சொற்களைத் தம்மை மறந்தும் கூடத், தம் வாயால் சொல்ல இயலாது. *139*

10. **உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்**
கல்லார் அறிவிலா தார்.

உயர்ந்தாரோடு பொருந்தி உறவாடும் வாழ்க்கைக் கல்வியைக் கல்லாதவர், மற்றைப் பலப்பல கல்விகளைக் கற்றவரே எனினும் அறிவில்லாதவரே ஆவர். *140*

15. பிறனில் விழையாமை

(பிறன் மனைவியை விரும்பாமை)

1. **பிறன்பொருளாள் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்து**
அறம்பொருள் கண்டார்கண் இல்.

அறமும் பொருளும் முறையாக ஆய்ந்து கண்டவர் இடத்துப், பிறன் உரிமையளாம் மனைவியை விரும்பிச் சேரும் அறியாமை இல்லை. ***141***

2. **அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை**
நின்றாரிற் பேதையார் இல்.

அறத்திற் கடையவராக நின்றவர் எவருள்ளும், அயலான் மனையின் கடையிலே (வாயிலிலே) நின்றவரைப் போலும் அறிவிலார் எவருமில்லை. ***142***

3. **விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரில்**
தீமை புரிந்தொழுகு வார்.

நம்பியவர் மனையில் தீய ஒழுக்கத்தைக் கொண்டவர் (உயிருடையவராக இருப்பினும் அவர்) இறந்தவரினும் உறுதியாக வேறானவர் அல்லர். ***143***

4. **எனைத்துணைய ராயினும் என்னாம் தினைத்துணையும்**
தேரான் பிறனில் புகல்.

எவ்வளவு உயர்ந்த நிலையினராக இருப்பினும், மிகச்சிறிய அளவு தானும் ஆராய்ந்து பாராமல் பிறன் மனைவியை விரும்பிச் செல்லுதல் என்ன தன்மையாம்? (எத்தன்மையுமில்லை) ***144***

5. **எளிதென இல்லிறப்பான் எய்துமெஞ் ஞான்றும்**
விளியாது நிற்கும் பழி.

'எனக்கு எளிதாகக் கிட்டும்' என்று, பிறன் மனையிடத்துக் கடந்து செல்பவன், எக்காலத்தும் அழியாப் பழியை அடைவான். ***145***

6. **பகைபாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாவாம் இல்லிறப்பான் கண்.**

பிறன் மனையை விரும்பிச் செல்பவனிடத்துப் பகை, பாவம், அச்சம், பழி என்னும் நான்கு தீமைகளும் நீங்காமல் நிலை பெறும். **146**

7. **அறனியலான் இல்வாழ்வான் என்பான் பிறனியலாள்
பெண்மை நயவா தவன்.**

பிறன் உரிமையளாய் அமைந்தவளின் பெண்மையை விரும்பாதவனே, அறநெறிப்படியே இல்வாழ்வு வாழ்பவன் என்று சொல்லப்படுவான். **147**

8. **பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்
கறனொன்றோ ஆன்ற ஒழுக்கு.**

சான்றோர்க்குப் பிறன் மனையை விரும்பாத பெருந்திறம், அறம் என்னும் ஒன்று மட்டுமோ ஆகும்; அதுவே சிறந்த ஒழுக்கமுமாகும். **148**

9. **நலக்குரியார் யாரெனின், நாமநீர் வைப்பில்
பிறற்குரியாள் தோள்தோயா தார்.**

நன்மைகளுக்கெல்லாம் உரிமை கொண்டவர் எவர் எனின், முழங்கும் கடல் சூழ்ந்த உலகில் பிறனுக்கு உரியவளைத் தழுவாதவரே ஆவர். **149**

10. **அறன்வரையான் அல்ல செயினும், பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று.**

அறத்தின் எல்லையைக் கடந்து ஒருவன் அறமல்லாதவற்றைச் செய்தாலும், அவன் பிறனுக்கு உரிமையானவளை விரும்பாமை நல்லது. **150**

16. பொறையுடைமை

(பொறுமை உள்ளவராய் இருத்தல்)

1. **அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.**

தன்னைத் தோண்டுபவரையும் சுமந்து கொண்டு நலம் செய்யும் நிலம். அதுபோல் தம்மை இகழ்ந்து கூறுபவரையும் பொறுத்துக் கொண்டு நலம் செய்தல் சிறந்த பண்பு. **151**

2. **பொறுத்தல் இறப்பினை என்றும்; அதனை
மறத்தல் அதனினும் நன்று.**

ஒருவர் செய்யும் தீமையைப் பொறுத்துக் கொள்ளுதல் என்றும் சிறப்பாகும். அத்தீமையை முழுமையாக மறந்து விடுவது அதனினும் சிறப்பு ஆகும். **152**

3. **இன்மையுள் இன்மை விருந்தொரால்; வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை.**

கொடிய வறுமையிலும் வறுமையாவது வந்த விருந்தினரைப் பேண முடியாமை; அதுபோல், சிறந்த வலிமையிலும் வலிமையாவது அறிவிலார் செயலைப் பொறுத்தல். **153**

4. **நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை
போற்றி ஒழுகப் படும்.**

நெஞ்சத்தின் உறுதிப்பாடு தன்னிடத்து நீங்காமல் இருப்பதை ஒருவன் விரும்பினால் அது பொறுமையைச் சிக்கெனக் கொண்டு நடத்தலால் உண்டாகும். **154**

5. **ஒறுத்தாரை ஒன்றாக வையாரே; வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து.**

ஒருவன் செய்த தீமையைப் பொறாது தண்டித்தவரை அறவோர் ஒரு பொருளாக வைக்கமாட்டார். ஆனால், தீமையைப் பொறுத்துக் கொண்டவரைப் பொன் போல் போற்றி வைப்பர். **155**

6. **ஒறுத்தார்க் கொருநாளை இன்பம்; பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.**

தீமைக்குத் தீமை எனத் தண்டித்தவர்க்குத் 'தண்டித்தோம்' என்று அப்பொழுதுண்டாம் இன்பமே இன்பமாம்; ஆனால், அத்தீமையைப் பொறுத்தவர்க்கோ உலகுள்ளவரை புகழ் உண்டாம். **156**

7. **திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்
தறனல்ல செய்யாமை நன்று.**

செய்யக் கூடாத இழிவை ஒருவன் தனக்குச் செய்தாலும் அதற்காக மிக வருந்தி, அறநெறிப் படாத செயல்களைச் செய்யாமையே நல்லது. **157**

8. **மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல்.**

அடங்காத செருக்கினால் தாங்க முடியாக் கொடுமை செய்தாரையும், ஒருவர் தம்முடைய பொறுமையால் வெற்றி கொள்வாராக. **158**

9. **துறந்தாரின் தூய்மை உடையர், இறந்தார்வாய்
இன்னாச்சொல் நோற்கிற் பவர்.**

வரம்பு கடந்து சொல்வாரின் கொடுஞ்சொற்களைப் பொறுத்துக் கொள்பவர், முற்றுந் துறந்த துறவியரினும் தூய துறவியர் ஆவர். **159**

10. **உண்ணாது நோற்பார் பெரியர், பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரின் பின்.**

(தாம் கொண்ட கொள்கையை நிறைவேற்றுவதற்காக) உண்ணாநோன்பு கொள்பவர் பெரியவரே; எனினும், அப்பெரியரும் பிறர் சொல்லும் தீய சொல்லைப் பொறுப்பவர்க்குப் பிற்பட்டவரே. **160**

17. அழுக்காறாமை

(பொறாமை இல்லாதவராய் இருத்தல்)

1. **ஒழுக்காறாகக் கொள்க, ஒருவன்தன் நெஞ்சத்
தழுக்காறி லாத இயல்பு.**

ஒருவன் தன் மனத்தில் பொறாமை இல்லாத தன்மையைத் தான் ஒழுக வேண்டிய நெறியாகக் கொள்வானாக. 161

2. **விழுப்பேற்றின் அஃதொப்ப தில்லையார் மாட்டும்
அழுக்காற்றின் அன்மை பெறின்.**

எவரிடத்தும் பொறாமை இல்லாமல் நடப்பதை இயல்பாகப் பெற்றால், சிறந்த பேறுகளுள், அதற்கு இணையான பேறு வேறொன்றும் இல்லை. 162

3. **அறனாக்கம் வேண்டாதான் என்பான், பிறனாக்கம்
பேணா தழுக்கறுப் பான்.**

(உயிர்த்துணையாம்) அறத்தையும், (வாழ்வுத் துணையாம்) நலங்களையும் தனக்கு வேண்டா என்பவனே, பிறன் பெற்ற நலங்களைக் கண்டு மகிழாமல் பொறாமைப் படுவான். 163

4. **அழுக்காற்றின் அல்லவை செய்யார், இழுக்காற்றின்
ஏதம் படுபாக் கறிந்து.**

இழிந்த பொறாமை வழியில் சென்றால் துன்பம் உண்டாம் என்பதை உணர்ந்த அறிவினர், அப் பொறாமை வழிப்பட்டு அறமல்லாச் செயல்களைச் செய்யமாட்டார். 164

5. **அழுக்கா றுடையார்க் கதுசாலும், ஒன்னார்
வழுக்கியும் கேடீன் பது.**

பொறாமை உடையவரைப் பகைவர் கெடுக்கத் தவறினாலும் அவர் கொண்ட பொறாமையே தவறாமல் கெடுத்து விடும். கேடு செய்பவர் வேறொருவர் வேண்டியதில்லை. 165

6. **கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம், உடுப்பதூஉம்**
உண்பதூஉம் இன்றிக் கெடும்.

தன்பொருளை ஒருவன் ஒருவனுக்குக் கொடுப்பதற்கும் பொறாமைப் படுபவன் அவன் மட்டுமின்றி, அவன் சுற்றமும் உடுப்பதற்கும் உண்பதற்கும் வழியில்லாமல் கெட்டுப் போகும். **166**

7. **அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவள்**
தவ்வையைக் காட்டி விடும்.

பொறாமைப் படுபவனைக் கண்டு செல்வம் (செய்யவள்) தானும் அவன் மேல் பொறாமைப்பட்டு, அவனிடத்து வறுமை (தவ்வை) புகுமாறு கையைக் காட்டிவிடும். **167**

8. **அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்**
தீயுழி உய்த்து விடும்.

பொறாமை என்பது இணையற்ற பாவி. அப்பாவி தன்னையுடையவனின் செல்வத்தை அழிப்பதுடன், பிற பிற தீய வழிகளிலும் அவனைத் தள்ளி விடும். **168**

9. **அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்**
கேடும் நினைக்கப் படும்.

பொறாமையாளன் இடத்துள்ள செல்வமும் பொறாமையில்லாத நேர்மையாளனிடத்துள்ள வறுமையும் (நல்லோர்) ஆராய அவற்றின் இல்லாமைகள் புலப்படும். **169**

10. **அழுக்கற் றகன்றாரும் இல்லை; அஃதில்லார்**
பெருக்கத்தில் தீர்ந்தாரும் இல்.

பொறாமைப் படுதலால் வளம் பெருகப் பெற்றாரும் இல்லை; அப்பொறாமைப்படாமையால் வளம் சுருங்கி வறுமை அடைந்தாரும் இல்லை. **170**

18. வெஃகாமை

(பிறர் பொருளை விரும்பாமை)

1. **நடுவின்றி நன்பொருள் வெஃகின், குடிபொன்றிக்**
குற்றமும் ஆங்கே தரும்.

நடுவுநிலை இல்லாமல் பிறருடைய நல்வழிப் பொருளை ஒருவன் விரும்பினால், அது அவன் குடியைக் கெடுத்துப் பழியையும் அப்போதே தரும். **171**

2. **படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்,**
நடுவன்மை நாணு பவர்.

நடுவு நிலைமை தவறுவதற்கு அஞ்சி வெட்கப் படுபவர், தமக்கு உண்டாகும் பயனை விரும்பிப் பழி வந்தடையும் செயல்களைச் செய்யமாட்டார். **172**

3. **சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யாரே,**
மற்றின்பம் வேண்டு பவர்.

நிலையான இன்பத்தை விரும்பியிருப்பவர், சிற்றளவாக உண்டாகும் இன்பத்தை விரும்பி அறமல்லாச் செயல்களைச் செய்ய மாட்டார். **173**

4. **இலமென்று வெஃகுதல் செய்யார், புலம்வென்ற**
புன்மையில் காட்சி யவர்.

ஐம்புலன்களையும் அடக்கி வெற்றி கொண்ட குற்றமற்ற அறிவினர், "யாம் எதுவும் இல்லாதவராக இருக்கிறோம்" என்று எண்ணிப் பிறர் பொருளைக் கவர விரும்பார். **174**

5. **அஃகி யகன்ற அறிவென்னாம், யார்மாட்டும்**
வெஃகி வெறிய செயின்?

('அவர்' : 'இவர்' என்று பாராமல்) எவரிடத்தும் பறிக்கும் வெறிச் செயலை ஒருவர் செய்வராயின், அவர்தம் நுணுகி விரிந்த அறிவால் என்ன பயன்? **175**

6. **அருள்வெஃகி ஆற்றின்கண் நின்றான் பொருள்வெஃகி பொல்லாத சூழக் கெடும்.**

எவ்வுயிரிடத்தும் அருளை விரும்பி அறவழியில் நின்றவன், பிறர் பொருளை விரும்பித் தீய வழிகளை எண்ணினால் (எண்ணிய அளவில்) கெட்டுப் போவான். 176

7. **வேண்டற்க வெஃகியாம் ஆக்கம்; விளைவயின் மாண்டற் கரிதாம் பயன்.**

பிறர் பொருளைக் கவர்வதால் உண்டாகும் நலத்தை விரும்பாதொழிக. முடிவில் அதன் பயன் நன்மை இல்லாததாய் அமையும். 177

8. **அஃகாமை செல்வத்திற் கியாதெனின், வெஃகாமை வேண்டும் பிறன்கைப் பொருள்.**

ஒருவன் தான் கொண்டுள்ள செல்வம் குறையாது இருப்பதற்கு வழியாது? என்றால், அவன் பிறன் உடைமையாக உள்ள பொருளை விரும்பாது இருத்தலேயாம். 178

9. **அறனறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும், திறனறிந் தாங்கே திரு.**

அறநெறி அறிந்து பிறர் உடைமையை விரும்பாத அறிவாளரிடம் அவர் தகுதியை அறிந்து அவரிடத்தைச் செல்வம் தேடிச் சேரும். 179

10. **இறலீனும் எண்ணாது வெஃகின், விறலீனும் வேண்டாமை என்னும் செருக்கு.**

பின் வருவதை எண்ணாமல் பிறர் பொருளை விரும்பினால் அழிவு உண்டாகும்; அப்பொருளை விரும்பாமை என்னும் பெருமிதம் உண்டானால் வெற்றியுண்டாகும். 180

19. புறங்கூறாமை

(ஒருவர் இல்லாத இடத்து அவரைப் பழித்துச் சொல்லாமை)

1. **அறம்கூறான் அல்ல செயினும், ஒருவன்**
புறம்கூறான் என்றல் இனிது.

ஒருவன் அறநெறியில் ஒன்றைச் சொல்லாதவனாய், அறமல்லாச் செயலைச் செய்பவனாய் இருந்தாலும் கூட, 'அவன் புறஞ்சொல்ல மாட்டான்' என்று சொல்லுமாறு வாழ்தல் நல்லது. 181

2. **அறனழீஇ அல்லவை செய்தலின் தீதே,**
புறனழீஇப் பொய்த்து நகை.

ஒருவனைக் காணாத இடத்தில் புறங்கூறி, அவனைக் கண்ட இடத்தில் பொய்யாக நடித்து மகிழ்தல், அறமுறையை அழித்துப் பாவச் செயல்களைச் செய்தலினும் தீதாகும். 182

3. **புறம்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின், சாதல்**
அறம்கூறும் ஆக்கம் தரும்.

ஒருவன் இல்லாத இடத்தே புறஞ்சொல்லி அவன் இருக்குமிடத்தே வேறொன்று சொல்லிப் பொய்யாக உயிர்வாழ்க்கை நடத்துவதிலும், இறந்து போவது அறநெறிப்படி நடந்த நன்மை ஆகும். 183

4. **கண்ணின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க,**
முன்னின்று பின்னோக்காச் சொல்.

நேருக்கு நேர் நின்று இரக்கமில்லாமல் இடித்துரைத்தாலும், ஒருவன் முன்னே இல்லாமல் பின் விளைவு கருதாது சொல்லும் புறங்கூறுதலைச் சொல்லாது விடுக. 184

5. **அறம்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறம்சொல்லும்**
புன்மையால் காணப் படும்.

புறங்கூறும் சிறுமையை ஒருவன் கொண்டிருக்கும் ஒன்றாலேயே, அவன் அறமுறையைச் சொல்லும் நெஞ்சத்தவன் அல்லன் என்பது வெளிப்பட்டுவிடும். 185

6. **பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளும்**
திறன்தெரிந்து கூறப் படும்.

பிறனைப் பற்றிய பழிகளை ஒருவன் அவன் அறியாமல் புறத்தே சொல்லுவா னானால், அவன் பழிகளுள் கடுமையானவற்றைத் தெரிந்து பிறரால் புறங்கூறப்படுதலும் உறுதியாம். 186

7. **பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர், நகச்சொல்லி**
நட்பாடல் தேற்றா தவர்.

பிறரொடு இன்புற உரையாடி நட்புக்கொள்ளும் திறம், அறியாதவரே பிளவு உண்டாகுமாறு புறங்கூறி, இனிய உறவின்னரையும் பிரித்து விடுவர். 187

8. **துன்னியார் குற்றமும்; தூற்றும் மரபினார்**
என்னைகொல் ஏதிலார் மாட்டு?

தமக்குப் பலவகையாலும் நெருங்கிய நட்பினரையும் பழி தூற்றும் தன்மையர், தொடர்பில்லாத மற்றையோரிடத்து எத்தகையவராக இருப்பர்? (மிகுதியாய்ப் பழிப்பர்) 188

9. **அறனோக்கி ஆற்றுங்கொல் வையம், புறனோக்கிப்**
புன்சொல் உரைப்பான் பொறை.

'எவரும் அறிந்து விடுவரோ' எனப் புறத்தே பார்த்துக் கொண்டு, கீழான பழிச்சொல் சொல்பவனையும், தனக்கு அறமென்று கருதித்தான் இம்மண் சுமக்கின்றதோ? 189

10. **ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்**
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு?

பிறர் குற்றத்தைக் காண்பதுபோல் தம் குற்றத்தையும் காண்பாரானால், நிலைபெற்ற மக்களுயிர்க்கு வரக்கூடிய தீமை எதுவும் உண்டோ? இல்லை! 190

20. பயனில சொல்லாமை

(பயன் தராத சொற்களைச் சொல்லாமை)

1. **பல்லார் முனியப் பயனில சொல்லுவான்**
எல்லாரும் எள்ளப் படும்.

கேட்பவர் பலரும் வெறுக்குமாறு பயனில்லாத சொற்களைச் சொல்பவன், எல்லாராலும் இகழப் படுவான். **191**

2. **பயனில பல்லார்முன் சொல்லல், நயனில**
நட்டார்கண் செய்தலின் தீது.

பலபேர் முன்னாலும் பயனற்ற சொற்களைச் சொல்லுதல், நட்புடையாரிடத்து முறை கேடான செயல்களைச் செய்தலினும் தீமையானது. **192**

3. **நயனிலன் என்பது சொல்லும், பயனில**
பாரித் துரைக்கும் உரை.

பயனில்லாத சொற்களை ஒருவன் விரிவாக எடுத்துரைக்கும் உரையே அவன் ஒழுங்குமுறை இல்லாதவன் என்பதை உரைத்துவிடும். **193**

4. **நயன்சாரா நன்மையின் நீக்கும், பயன்சாராப்**
பண்பில்சொல் பல்லா ரகத்து.

பல பேரிடத்தும் பயனொடு பொருந்தாத பண்பற்ற சொற்களைச் சொன்னால், அச்சொற்கள் ஒழுங்கு முறை யொடு கூடாமல் நன்மையில் இருந்து நீக்கிவிடும். **194**

5. **சீர்மை சிறப்பொடு நீங்கும், பயனில**
நீர்மை யுடையார் சொலின்.

சிறந்த பண்பு உடையவர், பயனில்லாத சொற்களைச் சொல்வா ரானால், அவருடைய சிறந்த தன்மை அவர்தம் புகழொடும் நீங்கிவிடும். **195**

6. **பயனில்சொல் பாராட்டு வானை மகன்எனல்**
மக்கட் பதடி எனல்.

பயனில்லாத சொற்களைப் பலபடச் சொல்பவனை, 'அறிவறிந்த மகன்' என்று சொல்லல் ஆகாது. அவனை மக்களுள் 'பதர்' என்று சொல்லுக. **196**

7. **நயனில சொல்லினும் சொல்லுக; சான்றோர்**
பயனில சொல்லாமை நன்று.

சால்புடையவர், பிறர் விரும்பிக் கேட்க இயலாத சொற்களைச் சொன்னாலும் சொல்வாராக. ஆனால், பயனில்லாத சொற்களைச் சொல்லாமையே நல்லது. **197**

8. **அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்,**
பெரும்பயன் இல்லாத சொல்.

அரிய பயன்களை ஆராயும் அறிவினர், கேட்பவர்க்குப் பெரும் பயன் அளியாத சொற்களை ஒரு போதும் சொல்லார். **198**

9. **பொருள்தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார், மருள்தீர்ந்த**
மாசறு காட்சி யவர்.

மயக்கம் நீங்கிய குற்றமற்ற அறிவினர், பயனற்ற சொற்களைத் தம்மை மறந்தும் கூடச் சொல்ல மாட்டார். **199**

10. **சொல்லுக சொல்லிற் பயனுடைய; சொல்லற்க**
சொல்லிற் பயனிலாச் சொல்.

ஒன்றைச் சொல்ல வேண்டுமிடத்துப் பயனுடைய சொல்லையே சொல்லுக; அவ்வாறு சொல்லுதலில் பயனில்லாச் சொல்லைச் சொல்லாது விடுக. **200**

21. தீவினையச்சம்

(தீய செயல்களைச் செய்ய அஞ்சுதல்)

1. **தீவினையார் அஞ்சார்; விழுமியார் அஞ்சுவர்**
தீவினை என்னும் செருக்கு.

தீயசெயல் என்று சொல்லப்படும் இறுமாப்பை அடைய அத்தீயசெயல்கள் பழகிப்போன கொடியவர் அஞ்ச மாட்டார். ஆனால், அருளொழுக்கம் உடைய சிறந்தோர் அஞ்சுவர். 201

2. **தீயவை தீய பயத்தலால், தீயவை**
தீயினும் அஞ்சப் படும்.

தீய செயல்கள், பிறர்க்கும் தமக்கும் ஒருங்கே தீமையையே தருவதால், அத்தீய செயல்கள் தீயைப் பார்க்கிலும் அஞ்சத் தக்கன. 202

3. **அறிவினுள் எல்லாம் தலையென்ப, தீய**
செறுவார்க்கும் செய்யா விடல்.

தீமை செய்யத் துணிந்த பகைவர்க்கும், மாறி அத் தீமையைச் செய்யாது விடுதல், அறிவுகள் எல்லாவற்றுள்ளும் தலையாய அறிவு என்று ஆய்ந்தோர் கூறுவர். 203

4. **மறத்தும் பிறன்கேடு சூழற்க; சூழின்**
அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு.

ஒருவன் தன்னை மறந்தாயினும் பிறனுக்குக் கேடு செய்யக் கருதாமல் இருப்பானாக. அவன் கேடு செய்யக் கருதினால், கருதிய அவனுக்குக் கேடு செய்ய அறம் கருதும். 204

5. **இலனென்று தீயவை செய்யற்க; செய்யின்**
இலனாகும் மற்றும் பெயர்த்து.

"யான் வறியவன்" என்று கருதி அதனை நீக்குதற்காகத் தீச் செயல்களைச் செய்யாதிருப்பானாக. அவன் அதனைச் செய்யின், உள்ளதையும் இழந்து மேலும் வறியவன் ஆவன். 205

6. **தீப்பால தான்பிறன்கண் செய்யற்க; நோய்ப்பால**
தன்னை அடல்வேண்டா தான்.

துன்புறுத்தக் கூடிய குற்றங்கள் எல்லாம் தன்னை அழித்தலை விரும்பாதவன், பிறருக்குத் தீமையுண்டாக்கும் பழிச் செயல்களைச் செய்யாதிருப்பானாக. **206**

7. **எனைப்பகை உற்றாரும் உய்வர்; வினைப்பகை**
வீயாது பின்சென் றடும்.

எத்தனை அயற்பகையைக் கொண்டவரும் அவற்றில் இருந்து தப்புவர். ஆனால் தாம் செய்யும் தீய செயல்களைப் பகையாகக் கொண்டவர் தப்பார்; அவரை விடாமல் அது அழிக்கும். **207**

8. **தீயவை செய்தார் கெடுதல், நிழல்தன்னை**
வீயா தடிஉறைந் தற்று.

பிறருக்குத் தீய செயல்களைச் செய்தவர் தப்பாமல் அழிதல் (எத்தகையது என்றால்) ஒருவன் நிழல் அவனை விட்டு நீங்காது அவன் காலடியில் தங்கி இருப்பது போன்றது. **208**

9. **தன்னைத்தான் காதல னாயின், எனைத்தொன்றும்**
துன்னற்க தீவினைப் பால்.

ஒருவன் தனக்கு என்றும் நலமானதையே விரும்புவான் எனின், பிறர்க்குத் தீமையாகும் எச்செயலையும் மனத்தாலும் நினையாது இருப்பானாக. **209**

10. **அருங்கேடன் என்ப தறிக, மருங்கோடித்**
தீவினை செய்யான் எனின்.

ஒருபக்கம் சார்ந்து பிறர்க்குத் தீச் செயல்களைச் செய்யாதிருப்பான் என்றால், அவன் கேடற்றவன் என்பதை அறிந்து கொள்க. **210**

22. ஒப்புரவறிதல்

(பொதுநலம் அறிதல்)

1. **கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்**
டென்னாற்றுங் கொல்லோ உலகு.

உலகம் வாழ்வதற்காக உதவுகின்ற மழைக்கு இவ்வுலகம் என்ன கைம்மாறு செய்கின்றது? (எதுவுமில்லை) அதுபோல உலக நலம் கருதும் ஒப்புரவாளர் செய்யும் உதவிகளும் கைம்மாறு கருதாதவை. *211*

2. **தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு**
வேளாண்மை செய்தற் பொருட்டு.

பொது நலங் கருதுபவர், விடாமுயற்சியோடு பொருள் தேடிச் சேர்ப்பதெல்லாம், தகுதி வாய்ந்தவர் வளர்ச்சிக்கு உதவி செய்ய வேண்டும் என்பதற்கே. *212*

3. **புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறலரிதே**
ஒப்புரவின் நல்ல பிற.

ஒப்புரவு என்னும் உயர்ந்த தன்மைக்கு ஒப்பான மற்றொன்றைப் புகழ் வரலாற்றாளர் உலகத்திலும் இவ்வுலகத்திலும் காணுதல் அரிதாகும். *213*

4. **ஒத்த தறிவான் உயிர்வாழ்வான்; மற்றையான்**
செத்தாருள் வைக்கப் படும்.

பொது நலங்கருதி வாழ்பவனே உயிர்வாழ்பவன் என்று சொல்லப்படுபவன்; அவனல்லாத பிறன் இறந்தவருள் ஒருவனாக வைக்கப்படுபவன். *214*

5. **ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்**
பேரறி வாளன் திரு.

உலகோரால் விரும்பப்படும் பேரறிவாளன் செல்வம் ஊருணி நீரால் நிறைந்து ஊரவர்க்கெல்லாம் பயன்படுவது போன்றது. *215*

6. **பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால், செல்வம்**
நயனுடை யான்கண் படின்.

நயனுடையானிடம் (பொது நலங்கருதும் நல்லோனிடம்) செல்வம் உண்டாயின் அது, ஊரின் நடுவிலே உயர்ந்த பழமரம் பழுத்துப் பயன்படுவது போன்றது. 216

7. **மருந்தாகித் தப்பா மரத்தற்றால், செல்வம்**
பெருந்தகை யான்கண் படின்.

பெருந்தகையானிடத்து (உலகுக்கு உதவும் பெருந்தன்மை யாளனிடத்துச்) செல்வப் பெருக்கு உண்டாயின் அது, தன் முழுப்பகுதியாலும் மருந்தாகி நோயைத் தவறாமல் தீர்க்கும் மருந்து மரம் போன்றது. 217

8. **இடனில் பருவத்தும் ஒப்புரவிற் கொல்கார்,**
கடனறி காட்சி யவர்.

தம் பிறவியின் நோக்கத்தை அறிந்துகொண்ட அறிவாளர், தம்மிடம் உதவும் வாய்ப்பு இல்லாத போதும், உலகுக்கு உதவும் செயற்பாட்டில் தளரார். 218

9. **நயனுடையான் நல்கூர்ந்தா னாதல், செயும்நீர**
செய்யா தமைகலா வாறு.

உலக நலங்கருதிய நல்லோன் வறுமையுடையவன் ஆவது, அவன் செய்ய விரும்பிய உதவிகளைச் செய்ய முடியாமல் வருந்துகின்ற தன்மையே ஆகும். 219

10. **ஒப்புரவி னால்வரும் கேடெனின், அஃதொருவன்**
விற்றுக்கோள் தக்க துடைத்து.

பொது நலங்கருதிப் பாடுபடுவதால் ஒருவனுக்குக் கேடு உண்டாகுமானால் அக்கேடு தன்னை விற்றுக் கூட வாங்கிக் கொள்ளும் தகுதி உடையது. 220

23. ஈகை

(கொடை)

1. **வறியார்க்கொன் றீவதே ஈகை; மற் றெல்லாம்**
குறியெதிர்ப்பை நீர துடைத்து.

வறுமைப்பட்டவர்க்கு அவர் வேண்டும் பொருளைத் தருவதே ஈகை எனப்படும்; மற்றையவர்க்குக் கொடுக்கும் கொடை, பயனை எதிர்பார்த்துக் கொடுக்கும் தன்மையது. 221

2. **நல்லா றெனினும் கொளல்தீது மேலுலகம்**
இல்லெனினும் ஈதலே நன்று.

'பிறரிடமிருந்து ஒன்றைக் கொடையாகப் பெறுதல் நல்வழியே' என்று ஒருவர் (மயங்கிக்) கூறினாலும் அவ்வாறு கொள்ளுதல் தீயது; கொடுத்தலால் புகழுலகம் இல்லை என்று ஒருவர் தடுத்தாலும் (வறியவர்க்குக்) கொடுத்தலே நல்லது. 222

3. **இலன்என்னும் எவ்வம் உரையாமை ஈதல்,**
குலனுடையான் கண்ணே உள.

ஒன்றைக் கேட்டு வந்தவனிடத்து 'இவன் இல்லாதவன்' என்று பழியாதிருத்தலும், கொடுத்தலும் ஆகியவை உயர்குடிப் பிறப்பாளனிடத்தேயுள்ள தன்மைகள். 223

4. **இன்னா திரக்கப் படுதல், இரந்தவர்**
இன்முகம் காணும் அளவு.

ஒன்றை வேண்டி வந்த வறியவர், அதனைப் பெற்றமையால் இனிய முகத்தவராகத் தோன்றுவதைக் காணும் வரை, கொடுப்பவர்க்கு இரக்கப்படுதலும் கூட துன்பமானதே. 224

5. **ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல்; அப்பசியை**
மாற்றுவார் ஆற்றலின் பின்.

பசியாற்றுதலே கொடையிற் சிறந்த கொடையாம். அதுவும் அவர்க்குத் தொழில் தந்து பசியாற்றுதலுக்கும் பிற்பட்டதேயாம். 225

6. **அற்றார் அழிபசி தீர்த்தல்; அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி.**

வறுமைப் பட்டாரது நலங்களையெல்லாம் அழிக்கும் பசியை நீக்குக; அவ்வாறு நீக்குதலே பொருளைப் பெற்றுள்ள ஒருவன், தன் பொருளைப் பாதுகாப்பாகச் சேர்த்து வைக்கத்தக்க இடமாகும். 226

7. **பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னும்
தீப்பிணி தீண்டல் அரிது.**

தன்னிடத்திலுள்ள உணவைப் பகுத்துண்ணும் பழக்க முடையவனைப் பசி என்று சொல்லப்படும் தீயநோய் நெருங்கி வருதலும் இல்லை. 227

8. **ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல், தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்.**

தம் பொருளை, வறியவர்க்குக் கொடாது சேர்த்து வைத்துப், பிறர் கொண்டு போக இழக்கும் கொடியவர், கொடுத்து மகிழும் இன்பத்தை அறிய மாட்டாரோ? 228

9. **இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய
தாமே தமியர் உணல்.**

நிரம்பத் தேடிச் சேர்த்த பொருளைத் தாம் மட்டுமே தமியராய் இருந்து உண்ணுதல் - உறுதியாக இல்லை என இரத்தலினும் கொடுமையானதேயாகும். 229

10. **சாதலின் இன்னாத தில்லை; இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை.**

துன்பங்களிலெல்லாம் சாவது போன்ற துன்பம் ஒன்றும் இல்லை; ஆனால், வறியவர்க்கு விரும்பிய ஒன்றைக் கொடுக்க முடியாத நிலையில், அச் சாவும் இன்பமேயாம் (என்று எண்ணத் தோன்றும்). 230

24. புகழ்

(பெருமை பெறுதல்)

1. **ஈதல் இசைபட வாழ்தல்; அதுவல்ல**
தூதியம் இல்லை உயிர்க்கு.

வறியவர்க்குக் கொடுத்தலும் புகழுண்டாக வாழ்தலும் அல்லாமல், மாந்தர் உயிர்க்கு வளர்ச்சி வேறு ஒன்றுமில்லை. **231**

2. **உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்கொன்**
றீவார்மேல் நிற்கும் புகழ்.

உரையாலும் பாட்டாலும் சொல்லுவார் சொல்லுவன எல்லாம், 'இல்லை' என்று கேட்டு வருவார்க்கு, வேண்டும் ஒன்றைக் கொடுப்பவர் பேரில் நிற்கின்ற புகழ்களே ஆகும். **232**

3. **ஒன்றா உலகத் துயர்ந்த புகழல்லால்**
பொன்றாது நிற்பதொன் றில்.

ஒரே முறையாகப் பொருந்துதல் இல்லாத உலகத்தில் உயர்ந்த புகழ் ஒன்றுமே அல்லாமல், அழியாது நிலைபெறக் கூடியது வேறு ஒன்றும் இல்லை. **233**

4. **நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்**
போற்றாது புத்தேள் உலகு.

நிலத்தளவும் நீண்டு பரவும் புகழ்ச் செயலை ஒருவன் செய்வானே ஆனால், புதிதாக வரும் உலகரும் அவனைப் போற்றுவரே யன்றிப் புலமையாளர்களைப் போற்றார். **234**

5. **நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும்**
வித்தகர்க் கல்லால் அரிது.

சங்கைச் சுடச் சுட வெண்மை பளிச்சிடல் போல் புகழ் வளரவரும் வறுமையும், புகழ்நிலை பெற உண்டாகும் இறப்பும், வாழ்வியல் திறம் மிக்கோர்க்கு அல்லாமல் பிறர்க்கு வாய்த்தல் இல்லை. **235**

6. **தோன்றின் புகழொடு தோன்றுக; அஃதிலார்**
தோன்றலின் தோன்றாமை நன்று.

ஒரு செயலில் ஒருவர் ஈடுபட்டால் அம் முயற்சிக்கும் தமக்கும் புகழுண்டாக ஈடுபடுவாராக; அத்திறம் இல்லார் அதில் ஈடுபடாதிருத்தலே நல்லது. **236**

7. **புகழ்பட வாழாதார் தம்நோவார், தம்மை**
இகழ்வாரை நோவ தெவன்?

புகழுண்டாக வாழ முடியாதவர், தம் தகுதி இல்லாமையை எண்ணித் தம்மை நொந்து கொள்ளாதவராய்த் தம்மைப் பழிப்பாரை நொந்து கொள்வது எதற்காக? **237**

8. **வசையென்ப வையத்தார்க் கெல்லாம், இசையென்னும்**
எச்சம் பெறாஅ விடின்.

புகழ் என்னும் வைப்பினை (எச்சத்தை)ப் பெறாவிட்டால் உலகில் வாழ்வோர் எவராயினும் அவர்க்கெல்லாம் பழியாகும் என்று கூறுவர். **238**

9. **வசையிலா வண்பயன் குன்றும், இசையிலா**
யாக்கை பொறுத்த நிலம்

புகழுண்டாக வாழாதவரின் உடலைச் சுமக்கும் நிலம், தனக்கு இயல்பாக அமைந்த பழியில்லாத வளமான புகழ்ப்பயனிலும் குறைதல் ஆகிவிடும். **239**

10. **வசையொழிய வாழ்வாரே வாழ்வார்; இசையொழிய**
வாழ்வாரே வாழா தவர்.

பழிநீங்க வாழும் வாழ்வினரே நல் வாழ்வினர்; புகழ் நீங்க வாழும் வாழ்வினர் நல் வாழ்வு வாழாதவர். **240**

25. அருளுடைமை

(எவ்வுயிர்களிடத்தும் இரக்கமுடையவராதல்)

1. **அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள.**

உலகத்துச் செல்வங்கள் எல்லாவற்றிலும் சிறந்த செல்வமாவது அருட் செல்வமே; மற்றைப் பொருட் செல்வங்கள் அருளற்ற கீழோரிடத்தும் உள்ளன. 241

2. **நல்லாற்றான் நாடி அருளாள்க பல்லாற்றான்
தேரினும் அஃதே துணை.**

நல்ல வழிமுறைகளால் ஆராய்ந்து அருளைக் கொள்க; எத்தனை வகையாக ஆராய்ந்து பார்த்தாலும், அந்த அருளே துணையாகும். 242

3. **அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை இருள்சேர்ந்த
இன்னா உலகம் புகல்.**

அருள் அமைந்த மனத்தவர்க்கு அறியாமை என்னும் இருள் அமைந்த கொடிய உலகியலில் புகும் நிலை இல்லை. 243

4. **மன்னுயிர் ஓம்பி அருளாள்வாற் கில்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை.**

உலகத்து உயிர்களை யெல்லாம் பேணி அருள் ஒழுக்கம் கொண்டவனுக்குத் தன் உயிர் குறித்து அஞ்சுவதற்குரிய தீய செயல்கள் உண்டாகா என்று தெளிந்தோர் கூறுவர். 244

5. **அல்லல் அருளாள்வார்க் கில்லை வளிவழங்கும்
மல்லல்மா ஞாலம் கரி.**

அருளைப் போற்றி நடப்பவர்க்குத் துன்பம் எதுவும் இல்லை; இதற்குக் காற்று விசிறுகின்ற வளப்பமிக்க இந்தப் பெரிய உலகத்து வாழ்ந்த பெருமக்களே சான்று. 245

6. **பொருள்நீங்கிப் பொச்சாந்தார் என்பர், அருள்நீங்கி அல்லவை செய்தொழுகு வார்.**

அருள் விடுத்து அதற்கு மாறான கொடுமைகளைச் செய்து வாழ்பவர், தாம் தேடிய பொருளை இழந்து பிறரால் மறக்கப்பட்டவர் என்று சான்றோர் கூறுவர்.

7. **அருளில்லார்க் கவ்வுலகம் இல்லை; பொருளில்லார்க் கிவ்வுலகம் இல்லாகி யாங்கு.**

பொருளில்லாதவர் இவ்வுலகில் வாழ்ந்தாலும் அவர்க்கு உலகியற்பேறு இல்லை. அதுபோல் அருளில்லாதவர் புகழுலகில் புகுந்தாலும் அவர்க்குப் புகழ்ப்பேறு இல்லை. 247

8. **பொருளற்றார் பூப்பர் ஒருகால்; அருளற்றார் அற்றார்; மற் றாதல் அரிது.**

தம் பொருளை இழந்துபோனவர், ஒரு காலத்தில் தாம் இழந்த பொருளைப் பெற்றுப் பொலிவடையவும் கூடும். ஆனால், அருளை இழந்தவர் இழந்தவரே; அதனை மீள அடைதல் அரிதாகும். 248

9. **தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால், தேரின் அருளாதான் செய்யும் அறம்.**

அருள் பேணாதவன் செய்யும் அறச் செயலை ஆராய்ந்து பார்த்தால், அது தெளிவில்லாதவன் மெய்ப் பொருளைக் கண்டது போன்றதாகும். 249

10. **வலியார்முன் தன்னை நினைக்க, தான் தன்னின் மெலியார்மேல் செல்லும் இடத்து.**

ஒருவன் தன்னினும் வலிமை குறைந்தவனைத் தாக்கச் செல்லும்போது, தான் தன்னைப் பார்க்கிலும் வலிய ஒருவன் முன் நிற்கும் நிலையுண்டானால் எப்படி இருக்கும் என்பதை நினைப்பானாக. 250

26. புலால் மறுத்தல்

(ஊன் உண்ணுதலை விலக்கல்)

1. **தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்?**

தன் உடலைப் பருக்க வைத்தற்காகத் தான் மற்றோர் உயிரைப் போக்கி அதன் உடலை உண்பவன், எவ்வாறு அருளைக் கடைப்பிடிப்பவன் ஆவன்? (ஆகான்) 251

2. **பொருளாட்சி போற்றாதார்க் கில்லை; அருளாட்சி
ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு.**

பொருளாளியாக விளங்கும் தன்மை அப்பொருளைத் தேடிக் காப்பாற்றாதவர்க்கு இல்லை. அது போல், அருளாளியாம் தன்மை புலாலுண்பவர்க்கு இல்லை. 252

3. **படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றூக்கா தொன்றன்
உடல்சுவை உண்டார் மனம்.**

கொலைக் கருவியைக் கையில் கொண்டவன் மனம், அருளென்னும் நல்ல தன்மையைக் கருதாது; அது போல், ஒன்றன் உடலைச் சுவைத்து உண்டவர் மனமும் அந்நல்லதனைக் கருதாது. 253

4. **அருளல்ல தியாதெனில் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் தினல்.**

'அருள் யாது?' என்றால்; அது, 'கொல்லாமை'; 'அருள் அல்லாதது யாது?' என்றால்; அது கொல்லுதல்; ஆதலால் அக் கொலையால் வந்த புலாலைத் தின்னல் சிறந்த பொருள் அன்று. 254

5. **உண்ணாமை உள்ள துயிர்நிலை; ஊனுண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு.**

புலால் உண்ணாமையை உறுதியாகக் கொண்ட உடலே, உயிர் நின்ற உடல்; சேற்றுக் குழி கூட, புலால் உண்ணத் தன் பெருவாயைத் திறத்தல் இல்லை. (ஆதலால், உயிர்நின்ற உடல் புலாலுண்ண வாய்திறத்தல் ஆகாது.) 255

6. **தினற்பொருட்டால் கொள்ளா துலகெனின் யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல்.**

தின்னும் பொருளாகப் புலாலை உலகினர் கொள்ள (வாங்க) மாட்டார் என்றால், அப்புலாலை விற்பனைப் பொருளாகத் தருவார் எவரும் இரார். 256

7. **உண்ணாமை வேண்டும் புலாஅல்; பிறிதொன்றன்
புண்ண துணர்வாய்ப் பெறின்.**

புலால் என்பது பிறிதோர் உடலின் புண்ணே என்பதை ஒருவர் உணர்ந்தாரே யானால், அவர் அப்புலாலை உண்ணா திருத்தலை உறுதியாகக் கொள்ள வேண்டும். 257

8. **செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்;
உயிரின் தலைப்பிரிந்த ஊன்.**

உயிரில் இருந்து நீங்கிவிட்ட உடலாகிய புலாலை, குற்றத்தில் இருந்து நீங்கிய அறிவினையுடையவர் உண்ணமாட்டார். 258

9. **அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று.**

நெய் குருதி முதலியவற்றைப் பெய்து ஆயிரக் கணக்கான வேள்விகளைச் செய்தலினும், ஓர் உயிரைக் கொன்று அதன் புலாலை உண்ணாதிருத்தல் நல்லதாம். 259

10. **கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிருந் தொழும்.**

ஒருவன் கொலை புரியாதவனாகவும் புலால் உண்ணாதவனாகவும் இருந்தால், அவனை உலகத்து உயிர்கள் எல்லாமும் கைகுவித்து வணங்கும். 260

27. தவம்

(துன்பம் பொறுத்தலும் துன்பம் செய்யாமையும்)

1. **உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை**
அற்றே தவத்திற் குரு.

தமக்கு உண்டாகும் துன்பங்களைப் பொறுத்தலும், மற்றை உயிர்களுக்குத் தாம் துன்பம் செய்யாதிருத்தலும் ஆகிய அவ்வளவே தவத்திற்கு வடிவமாகும். *261*

2. **தவமும் தவமுடையார்க் காகும்; அவம்அதனை**
அஃதிலார் மேற்கொள் வது.

தவச்செயல்களை மேற்கொள்ளுதல் தவத்தன்மை உடையவர்க்கே தகும்; அத்தன்மைகளை இல்லாதார், அச்செயல்களைக் கொள்ளுதல் அத் தவத்திற்கும் அச் செயல்களுக்கும் இழிவாகும். *262*

3. **துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்,**
மற்றை யவர்கள் தவம்?

துறவுடையவர்களுக்கு வேண்டிய ஊண் உடை முதலிய நுகர்வுகளை உதவுவதற்காகத்தான், தவநெறி கொள்ளுதலைப் பலரும் கைவிட்டனர் போலும். *264*

4. **ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்**
எண்ணின் தவத்தான் வரும்.

வெறுக்கும் பகைவரை அழித்தலும், விரும்பும் நண்பரை வளர்த்துக் காத்தலும் எண்ணிய அளவில் தவம் உடையவர்க்கு முடியும். *264*

5. **வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்**
ஈண்டு முயலப் படும்.

ஒருவர் செய்யும் தவத்தின் ஆற்றலால், அவர் விரும்புவன விரும்பியவாறே அடையப் பெறுதலால், அத்தவம் இங்கு முயன்று செய்யப்படுவதாகின்றது. *265*

6. **தவம்செய்வார் தங்கருமம் செய்வார்; மற் றல்லார்**
அவம்செய்வார் ஆசையுள் பட்டு.

தவம் செய்பவர் என்று சொல்லப்படுபவர், தம் கடமையைச் செய்பவரே, அவரை அல்லாத மற்றவர், ஆசை என்னும் பிடியுள்பட்டு வீண் செயல் செய்பவரே. **266**

7. **சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும், துன்பம்**
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.

துன்பம் ஒரு பொழுதுக்கு ஒரு பொழுது வருத்தவும், அதனைப் பொறுத்துக் கொள்ளும் தவத்தினர்க்குச் சுடச்சுட ஒளியுண்டாகும் பொன்போல் உள்ளொளி உண்டாகும். **267**

8. **தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய**
மன்னுயிர் எல்லாம் தொழும்.

'தன்னுயிர்' என்றும், 'தான்' என்றும் உண்டாகும் பற்றுகள் முழுமையாக நீங்கப் பெற்ற தவத்தினனை, மற்றை உயிர்கள் எல்லாமும் வணங்கும். **268**

9. **கூற்றம் குதித்தலும் கைகூடும், நோற்றலின்**
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு.

உள்ளத்தின் உறுதியால் பேராற்றலில் ஓங்கி நிற்பவர்க்கு, அவரை வருத்தவரும் இறப்பும் எதிர்நிற்க மாட்டாமல் ஓடக் காண்பதும் கைகூடுவதாகும். **269**

10. **இலர்பல ராகிய காரணம், நோற்பார்**
சிலர்;பலர் நோலா தவர்.

தவமுடையவர் சிலராகவும் தவமில்லாதவர் பலராகவும் இருத்தற்குக் காரணம், உறுதிப்பாடு உடையவர் சிலராகவும், உறுதிப்பாடு இல்லாதவர் பலராகவும் உலகில் இருத்தலேயாம். **270**

28. கூடா ஒழுக்கம்

(கைக்கொள்ளக் கூடாத ஒழுக்கம்)

1. **வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்**
ஐந்தும் அகத்தே நகும்.

உள்ளொன்றும் வெளியொன்றுமாம் மனத்தவன் தன்தீய ஒழுக்கத்தைப் பிறர்க்கு மறைப்பினும், அவன் உடலின் கண்ணே உள்ள (மண், விண், தீ, நீர், காற்று ஆகிய) ஐம்பூதங்களும் உள்ளுக்குள் (இகழ்ந்து) சிரிக்கும். 271

2. **வானுயர் தோற்றம் எவன்செய்யும், தன்நெஞ்சம்**
தான்அறி குற்றப் படின்?

ஒருவன் தன் மனம் அறியத், தான் கொள்ளக் கூடாத குற்றம் கொண்டால், அவன் கொண்டுள்ள மிக உயர்ந்த கல்வி, பதவி, புகழ் முதலியவை என்ன பயன் செய்யும்? 272

3. **வலியில் நிலைமையான் வல்லுருவம், பெற்றம்**
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று.

தவவலிமை இல்லாதவன், தவத்தினர்க்குரிய வலிய கோலங்களைக் கொண்டிருப்பது, வலிமையில்லாத ஆன் வலிய புலியின் தோலைப் போர்த்துக் கொண்டு அயலார் பயிரை மேய்வது போன்றது. 273

4. **தவமறைந் தல்லவை செய்தல், புதல்மறைந்து**
வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று.

தவவேடத்தில் மறைந்து கொண்டு அத்தவத்துக்கு மாறான செயல்களை ஒருவன் செய்வது, புதர்க் காட்டில் மறைந்து கொண்டு வேடன் பறவையைப் பிடிப்பது போன்றது. 274

5. **'பற்றற்றேம்' என்பார் படிற்றொழுக்கம் 'எற்றெற்'றென்**
றேதம் பலவும் தரும்.

'எப்பற்றும் இல்லாதவராக இருக்கிறோம்' என்று சொல்லுவார் மேற்கொண்ட தீய ஒழுக்கம், பின்னர் 'என்ன செய்தோம்' என்று வருந்தத்தக்க துன்பம் பலவற்றையும் தரும். 275

6. **நெஞ்சில் துறவார், துறந்தார்போல் வஞ்சித்து வாழ்வாரின் வன்கணார் இல்.**

மனத்தில் பற்றற்ற தன்மை கொள்ளாமல், பற்றற்றவர் போல் வஞ்சகமாகக் காட்டி வாழ்கின்றவரினும், கொடுமையானவர் எவரும் இலர். 276

7. **புறங்குன்றி கண்டனைய ரேனும், அகங்குன்றி மூக்கிற் கரியார் உடைத்து.**

குன்றிமணியின் சிவந்த நிறத்தை வெளித் தோற்றத்தால் காட்டுவார் என்றாலும், குன்றிமணியின் மூக்கில் உள்ளது போன்ற கரிய உள்ளத்தை உடையவரையும் இவ்வுலகம் கொண்டுள்ளது. 277

8. **மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி மறைந்தொழுகு மாந்தர் பலர்.**

மனத்தின்கண் குற்றம் நீங்காமல் படிந்திருக்கத் தவத்தினர் போல் தூய நீராடல் முதலியவற்றால் தம்மைப் பொலிவாகக் காட்டிக் கரவாக வாழ்கின்ற வேடமாந்தரும் உலகில் பலராவர். 278

9. **கணைகொடிது யாழ்கோடு, செவ்விதாங் கன்ன வினைபடு பாலால் கொளல்.**

நேராக அமைந்த அம்பும் கொடுமை செய்யும்; வளைவாக அமைந்த யாழும் இனிமை செய்யும்; அவற்றைப் போல், தவத்தினரையும் அவரவர் செயல் நிலையால் அறிந்து கொள்க. 279

10. **மழித்தலும் நீட்டலும் வேண்டா, உலகம் பழித்த தொழித்து விடின்.**

உயர்ந்தோர் பழிக்கும் தீய ஒழுக்கத்தை நீக்கிவிட்டால், துறவோர் தம் தலையை மொட்டையடித்துக் கொள்வதும் முடியை வளர்த்து நீட்டிக் கொள்வதும் ஆகிய வேடங்கள் வேண்டியன அல்ல. 280

29. கள்ளாமை

(திருட நினையாமை)

1. **எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்தொன்றும்**
கள்ளாமை காக்கதன் நெஞ்சு.

பிறரால் இகழப்படாமையை விரும்புபவன் என்பவன், பிறர்க்குரிய எந்த ஒரு பொருளையும் கவர்ந்து கொள்ளத் தன்மனம் விரும்பாதவாறு காத்தல் வேண்டும். 281

2. **உள்ளத்தால் உள்ளலும் தீதே; பிறன்பொருளைக்**
கள்ளத்தால் கள்வேம் எனல்.

'பிறற்குரிய பொருளை வஞ்சத்தால் பறித்துக் கொள்வேம்' என்று எண்ணாதே; ஏனெனில் அதனை மனத்தால் நினைத்தலும் குற்றமேயாம். 282

3. **களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்**
தாவது போலக் கெடும்.

திருட்டினால் உண்டாகின்ற செல்வம், அளவில்லாமல் வளர்வது போலத் தோன்றினாலும், விரைவில் அழிந்து போகும். 283

4. **களவின்கண் கன்றிய காதல் விளைவின்கண்**
வீயா விழுமம் தரும்.

திருட்டினிடத்து உண்டாகும் கடுமையான பற்றுதல், பயனை அடையுமிடத்து என்றும் நீங்காத துன்பத்தைத் தந்துவிடும். 284

5. **அருள்கருதி அன்புடைய ராதல், பொருள்கருதிப்**
பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல்.

பிறர் பொருளைப் பறித்துக் கொள்ளுதலை விரும்பி, அவர் சோர்வினை எதிர் பார்ப்பவர் இடத்தில், அருளை எண்ணி அன்புடையவராக நடக்கும் தன்மை இல்லை. 285

6. **அளவின்கண் நின்றொழுகல் ஆற்றார், களவின்கண்**
கன்றிய காத லவர்.

களவு செய்தற்குப் பேராசை கொண்டவர் தமக்கு வேண்டிய தேவை என்னும் வரம்பில் நின்று, ஒழுங்காக வாழ்வு நடத்தார். 286

7. **களவென்னும் காரறி வாண்மை அளவென்னும்**
ஆற்றல் புரிந்தார்கண் இல்.

வரம்பான வாழ்வு நடத்துதல் என்னும் திறத்தைக் கைக்கொண்டவர்களிடத்துக் களவு என்று சொல்லப்படும் தீய அறியாமை இல்லை. 287

8. **அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்கும்**
களவறிந்தார் நெஞ்சில் கரவு.

தத்தம் வரம்பறிந்து வாழவேண்டும் என்னும் உறுதியுடையவர் நெஞ்சில், அறம் நிலைபெற நிற்பதுபோல், களவுத் தொழிலைக் கருதியவர் நெஞ்சில் வஞ்சம் நிற்கும். 288

9. **அளவல்ல செய்தாங்கே வீவர், களவல்ல**
மற்றைய தேற்றா தவர்.

களவு என்னும் ஒன்றையன்றி, மற்றை நற்செயல் எதனையும் தெரியாதவர், வரம்பில்லாத செயலைச் செய்து அப்பொழுதே அழிவர். 289

10. **கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை; கள்ளார்க்குத்**
தள்ளாது புத்தேள் உலகு.

களவு செய்வார்க்கு, உயிரோடு வாழும் நிலையும் விரைவில் நீங்கிப்போகும்; களவைக் கருதாதவர்க்குப் புகழுலகு உறுதியாக வாய்க்கும். 290

30. வாய்மை

(தீமை தராத சொற்களைச் சொல்லுதல்)

1. **வாய்மை எனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்.**

வாய்மை என்று கூறப்படுவது எது என்றால், எவ்வுயிர்க்கும் யாதொரு தீமையும் உண்டாகாத சொல்லைச் சொல்லுதலாம். *291*

2. **பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்.**

குற்றமிலாத நன்மையைப் பிறர்க்குத் தருவதாக இருக்குமானால், பொய்யுரைத்தலும் கூட வாய்மை இடத்தில் வைக்கக் கூடியதே. *292*

3. **தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்.**

தன் நெஞ்சில் தெளிவாக அறிந்த உண்மையை மறைத்துப் பொய் கூறுதல் ஆகாது. அவ்வாறு பொய் கூறின் அதன் பின் அவன் நெஞ்சே அவனை வருத்தும். *293*

4. **உள்ளத்தால் பொய்யா தொழுகின், உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்.**

ஒருவன் மனமாரப் பொய் சொல்லாமல் வாழ்வானேயானால், அவன் உலகத்தவர் உள்ளங்களிலெல்லாம் உறைவான். *294*

5. **மனத்தொடு வாய்மை மொழியின், தவத்தொடு
தானம்செய் வாரின் தலை.**

ஒருவன் தன் மனத்தோடு கூடிய வாய்மையைச் சொல்பவனானால், அவன் (அரிதின் முயன்று) தவஞ் செய்வார்க்கும் கொடை வழங்குவார்க்கும் உயர்ந்தவனாக விளங்குவான். *295*

6. **பொய்யாமை அன்ன புகழில்லை; எய்யாமை**
எல்லா அறமும் தரும்.

பொய்யுரையாமை போன்றதொரு புகழ்ச்செயல் ஒருவனுக்கு எதுவுமில்லை; அதனைத் தவறாமல் கடைப்பிடித்தால் அது மற்றை எல்லா அறங்களின் பயனையும் ஒருங்கே தரும். 296

7. **பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற**
செய்யாமை செய்யாமை நன்று.

பொய் கூறாமையை ஒருவன் தவறாமல் கடைப் பிடித்தல் அறமாகும். செய்யக் கூடாத பிறவற்றைச் செய்யாதிருத்தல், மேலும் நல்லதாகும். 297

8. **புறந்தூய்மை நீரான் அமையும்; அகந்தூய்மை**
வாய்மையால் காணப் படும்.

ஒருவனுக்கு உடல் உடை முதலிய வெளித் தூய்மை நீரால் உண்டாகும்; ஆனால் உள்ளத் தூய்மை வாய்மையால் தான் வெளிப்பட விளங்கும். 298

9. **எல்லா விளக்கும் விளக்கல்ல; சான்றோர்க்குப்**
பொய்யா விளக்கே விளக்கு.

ஒளிதரும் விளக்குகள் எல்லாம் சான்றோர்க்கு விளக்குகள் அல்ல; பொய் கூறாமையாகிய விளக்கே, (அவர்களுக்கு) விளக்கு ஆகும். 299

10. **யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்**
வாய்மையின் நல்ல பிற.

யாம் உண்மையாகவே ஆராய்ந்து கண்ட அறங்கள் பலவற்றுள்ளும், வாய்மையினும் நல்லதாகச் சொல்லப்படும் அறம் வேறு ஒன்றும் இல்லை. 300

31. வெகுளாமை

(சினங்கொள்ளாதிருத்தல்)

1. **செல்லிடத்துக் காப்பான் சினம்காப்பான்; அல்லிடத்துக் காக்கின்என்? காவாக்கால் என்?**

தன்சினம் வெற்றி கொள்ளும் இடத்தில் அது உண்டாகாமல் காப்பவனே சினம் காப்பவன். மற்றை இடத்தில் சினம் வராமல் காத்தால் என்ன? காவாது விட்டால் தான் என்ன? (மெலியார் மேல் சினம் கொள்ளாமையே வெகுளாமையாகும்) 301

2. **செல்லா இடத்துச் சினம்தீது; செல்லிடத்தும் இல்லதனின் தீய பிற.**

தன் சினம் வெற்றி கொள்ள முடியாத வலியவர் இடத்தில் சினம் கொள்ளல் தீதேயாம்; அச்சினம், வெற்றி கொள்ளும் மெலியவர் இடத்தில் கொள்வதாயினும், அதனை விடத் தீயவை பிற இல்லை. 302

3. **மறத்தல் வெகுளியை யார்மாட்டும்; தீய பிறத்தல் அதனான் வரும்.**

தீயவை எவையோ அவையெல்லாம் சினத்தால் உண்டாகும்; ஆதலால் எவரிடத்தும் சினம் கொள்ளாமல் மறந்து விடல் வேண்டும். 303

4. **நகையும் உவகையும் கொல்லும் சினத்தின் பகையும் உளவோ பிற?**

சினமானது ஒருவனுக்கு வெளிப்படத் தோன்றும் சிரிப்பையும் அழிக்கும்; உள்ளத்து உண்டாகும் மகிழ்வையும் அழிக்கும்; ஆதலால், அச்சினத்திற் கொடிய உட்பகையானவை எவையும் இல்லை. 304

5. **தன்னைத்தான் காக்கின் சினங்காக்க; காவாக்கால் தன்னையே கொல்லும் சினம்.**

ஒருவன் தன்னைத் தானே அழிவில் இருந்து காக்க விரும்பினால் தன்னிடம் சினம் உண்டாகாமல் காப்பானாக; அவ்வாறு காக்கத் தவறினால், அச்சினமே அவனை அழித்துவிடும். 305

6. சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும்.

தன்னைக் கொண்டவரை அழிக்கும் சினமென்னும் தீ, அவருடன் நில்லாமல், அவர் துன்பக் கடலில் தவிக்கும் போது பாதுகாப்பாக இருந்த மிதவை போன்ற சுற்றத்தினரையும் அழிக்கும். **306**

7. சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு,
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று.

சினம் கொள்ளுதலைத் தன் வலிமையான பொருள் என்று கொண்டவன் கெடுவது நிலத்தில் ஓங்கி அடித்தவன் கை, தப்பாமல் நொறுங்குவது போன்றது. **307**

8. இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று.

பூங்கொத்தைத் தீயால் சுடுவது போலும் தீமையை ஒருவன் செய்தாலும், அவன் அதற்கு வருந்தி வந்து கூடுவானானால் அவன் மேல் சினங் கொள்ளாதிருந்தால் நல்லது. **308**

9. உள்ளிய எல்லாம் உடனெய்தும், உள்ளத்தால்
உள்ளான் வெகுளி எனின்.

தன் மனத்தாலும், வெகுளுதலை ஒருவன் நினையான் என்றால், அவன் நினைத்தவை நினைத்தவை எல்லாம் உடனுக்குடன் அடையப் பெறுவான். **309**

10. இறந்தார் இறந்தார் அனையர்; சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை.

வரம்பு கடந்த வெகுளியுடையவர் உயிரோடு இருப்பவரே எனினும் அவர் இறந்தவரைப் போன்றவரே; அவ்வெகுளியை முழுமையாக விலக்கியவர், பற்றற்ற துறவியர்க்கு ஒப்பானவரே. **310**

32. இன்னா செய்யாமை

(பிறர்க்குத் துன்பம் செய்யாமை)

1. **சிறப்பீனும் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா**
செய்யாமை மாசற்றார் கோள்.

புகழ் உண்டாகத் தக்க பெரிய செல்வத்தைப் பெறுவதாக இருந்தாலும், அச்செல்வத்தை எண்ணிப் பிறர்க்குத் துன்பம் செய்யாதிருத்தலே குற்றமற்ற பெரியோர் கொள்கை. *311*

2. **கறுத்தின்னா செய்தவக் கண்ணும் மறுத்தின்னா**
செய்யாமை மாசாற்றார் கோள்.

வெகுண்டெழுந்து, ஒருவர் துன்புறுத்தும் போதும், அதற்கு மறுதலையாகத் துன்புறுத்தாமையே, குற்றமற்ற பெரியோர் கொள்கையாகும். *312*

3. **செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்**
உய்யா விழுமம் தரும்.

தான் தீமை எதுவும் செய்யாதிருக்கவும், தனக்குத் தீமை செய்தவர்க்கும் ஒருவன் மறுதீமை செய்தால், அது பின்னர்த் தப்பமுடியாத துன்பத்தைத் தனக்குத் தரும். *313*

4. **இன்னாசெய் தாரை ஒறுத்தல், அவர்நாண**
நன்னயம் செய்து விடல்.

தீமை செய்தவரைத் தண்டிப்பதற்குரிய இனிய வழி, தீமை செய்தவர் வெட்கமடையுமாறு நன்மை செய்து 'அதனைச் செய்தேன்' என்பதையும் மறந்து விடுதலாகும். *314*

5. **அறிவினான் ஆகுவ துண்டோ, பிறிதின்நோய்**
தந்நோய்ப்போல் போற்றாக் கடை.

பிறிதோர் உயிரின் துன்பத்தைத் தன் துன்பம் போல் உணர்ந்து பேணாவிட்டால், ஒருவன் பெற்றுள்ள அறிவினால் ஆகும் பயன் இல்லை. *315*

6. **இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை**
வேண்டும் பிறன்கண் செயல்.

தனக்குத் துன்பமானது என்று ஒருவன் தன் பட்டறிவால் உணர்ந்தவற்றைப் பிறனிடத்துச் செய்வதற்கு, மனத்தளவால் கூட நினையாதிருத்தல் வேண்டும். **316**

7. **எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்**
மாணாசெய் யாமை தலை.

எவ்வளவு சிறிய அளவாயினும் எப்பொழுதாயினும் எவர்க்காயினும், மனத்தொடு பொருந்தாத சிறுமைச் செய்கை செய்யாமை சிறப்பாகும். **317**

8. **தன்னுயிர்க் கின்னாமை தானறிவான் என்கொலோ**
மன்னுயிர்க் கின்னா செயல்?

தன்னுயிர்க்குத் துன்பம் தருவது இது என்று அறியும் ஒருவன், மற்றை உயிர்களுக்கு அத்துன்பத்தைச் செய்வது என்ன அறிவுடைமையாம்? அறிவு ஆகாது. **318**

9. **பிறர்க்கின்னா முற்பகல் செய்யின், தமக்கின்னா**
பிற்பகல் தாமே வரும்.

பிறர்க்குத் துன்பங்களை ஒருவர் முற்பகலில் செய்தால், செய்த அவர்க்கு அத்துன்பங்கள் பிற்பகலில் தாமாகவே தேடிக்கொண்டு வரும். **319**

10. **நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்**
நோயின்மை வேண்டு பவர்.

துன்பம் எல்லாம், துன்பம் செய்தாரையே தொடர்ந்து வருவனவாம்; ஆதலால், தமக்குத் துன்பமில்லாமையை விரும்புபவர் பிறர்க்குத் துன்பம் செய்யார். **320**

33. கொல்லாமை

(கொலை செய்யக் கருதாமை)

1. **அறவினை யாதெனில் கொல்லாமை கோறல்**
பிறவினை எல்லாம் தரும்.

'அறச் செயல் என்பது யாது?' என்றால், அது, 'கொலை செய்யாமை' ஆகும்; கொலை செய்தல் அறமல்லாத தீய செயல்கள் அனைத்தையும் தரும். 321

2. **பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல், நூலோர்**
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.

உள்ள உணவைப் பகுத்துத் தந்து, பல உயிர்களையும் பேணுதல், அறநூலோர் அறமெனத் தொகுத்துக் கூறியவற்றுள் எல்லாம் தலைமையானது (பசிக்கொலையை அகற்றுதல் தலையாய அறம்) 322

3. **ஒன்றாக நல்லது கொல்லாமை; மற்றதன்**
பின்சாரப் பொய்யாமை நன்று.

ஒரே ஒரு நல்லறமாக உயர்ந்தது, கொல்லாமையே. அக்கொல்லாமையை அடுத்துச் சொல்லத் தக்க நல்லறம் பொய்யாமை என்பதே. 323

4. **நல்லா றெனப்படுவ தியாதெனின், யாதொன்றும்**
கொல்லாமை சூழும் நெறி.

'நன்னெறி என்று அருளாளரால் சொல்லப்படுவது யாது?' என்றால், எந்த ஓர் உயிரியையும் கொல்லாமல் காக்கும் வழியேயாம். 324

5. **நிலையஞ்சி நீத்தாருள் எல்லாம் கொலையஞ்சிக்**
கொல்லாமை சூழ்வான் தலை.

நிலையாமையை நிலையாக உடைய உலகியலுக்கு அஞ்சித், துறந்தவர் எல்லாருள்ளும், கொலைக் கொடுமைக்கு அஞ்சிக் கொல்லாமையைப் போற்றுபவனே தலைமையானவன். 325

6. **கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாள்மேல்
செல்லா துயிருண்ணும் கூற்று.**

உயிரை அழிக்கும் கூற்று, கொல்லாமையைப் போற்றி வாழ்பவனின் வாழ்நாளின்மேல் அதனைக் குறைக்கும் வகையில் செல்லாது. ***326***

7. **தன்னுயிர் நீப்பினும் செய்யற்க, தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை.**

பிறிதோர் உயிரால் தன்னுயிர் இழக்கும் நிலை உண்டாயினும், தன்னைக் காத்தற்காக, அதன் இனிய உயிரைப் போக்கும் செயலைச் செய்யாது இருக்க. ***327***

8. **நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும், சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கம் கடை.**

ஓர் உயிரைக் கொல்லுதலால் உண்டாகும் நலங்கள் பெரிதாகும் என்றால் கூட, சான்றோர்க்கு அக்கொலை வழியால் ஆகும் நலங்கள் கீழானவையே. ***328***

9. **கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவார் அகத்து.**

கொலைத் தொழிலின் இழிவைத் தெரிந்தவர்க்குக் கொலைத் தொழில் செய்பவராகிய எவரும் புலைத் தொழில் செய்பவரே ஆவர். ***329***

10. **உயிருடம்பின் நீக்கியார் என்ப, செயிருடம்பின்
செல்லாத்தீ வாழ்க்கை யவர்.**

குற்றமே தன் உடலாக நல்வழியில் செல்லாத தீய வாழ்வினர் என்று பழிக்கப்படுபவர், உயிரை அது தங்கியிருந்த உடலில் இருந்து நீக்கியவரே என்று கூறுவர். ***330***

34. நிலையாமை

(நிலையில்லாதவற்றை அறிதல்)

1. **நில்லாத வற்றை நிலையின என்றுணரும்**
புல்லறி வாண்மை கடை.

நிலையில்லாத் தன்மை உடையவற்றை 'நிலைத் தன்மையுடையவை' என்று மாறுபட அறியும், சிற்றறிவினராக இருத்தல் மிக இழிவாகும். 331

2. **கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்;**
போக்கும் அதுவிளிந் தற்று.

கூத்து நிகழ்ச்சி நடைபெறும் அரங்குக்கு ஒன்று இரண்டாகவரும் கூட்டம் போல், ஒன்று இரண்டாக வந்து சேரும் தன்மையது செல்வம். கூத்து முடிந்ததும் ஒருசேர விரைந்து போகும் கூட்டம் போல் போகும் தன்மையதும் அச்செல்வம். 332

3. **அற்கா இயல்பிற்றுச் செல்வம்; அதுபெற்றால்**
அற்குப ஆங்கே செயல்.

செல்வம் ஓரிடத்தில் நிலை பெற்றிராத் தன்மையது. ஆதலால், அச்செல்வத்தைப் பெற்றால் பெற்ற உடனேயே நிலைபெற்ற அறச் செயல்களைச் செய்து விடுக. 333

4. **நாளென ஒன்றுபோல் காட்டி உயிரீரும்**
வாள துணர்வார்ப் பெறின்.

நாள் என்னும் கால அளவு ஒரு பொருள் போல் தன்னைக் காட்டி, ஒவ்வோர் உயிரின் காலஅளவையும் சிறு கூறாக அறுத்துக் குறைக்கும் வாள் என்பதை உணர்வாளர் அறிவர். 334

5. **நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை**
மேற்சென்று செய்யப் படும்.

நாவை ஒடுக்கி விக்குதல் மேலே வருவதற்கு முன்னரே (வாழ்வின் நிலையாமையை உணர்ந்தவர்களால்) நல்லறச் செயல்கள் விரைந்து செய்யப்படும். 335

6. **நெருநல் உளனொருவன் இன்றில்லை, என்னும்**
பெருமை உடைத்திவ் வுலகு.

'நேற்று உயிரோடு இருந்த ஒருவன் இன்று உயிரில்லாதவன் ஆயினான்' என்று சொல்லும் பெருமையைத் தன் பெருமையாக உடையது இவ்வுலகம். *336*

7. **ஒருபொழுதும் வாழ்வ தறியார்; கருதுப**
கோடியும் அல்ல பல.

மாந்தர், 'ஒரு பொழுதளவும் கூட உறுதியாக வாழ்வோம்' என்னும் நிலைபேறு அறியார்; ஆனால் அவர் எண்ணுகின்றனவோ ஒரு கோடி அல்ல, பலகோடி! *337*

8. **குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே,**
உடம்போ டுயிரிடை நட்பு.

உடலுக்கும் உயிருக்கும் இடையேயுள்ள உறவு, தன் உறைவிடமாக இருந்த கூடு தனித்துக் கிடக்கப் பறவை சென்றது போன்ற நிலையாத் தன்மையதே. *338*

9. **உறங்குவது போலும் சாக்கா டுறங்கி**
விழிப்பது போலும் பிறப்பு.

சாவு என்பது, உறக்கம் வருவது போலவும், பிறப்பு என்பது உறக்கம் நீங்கி விழிப்பது போலவும் நிலையாத் தன்மை உடையவையே. *339*

10. **புக்கில் அமைந்தின்று கொல்லோ, உடம்பினுள்**
துச்சில் இருந்த உயிர்க்கு.

உடலுள், ஒட்டுக் குடிபோல் சிறிது காலம் குடியிருந்த உயிர்க்கு, நிலைபெறப் புகுந்திருத்தற்கு உரிய 'வீடு' அமையவில்லையோ? *340*

35. துறவு

(பற்றுகளை விடுதல்)

1. **யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்**
அதனின் அதனின் இலன்.

ஒருவன் எந்த எந்தப் பொருள்களில் இருந்தும் 'வேண்டா' 'வேண்டா' என விடுதலை அடைவானோ, அந்த அந்தப் பொருள்களால் எல்லாம் அவனுக்குத் துன்பமில்லை. **341**

2. **வேண்டின்உண் டாகத் துறக்க; துறந்தபின்**
ஈண்டியற் பால பல.

துறவினை விரும்பினால், வாய்ப்புகள் எல்லாமும் உள்ளபோதே அவற்றை 'வேண்டா' என விடுவானாக; அவ்வாறு விட்டபின் இங்கே பலப் பலவும் இயல்பாகவே துறவுக் குரியவையாய் விடும். **342**

3. **அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை; விடல்வேண்டும்**
வேண்டிய எல்லாம் ஒருங்கு.

துறவி, சுவை முதலாகிய ஐந்து புலன்களையும் அடக்கிக் காத்தல் வேண்டும், 'வேண்டும்', 'வேண்டும்', என்று விரும்பிவற்றையெல்லாம் ஒரு மொத்தமாக 'வேண்டா' என விடுதலும் வேண்டும். **343**

4. **இயல்பாகும் நோன்பிற்கொன் றின்மை; உடைமை**
மயலாகும் மற்றும் பெயர்த்து.

ஒரு பற்றும் இல்லாது இருத்தலே துறவுக்கு இயல்பாகும்; ஒன்றன் மேலேனும் பற்றுதல் உண்டாயின், அது மீண்டும் பற்றுகளைப் பற்ற மயக்குவதாகும். **344**

5. **மற்றும் தொடர்ப்பா டெவன்கொல்? பிறப்பறுக்கல்**
உற்றார்க் குடம்பும் மிகை.

பிறப்பால் வரும் உறவுத் தொடர்பை விலக்க விரும்பிய துறவோர்க்குத் தம் உடம்பும் மிகையானதாகும்; (ஒரு பொருட்டானதன்று) அவ்வாறு இருக்க மற்றும் பற்று வைத்தற்குரியது யாதாகும்? (இல்லை) **345**

6. **யான்என தென்னும் செருக்கறுப்பான் வானோர்க்**
குயர்ந்த உலகம் புகும்.

'யான்' என்னும் அகப்பற்றும், 'எனது' என்னும் புறப்பற்றும் உண்டாக்கும் செருக்கை அகற்றிய துறவோர் புகழுடம்பாளர் உலகில் உயர்ந்த இடம் பெறுவர். ***346***

7. **பற்றி விடாஅ இடும்பைகள், பற்றினைப்**
பற்றி விடாஅ தவர்க்கு.

அகப்பற்று புறப்பற்று ஆகிய பற்றுகளைப் பற்றிக் கொண்டு அவற்றை விடாமல் இருப்பவர்க்குத் துன்பங்கள் பற்றாகப் பற்றிக் கொண்டு விடாதனவாய் அலைக் கழிக்கும். ***347***

8. **தலைப்பட்டார் தீரத் துறந்தார்; மயங்கி**
வலைப்பட்டார் மற்றை யவர்.

முற்றாகத் துறந்த துறவோரே துறவில் தலைமைப் பட்டவர். அவ்வாறு துறவாதவர், அறியாமைக்கு ஆளாகித் துன்பம் என்னும் வலைக்குள் அகப்பட்டவர். ***348***

9. **பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்; மற்று**
நிலையாமை காணப் படும்

ஒருவருக்கு முற்றாகப் பற்று அற்ற போதே அது, அப்பிறவித் துன்பத்தை நீக்கிவிடும்; அதன் பின்னர் உலகின் நிலையிலாத் தன்மை தெள்ளத் தெளிய விளங்கும். ***349***

10. **பற்றுக பற்றற்றான் பற்றினை; அப்பற்றைப்**
பற்றுக பற்று விடற்கு.

பற்றே இல்லாத துறவோன் பற்றினை விடாப் பற்றாகப் பற்றிக் கொள்க; அப்பற்றைப் பற்றுதல் எதற்காகவோ எனின், தமக்குள்ள பற்றை விடுதற்காக வாம். ***350***

36. மெய்யுணர்தல்

(உண்மை உணர்தல்)

1. **பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்
மருளானாம் மாணாப் பிறப்பு.**

மெய்ப்பொருள் அல்லாதவற்றை மெய்ப்பொருள் என்று கொள்ளும், தெளிவில்லா அறிவினன், பெருமையில்லாப் பிறப்பினன் (இழிபிறப்பினன்) ஆவன். 351

2. **இருள்நீங்கி இன்பம் பயக்கும், மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு.**

மயக்கம் நீங்கிக் குற்றமற்ற மெய்யறிவினை யுடையவர்க்கு அம்மெய்யறிவு, அறியாமை இருளை நீக்கி இன்பப் பேற்றை அருளும். 352

3. **ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து.**

ஐயத்தில் இருந்து விடுபட்டுத் தெளிவடைந்த மெய்யுணர்வாளர்க்கு, அவர் வாழும் வையகத்தை விட, வானகம் மிக நெருக்கமுடையதாம். 353

4. **ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே,
மெய்யுணர் வில்லா தவர்க்கு.**

மெய்யறிவு இல்லாதவர்க்கு ஐம்புலன்களால் உண்டாகும். ஐவகை அறிவும் ஒருங்கே வாய்த்திருந்தாலும், அவற்றால் ஒரு பயனும் இல்லை. 354

5. **எப்பொருள் எத்தன்மைத் தாயினும், அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.**

எப்பொருள் எவ்வியல்பு உடையதாகத் தோற்றத்தில் தெரிந்தாலும் அதனை அப்படியே கொள்ளாமல் அப் பொருளில் அமைந்துள்ள மெய்ம்மையைக் கண்டு கொள்வதே தெளிந்த அறிவாகும். 355

6. **கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்,**
மற்றீண்டு வாரா நெறி.

ஈங்குக் கற்க வேண்டுவனவற்றைக் கற்று அவற்றிலுள்ள மெய்ப்பொருளை அறிந்து கொண்டவர், பிறர்க்குத் தோன்றாத நெறிகள் எல்லாம் விளங்கித் தாம் சிறப்புறுவர். 356

7. **ஓர்த்துள்ளம் உள்ள துணரின், ஒருதலையாப்**
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு.

ஒருமுகப்பட்ட உள்ளத்தால் ஒருவர் ஆராய்ந்து உண்மைப் பொருளைக் கண்டு கொண்டால், அவர் மீண்டும் அறியாமைத் தோற்றம் வருமென எண்ண வேண்டியதில்லை. 357

8. **பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்**
செம்பொருள் காண்ப தறிவு.

பிறப்பு என்று சொல்லப்படும் அறியாமை விலகிப் போவதற்குச் சிறப்பு என்று சொல்லப்படும் மெய்ப்பொருளைக் கண்டு கொள்வதே அறிவுடைமையாகும். 358

9. **சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்**
சார்தரா சார்தரு நோய்.

ஒருவர் தாம் அடைய வேண்டிய மெய்ம்மையை உணர்ந்து, பொய்மைச் சார்பு அற்றுப் போகுமாறு வாழ்ந்தால், அவரை அடைதற்குரிய துன்பங்கள் மீண்டும் வந்து அடையமாட்டா. 359

10. **காமம் வெகுளி மயக்கம், இவைமூன்றன்**
நாமம் கெடக்கெடும் நோய்.

விருப்பு வெறுப்பு தெளிவின்மை என்னும் மூன்றன் அச்சமும் ஒருவர்க்கு ஒழிந்து போகுமானால், அவர்க்கு எவ்வகைத் துன்பமும் இல்லாமல் அழிந்துவிடும். 360

37. அவாவறுத்தல்

(ஆசையை நீக்குதல்)

1. **அவாஎன்ப எல்லா உயிர்க்குமெஞ் ஞான்றும்**
தவாஅப் பிறப்பீனும் வித்து.

எல்லா உயிர்களுக்கும், எல்லாக் காலத்தும், நீங்கா அறியாமைத் துயரைத் தரும் விதையாவது, பேராசையே என்று சொல்வர். 361

2. **வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது**
வேண்டாமை வேண்ட வரும்.

விருப்பம் உண்டாகும் போதில், விரும்பாமை (ஆசை பிறவாமை) உண்டாதல் வேண்டும்; அவ் விரும்பாமை, விரும்புதலை விரும்பாத நிலை உண்டாகும் போது உண்டாகும். 362

3. **வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை;**
யாண்டும் அஃதொப்ப தில்.

ஆசையில்லாமை போன்றதொரு சிறந்த செல்வம் இங்கே இல்லை. இங்கே மட்டுமின்றி வேறு எங்கேயும் அதனைப் போன்றதொரு செல்வம் இல்லை. 363

4. **தூஉய்மை என்ப தவாவின்மை; மற்றது**
வாஅய்மை வேண்ட வரும்.

தூய்மை என்று சொல்லப்படுவது ஆசை இல்லாமையே; அவ்வாசை இல்லாமை, வாய்மையை (அகத்தூய்மையை) விரும்புவதால் வரும். 364

5. **அற்றவர் என்பார் அவாஅற்றார்; மற்றையார்**
அற்றாக அற்ற திலர்.

துன்பம் அற்றுப் போனவர் என்று சொல்லப்படுபவர் ஆசை அற்றவரே; மற்றுத் துன்பம் உற்றவர் அவ்வாறு ஆசை அற்றவர் ஆகார். 365

6. **அஞ்சுவ தோரும் அறனே; ஒருவனை**
வஞ்சிப்ப தோரும் அவா.

ஒருவன் பலப்பல அறங்களைக் கடைப்பிடித்தாலும் அவனை ஏமாற்றித் துயரில் செலுத்துவது ஆசையே; ஆதலால், ஆசை பற்றிவிடாவாறு அஞ்சுவதே அறமாகும். **366**

7. **அவாவினை ஆற்ற அறுப்பின், தவாவினை**
தான்வேண்டும் ஆற்றான் வரும்.

ஒருவன் தன்னிடம் ஆசையுண்டாகாமல் முழுமையாக அகற்றிவிட்டால், அழியாமைக்குரிய செயல் அவன் விரும்பிய வழியால் வரும். **367**

8. **அவாஇல்லார்க் கில்லாகும் துன்பம்; அஃதுண்டேல்**
தவாஅது மேன்மேல் வரும்.

*ஆசை இல்லாதவர்க்குத் துன்பமும் முழுமையாக இல்லாமல் ஒழியும். அவ்வாசை உண்டானால், துன்பம் அழியாது மேலும் மேலும் தொடர் தொடராக வரும்.***368**

9. **இன்பம் இடையறா தீண்டும்; அவாவென்னும்**
துன்பத்துள் துன்பம் கெடின்.

ஆசை என்று சொல்லப்படும் துன்பத்திலெல்லாம் பெரிய துன்பம் இல்லாமல் ஒழிந்தால் இன்பம் இடையீடு இல்லாமல் தொடர்ந்து வரும். **369**

10. **ஆரா இயற்கை அவாநீப்பின், அந்நிலையே**
பேரா இயற்கை தரும்.

அளவிடப்படாமல் பெருகும் இயல்பினையுடையது ஆசை. அதனை நீக்கினால் நீக்கிய அவ்வளவிலேயே என்றும், அசைவிலா ஒரு பெருநிலையை (பேரா இயல்பை - மாறாத பேரின்ப நிலையை) அது தரும். **370**

38. ஊழ்

(இயற்கை ஒழுங்கு)

1. **ஆகூழால் தோன்றும் அசைவின்மை; கைப்பொருள்
போகூழால் தோன்றும் மடி.**

அடிப்படைப் பொருள் பெருகுதற்குரிய ஊழ் (ஆகூழ்) உண்டாயின் சோர்வில்லாமை தோன்றும்; அது சுருங்குதற்குரிய ஊழ் (போகூழ்) உண்டாயின் சோர்வு தோன்றும். *371*

2. **பேதைப் படுக்கும் இழவூழ்; அறிவகற்றும்
ஆகலூழ் உற்றக் கடை.**

ஒன்றை இழக்கச் செய்தற்குரிய ஊழ் உண்டாக்கிய போது அது அறியாமையில் ஆழ்த்தும்; அதனைப் பெருகச் செய்தற்குரிய ஊழ் உண்டாகிய போது அறிவை (ப் பெருக) விரியச் செய்யும். *372*

3. **நுண்ணிய நூல்பல கற்பினும், மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும்.**

நுண்ணிய பொருளமைந்த நூல்கள் பலவற்றை ஒருவன் கற்பான் எனினும், அவனுக்கு உள்ளதாந் தன்மையில் அமைந்த உண்மை அறிவே மேற்பட்டு நிற்கும். *373*

4. **இருவே றுலகத் தியற்கை; திருவேறு,
தெள்ளிய ராதலும் வேறு.**

உலகம் ஆகூழ், போகூழ் என இருவேறுபட்ட இயல்புகளையுடையது; ஆனால், நெஞ்சத்தின் நிறைவாந்தன்மை இவற்றின் வேறனாது ஒன்று; தெளிந்த மெய்யுணர்வினராதல் என்பது மற்றொன்று. *374*

5. **நல்லவை எல்லாஅம் தீயவாம்; தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு.**

செல்வம் தேடுதற்கு நல்லவை என்று தேர்ந்தவை தீயவையாகவும், தீயவை என்று தேர்ந்தவை நல்லவையாகவும் இயற்கை ஒழுங்கால் ஆகிவிடல் உண்டு. *375*

6. **பரியினும் ஆகாவாம் பால்அல்ல; உய்த்துச்**
சொரியினும் போகா தம.

தாம் அடைதற்கு முறைமை இல்லாத ஒன்றை, எவ்வளவு முயன்று காத்தாலும் காக்க முடியாமல் போய் விடும்; அடைதற்கு முறைமையுடைய ஒன்றை, எவ்வளவு முயன்று தள்ளினாலும் தம்மதே ஆகிவிடும். (இதுவே இயற்கை ஒழுங்கு) 376

7. **வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி**
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது.

ஊழா ணமைந்த ஆட்சியாளன், வகுத்துத் தந்த வழியை அல்லாமல் கோடிக் கணக்காகச் செல்வம் தேடித் தொகுத்து வைத்தவர்க்கும் அவற்றை நுகர்தல் இயலாது. 377

8. **துறப்பார்மன் துப்புர வில்லார், உறற்பால**
ஊட்டா கழியும் எனின்.

அடைதற்கு உரியவையாய் இருந்தும், அவற்றை அடைய விடாமல் ஊழ் (உலகத்து இயற்கை ஒழுங்கு) ஒதுக்கி விடுமானால், நுகர்தற்கு வாய்ப்பிழந்த அவர், உறுதியாகப் பற்றற்றவ ராவர். 378

9. **நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்**
அல்லல் படுவ தெவன்?

நல்லது வரும் போது அதனை நல்லதெனக் கண்டு களிப்பவர், நல்லது அல்லாதது வரும் போது அதனைக் கண்டு துன்பப்படுவது என்ன முறைமையோ? 379

10. **ஊழிற் பெருவலி யாவுள? மற்றொன்று**
சூழினும் தான்முந் துறும்.

உலகத்தியற்கை ஒழுங்கினை (ஊழை)க் காட்டிலும் பெரிய வலிமையானவை எவை உண்டு? மற்றொன்று, அதனை முந்த வேண்டும் என்று எண்ணு முன்பே அது முந்தி வந்து நின்று விடும்! 380

திருக்குறள் வாழ்வியலுரை

பொருள்

செவ்விய பொருளியக்கமே

நல்லரசின் ஆளுமை

39. இறைமாட்சி

(அரசியற் சிறப்பு)

1. **படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்**
உடையான் அரசருள் ஏறு.

படை, குடி, உணவு, அமைச்சு, நட்பு, பாதுகாப்பு என்னும் ஆறு உறுப்புகளையும் சிறப்பாக உடையவன் ஆட்சியாளருள் சிறந்த ஆட்சியாளன்.. 381

2. **அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்**
எஞ்சாமை வேந்தற் கியல்பு.

ஆட்சியாளர்க்கு, அச்சமில்லாமை, கொடைமை, அறிவுடைமை, ஊக்கமுடைமை என்னும் இந்நான்கும் குறையாமல் அமைந்திருக்க வேண்டிய இயல்புகள் ஆகும். 382

3. **தூங்காமை கல்வி துணிவுடைமை, இம்மூன்றும்**
நீங்கா நிலனாள் பவற்கு.

காலம் தாழ்த்தாமை, கல்வித் தேர்ச்சி, தெளிவுடைமை ஆகிய இம்மூன்றும் நாடாள்பவனுக்கு நிலையாக இருக்க வேண்டிய தன்மைகள். 383

4. **அறனிழுக்கா தல்லவை நீக்கி, மறனிழுக்கா**
மானம் உடைய தரசு.

அறநெறியில் நீங்காது அறமல்லாத வற்றை விலக்கி, போர் முறையில் தவறாத பெருமை (மானம்) உடையதே சிறந்த அரசு ஆகும். 384

5. **இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த**
வகுத்தலும் வல்ல தரசு.

நாட்டின் வருவாய் பெருகத் தக்க வழிகளை இயற்றுதலும், அவ் வழிகளுக்குத்தக வளம் சேர்த்தலும், அதனைக் கேடின்றிக் காத்தலும், அதனை நல்வழிகளுக்குப் பகுத்தளித்தலும் வல்லது சிறந்த அரசு ஆகும். 385

6. **காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன், அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்.**

ஆட்சியாளன், காண வருவார்க்கு எளிதில் காட்சி தருபவனாகவும், அவர்களிடம் கடுஞ் சொல் கூறாதவனாகவும் இருந்தால், நாட்டவர் அனைவரும் அவன் புகழ் கூறுவர். 386

7. **இன்சொலால் ஈத்தளிக்க வல்லாற்குத் தன்சொலால்
தான்கண் டனைத்திவ் வுலகு.**

இனியவை கூறிக் கொடை வழங்கிக் காக்கவல்ல ஆட்சியாளனுக்கு, அவன் சொல்கிறபடியும், நினைக்கிற-படியும் நாட்டு மக்கள் அமைவர். 387

8. **முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்.**

நடுவு நிலைமையோடு தன் நாட்டைக் காத்து வரும் ஆட்சியாளன், நாட்டுமக்களால் தெய்வம் (இறை) என்னும் புகழ் நிலையில் வைத்துப் போற்றப் படுவான். 388

9. **செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு.**

(அறவோரும் அல்லலுற்றோரும்) கேட்க வெறுப்பூட்டும் கடுஞ் சொற்களைக் கூறினாலும், அவற்றைப் பொறுத்துக் கொள்ளும் பண்பமைந்தவன் ஆட்சியில் மக்கள் இனிது வாழ்வர். 389

10. **கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி.**

கொடை, அருள், நடுவுநிலைமை, குடிகளைப் பேணிக் காத்தல் ஆகிய நான்கு தன்மைகளையும் உடைமையாகக் கொண்ட ஆட்சியாளன், ஏனை ஆட்சியாளர்க் கெல்லாம் சுடர் போன்றவன் ஆவான். 390

40. கல்வி

(கற்பதற்குரிய நூல்களைக் கற்றல்)

1. **கற்க கசடறக் கற்பவை; கற்றபின்**
நிற்க அதற்குத் தக.

கற்க விரும்பும் ஒருவன், தான் கற்கத் தக்க நூல்களைக் குற்றமறக் கற்பானாக; அவ்வாறு கற்றபின் அந்நூல்கள் கூறும் நெறிக்கு ஏற்ப ஒழுகுவானாக. 391

2. **எண்ணென்ப ஏனை எழுத்தென்ப, இவ்விரண்டும்**
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.

புகழோடு வாழும் மக்களுக்கு அறிவியல் கூறுகளும், (எண்) மற்றும் கலையியல் கூறுகளும் (எழுத்து) ஆகிய இரண்டும் கண்கள் எனக் கற்றோர் கூறுவர். 392

3. **கண்ணுடையர் என்பவர் கற்றோர்; முகத்திரண்டு**
புண்ணுடையர் கல்லா தவர்.

கண்ணுடையவர் என்று அறிவாளர்களால் சொல்லப் படுபவர் கற்றோரே! மற்றைக் கல்லாதவரோ, முகத்தில் இரண்டு கண்ணுடையவரேனும் புண்ணுடையவர் என்றே சொல்லப்படுவர். 393

4. **உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்**
அனைத்தே புலவர் தொழில்.

மகிழுமாறு உறவாடி, நினைந்து நினைந்து உருகுமாறு பிரிந்து செல்லும் அவ்வளவினதே புலமையாளர் கடமையாகும். 394

5. **உடையார்முன் இல்லார் போல் ஏக்கற்றுங் கற்றார்;**
கடையரே கல்லா தவர்.

அறிவு மிகுதியாக உடையவர்முன் அஃதில்லார், அவரைப் போல் பேரறிவு அடைய வேண்டும் என்னும் ஏக்கத்துடன் கற்பதுபோல், கற்றவரே கற்றவர்; அவ்வாறு கல்லாதவர் கீழானவர். 395

6. **தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
கற்றனைத் தூறும் அறிவு.

தோண்டிய அளவிற்கு மணல் ஊற்றில் நீர் ஊறும்; அதுபோல் மக்கட்கு அவர்கள் கற்ற அளவுக்குத்தக அறிவு பெருகும். **396**

7. **யாதானும் நாடாமால் ஊராமால்; என்னொருவன்**
சாந்துணையும் கல்லாத வாறு.

கல்வியால் சிறந்தார்க்கு எந்த நாடும் தம் நாடாம்; எந்த ஊரும் தம் ஊராம்; அவ்வாறிருக்கவும் ஒருவன் தான் இறக்குமளவும் கற்றுக் கொண்டிராமை ஏன்? **397**

8. **ஒருமைக்கண் தான்கற்ற கல்வி, ஒருவற்**
கெழுமையும் ஏமாப் புடைத்து.

ஒருப்பட்ட உள்ளத்தோடு ஒருவன் கற்ற கல்வி அவனுக்குப் பின் வரும் வாழ்நாள்களில் எல்லாம் (எழுமையும்) சிறந்த பாதுகாப்பாக அமைதலை உடையது. **398**

9. **தாமின் புறுவ துலகின் புறக்கண்டு**
காமுறுவர் கற்றறிந் தார்.

கற்றறிந்தவர் தாம் எக் கல்வியால் இன்புறுகின்றாரோ அக் கல்வியால் உலகோரும் இன்புறுவதைக் கண்டு மேலும் ஆர்வத்துடன் கற்பர். **399**

10. **கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**
மாடல்ல மற்றை யவை.

ஒருவனுக்கு எவ்வகையானும் கெடுதல் செய்யாத சிறந்த செல்வமாவது கல்வியே; மற்றைப் பொருள் முதலிய செல்வங்கள், அத்தகைய செல்வங்கள் அல்ல. **400**

41. கல்லாமை

(கல்லாதிருத்தல்)

1. **அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய**
நூலின்றிக் கோட்டி கொளல்.

ஒருவன், அறிவுப் பெருக்கத்திற்குரிய நூலைக் கல்லாமல் கற்றோர் அவையில் பேச விரும்புதல், கட்டம் (அரங்கம்) அமைத்துக் கொள்ளாமலே வட்டாட்டம் (சூதாட்டம்) ஆடுவது போன்றது. 401

2. **கல்லாதான் சொற்கா முறுதல், முலையிரண்டும்**
இல்லாதாள் பெண்காமுற் றற்று.

கல்வி அறிவில்லாத ஒருவன் கற்றோர் அவையில் பேச விரும்புதல், மார்பகங்கள் இல்லாத பேடி (அலி)ப் பெண், மிக நலம் பெற்ற பெண்ணைப் போல் தானும் இன்பம் பெற விழைவது போன்றது. 402

3. **கல்லா தவரும் நனிநல்லார், கற்றார்முன்**
சொல்லா திருக்கப் பெறின்.

தம் அறிவு நிலைமை உணர்ந்து, கற்றோரிடத்துத் தம் அறியாமை வெளிப்பட உரையாடாது இருப்பாரானால், கல்வியறிவில்லாதவரும் மிக நல்லவரே ஆவர். 403

4. **கல்லாதான் ஒட்பம் கழியநன் றாயினும்**
கொள்ளார் அறிவுடை யார்.

கல்வியறி வில்லாதவனின் உண்மை அறிவு (இயற்கை அறிவு) மிக நல்லதாகத் தோன்றினாலும் கூட, அவனைக் கல்வியறிவாளனென அறிவுடையவர் கொள்ளார். 404

5. **கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து**
சொல்லாடச் சோர்வு படும்.

கல்வியறிவில்லாத ஒருவன் கொண்ட மேம்பாடு, அவன் கல்வி வல்ல ஒருவனைக் கூடி உரையாடத் தொடங்கிய அளவில் தகர்ந்து போகும். 405

6. **உளரென்னும் மாத்திரையர் அல்லால், பயவாக்**
களரனையர் கல்லா தவர்.

கல்வியறிவில்லாதவர், உயிரோடு உள்ளவர் என்று சொல்லப்படும் அளவினரே அல்லாமல், விதைத்த வித்தின் அளவுகூட விளையாத உவர் நிலம் போன்றவர். **406**

7. **நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்,**
மண்மாண் புனைபாவை யற்று.

நுண்ணிய விரிந்த ஆழ்ந்த அறிவு இல்லாத ஒருவன் கொண்டுள்ள தோற்றமும் பொலிவும், மண்ணால் செய்து வண்ணம் தீட்டப்பட்ட பொ(ய்)ம்மை போல்வதாம். **407**

8. **நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே,**
கல்லார்கண் பட்ட திரு.

கல்வியறிவில்லாதவ ரிடத்து உண்டாகிய செல்வம், கல்வியறிவுடையவ ரிடத்து உண்டாகிய வறுமையைப் பார்க்கிலும் கேடு செய்யும். **408**

9. **மேற்பிறந்தா ராயினும் கல்லாதார், கீழ்ப்பிறந்தும்**
கற்றார் அனைத்திலர் பாடு.

கல்வியறிவில்லாதவர், மதித்துப் போற்றப்படும் குடும்பத்தில் பிறந்தனரேயாயினும், மதிப்பில்லாத எளிய குடும்பத்தில் பிறந்த கல்வியறிவுடையவர் அளவுக்குப் பெருமை பெறார். **409**

10. **விலங்கொடு மக்கள் அனையர், இலங்குநூல்**
கற்றாரோ டேனை யவர்.

விளங்கிய அறிவினை ஆக்கும் நூல்களைக் கற்றவரோடு கல்லாதவர், ஆறறிவு மக்களுக்கும் ஐயறிவு விலங்குகளுக்கும் உள்ள அவ்வளவு வேறுபாடு உடையர். **410**

42. கேள்வி

(தக்கவற்றைக் கேட்டறிதல்)

1. **செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்**
செல்வத்துள் எல்லாம் தலை.

ஒருவன் பெற வேண்டும் செல்வங்களுள் எல்லாம் சிறந்த செல்வமாவது, கேள்விச் செல்வமே அச்செல்வம் மற்றைச் செல்வங்களுள் எல்லாம் முதன்மையானது. **411**

2. **செவிக்குண வில்லாத போழ்து சிறிது**
வயிற்றுக்கும் ஈயப் படும்.

அறிவுக்கு விருந்தாகிய கேள்வியுணவு கொள்வதற்கு வாய்ப்பில்லாத பொழுதில், கேள்வி விருப்பம் உடையவர்களால் தம் வயிற்றுக்கும் உணவு சிறிதளவு கொடுக்கப்படும். **412**

3. **செவியுணவிற் கேள்வி யுடையார் அவியுணவின்**
ஆன்றாரோ டொப்பர் நிலத்து.

செவிக்கு உணவாகிய கேள்வி விருப்புடையவர், பக்குவமான நல்ல உணவுகளைத் தேடித்தேடி உண்ணும் பேருண்டியர்க்கு ஒப்பாகக் கேள்விச் செல்வத்தைத் தேடித் தேடிப் பெறுவர். **413**

4. **கற்றில னாயினும் கேட்க; அஃதொருவற்**
கொற்கத்தின் ஊற்றாம் துணை.

ஒருவன் கல்லாதவனாக இருப்பினும் கேட்பானாக; அக்கேள்வி, ஆற்றுநீர் அற்ற வறட்சிப் பொழுதில் ஊற்று நீர் போல உதவியாய் அமையும். **414**

5. **இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே,**
ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல்.

கற்றறிந்த ஒழுக்கமுடையவரின் மெய்யான சொற்கள், வழுக்கல் நிலத்தில் நடப்பவர்க்கு ஊன்றுகோல் உதவுவதுபோல் உதவும். **415**

6. எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

எவ்வளவு சிறிய அளவினது ஆயினும் நல்லவற்றைக் கேட்க; அச்சிறிய அளவுக் கேள்வியும் மிகப் பெரிய நன்மையைத் தரும். **416**

7. பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார் இழைத்துணர்ந்
தீண்டிய கேள்வி யவர்.

நுணுகி ஆராய்ந்து பெருக்கிக் கொண்ட கேள்விச் செல்வத்தை உடையவர், எச் செய்தியையும் பிழையாக உணர்ந்து அறியாத் தனமாகச் சொல்லார். **417**

8. கேட்பினும் கேளாத் தகையவே, கேள்வியால்
தோட்கப் படாத செவி.

சிறந்த செய்திகளால் திறக்கப்படாத செவி, அவற்றைக் கேட்டுக் கொண்டிருந்ததே எனினும் கேளாச் செவிட்டுச் செவிக்கு ஒப்பானதே. **418**

9. நுணங்கிய கேள்விய ரல்லார், வணங்கிய
வாயின ராதல் அரிது.

நுண்ணிய கேள்வி அறிவுடையவர் அல்லாதவர், பணிவுடைய சொற்களைச் சொல்பவராக இருத்தல் அரிதாகும். **419**

10. செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்?

செவியால் உணரப்படும் கேள்விச் சுவையை உணராமல் வாய்ச்சுவை உணர்வே உணர்வெனக் கொண்ட அறிவில்லார், இறந்தால்தான் என்ன? உயிரோடு இருந்தால் தான் என்ன? **420**

43. அறிவுடைமை

(அறிவுடையவராதல்)

1. **அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்**
உள்ளழிக்க லாகா அரண்.

அழிவு வராமல் காக்கும் பயனுறு கருவி அறிவாகும்; அன்றியும், அவ்வறிவு பகைவர்க்கும் உட்புகுந்து அழிக்கமுடியாத பாதுகாப்பும் ஆகும். 421

2. **சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ**
நன்றின்பால் உய்ப்ப தறிவு.

மனத்தைப் போன போக்கில் போகவிடாமல் தடுத்துத் தீமையில் இருந்து விலக்கி, நல்வழிகளில் செல்லுமாறு செலுத்துவதே அறிவு ஆகும். 422

3. **எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும், அப்பொருள்**
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

எந்தப் பொருளைப் பற்றி எவரெவர் சொல்லக் கேட்டாலும் அந்தப் பொருளில் உள்ள உண்மைப் பொருளைக் கண்டு கொள்வதே அறிவாகும். 423

4. **எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்**
நுண்பொருள் காண்ப தறிவு.

சொல்வனவற்றை எளிதில் பொருள் விளங்குவனவாகக் கேட்பவர் மனத்தில் பதியுமாறு சொல்லிப் பிறர் சொல்லும் நுட்பமான பொருளையும் தான் எளிதாகக் கண்டு கொள்ளுவதே அறிவாகும். 424

5. **உலகம் தழீஇய தொட்பம்; மலர்தலும்**
கூம்பலும் இல்ல தறிவு.

இன்பத்தில் மகிழ்தலும் (விரிதலும்) துன்பத்தில் சோர்தலும் (கூம்பலும்) இல்லாததே அறிவாகும். அவ்வறிவும் உயர்ந்தோரைப் பொருந்திச் செல்வதே ஒட்பம் (ஒளி) எனப்படும். 425

6. **எவ்வ துறைவ துலகம், உலகத்தோ**
டவ்வ துறைவ தறிவு.

உயர்ந்தோர் எவ்விதம் வாழ்கின்றனர் என்பதைத் தெளிந்து அவ்வுயர்ந்தோர்களுடன் கூடி அவர்கள் வாழும் வகையிலே வாழ்வது அறிவுடைமை யாகும். 426

7. **அறிவுடையார் ஆவ தறிவார்; அறிவிலார்**
அஃதறி கல்லா தவர்.

அறிவுடைவர் என்பவர் பின்னே வருபவற்றை முன்னே அறிந்து கொள்பவ ராவர்; அறிவிலார் என்பவர், அவ்வாறு அறிந்து கொள்ளமாட்டாதவ ராவர். 427

8. **அஞ்சுவ தஞ்சாமை பேதைமை; அஞ்சுவ**
தஞ்சல் அறிவார் தொழில்.

அஞ்ச வேண்டுவன வற்றுக்கு அஞ்சாது இருத்தல் அறிவில்லாமை ஆகும். அஞ்ச வேண்டுவன வற்றுக்கு அஞ்சுதல் அறிவுடையார் செயலாகும். 428

9. **எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை,**
அதிர வருவதோர் நோய்.

வரக்கூடியவற்றை முன்னரே அறிந்து காத்துக் கொள்ளக்கூடிய அறிவாளர்க்கு, அதிர்ச்சி அடையுமாறு வரக்கூடியதோர் துன்பம் இல்லை. 429

10. **அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்**
என்னுடைய ரேனும் இலர்.

அறிவுடைமையாகிய ஒன்றனை உடையவர், மற்றை எல்லா நலங்களும் உடையவர் ஆவர்; அவ்வறிவொன்றும் இல்லார் மற்றை எவற்றை உடையரேனும் இல்லாதவரே ஆவர். 430

44. குற்றங்கடிதல்

(தம்மிடம் குற்றம் உண்டாகாவாறு விலக்குதல்)

1. **செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்**
பெருக்கம் பெருமித நீர்த்து.

தற்பெருமை சீற்றம் இழிதன்மை ஆகியவற்றை இல்லாதவர் மேம்பாடு, பிறரால் பாராட்டப்படும் பெருமிதத் தன்மை உடையது. **431**

2. **இவறலும் மாண்பிறந்த மானமும் மாணா**
உவகையும் ஏதம் இறைக்கு.

கருமித்தனமும் பெருமை நீங்கிய மானமும் இழிவகையால் கொள்ளும் மகிழ்வும் உடையவராதல், தலைமைப் பொறுப்பினர்க்குக் குற்றங்களாம். **432**

3. **தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக்**
கொள்வார் பழிநாணு வார்.

பழிச் சொல்லுக்கு நாணுபவர், தினையளவாகிய சிறிய குற்றம் தமக்குவரினும், அதனைப் பனையளவு பெரியதாக எண்ணிக் கொள்வர். **433**

4. **குற்றமே காக்க பொருளாகக் குற்றமே**
அற்றம் தரூஉம் பகை.

முழு அழிவைத் தரும் பகை குற்றமேயாகும். ஆதலால், குற்றம் தம்மிடத்து உண்டாகாமல் கருத்தோடு காத்துக் கொள்ள வேண்டும். **434**

5. **வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை, எரிமுன்னர்**
வைத்தூறு போலக் கெடும்.

குற்றம் வருவதற்கு முன்னரே அது வராமல் காத்தல் வேண்டும்; அவ்வாறு காவாத வாழ்வு, தீயின் முன்னர் வைக்கப்பட்ட வைக்கோற் போர் போல் அழிந்து விடும். **435**

6. **தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்**
என்குற்ற மாகும் இறைக்கு?

தன்னிடத்துக் குற்றம் உண்டாகாமல் காத்துப் பிறரிடத்துள்ள குற்றத்தைக் காணவல்லவன் ஆயின் அத் தலைவனுக்கு என்ன குற்றம் உண்டாம்? (உண்டாகாது). 436

7. **செயற்பால செய்யா திவறியான் செல்வம்**
உயற்பால தன்றிக் கெடும்.

செய்ய வேண்டிய நற்செயலுக்குப் பயன்படுத்தாத கருமியின் செல்வம், எவ்வளவு முயன்று, காப்பினும் காக்கப்படுதல் இல்லாமல் அழிந்து போகும். 437

8. **பற்றுள்ளம் என்னும் இவறன்மை எற்றுள்ளும்**
எண்ணப் படுவதொன் றன்று.

பற்றுள்ளம் என்று சொல்லப்படும் கருமித்தனம் எந்தக் குற்றத்தொடும் வைத்து எண்ணக்கூடிய குற்றமன்று; அது பெருங்குற்றமாகும். 438

9. **வியவற்க எஞ்ஞான்றும் தன்னை; நயவற்க**
நன்றி பயவா வினை.

ஒருவன் எப்பொழுதில் ஆயினும் தற்பெருமை கொள்ளாமல் இருப்பானாக; அவ்வாறே, நன்மை தராத செயல்களைச் செய்தற்கு விரும்பாதிருப்பானாக. 439

10. **காதல காதல் அறியாமை உய்க்கிற்பின்**
ஏதில ஏதிலார் நூல்.

ஒருவன் தான் விரும்பும் விருப்பைப் பிறர் அறியாமல் துய்த்து நிறைவேற்றிக் கொள்ள வல்லவனாயின், அவனுக்குப் பகையாயவர் வகுக்கும் சூழ்ச்சி எதுவும் வெற்றி பெறாது. 440

45. பெரியாரைத் துணைக் கோடல்

(பெரியவர்களைத் துணையாகக் கொள்ளல்)

1. **அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை**
திறனறிந்து தேர்ந்து கொளல்.

அறநெறியை அறிந்து தெளிந்த அறிவினை உடையவர் நட்பினைப், பெறுகின்ற முறையறிந்து ஆராய்ந்து கொள்ளுதல் வேண்டும். 441

2. **உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும்**
பெற்றியார்ப் பேணிக் கொளல்.

வந்த துயரை நீக்கி வர இருக்கும் துயரை வரா வண்ணம் முற்படக் காக்கவல்ல பெரியவரை உறவாகக் கொள்ளுதல் வேண்டும். 442

3. **அரியவற்றுள் எல்லாம் அரிதே, பெரியாரைப்**
பேணித் தமராக் கொளல்.

பெரியவரை மதித்துப் போற்றித் தமக்கு உறவினராகக் கொள்ளுதல், ஒருவர் பெற வேண்டும் அரிய பேறுகளுள் எல்லாம் அரிய பேறாகும். 443

4. **தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்**
வன்மையுள் எல்லாம் தலை.

தம்மைக் காட்டிலும் பெரியவர் தமக்கு உறவுடையவராகுமாறு நடந்து கொள்ளுதல், தமக்கமைந்த வலிமைகளுள் எல்லாம் தலையாய வலிமையாகும். 444

5. **சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்**
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்.

அறிவான் மிக்க பெரியோரே ஆட்சியாளர்க்குக் கண்ணாக இருத்தலால் அத்தகைய பெரியவர் உறவை ஆய்ந்து தேடிக் கொள்ளுதல் வேண்டும். 445

6. **தக்கார் இனத்தனாய்த் தானொழுக வல்லானைச்**
செற்றார் செயக்கிடந்த தில்.

தகுதிவாய்ந்த பெரியவர் கூட்டத்தில் ஒருவனாக வாழும் வலிமை உடைய ஆட்சியாளனைப், பகைவர் செய்யக் கூடியதாய் அமைந்த கேடு எதுவும் இல்லை. 446

7. **இடிக்குந் துணையாரை ஆள்வாரை யாரே**
கெடுக்கும் தகைமை யவர்?

இடித்துத் திருத்தும் பெரியவரைத் தம்மவராகக் கொண்டு வாழ்கின்றவரைக் கெடுக்கும் வலிமை யுடையவர் எவரும் இலர். 447

8. **இடிப்பாரை யில்லாத ஏமரா மன்னன்**
கெடுப்பா ரிலானும் கெடும்.

குற்றங் கண்ட இடத்து இடித்துரைக்கும் பெரிய பாதுகாப்பைத் தேடிக் கொள்ளாத தலைவன், தனக்குப் பகைவர் இல்லை எனினும் கெட்டுப் போவான். 448

9. **முதலிலார்க் கூதியம் இல்லை; மதலையாம்**
சார்பிலார்க் கில்லை நிலை.

வைப்புத் தொகையான முதல் தொகை இல்லாதவர்க்கு அதன் வழியாக உண்டாகும் ஊதியத் தொகை இல்லை; அதுபோல் தளர்ச்சிக்குத் தாங்குதலாம் பெரியவர் துணை இல்லாதவர்க்கு நிலைபேறு இல்லை. 449

10. **பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே,**
நல்லார் தொடர்கை விடல்.

நல்லவர் ஒருவர் நட்பைக் கைவிட்டு விடுதல் பலபேரைப் பகைவராகத் தேடிக் கொள்வதிலும் பன்மடங்கு தீமையானதாகும். 450

46. சிற்றினம் சேராமை

(இழிகுணத்தினரைச் சேராதிருத்தல்)

1. **சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான்**
சுற்றமாச் சூழ்ந்து விடும்.

பெருந்தன்மையர் சிறுதன்மையரைக் கண்டு பழிக்கு அஞ்சி ஒதுங்கி விடுவர்; ஆனால், சிறு தன்மையரோ அத் தன்மையரைத் தம் சுற்றமாக இணைந்து கொள்வர். ***451***

2. **நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும்; மாந்தர்க்**
கினத்தியல்ப தாகும் அறிவு.

நிலத்தின் (நிறம், சுவை, மாசு ஆகிய) இயல்புக்குத் தக்கவாறு அதனைச் சார்ந்த நீரும் மாறிவிடும். அதுபோல், மாந்தர்க்கு அவர் சார்ந்த கூட்டத்திற்குத் தக்கவாறு அறிவு மாறிவிடும். ***452***

3. **மனத்தானாம் மாந்தர்க் குணர்ச்சி இனத்தானாம்**
இன்னான் எனப்படும் சொல்.

மக்களுக்கு உண்டாகும் உணர்ச்சி அவர் மனத்தைப் பொறுத்த தாகும்; ஒருவன் இத்தகையன் என்று சொல்லப் படுவதாம் பண்பு, அவன் சேர்ந்த கூட்டத்தைப் பொறுத்ததாகும். ***453***

4. **மனத்து ளதுபோலக் காட்டி, ஒருவற்**
கினத்துள தாகும் அறிவு.

ஒருவனுக்கு அவன் அறிவு அவன் மனத்தின் இயல்பினது என்னுமாறு தோற்றம் தரினும், அவன் சேர்ந்துள்ள கூட்டத்திற்குத் தக்கவாறே அமையும். ***454***

5. **மனம்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்**
இனம்தூய்மை தூவா வரும்.

ஒருவனுக்கு மனத்தில் உண்டாகும் தூய தன்மையும் செயலில் உண்டாகும் தூயதன்மையும் ஆகிய இரண்டும், அவன் சேர்ந்த கூட்டத்தின் தூயதன்மை தருவதால் வருவனவாம். ***455***

6. **மனம்தூயார்க் கெச்சம்நன் றாகும் இனம்தூயார்க்
கில்லைநன் றாகா வினை.**

மனத்தூய்மை யுடைவர்க்கு அவர் வைத்துச் செல்லும் புகழ், பொருள், மக்கள் முதலியனவும் நல்லதாக அமையும். அதுபோல் சேர்ந்த இனத்தின் தூய்மையுடைவர்க்கு நன்மை தாராத செயல் இல்லை. 456

7. **மனநலம் மன்னுயிர்க் காக்கம்; இனநலம்
எல்லாப் புகழும் தரும்.**

மக்கள் உயிர்க்கு மனத்தின் நல்ல தன்மை பெருவளமாகும்; அதனுடன் இனத்தின் நல்ல தன்மையும் சேரின், பெறத்தக்க எல்லாப் புகழையும் அவை தரும். 457

8. **மனநலம் நன்குடைய ராயினும், சான்றோர்க்
கினநலம் ஏமாப் புடைத்து.**

மனவளம் நல்லதாக அமைந்தவர் எனினும், பண்புமிக்க பெரியோர்க்கு அவர் சேர்ந்த நல்லோர் கூட்டுறவு மிகுந்த பாதுகாப்பானதாகும். 458

9. **மனநலத்தி னாகும் மறுமை;மற் றஃதும்
இனநலத்தின் ஏமாப் புடைத்து.**

ஒருவன் கொண்டுள்ள மனநலத்தினால் அவன் (வாழும் காலத்தன்றி) மறைந்த பின்னரும் புகழாம்; அப்புகழும் இனநலத்தொடும் கூடியிருப்பின் குடும்பத்திற்கு மிகப் பாதுகாப்புடையதாகும். 459

10. **நல்லினத்தி னூங்குந் துணையில்லை; தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉம் இல்.**

ஒருவனுக்கு நல்லவர் கூட்டத்தினும் மேலான துணையாவது இல்லை. அவ்வாறே தீயவர் கூட்டத்தினும் தொல்லைப் படுத்துவதும் இல்லை. 460

47. தெரிந்து செயல்வகை

(ஆராய்ந்து செயலாற்றும் வகை)

1. **அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல்.**

(ஒரு செயலைச் செய்யத் தொடங்குமுன்) அதனைச் செய்தால் உண்டாகும் கேட்டையும் நன்மையையும் தொடர்ந்து உண்டாகும் வருவாயையும் ஆராய்ந்து செய்தல் வேண்டும். **461**

2. **தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்
கரும்பொருள் யாதொன்றும் இல்.**

(எடுத்துக் கொள்ள இருக்கும் செயலைப்பற்றி) நன்கு தெரிந்த கூட்டத்தொடு ஆராய்ந்து, பலவகையாலும் தாமும் எண்ணிச் செய்பவர்க்குச் செய்தற்கு அரியது எதுவும் இல்லை. **462**

3. **ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார்.**

பின்னே பெரும் வருவாய் வரும் என எண்ணிக் கொண்டு, இருக்கும் முதற்பொருளையும் இழந்து விடும் செயலை அறிவுடையவர் செய்யமாட்டார். **463**

4. **தெளிவி லதனைத் தொடங்கார், இளிவென்னும்
ஏதப்பா டஞ்சு பவர்.**

இழிவு என்று சொல்லப்படும் குறைபாடு தமக்கு ஏற்படக் கூடாது என்று அஞ்சுகின்றவர், தமக்குத் தெளிவு இல்லாத செயலைச் செய்ய விரும்ப மாட்டார். **464**

5. **வகையறச் சூழா தெழுதல், பகைவரைப்
பாத்திப் படுப்பதோர் ஆறு.**

ஆராயும் வகைகளில் எல்லாம் ஆராயாமல் ஒரு செயலைச் செய்யத் தொடங்குவது, பகை என்னும் பயிரைப் பாத்திகட்டி வளர்ப்பதோர் வழியாகும். **465**

6. **செய்தக்க அல்ல செயக்கெடும்; செய்தக்க**
செய்யாமை யானும் கெடும்.

செய்யத் தக்க செயல்கள் அல்லாதவற்றைச் செய்தலால் கேடு உண்டாகும்; அவ்வாறே, செய்யத் தக்க செயல்களைச் செய்யாது விடுவதாலும் கேடு உண்டாகும். **466**

7. **எண்ணித் துணிக கருமம்; துணிந்தபின்**
எண்ணுவம் என்ப திழுக்கு.

எச்செயலை ஆயினும் செய்யத் தொடங்கு முன்னரே நன்றாக எண்ணிச் செய்தல் வேண்டும். அவ்வாறன்றிச் செய்யத் தொடங்கிய பின் எண்ணிக் கொள்ளலாம் என்பது தவறாகும். **467**

8. **ஆற்றின் வருந்தா வருத்தம், பலர்நின்று**
போற்றினும் பொத்துப் படும்.

ஒரு செயலைச் செய்யும் போதே முழுமையாக முயலாத முயற்சி, பின்னர்ப் பலபேர் துணையாக வந்து உதவினாலும் குறையுடையதாகவே அமையும். **468**

9. **நன்றாற்ற லுள்ளும் தவறுண் டவரவர்**
பண்பறிந் தாற்றாக் கடை.

ஒவ்வொருவர் இயல்பையும் அறிந்து அவர்க்குத் தக்கவாறு செயலாற்றுதல் வேண்டும். இல்லாவிட்டால், நன்மை செய்வது கூடத் தவறாகிவிடும். **469**

10. **எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும்; தம்மொடு**
கொள்ளாத கொள்ளா துலகு.

ஒருவர் தம்தகுதியொடு பொருந்தாத செயலைச் செய்வதை உயர்ந்தோர் ஏற்றுக் கொள்வது இல்லை; ஆதலால், தம் தகுதியொடு பொருந்திய இகழாத செயலைத் தெரிந்து செய்தல் வேண்டும். **470**

48. வலியறிதல்

(வலிமையை அறிதல்)

1. **வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்**
துணைவலியும் தூக்கிச் செயல்.

ஒரு செயலைச் செய்ய விரும்புபவன், தான் எடுத்துக் கொள்ளும் செயலின் வலிமையையும், செய்யும் தன் வலிமையையும், அதனை எதிர்ப்பவன் வலிமையையும், தனக்கும் அவனுக்குமாம் துணை வலிமையையும் ஆராய்ந்து செய்தல் வேண்டும். 471

2. **ஒல்வ தறிவ தறிந்ததன் கண்தங்கிச்**
செல்வார்க்குச் செல்லாத தில்.

தமக்குக் கூடும் செயலை, அறிய வேண்டிய வகையான் அறிந்து அச்செயற்பாட்டில் நிலைபெற ஊன்றிச் செய்யும் ஆற்றல் உடையவர்க்குச் செய்ய முடியாத செயல் இல்லை. 472

3. **உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி**
இடைக்கண் முரிந்தார் பலர்.

*தமக்கு உளதாகிய வலிமையை அறிந்து கொள்ளாமல் ஏதோ ஓர் மன எழுச்சியால் ஒரு செயலைத் தொடங்கி விட்டுப் பின்னர் இடையே கைவிட்டு விட்டவர் உலகில் பலராவர்.*473

4. **அமைந்தாங் கொழுகான், அளவறியான், தன்னை**
வியந்தான் விரைந்து கெடும்.

பலரோடும் ஒத்து நடவாதவ னாகவும், தன் தகுதியை அளவிட்டு அறியாதவ னாகவும், தன்னைப் பெரிதாக நினைத்துக் கொள்பவ னாகவும் இருப்பவன் விரைவில் கெட்டுப் போவான். 474

5. **பீலிபெய் சாகாடும் அச்சிறும், அப்பண்டம்**
சால மிகுத்துப் பெயின்.

மெல்லிய மயில்தோகையே எனினும் அதனை அளவுக்குமேல் வண்டியில் ஏற்றினால், வண்டியின் மிக வலிமையான அச்சும் ஒடிந்துவிடும்; (ஆதலால், எதனையும் அளவறிந்து செய்தல் வேண்டும்) 475

6. நுனிக் கொம்பர் ஏறினார் அஃதிறந் தூக்கின்
உயிர்க்கிறுதி யாகி விடும்.

மரத்தின் உச்சிக் கிளைக்கு ஏறியவர் அதற்குமேல் ஏறிச் செல்வார் என்றால், அஃது அவர் உயிர்க்கு முடிவை உண்டாக்கி விடும்; (ஆதலால், எதனையும் அளவறிந்து செய்தல் வேண்டும்) **476**

7. ஆற்றின் அளவறிந் தீக; அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி.

செய்யத்தக்க முறையால், தம் பொருளின் அளவை அறிந்து உதவுதல் வேண்டும்; அதுவே, பொருளுக்கு அழிவு வராமல் போற்றிக் கொண்டு பிறர்க்கு உதவும் முறையாகும். **477**

8. ஆகா றளவிட்டி தாயினும் கேடில்லை,
போகா றகலாக் கடை.

பொருள் செலவாகும் வழி விரிந்து விடாமல் இருக்குமானால், பொருள் வரும் வழி சிறிதாக இருந்தால் கூட, அதனால் கேடு எதுவும் இல்லை. **478**

9. அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.

தன்னிடத்துள்ளதாம் பொருளின் அளவை அறிந்து வாழாதவனின் வாழ்க்கை உள்ளது போலப் பளிச்சிட்டுக் காட்டி, இல்லாததாய் மறைந்து அழிந்து போகும். **479**

10. உளவரை தூக்காத ஒப்புர வாண்மை
வளவரை வல்லைக் கெடும்.

தம்மிடத்துள்ள பொருளின் அளவை அறிந்து பாராமல் ஒருவர் செய்யும் உதவித் தன்மையால், அவர் தம் பொருளின் அளவு மிக விரைவிலேயே அழிந்து போகும். **480**

49. காலம் அறிதல்

(ஏற்ற பருவம் அறிதல்)

1. **பகல்வெல்லும் கூகையைக் காக்கை; இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது.**

பகற்பொழுதில் காக்கை தன்னினும் வலிய கூகையையும் வென்றுவிடும்; ஆதலால், வெற்றி கொள்ள விரும்பும் ஆட்சியாளர் காலம் அறிந்து செயலாற்றுதல் வேண்டும். 481

2. **பருவத்தோ டொட்ட ஒழுகல், திருவினைத்
தீராமை ஆர்க்கும் கயிறு.**

காலத்தைச் செம்மையாக அறிந்து அதற்குத் தக்கவாறு செயலாற்றுதல், விரும்பும் வளங்களையெல்லாம் போக விடாமல் கட்டி நிறுத்தும் வரிகயிறு போல்வதாம். 482

3. **அருவினை என்ப உளவோ, கருவியான்
காலம் அறிந்து செயின்?**

செய்தற்குத் தகுந்த கருவிகளைத் தேர்ந்து காலத்தையும் அறிந்து ஒருவர் செயலாற்றினால் அவர்க்குச் செய்தற்கு அரிய செயல்கள் என்பவை உண்டோ? (இல்லை) 483

4. **ஞாலம் கருதினும் கைகூடும், காலம்
கருதி இடத்தால் செயின்.**

தகுந்த காலத்தை அறிந்து உரிய இடத்தையும் தெரிந்து செயலாற்றினால், இவ்வுலகம் முழுவதும் கொள்ளக் கருதினாலும் அது தவறாமல் கைகூடும். 484

5. **காலம் கருதி இருப்பர், கலங்காது
ஞாலம் கருது பவர்.**

உலகம் முழுவதையும் ஆளக் கருதுபவர், அதனை அடைதற்குரிய காலத்தைக் கருதித் தம் எண்ணம் வெளிப்படா வகையில் அமைந்திருப்பர். 485

6. **ஊக்க முடையான் ஒடுக்கம், பொருதகர்**
தாக்கற்குப் பேரும் தகைத்து.

மனவெழுச்சி மிக்கவன் தக்கபொழுது கருதிப் பின்தங்கியிருப்பது, போர்க்கடா வலுவாக முன்னேறித் தாக்குவதற்காகப் பின்வாங்கிச்செல்லும் தன்மையது போன்றதாம். 486

7. **பொள்ளென ஆங்கே புறம்வேரார், காலம்பார்த்**
துள்வேர்ப்பர் ஒள்ளி யவர்.

காலம் அறிந்த தேர்ச்சியாளர், பிறர் தீமை செய்யும் போதில் தம் வெம்மையை வெளிப்படக் காட்டாமல், சரியான காலத்தை நோக்கி உள்ளத்தே வெதும்புதலை அடக்கி வைத்திருப்பர். 487

8. **செறுநரைக் காணின் சுமக்க; இறுவரை**
காணின் கிழக்காம் தலை.

தன்னினும் வலிய பகைவரைக் கண்டால் அவரைத் தலைமேல் கொள்வதுபோல் பணிவுடன் காத்திருக்க, அவர்க்கு அழிவு எல்லை வரக்காணின், நிலைமை தலை கீழாகி விடும். 488

9. **எய்தற் கரிய தியைந்தக்கால்; அந்நிலையே**
செய்தற் கரிய செயல்.

கிடைத்தற்கு அரிய வாய்ப்பான பொழுது கிடைக்குமானால், அவ்வாய்த்த பொழுதிலேயே பிறர் செய்தற்கு அரிய செயல்களைச் செய்துவிடல் வேண்டும்.489

10. **கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்**
குத்தொக்க சீர்த்த இடத்து.

ஒரு செயலை நிறைவேற்றுவதற்கு முடியாத பொழுதில் கொக்கைப்போல அமைந்திருக்க வேண்டும்; நிறைவேற்றுவதற்கு வாய்ப்பான பொழுதில் அக்கொக்கு மீனைக் குத்தி எடுப்பது போல் விரைந்து செயலை முடித்துவிட வேண்டும். 490

50. இடனறிதல்

(ஏற்ற இடம் அறிதல்)

1. **தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்**
இடம்கண்ட பின்அல் லது.

முழுமையாக நிறைவேறத்தக்க இடம் கண்டால் அல்லாமல் எச்செயலையும் செய்யத் தொடங்காமை வேண்டும்; அன்றியும், அச்செயலை நிறைவேற்றல் எளிதென இகழாமையும் வேண்டும். 491

2. **முரண்சேர்ந்த மொய்ம்பி னவர்க்கும் அரண்சேர்ந்தாம்**
ஆக்கம் பலவும் தரும்.

பகையை அழித்தற்கு வேண்டிய மிக வலிமை உடையவர்க்கும் அவ்வலிமையோடு சிறந்த அரண் வலிமையும் சேருமாயின் அது, பலவகை நலங்களையும் உண்டாக்கும்.492

3. **ஆற்றாரும் ஆற்றி அடுப, இடனறிந்து**
போற்றார்கண் போற்றிச் செயின்.

தக்க இடத்தை அறிந்து, பகைவரிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொண்டு போரிடுவரெனின், வலிமை குறைந்தவரும் வலிமையுடன் பகைவரை அழிப்பர். 493

4. **எண்ணியார் எண்ணம் இழப்பர், இடனறிந்து**
துன்னியார் துன்னிச் செயின்.

தக்க இடத்தை அறிந்து அதனைப் பாதுகாப்பாகக் கொண்டு வலிமையாகச் செயலாற்றினால், அழிவு செய்ய எண்ணி வந்த பகைவரும் தம் எண்ணம் இழந்து போவர்.494

5. **நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்**
நீங்கின் அதனைப் பிற.

முதலை ஆழமான நீருள் இருந்தால், அதனினும் வலிய உயிரிகளையும் வெற்றி கொள்ளும்; ஆனால், அந்நீரைவிட்டு வெளியேறிவிடின், அதனினும் எளிய உயிரிகளும் அதனை வென்றுவிடும் (ஆதலால் இடமறிந்து செயலாற்றுதல் வேண்டும்) 495

6. **கடலோடா கால்வல் நெடுந்தேர்; கடலோடும்
நாவாயும் ஓடா நிலத்து.**

வலிய சக்கரங்களையுடைய பெரிய தேர்கள் கடலில் ஓடமாட்டா, கடலில் ஓடக்கூடிய கப்பல்களும் நிலத்தில் ஓடமாட்டா; (ஆதலால் இடமறிந்து செயலாற்றுதல் வேண்டும்) **496**

7. **அஞ்சாமை யல்லால் துணைவேண்டா; எஞ்சாமை
எண்ணி இடத்தால் செயின்.**

எண்ண வேண்டியவற்றைக் குறைவில்லாமல் எண்ணித் தக்க இடத்தொடு வினை செய்வரெனின், அஞ்சாமை என்னும் ஒரு தன்மையே அன்றி வேறு துணை வேண்டுவதில்லை. **497**

8. **சிறுபடையான் செல்லிடம் சேரின், உறுபடையான்
ஊக்கம் அழிந்து விடும்.**

பெரும் படையுடையவன் எனினும் போர் மேற்கொண்டு சிறிய படையுடையவன் இடத்திற்குச் செல்வான் எனின், அவன்படை ஊக்கம் கெட்டுப் போய்விடும். **498**

9. **சிறைநலனும் சீரும் இலரெனினும் மாந்தர்
உறைநிலத்தோ டொட்டல் அரிது.**

பாதுகாவல் நலமும் படைச்சிறப்பும் இல்லாதவரே எனினும் அப்பகை மாந்தர் நிலை பெற்று வாழும் இடத்தை நெருங்கிப் போர்க்குப் போதலும் அரிதாகும். **499**

10. **காலாழ் களரில் நரியடும்; கண்ணஞ்சா
வேலாழ் முகத்த களிறு.**

பாகரின் சினத்திற்கு அஞ்சாததும், பகைவரின் வேல் ஆழப்பதிந்ததும் ஆகிய முகத்தையுடைய யானை தன் கால் ஆழ்ந்து செல்லும் சேற்று நிலத்தில் புகுமானால், சிறிய நரியும் அதனை எளிதாகக் கொன்றுவிடும். (ஆதலால் இடமறிந்து செயலாற்றுதல் வேண்டும்) **500**

51. தெரிந்து தெளிதல்

(தக்காரை ஆராய்ந்து அலுவலில் அமர்த்துதல்)

1. **அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்**
திறம்தெரிந்து தேறப் படும்.

அறவழியில் நிலைபெறல், பொருள் வழியில் சாயாமை, இன்பவழியில் கோணாமை, தன்னுயிர்க்கு அச்சமின்மை என்னும் நான்கின் தன்மைகளும் தெரிந்து ஒருவனை அலுவலில் அமர்த்துதல் வேண்டும். 501

2. **குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்**
நாணுடையான் கட்டே தெளிவு.

நல்ல குடியில் பிறந்தவனாய்க் குற்றங்களில் நீங்கியவனாய்ப், பழிச்செயல் புரிய வருந்தி நாணுபவனாய் இருப்பவனையே அலுவலுக்குத் தக்கவனாகத் தெளிதல் வேண்டும். 502

3. **அரியகற் றாசற்றார் கண்ணும் தெரியுங்கால்**
இன்மை அரிதே வெளிறு.

பிறர் கற்பதற்கு அரிய நூல்களைக் கற்றுக் குற்ற மற்றவரிடத்தும், ஆராய்ந்து பார்க்கும்போது அறியாமை இல்லாதிருத்தல் அரிதாகும். (அத்தகையர் கிடைத்தாலும் உரிய வகையால் பயன்கொள்க) 503

4. **குணம்நாடிக் குற்றமும் நாடி, அவற்றுள்**
மிகைநாடி மிக்க கொளல்.

ஒருவனது நல்ல தன்மையை ஆராய்ந்து, தீய தன்மையையும் ஆராய்ந்து, அவ்விரண்டனுள் மிகுந்திருப்பதையும் ஆராய்ந்து மிகுந்ததற்குத் தக்கவாறு தெரிந்து பயன்கொளல் வேண்டும். 504

5. **பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்**
கருமமே கட்டளைக் கல்.

புகழுக்கும் அதற்கு எதிராம் பழிக்கும், அவரவர் செய்யும் செயலின் செம்மையும் செம்மை இல்லாமையுமே உரைகல்லாகும். 505

6. **அற்றாரைத் தேறுதல் ஓம்புக; மற்றவர்**
பற்றிலர்; நாணார் பழி.

நல்ல நெறி இல்லாரை அலுவலுக்கு ஆராய்ந்து கொள்ளுதலை விடுக. நெறியில்லாத அவர் நிலைத்த பற்றுதலும் இல்லார்; உலகத்தார் பழிப்புக்கும் வெட்கப் படார். **506**

7. **காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்**
பேதைமை எல்லாம் தரும்.

தமக்கு விருப்பமானவர் என்பதற்காக, அறிய வேண்டியவற்றை அறியாதவரை ஒரு செயலுக்குத் தேர்ந்து கொள்ளும் அறியாமை, மற்றை எல்லா அறியாமைகளையும் ஒருங்கே தந்து விடும். **507**

8. **தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை**
தீரா இடும்பை தரும்.

ஆராயாமலே அயலான் ஒருவனை ஒரு பொறுப்புக்குத் தெளிந்து வைத்தவன் செயல், அவனுக்கு மட்டுமன்றி அவன் மரபினர்க்கும் நீங்காத் துயர்தரும். **508**

9. **தேறற்க யாரையும் தேராது; தேர்ந்தபின்**
தேறுக தேறும் பொருள்.

எவரையும் ஆராயாமல் ஒரு செயலுக்குத் தெளிதல் கூடாது; தக்கார் எனத் தேர்ந்த பின்னரும் அவரைத் தேர்ந்தெடுத்த துறை வகைக்கே, அவர் தெளிவைக் கொள்ள வேண்டும். **509**

10. **தேரான் தெளிவும், தெளிந்தான்கண் ஐயுறவும்**
தீரா இடும்பை தரும்.

ஒருவனை ஆராயாமல் ஓர் அலுவலுக்குத் தெளிவு செய்வதும், தக்கான் எனத் தெளிவுபட்டவன் மேல், பின்னர் ஐயங் கொள்வதும் நீங்காத் துன்பம் தரும். **510**

52. தெரிந்து வினையாடல்

(அலுவல் செய்வாரை ஆராய்ந்து ஆளும் தன்மை)

1. **நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த**
தன்மையான் ஆளப் படும்.

இச்செயலை இவ்வாறு செய்தால் நன்மையும் இவ்வாறு செய்தால் தீமையும் உண்டாமென ஆராய்ந்து, நன்மையுண்டாம் முறையிலே செய்கின்றவனையே பயன்படுத்துதல் வேண்டும். 511

2. **வாரி பெருக்கி வளம்படுத் துற்றவை**
ஆராய்வான் செய்க வினை.

வருமானம் வரும் வழிகளைப் பெருக்கிப், பொருளை உண்டாக்கி, இவற்றின் பெருக்க சுருக்க வழிகளை ஆராயவல்ல திறத்தவனே, செயலாற்ற வல்லவன் ஆவன்.512

3. **அன்பறிவு தேற்றம் அவாவின்மை, இந்நான்கும்**
நன்குடையான் கட்டே தெளிவு.

அன்பும் அறிவும் தெளிவும் ஆசை இல்லாமையும் ஆகிய இந்த நான்கு இயல்புகளும் நன்றாக அமைந்தவன் இடத்தே, செயல் தெளிவும் உண்டாகி இருக்கும். 513

4. **எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்**
வேறாகும் மாந்தர் பலர்.

எத்தனை வழிகளால் ஆராய்ந்து தெளிந்த இடத்தும், செயலை மேற்கொண்டு செய்யும் நிலையில் வேறுபட்டு விடும் மாந்தர் பலராவர் (எந்நிலையிலும் விழிப்பாயிருத்தலே ஆளுந்தன்மை) 514

5. **அறிந்தாற்றிச் செய்கிற்பாற் கல்லால் வினைதான்**
சிறந்தானென் றேவற்பாற் றன்று.

செய்யும் செயலை நன்றாக அறிந்து, பொறுப்புடன் அதனைச் செய்யும் திறத்தவனை அல்லாமல் மற்றவனைச் சிறந்தவன் என எண்ணிச் செயலைச் செய்ய ஏவுதல் தகுதியன்று. 515

6. **செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோ
டெய்த உணர்ந்து செயல்.**

செயலைச் செய்ய வல்லவனை ஆராய்ந்து, செய்யும் செயலையும் ஆராய்ந்து, செய்யும் காலத்தொடும் பொருந்துமாறு ஆராய்ந்து செய்தல் வேண்டும். **516**

7. **இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்
ததனை அவன்கண் விடல்.**

இச்செயலை இவ்வகையால் இவன் சிறப்பாகச் செய்து முடிப்பான் என்பதை ஆராய்ந்து அச்செயலைச் செய்யுமாறு அவனிடத்து விடுதல் வேண்டும். **517**

8. **வினைக்குரிமை நாடிய பின்றை, அவனை
அதற்குரிய னாகச் செயல்.**

இச்செயலைச் செய்தற்குரிய தகுதியாளன் இவன் என்பதை ஆராய்ந்த பின்னர், அதனைச் செய்தற்கு முழுவதும் உரியவனாகச் செய்தல் வேண்டும். **518**

9. **வினைக்கண் வினையுடையான் கேண்மைவே றாக
நினைப்பானை நீங்கும் திரு.**

எடுத்த செயலே குறியாகச் செயலாற்ற வல்லவன் செயலுறவை, வேறுபட நினைக்கும் தலைவனை விடுத்து வளமை நீங்கும். **519**

10. **நாடோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு.**

செயலாற்ற வல்லவன் செம்மையிலேயே உலகின் செம்மை அடங்கியிருத்தலால், தலைவனாக இருப்பவன் செயலாற்றுபவனை நாள்தோறும் தவறாமல் ஆராய வேண்டும். **520**

53. சுற்றந் தழால்

(சுற்றத்தினரைப் பேணிக் கொள்ளுதல்)

1. **பற்றற்ற கண்ணும் பழமைபா ராட்டுதல்**
சுற்றத்தார் கண்ணே உள.

எத்தகைய தொடர்பும் அற்றுவிட்ட பொழுதும், பழைய தொடர்பை நினைத்துப் பேணுதல் நல்ல சுற்றத் தாரிடத்தே உண்டு. 521

2. **விருப்பறாச் சுற்றம் இயையின், அருப்பறா**
ஆக்கம் பலவும் தரும்.

எந்நிலையிலும் பற்றுதல் நீங்காத சுற்றம் ஒருவனுக்கு அமையுமானால் பலவகையாலும் வளர்ச்சி நீங்காத நலங்கள் பலவற்றையும் அது தரும். 522

3. **அளவளா வில்லாதான் வாழ்க்கை, குளவளாக்**
கோடின்றி நீர்நிறைந் தற்று.

சுற்றத்தினரோடு இரண்டறக் கலந்து அளவளாவுதல் இல்லாதவன் வாழ்க்கை, குளப் பரப்புக்குரிய கரை இல்லாமலே நீர் நிறைந்தாற் போன்றது. 523

4. **சுற்றத்தால் சுற்றப் படஒழுகல், செல்வந்தான்**
பெற்றத்தால் பெற்ற பயன்.

ஒருவன் தன் செல்வத்தைப் பெற்றதால், பெற்றதொரு பயன் யாதென்றால் அது, தன் சுற்றத்தினர் தன்னைச் சூழ்ந்திருக்குமாறு வாழ்தலாகும். 524

5. **கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின், அடுக்கிய**
சுற்றத்தால் சுற்றப் படும்.

கொடுத்தும் இனியவை கூறியும் வாழ்வு நடத்துவான் எனின், தொடர் தொடரான சுற்றத்தாரால் சூழ்ந்திருக்கப் படுவான். 525

6. **பெருங்கொடையான் பேணான் வெகுளி, அவனின்**
மருங்குடையார் மாநிலத் தில்.

பெருங்கொடையாளனாகவும் சீற்றத்தைச் சிறிதும் கொள்ளாதவனாகவும் ஒருவன் இருந்தால், அவனுக்கு ஒப்பான சுற்றத்தைக் கொண்ட ஒருவர் உலகில் இலர். 526

7. **காக்கை கரவா கரைந்துண்ணும்; ஆக்கமும்**
அன்னநீ ரார்க்கே உள.

காகம் தான்பெற்ற உணவைத் தனக்கென மறைத்துக் கொள்ளாமல் பிறவற்றையும் அழைத்துக் கூடியுண்ணும் அவ்வாறு சுற்றத்தினரைப் பேணும் தன்மையினர்க்கே செல்வமும் உண்டாகி இருக்கிறது. 527

8. **பொதுநோக்கான் வேந்தன், வரிசையா நோக்கின்**
அதுநோக்கி வாழ்வார் பலர்.

ஒருதலைவன் அனைவரையும் பொதுவகையால் மதியாமல் அவரவர் சிறப்பு வகையால் மதிப்பா னானால், அதனை மதித்து அவனை நெருங்கி வாழ்பவர் பலராவர். 528

9. **தமராகித் தற்றுறந்தார் சுற்றம், அமராமைக்**
காரணம் இன்றி வரும்.

தம்மவராக இருந்தும் ஒரு காரணத்தால் தம்மை நீங்கிச் சென்ற சுற்றத்தார், அக்காரணம் நீங்கிய போதில் மீளவும் வந்து சேர்வர். 529

10. **உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை, வேந்தன்**
இழைத்திருந் தெண்ணிக் கொளல்.

தன்னிடத்தில் இருந்து பிரிந்து சென்றவர் யாதோர் காரணத்தால் மீண்டும் தன்னிடம் வந்தால் தலைவனாவோன் வேண்டுமளவான் உதவி, பொறுமையாக ஆராய்ந்து உறவாகக் கொள்ள வேண்டும். 530

54. பொச்சாவாமை

(மறதி இல்லாமை)

1. **இறந்த வெகுளியின் தீதே, சிறந்த**
உவகை மகிழ்ச்சியிற் சோர்வு.

அளவுகடந்த இன்பத்தால் உண்டாகும் மகிழ்ச்சியில் தன்னை மறந்து செயலற்றுக் கிடப்பது, அளவு கடந்து சீற்றங் கொள்வதினும் மிக்க தீமையே ஆகும். 531

2. **பொச்சாப்புக் கொல்லும் புகழை, அறிவினை**
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு.

சிறந்த அறிவினையும் நிலைபெற்ற வறுமை அழித்து விடும்; அதுபோல், மறதி ஒருவனுக்குள்ள புகழையெல்லாம் கெடுத்துவிடும். 532

3. **பொச்சாப்பார்க் கில்லை புகழ்மை; அதுவுலகத்**
தெப்பால்நூ லோர்க்கும் துணிவு.

மறதியாய் இருப்பவர்க்குப் புகழ்ப்பேறு அறவே இல்லை; அது, உலகத்தின் எவ்வெவ்விடத்து நூல் வல்லார்க்கும் ஒரு முடிவாகும். 533

4. **அச்ச முடையார்க் கரணில்லை; ஆங்கில்லை**
பொச்சாப் புடையார்க்கு நன்கு.

அஞ்சி நடுங்குவார்க்கு எப்பாதுகாப்பும் பயன் ஆகாது; அதுபோல், மறதியாளர்க்கு எத்தகு நல்வாய்ப்பும் பயன் ஆகாது. 534

5. **முன்னுறக் காவா திழுக்கியான், தன்பிழை**
பின்னூ றிரங்கி விடும்.

தீமையொன்று வருவதற்கு முன்னரே காத்துக் கொள்ளத்தவறி மறந்தவன், தீமை வந்தபின்னே தன் குற்றத்திற்குப் பன்மடங்கு வருந்துமாறு ஆகிவிடும். 535

6. **இழுக்காமை யார்மாட்டும் என்றும், வழுக்காமை வாயின் அதுவொப்ப தில்.**

மறதி இல்லாமை எவரிடத்தும் எக்காலத்தும் தவறாமல் வாய்க்குமானால், அவர்க்கு அதனை ஒத்ததான நன்மை வேறு ஒன்றும் இல்லை. **536**

7. **அரியஎன் றாகாத இல்லைபொச் சாவாக் கருவியால் போற்றிச் செயின்.**

மறதி இல்லாமை என்னும் அரிய கருவியைக் கொண்டு, பேணிச் செயலாற்றினால், 'இது செய்தற்கு அரிய செயல்' என்று முடிக்க முடியாத செயல் எதுவும் இல்லை. **537**

8. **புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும்; செய்யா திகழ்ந்தார்க் கெழுமையும் இல்.**

சான்றோர்களால் புகழப்பட்ட நற்செயல்களை மறவாமல் செய்தல் வேண்டும்; அவ்வாறு செய்யாது மறந்தவர்க்கு, எக்காலத்தும் நன்மையாவது இல்லை. **538**

9. **இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக, தாம்தம் மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.**

ஒவ்வொருவரும் தாம்தாம் மகிழ்ச்சியால் பெருமிதம் கொண்டு கடமை மறக்கும் போது, கடமையைச் செய்யாமல் புறக்கணித்துக் கெட்டுப் போனவர்களை நினைவாராக. **539**

10. **உள்ளிய தெய்தல் எளிதுமன், மற்றுந்தான் உள்ளிய துள்ளப் பெறின்.**

ஒருவன் நினைக்கத் தக்கதை நினைந்து, அதனை மறவாது செய்வானானால், அவன் நினைத்தது நினைத்தவாறு எளிதில் நிறைவேறும். **540**

55. செங்கோன்மை

(செம்மையாக ஆளுந்தன்மை)

1. **ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை.**

நன்றாக ஆராய்ந்து ஒருபால் சாராது நடுவு நிலைமையுடன் எவரிடத்தும் தெளிவான செயலைச் செய்வதே செங்கோல் முறைமையாகும். 541

2. **வான்நோக்கி வாழும் உலகெல்லாம்; மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி.**

உலகத்து உயிர்கள் எல்லாமும் மழையை எதிர் பார்த்தே வாழும்; அதுபோல், குடிமக்கள் அனைவரும் தங்கள் ஆட்சியாளர் செங்கோன்மையை எதிர்பார்த்தே வாழ்வர். 542

3. **அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல்.**

அறவோர் இயற்றிய நூல்களுக்கும் அறநெறிச் செயற்பாடுகளுக்கும் அடிப்படைக் காரணமாய் நின்றது, ஒரு நாட்டை ஆள்கின்றவரின் செங்கோல் சிறப்பேயாகும். 543

4. **குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு.**

பெருநில முழுதாளும் ஆட்சியாளன் ஒருவன், தன் குடிகளைத்தழுவி ஆட்சி நடத்துவானேயானால் அவனது வழிகளைப் பின்பற்றி அவன் நாட்டினரே அன்றி உலகோரும் நிற்பர். 544

5. **இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட,
பெயலும் விளையுளும் தொக்கு.**

செங்கோல் முறைமை தவறாமல் ஆட்சி நடத்தும் ஆட்சியாளனது நாட்டில், பருவ மழையும் அது கொண்டு விளையும் விளைவும் தவறாமல் நிரம்பும். 545

6. **வேலன்று வென்றி தருவது, மன்னவன்**
கோலதூஉம் கோடா தெனின்.

ஒரு நாட்டை ஆள்வோனின் செங்கோன்மை தவறாது என்றால், அவன் படை அவனுக்கு வெற்றி தரவேண்டுவது இல்லை; செங்கோன்மையே வெற்றி தந்து விடும். **546**

7. **இறைகாக்கும் வையக மெல்லாம்; அவனை**
முறைகாக்கும் முட்டாச் செயின்.

ஆட்சி நடத்துபவனே உலகத்தை எல்லாம் காப்பவன்; அவன் செங்கோன்மை தவறாதவன் என்றால், அவனை அவன் செங்கோன்மையே காத்து விடும். **547**

8. **எண்பதத்தான் ஓரா முறைசெய்யா மன்னவன்**
தண்பதத்தால் தானே கெடும்.

காண வருவார்க்கு எளிதாகக் காண வாய்ப்புத் தந்து ஆராய்ந்து முறைமை செலுத்தாத ஆட்சியாளன், இரங்கத்தக்க அவன் செயலால் அவனாகவே கெட்டுப் போவான். **548**

9. **குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்**
வடுவன்று வேந்தன் தொழில்.

குடிகளைப் பிறர் துன்புறுத்தாமல் காத்துப் பேண வேண்டும் முறையால் பேணிக் குற்றம் செய்தாரைக் குற்றத்திற்குத் தகத் தண்டித்தல் ஆட்சியாளர்க்குக் குற்றமாகாது; கடமையாகும். **549**

10. **கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல், பைங்கூழ்**
களைகட் டதனோடு நேர்.

கொலைபோலும் கொடுமை செய்பவரை ஆட்சியாளன் தண்டித்தல், வளர்ந்து பயன் தரும் பயிரைக் கெடுக்கும் களையைப் பொறுப்புணர்ந்த உழவன் வெட்டுதற்கு ஒப்பானதாகும். **550**

56. கொடுங்கோன்மை

(கொடுமையாக ஆளுந்தன்மை)

1. **கொலை மேற்கொண்டாரின் கொடிதே அலைமேற்கொண்**
டல்லவை செய்தொழுகும் வேந்து.

குடிகளைத் துன்புறுத்துதலை மேற்கொண்டு, தீமைகளைச் செய்து வாழும் ஆட்சியாளன், கொலைத் தொழிலை மேற்கொண்ட கொடியவரினும் கொடியவனாவான். 551

2. **வேலொடு நின்றான் 'இடு' என் றதுபோலும்,**
கோலொடு நின்றான் இரவு.

ஆட்சியைக் கையிலே கொண்டு, முறைகேடாகக் குடிமக்களிடம் பொருள் கேட்கும் ஆட்சியாளன் செயல், கொலைக் கருவியைக் கையிலே கொண்டு வழிப்பறி செய்பவன் 'வைத்திருப்பதைக் கொடு' என்பது போன்றதாம். 552

3. **நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்**
நாள்தொறும் நாடு கெடும்.

ஒவ்வொரு நாளும் நாட்டின் நிலைமையை ஆராய்ந்து, அதனை நெறிப்படுத்தாத ஆட்சியாளனின் நாடு, நாள்தோறும் படிப்படியே எல்லா நலங்களும் இழந்து போகும். 553

4. **கூழும் குடியும் ஒருங்கிழக்கும், கோல்கோடிச்**
சூழாது செய்யும் அரசு.

செங்கோன்மை தவறி, ஆராய வேண்டியதை ஆராயாமல் ஆட்சி நடத்தும் அரசு, தன் நாட்டுக்கு இன்றியமையாத உணவு முதலாம் பொருள்களையும், பற்றாய குடிமக்களையும் ஒரு மொத்தமாக இழந்து போகும். 554

5. **அல்லற்பட் டாற்றா தழுதகண் ணீர்அன்றே**
செல்வத்தைத் தேய்க்கும் படை.

ஆட்சியாளரால் துன்புறுத்தப்பட்டு அதனை ஆற்றிக் கொள்ள வகை காணாமல் அழுவாரின் கண்ணீரே, அவ்வாட்சியாளரின் ஆட்சிச் செல்வத்தை அழிக்கும் படையாகும். 555

6. **மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை; அஃதின்றேல்
மன்னாவாம் மன்னர்க் கொளி.**

ஆள்பவர்க்கு நிலையான புகழ் ஆட்சியைத் தருவது, செம்மையான ஆட்சி முறையேயாம்; அவ்வாறு அமையாவிடின், ஆள்பவர்க்கு நிலையான புகழ் உண்டாகாது (பழியுண்டாம்) **556**

7. **துளியின்மை ஞாலத்திற் கெற்றற்றே வேந்தன்
அளியின்மை வாழும் உயிர்க்கு.**

மழைபெய்யாமை உலகத்திற்கு எத்தகைய கேடாகுமோ அத்தகைய கேடாகும், மக்கள் உயிர்க்கு ஆட்சியாளனின் அருளில்லாத் தன்மை. **557**

8. **இன்மையின் இன்னா துடைமை, முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின்.**

நெறிமுறைப்படி ஆட்சி செய்யாத ஆட்சியாளனின் ஆட்சியின் கீழ் வாழும் போதில் செல்வமுடைமை வறுமையிலும் வறுமையானது ஆகும். **558**

9. **முறைகோடி மன்னவன் செய்யின், உறைகோடி
ஒல்லாது வானம் பெயல்.**

அறமுறை மாறிய செயல்களை ஆட்சியாளன் செய்வான் எனின், அவன் நாட்டில் பருவ மழை பெய்தலும் இல்லாது ஒழியும். **559**

10. **ஆபயன் குன்றும்; அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின்.**

ஆட்சியாளன் முறையாக ஆட்சி நடத்தாவிடின், அவன் நாட்டிற்கு வரும் வருவாய் குறைந்துபோகும். உழவு நெசவு அமைச்சு அரசு ஓதல் வாணிகம் ஆகிய தொழில் வல்லாரும் தம் தொழில் முறையை மறந்து விடுவர். **560**

57. வெருவந்த செய்யாமை

(அஞ்சத் தக்க செயல்களைச் செய்யாமை)

1. **தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங் கொறுப்பது வேந்து.**

குற்றம் செய்தவரைத் தக்க முறையில் ஆராய்ந்து ஒருதலைச் சார்பாகச் செல்லாத தன்மையால், குற்றத்திற்கு ஏற்ற வகையில் தண்டிப்பது அரசாகும். **561**

2. **கடிதோச்சி மெல்ல எறிக, நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர்.**

பெற்றுள்ள பொறுப்பான வாய்ப்பு, நெடுங்காலம் தம்மை விட்டு நீங்காமல் இருக்க விரும்புபவர், குற்ற முடையாரைக் கடுமையாகத் தண்டிப்பதுபோல் அஞ்சச் செய்து, மெல்லியதாகத் தண்டித்தல் வேண்டும். **562**

3. **வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயின்
ஒருவந்தம் ஒல்லைக் கெடும்.**

குடிமக்கள் அஞ்சத்தக்க செயல்களைச் செய்கின்ற கொடிய ஆட்சியாளன் என்று ஆயினால் அவன் ஆட்சி முழுமையாக விரைவில் கெட்டொழியும். **563**

4. **இறைகடியன் என்றுரைக்கும் இன்னாச்சொல் வேந்தன்
உறைகடுகி ஒல்லைக் கெடும்.**

எங்கள் ஆட்சியாளன் கடுமையாளன் என்று மக்கள் உரைக்கும் கடுஞ் சொல்லால், ஆள்வோன் ஆளுங்காலம் குறைந்துவிட விரைவில் கெடுவான். **564**

5. **அருஞ்செவ்வி இன்னா முகத்தான் பெருஞ்செல்வம்
பேஎய்கண் டன்ன துடைத்து.**

காணுதற்கு முடியாதவனாகவும் ஒருவேளை காணுங்கால் இனிமையற்ற முகத்தனாகவும் இருப்பவனின் பெரிய செல்வம், வெறி கொண்ட பேயன் பெற்ற செல்வம் போன்றது (பேம்-அச்சம்; அச்சமூட்டும் தோற்றமும் புனைவும் கொண்டு திரிபவனே பேய்) **565**

6. **கடுஞ்சொல்லன் கண்ணில னாயின், நெடுஞ்செல்வம்**
நீடின்றி ஆங்கே கெடும்.

கடுஞ்சொல் சொல்பவனாகவும் அருள் இல்லாதவனாகவும் இருப்பான் எனின், அவன் அளவிலாச் செல்வம் நெடுங்காலம் தொடர்தல் இல்லாமல் உடனே அழியும். 566

7. **கடுமொழியும் கையிகந்த தண்டமும் வேந்தன்**
அடுமுரண் தேய்க்கும் அரம்.

கடுமையான சொல்லும், வரம்பு கடந்த தண்டனையும், ஆட்சியாளனின் வலிய ஆற்றல் என்னும் இரும்பினை, எளிதாகத் தேய்த்து அழிக்கும் அரம்போல்வன ஆகும். 567

8. **இனத்தாற்றி எண்ணாத வேந்தன் சினத்தாற்றிச்**
சீறின் சிறுகும் திரு.

தன் அரசியல் சுற்றத்தோடு பொறுமையாக ஒன்றை ஆராய்ந்து பாராத ஆட்சியாளன், தன் சினத்தின் வழியே வந்த சீற்றத்தொடு செயலாற்றினால், அவன் ஆக்கம் குன்றும். 568

9. **செருவந்த போழ்தில் சிறைசெய்யா வேந்தன்**
வெருவந்து வெய்து கெடும்.

முன்னரே தக்க பாதுகாப்பைத் தேடிக் கொள்ளாத ஆட்சியாளன், பகை எதிரிடவந்த பொழுதில் மிக அஞ்சி விரைந்து கெடுவான். 569

10. **கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல், அதுவல்ல**
தில்லை நிலக்குப் பொறை.

கடுமையான ஆட்சியானது அஞ்சத் தக்கவற்றைச் செய்யாதிருக்கும் தன்மையை அறியாதவரைச் சுற்றமாகக் கொள்ளும். அத்தகைய ஆட்சியல்லது பிறிதொரு பெரும் பாரம் நிலத்திற்கு இல்லை. 570

58. கண்ணோட்டம்

(பழந் தொடர்பால் ஒத்துப்போகும் தன்மை)

1. **கண்ணோட்ட மென்னும் கழிபெருங் காரிகை**
உண்மையான் உண்டிவ் உலகு.

கண்ணோட்டம் என்று சொல்லப் படுவதாகிய மிகப் பெரிய நன்மை இருப்பதால்தான், இந்த உலகம் அழிந்து படாமல் வாழ்ந்து கொண்டுள்ளது. 571

2. **கண்ணோட்டத் துள்ள துலகியல்; அஃதிலார்**
உண்மை நிலக்குப் பொறை.

உலக நடைமுறைகள் எல்லாமும் கண்ணோட்டத்திலே தான் உள்ளது; அக்கண்ணோட்டமில்லாதவர், உயிரோடு இருப்பது புவிக்குப் பாரமாகும். 572

3. **பண்என்னாம் பாடற் கியைபின்றேல்; கண்என்னாம்**
கண்ணோட்டம் இல்லாத கண்.

பாடலொடு பொருந்தியமையாத இசையால் என்ன பயன்? அது போல், கண்ணோட்டத்தொடு பொருந்தி-யமையாத கண்ணாலும் கண்ணின் பயன் என்னவாம்? (ஒன்றும் இல்லை) 573

4. **உளபோல் முகத்தெவன் செய்யும், அளவினால்**
கண்ணோட்டம் இல்லாத கண்?

காட்ட வேண்டிய அளவில் கண்ணோட்டத்தைக் காட்டுதல் இல்லாத கண், முகத்தில் உள்ளது போல் இருப்பினும் அது எந்த நன்மையைச் செய்யும்; (எந்த நன்மையும் செய்யாது). 574

5. **கண்ணிற் கணிகலம் கண்ணோட்டம், அஃதின்றேல்**
புண்ணென் றுணரப் படும்.

கண்ணுக்கு அமைந்த அணிகலமாவது கண்ணோட்டம் காட்டுதலே ஆகும்; அக்கண்ணோட்டம் இல்லையானால் அது கண் ஆகாது; புண் என்றே உணர்ந்து கொள்ளப்படும். 575

6. **மண்ணோ டியைந்த மரத்தனையர், கண்ணோ**
டியைந்துகண் ணோடா தவர்.

கண்ணோடு பொருந்திய கண்ணோட்டத் தன்மை இல்லாதவர் மண்ணோடு பொருந்தியிருந்தாலும் (இயக்க மில்லாத) மரத்திற்கு ஒப்பானவர் ஆவர். 576

7. **கண்ணோட்டம் இல்லவர் கண்ணிலர்; கண்ணுடையார்**
கண்ணோட்டம் இன்மையும் இல்.

கண்ணோட்டப் பண்பு இல்லாதவர் கண்ணிருந்தும் கண் இல்லாதவரே; அவர் கண்ணுடையவர் எனின், அவரிடம் கண்ணோட்டம் இல்லாமல் இராது (உண்டு). 577

8. **கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்**
குரிமை யுடைத்திவ் உலகு.

தாம் எடுத்துக் கொண்ட செயற்பாட்டில் தவறாமல் கண்ணோட்டம் செலுத்தவல்ல திறம் வாய்ந்தவர்க்கு, உலக நன்மை அனைத்தும் உரிமை உடையதாகும். 578

9. **ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணும், கண்ணோடிப்**
பொறுத்தாற்றும் பண்பே தலை.

தண்டித்தே தம் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளும் தன்மை உடையவரிடத்தும், கண்ணோட்டத்துடன் பொறுத்துக் கொண்டு தம் கடமையை நிறைவேற்றும் பண்பு தலை சிறந்ததாகும். 579

10. **பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர், நயத்தக்க**
நாகரிகம் வேண்டு பவர்.

பலரும் பாராட்டத்தக்க கண்ணோட்டத்தைத் தம்மிடத்து விரும்புபவர், தொடர்புடையவர் தம் கண்ணெதிரில் நஞ்சை விட்டுத் தரக் கண்டும் அதை உண்டு மாறுபடாது இருப்பர். 580

59. ஒற்றாடல்

(நாட்டு நடப்புகளை உளவுகண்டு உரைக்கும் ஒற்றைப் பயன்படுத்துதல்)

1. **ஒற்றும் உரைசான்ற நூலும், இவையிரண்டும்
தெற்றென்க மன்னவன் கண்.**

ஒற்றறிபவர், புகழ் வாய்ந்த அறநூல் ஆகிய இரண்டையும் ஆட்சியாளன் தன்னிரண்டு கண்களாகத் தெளிந்து கொள்ள வேண்டும். 581

2. **எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை, எஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் தொழில்.**

நாட்டினர் எல்லாரிடத்தும் நிகழ்கின்ற நிகழ்ச்சிகளை யெல்லாம் எப்போதும் உடனுக்குடன் ஒற்றரால் எவர்க்கும் முற்பட அறிதல் ஆட்சியாளன் கடமையாம். 582

3. **ஒற்றினான் ஒற்றிப் பொருள்தெரியா மன்னவன்
கொற்றம் கொளக்கிடந்த தில்.**

ஒற்றரைக் கொண்டு உளவறிந்து உண்மை உணராத ஆட்சியாளன், வெற்றியடையும் படியாக அமைந்த வாய்ப்பு வேறு இல்லை. 583

4. **வினைசெய்வார் தம்சுற்றம் வேண்டாதார் என்றாங்
கனைவரையும் ஆராய்வ தொற்று.**

அலுவல் புரிவார், தம் சுற்றத்தார், தம் பகைவர் என்னும் அனைவரையும் ஆராய்ந்து உண்மை காண்பதே ஒற்றாடல் முறையாகும். 584

5. **கடாஅ உருவொடு கண்ணஞ்சா தியாண்டும்
உகாஅமை வல்லதே ஒற்று.**

பிறர் ஐயப்படாத உருவத்தொடு, அச்சம் இல்லாமல் எவ்விடத்தும் தான் உள்ளத்துக் கொண்டுள்ள கருத்தை வெளிப்படுத்தாமல், ஆராயும் திறமுடையவனே ஒற்றனாவன். 585

6. **துறந்தார் படிவத்த ராகி, இறந்தாராய்ந்**
தென்செயினும் சோர்விலது ஒற்று.

துறவோரின் வேடத்தை உடையவராகிச் செல்ல முடியாத இடங்களுக்கும் சென்று ஆராய்ந்து, அங்கு எத்தகு இன்பு துன்பு உண்டாயினும் கடமை தவறாதவர் ஒற்றராவர். 586

7. **மறைந்தவை கேட்கவற் றாகி, அறிந்தவை**
ஐயப்பா டில்லதே ஒற்று.

மறைவாகப் பிறர் செய்தவற்றைக் கேட்கும் திறனுடையவராய், அவ்வாறு அறிந்தவற்றையும் ஐயமில்லாமல் தெளிவு செய்து கொள்பவராய் அமைபவரே ஒற்றராவர். 587

8. **ஒற்றொற்றித் தந்த பொருளையும், மற்றுமோர்**
ஒற்றினால் ஒற்றிக் கொளல்.

ஒற்றன் ஒருவன் உளவறிந்து உரைத்த செய்தியையும் மற்றுமோர் ஒற்றனைக் கொண்டு தீர அறிந்து ஆட்சியாளன் ஒப்பிட்டு அறிந்து கொள்ளல் வேண்டும். 588

9. **ஒற்றொற் றுணராமை ஆள்க, உடன்மூவர்**
சொற்றொக்க தேறப் படும்.

ஓர் ஒற்றனை மற்றோர் ஒற்றன் அறியமுடியாதவாறு இயக்குதல் வேண்டும். அத்தகைய ஒற்றர் மூவர் சொல்வன ஒன்றுபோல் இருக்குமானால், அதனைக் கொள்ளல் வேண்டும். 589

10. **சிறப்பறிய ஒற்றின்கண் செய்யற்க; செய்யின்**
புறப்படுத்தா னாகும் மறை.

ஓர் ஒற்றனுக்குச் செய்யும் சிறப்பைப் பிறர் அறியுமாறு செய்தல் கூடாது. பிறர் அறியச் சிறப்புச் செய்யின், கமுக்கமாக இருக்க வேண்டும் செய்தியை வெளிப்படுத்தியதாகி விடும். 590

60. ஊக்கமுடைமை

(செய்யும் செயற்பாட்டில் மனஎழுச்சி யுடையவராக இருத்தல்)

1. **உடைய ரெனப்படுவ தூக்கம்; அஃதிலார்**
உடைய துடையரோ மற்று?

ஒருவர் ஒன்றை உடையவர் எனின், அவர் ஊக்கத்தை உடையவரே; அவ்வூக்கம் இல்லாதவர், மற்றை எவற்றை உடையவராயினும் உடையவர் ஆவரோ? (ஆகார்) 591

2. **உள்ளம் உடைமை உடைமை; பொருளுடைமை**
நில்லாது நீங்கி விடும்.

ஊக்கம் உடைமையே நிலையான உடைமையாகும்; பொருளுடைமையோ, நிலைபெறலின்றி நீங்கிப் போகும். 592

3. **'ஆக்கம் இழந்தே'மென் றல்லாவார், ஊக்கம்**
ஒருவந்தம் கைத்துடை யார்.

ஊக்கத்தை உறுதியான கைப் பொருளாக உடையவர். 'எம் செல்வத்தை இழந்து விட்டோம்' என்று வருந்திக் கூறும் நிலைக்கு ஆட்படார். 593

4. **ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும்; அசைவிலா**
ஊக்க முடையா னுழை.

தளராத ஊக்கம் உடையவனிடத்துச் சேரும் வழிகேட்டுச் செல்வம் தானே வந்து சேரும். 594

5. **வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்**
உள்ளத் தனைய துயர்வு.

நீர்ப்பெருக்கின் அளவிற்குத் தகுந்தவாறு நீர்ப்பூவின் தண்டின் நீளம் அமையும்; அதுபோல், மாந்தரின் ஊக்கத்தின் அளவுக்குத் தக்கவாறு உயர்வு அமையும். 595

6. **உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்; மற்றது**
தள்ளினும் தள்ளாமை நீர்த்து.

நினைப்பவற்றை எல்லாம் உயர்ந்தவையாய் நினைக்க வேண்டும்; உடனே நிறைவேறாவிடினும் விடாமல் மேற்கொள்ள வேண்டிய பெருமையுடையவை அவை. 596

7. **சிதைவிடத் தொல்கார் உரவோர்; புதையம்பிற்**
பட்டுப்பா டூன்றும் களிறு.

அம்பு தன் உடலில் ஆழப் புகுந்தாலும் அதைத் தாங்கித் தன் கடமையில் சோராமல் ஊன்றி நிற்கும் யானை; அதுபோல், ஊக்கமுடையார் தமக்கு அழிவு வருமிடத்தும் சிறிதும் கடமையில் சோர்வடையார். 597

8. **உள்ளம் இலாதவர் எய்தார், உலகத்து**
'வள்ளியம்' என்னும் செருக்கு.

பரந்த உலகில், 'யாம் கொடைத் தன்மை உடையேம்' என்னும் பெருமையை, ஊக்கமில்லாதவர் என்றும் அடையமாட்டார். 598

9. **பரியது கூர்ங்கோட்ட தாயினும், யானை**
வெரூஉம் புலிதாக் குறின்.

உடல் பெரியதாகவும், கூர்மையான கொம்பு உடையதாகவும் யானை இருப்பினும் (இவ்விரண்டும் இல்லாத) புலி ஊக்கமாகத் தாக்கும்போது அஞ்சி வெருண்டு விடும். 599

10. **உரமொருவற் குள்ள வெறுக்கை; அஃதில்லார்**
மரம்; மக்க ளாதலே வேறு.

ஒருவனுக்கு உள்ளத்தில் உள்ளதாகிய பெருவளம் ஊக்கமேயாம்; அதனை இல்லாதவர் மரம் போல்வர்; மக்கள் என்னும் பெயரும் வடிவமுமே வேறுபாடு ஆகும். 600

61. மடியின்மை

(சோம்பல் இல்லாமை)

1. **குடியென்னும் குன்றா விளக்கம், மடியென்னும்
மாசூர மாய்ந்து கெடும்.**

குடி என்று சொல்லப்படும் அணையாத ஒளிவிளக்கு, சோம்பல் என்று சொல்லப்படும் திரிக் கருக்கு உண்டாகிப் பரவுவதால் அழிந்துவிடும். **601**

2. **மடியை மடியா ஒழுகல், குடியைக்
குடியாக வேண்டு பவர்.**

தாம் பிறந்த குடி பெருமை மிக்க குடியாக வேண்டும் என்று விரும்புபவர், சோம்பலைச் சோம்புமாறு செய்யும் முயற்சியாளராக நடத்தல் வேண்டும். **602**

3. **மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த
குடிமடியும் தன்னினும் முந்து.**

அழிவு செய்யும் சோம்பலைத் தன்னிடத்துக் கொண்டு செயலற்றுக் கிடக்கும் அறிவிலி பிறந்த குடி, அவன் அழியும் முன்னரே அழிந்து விடும். **603**

4. **குடிமடிந்து குற்றம் பெருகும்; மடிமடிந்து
மாண்ட உஞற்றி லவர்க்கு.**

அழிவு செய்யும் சோம்பலில் ஆழ்ந்து, சிறந்தவற்றைச் செய்தல் இல்லாதவரின், குடும்பம் அழிவதுடன் குற்றமும் பெருகும். **604**

5. **நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன்.**

செயலாற்றுதலில் கால நீட்டிப்பு, மறதி, சோம்பல், மிகுந்த உறக்கம் என்னும் நான்கும், அழிந்து போகும் தன்மையாளர், விரும்பி அணியும் அணிகலங்கள் ஆகும். **605**

6. **படியுடையார் பற்றமைந்தக் கண்ணும் மடியுடையார்**
மாண்பயன் எய்தல் அரிது.

நாடாளும் பெருமக்களின் நல்ல தொடர்பு வாய்த்தது எனினும், சோம்பலுடையவர் சிறந்த பயனடைதல் இல்லை. **606**

7. **இடிபுரிந் தெள்ளும்சொல் கேட்பர், மடிபுரிந்து**
மாண்ட உஞற்றி லவர்.

சோம்பிக் கிடந்து சிறந்த செயல்களைச் செய்யாதவர், பலப் பலரும் இடித்துக் கூறி இகழுஞ் சொற்களைக் கேட்பவராவார். **607**

8. **மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்**
கடிமை புகுத்தி விடும்.

சோம்பல் ஒருவன் குடும்பத்தில் நிலைபெறத் தங்கினால், அது அவன் குடும்பத்தொடு பகைவர்க்கு அடிமையாகப் புகுமாறு செய்துவிடும். **608**

9. **குடியாண்மை யுள்வந்த குற்றம், ஒருவன்**
மடியாண்மை மாற்றக் கெடும்.

குடியை ஆளுந் தன்மையில் குற்றம் உண்டாயினும், அக்குடியில் ஒருவன் பெற்ற அச்சோம்பலின் ஆட்சியை நீக்க அக்குற்றம் நீங்கும். **609**

10. **மடியிலா மன்னவன் எய்தும், அடியளந்தான்**
தாஅய தெல்லாம் ஒருங்கு.

(புனைந்துரைப்போர் கூறுமாறு) தன் அடியால் அளந்தவன் தாவிப் பற்றிய உலகப் பரப்பை எல்லாம் சோம்பல் இல்லாத ஆட்சியாளன், (இரந்து பெறுதல் இன்றித்) தன் முயற்சியாலே அடைவான். **610**

62. ஆள்வினையுடைமை

(முயற்சியுடைமை)

1. **அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்;**
பெருமை முயற்சி தரும்.

இச்செயலைச் செய்து முடித்தல் எமக்கு அரிது என்று எண்ணித் தளராமை வேண்டும்; அவ்வாறாயின் அதனை முடித்தற்குத் தக்க வலிமையை முயற்சி உண்டாக்கும். 611

2. **வினைக்கண் வினைகெடல் ஓம்பல்; வினைக்குறை**
தீர்ந்தாரின் தீர்ந்தன் றுலகு.

எடுத்த செயலை நிறைவேற்றாமல் அரை குறையாய் விட்டவரை உலகம் நினைவு கொள்ளாமல் விட்டுவிடும்; ஆதலால், எடுத்த செயலில் இடையறவு படாமல் முயலுதல் வேண்டும். 612

3. **தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே**
வேளாண்மை என்னும் செருக்கு.

பிறர்க்கு உதவுதல் என்னும் பெருமிதம், இடைவிடா முயற்சி என்று சொல்லப்படும் உயர்ந்த தன்மையிலேயே அடங்கியுள்ளது. 613

4. **தாளாண்மை இல்லாதான் வேளாண்மை, பேடிகை**
வாளாண்மை போலக் கெடும்.

முயற்சியில்லாதவன் செய்ய நினைக்கும் உதவி, எதற்கும் அஞ்சும் கோழை ஒருவன் தன் கையில் கொண்ட படைக்கலம் போலச் செயலின்றி ஒழியும். 614

5. **இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்**
துன்பம் துடைத்தூன்றும் தூண்.

இன்பத்தை விரும்பாதவனாய்ச் செயலாற்றுதலை விரும்புபவன் எவனோ அவன், தன் உறவினர் துன்பத்தை அகற்றி நிலைபெறத் தாங்கும் தூண் போல்வான். 615

6. **முயற்சி திருவினை யாக்கும்; முயற்றின்மை இன்மை புகுத்தி விடும்.**

முயற்சி பலவகைச் செல்வங்களையும் தரும்; முயற்சி செய்யாமை, இல்லாமை என்னும் வறுமைக்குள் தள்ளி விடும். **616**

7. **மடியுளாள் மாமுகடி என்ப; மடியிலான் தாளுளாள் தாமரையி னாள்.**

சோம்பலில் கரிய முக்காட்டாள் உள்ளாள் என்றும், சோம்பல் இல்லாதவன் முயற்சியிலே ஒளியுடைய மலர்ச்சியினாள் உள்ளாள் என்றும் தெளிந்தோர் கூறுவர். (சோம்பலை முகடி என்றும், முயற்சியைத் தாமரையாள் என்றும் கூறுவது மரபு) **617**

8. **பொறியின்மை யார்க்கும் பழியன் றறிவறிந் தாள்வினை இன்மை பழி.**

உடல் உறுப்புகள் குறையுடையதாக அமைதல் எவர்க்கும் பழியாகாது; அறிய வேண்டியவற்றை அறிந்து முயற்சி இல்லாதிருத்தலே பழியாகும். **618**

9. **தெய்வத்தான் ஆகா தெனினும், முயற்சிதன் மெய்வருத்தக் கூலி தரும்.**

இயற்கைச் சூழலால் ஒரு செயல் நிறைவேறுதல் அரிது எனினும், முயற்சி தன் உடலை வருத்திப் பாடுபட்ட அளவுக்குரிய கூலியைத் தரும். **619**

10. **ஊழையும் உப்பக்கம் காண்பர், உலைவின்றித் தாழா துஞற்று பவர்.**

கலக்கம் இல்லாமல் சிறிதும் காலம் கடத்தாமல் செயலாற்றுகின்றவர், உலகத்து இயற்கையால் உண்டாகும் எதிரீட்டையும் புறங்கண்டு வெற்றி கொள்வர். **620**

63. இடுக்கண் அழியாமை

(துன்பம் கண்டு துவளாமை)

1. **இடுக்கண் வருங்கால் நகுக; அதனை**
அடுத்தூர்வ தஃதொப்ப தில்.

துன்பம் வரும் போது அதனைக் கண்டு புன்முறுவல் புரிக; அத் துன்பத்தை நெருங்கி அதன் மேலேறி ஊர்ந்து சென்று வெல்லவல்லது வேறொன்றுமில்லை. **621**

2. **வெள்ளத் தனைய இடும்பை, அறிவுடையான்**
உள்ளத்தின் உள்ளக் கெடும்.

வெள்ளம் பெருகி வருவது போலத் துயர் பெருகி வந்தாலும், அறிவுடையவன் தன் உறுதிமிக்க உள்ளத்தில் நினைத்த அளவில் அது அழியும். **622**

3. **இடும்பைக் கிடும்பை படுப்பர், இடும்பைக்**
கிடும்பை படாஅ தவர்.

துன்பம் வருத்த வரும்போது அதனை எண்ணித் துன்பப் படாதவர், தம்மை வருத்த வந்த துன்பத்துக்கே துன்பம் உண்டாக்குவர் (துன்பத்தை அழிப்பர்) **623**

4. **மடுத்தவா யெல்லாம் பகடன்னான் உற்ற**
இடுக்கண் இடர்ப்பா டுடைத்து.

தடையுண்டாகிய பொழுதெல்லாம் வலிய எருது போன்ற உறுதியுடையவனை அடைந்த துன்பம், துன்பப்படுதல் உடையது (துன்பம் துணிவாளனை ஒன்றும் செய்யாது) **624**

5. **அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற**
இடுக்கண் இடுக்கட் படும்.

தொடர் தொடராகத் துன்பம் வந்தாலும், அதனை எண்ணி வருந்தாதவனை அடைந்த துன்பம், துன்பப் படுதல் உடையது. (துன்பம் ஒன்றும் செய்யாது) **625**

6. **'அற்றே'மென் றல்லற் படுபவோ, பெற்றேமென்**
றோம்புதல் தேற்றா தவர்.

வளங்களைப் பெற்றேம் என்று அவற்றைப் பேணி மகிழ்வு கொள்ளாதவர், அவற்றை இழக்க நேரும் போது 'இழந்தேம்' என்று அல்லல் அடைவரோ? (அடையார்!)
626

7. **இலக்கம் உடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக்**
கையாறாக் கொள்ளதாம் மேல்.

• 'துன்பம் என்னும் கருவி தாக்கும் இலக்கு இவ்வுடம்பு' என்று கலக்கங் கொள்வதைக், கடைப்பிடிக்கும் வழியாக மேன்மக்கள் கொள்ளார். **627**

8. **இன்பம் விழையான், இடும்பை இயல்பென்பான்**
துன்பம் உறுதல் இலன்.

இன்பத்தை விரும்பாதவனாய்த் துன்பம் தொடர்தலை இயற்கை என்பவனாய் இருப்பவன் எந்நிலையிலும் துன்பம் அடையமாட்டான். **628**

9. **இன்பத்துள் இன்பம் விழையாதான், துன்பத்துள்**
துன்பம் உறுதல் இலன்.

இன்பம் வரும் போதில் இன்பம் என்று அதனை விரும்பாதவன் துன்பம் வரும் போதில் துன்பம் அடையமாட்டான். **629**

10. **இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகும்தன்**
ஒன்னார் விழையும் சிறப்பு.

தனக்கு வரும் துன்பத்தை இன்பம் எனக் கொள்வான் எனின், அதனால் அவன் பகைவரும் விரும்பக் கூடிய மதிப்பு அவனுக்கு உண்டாகும். **630**

64. அமைச்சு

(மந்திரியின் குணச் செயல்கள்)

1. **கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்ட தமைச்சு.**

ஒரு செயலைச் செய்தற்குரிய கருவியும், அதனைச் செய்தற்கு ஏற்ற காலமும், செய்யும் செயலும், அச்செயலைச் செய்யும் அரிய செயல் திறமும், சிறந்து விளங்குபவன் அமைச்சன். 631

2. **வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு.**

செய்யும் செயலில் உறுதிப்பாடு, குடிகளைக் கலங்காது காத்தல், கற்பன கற்றல், உலகியல் அறிவு மிகுதல், முயற்சி ஆகிய ஐந்தும் சிறப்பாக அமைந்தவன் அமைச்சன். 632

3. **பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்ல தமைச்சு.**

ஆட்சியின் நலத்துக்காகப் பிரிக்க வேண்டுவாரைப் பிரித்தல், துணையாக உள்ளவரைப் பேணிக் காத்துக் கொள்ளல், பிரிந்து சென்றவர்களில் தக்காரை மீண்டும் இணைத்துக் கொள்ளல் ஆகியவற்றில் வல்லவன் அமைச்சன். 633

4. **தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு.**

செய்யத் தக்கதைத் தேர்ந்தெடுத்தலும், அதனை ஆராய்ந்து செய்தலும், எதனையும் உறுதியாகச் சொல்லலும் வல்லவன் அமைச்சன். 634

5. **அறனறிந் தான்றமைந்த சொல்லான்எஞ் ஞான்றும்
திறனறிந்தான் தேர்ச்சித் துணை.**

அறநெறியைத் தெளிவாக அறிந்து நிறைந்தமைந்த சொல்லொடும் எக்காலத்தும் எடுத்ததை முடிக்கும் திறனமைந்தவனே, ஆட்சியாளர் கலந்து முடிவெடுக்கத் தக்க துணையாவன். 635

6. மதிநுட்பம் நூலோ டுடையார்க் கதிநுட்பம்

யாவுள முன்நிற் பவை.

நூலறிவோடு நுண்ணிய அறிவும் உடையவர்க்கு, அறியக் கூடாத மிகுந்த நுண்ணியவை என முன்னே எதிரிட்டு நிற்பவை எவையுள? எவையும் இல்லை. ***636***

7. செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்

தியற்கை அறிந்து செயல்.

செயலாற்றும் முறைமையை நூலறிவு நுண்ணறிவு ஆகியவற்றால் அறிந்து கொண்ட போதும், உலகத்தின் இயல் முறையையும் அறிந்து செயலாற்றல் வேண்டும். ***637***

8. அறிகொன் றறியான் எனினும், உறுதி

உழையிருந்தான் கூறல் கடன்.

பிறர் அறிந்து சொன்ன அறிவையும் ஏற்காது, தானும் அறியாதவனாக ஆட்சியாளன் இருப்பினும், நாட்டுக்கு நலமானவற்றை, அவனை அடுத்திருந்தவனாம் அமைச்சன் கூறுதல் கடமையாகும். ***638***

9. பழுதெண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்வோர்

எழுபது கோடி உறும்.

வெளிப்புறப் பகைவர் பல கோடிப்பேர் சேர்ந்து செய்யும் தீமையினும் பக்கத்தில் இருந்து தீயதை எண்ணும் அமைச்சர் ஒருவர் செய்யும் கேடு பெரிதாகும். ***639***

10. முறைப்படச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர்,

திறப்பா டிலாஅ தவர்.

செயலாற்றும் திறமை இல்லாதவர், எத்தனை வகையால் முறையாக ஆராய்ந்து பார்த்தும், முடிவாக நிறைவேறாத வகையிலேயே செயல் புரிவர். ***640***

65. சொல்வன்மை

(பிறர் உளங்கொள்ளுமாறு சொல்லும் திறமை)

1. **நாநலம் என்னும் நலனுடைமை, அந்நலம்**
யாநலத் துள்ளதூஉம் அன்று.

நாநலம் (சொல்வன்மை) என்று சொல்லப்படும் நலம், ஓர் உயர் செல்வமாகும்; அந் நாநலம், வேறு எந்த நலங்களிலும் உள்ளது அன்று; மிக உயர்ந்தது. 641

2. **ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்**
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு.

நன்மையும் தீமையும் ஒருவர் சொல்லும் சொல்லாலே வருவதால், எவரும் சொல்லில் குற்றம் உண்டாகாவாறு பாதுகாத்துப் பேணிச் சொல்லுதல் வேண்டும். 642

3. **கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்**
வேட்ப மொழிவதாம் சொல்.

சொல்வன்மை என்று அறிவுடையாரால் சொல்லப்படுவது, கேட்டவர்களை வயப்படுத்தும் தன்மையது ஆகவும், கேட்க வாயாதவரும் கேட்க விரும்புமாறு செய்வதாகவும் அமைந்தது ஆகும். 643

4. **திறனறிந்து சொல்லுக சொல்லை; அறனும்**
பொருளும் அதனினூஉங் கில்.

சொல்லும் பொருள்திறன், கேட்பவர் திறன் ஆகியவற்றை அறிந்து கொண்டு ஒன்றைச் சொல்லுதல் வேண்டும்; அவ்வாறு சொன்னால், அதனினும் சிறந்த அறமும் பொருளும் இல்லை. 644

5. **சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை**
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து.

தாம் சொல்லும் சொல்லை வெற்றி கொள்ளும் மற்றொரு சொல் இல்லை என்பதைத் தெளிந்து எச்சொல்லையும் சொல்லுதல் வேண்டும். 645

6. **வேட்பத்தாம் சொல்லிப் பிறர்சொற் பயன்கோடல்
மாட்சியின் மாசற்றார் கோள்.**

தாம் சொல்லும் சொல்லைப் பிறர் விரும்புமாறு சொல்லிப், பிறர் சொல்லும் சொல்லின் பயனை முழுமையாக வாங்கிக் கொள்ளுதல் குற்றமற்ற உயர்ந்தோர் கொள்கையாகும். **646**

7. **சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான், அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது.**

சொல்லுதலில் வல்லமையாளனாகவும், சொற் சோர்வு இல்லாதவனாகவும், அவை அஞ்சாதவனாகவும் இருக்கும் ஒருவனை எதிரிட்டு வெல்லுதல் எவர்க்கும் அரிது. **647**

8. **விரைந்து தொழில்கேட்கும் ஞாலம், நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்.**

கேட்பவரொடு வேறுபாடறக் கலந்து இனிமையாகச் சொல்லும் நாவன்மையாளரைப் பெற்றால், உலகோர் அவர் ஏவல் கேட்டு நடப்பார். **648**

9. **பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்லல் தேற்றா தவர்.**

சிறந்ததாகவும், குற்றமில்லாத தாகவும் ஒன்றைச் சில சொற்களால் சொல்லும் தெளிவு இல்லாதவரே, பலப்பல சொல்லுவதற்குப் பெருவிருப்புறுவர். **649**

10. **இணருழ்த்தும் நாறா மலரனையர், கற்ற
துணர விரித்துரையா தார்.**

தாம் கற்றவற்றைப் பிறர் உணர்ந்து கொள்ளுமாறு விரித்துரைக்கத் திறமில்லாதவர், மலர்ந்து விரிந்தாலும் மணம் பரப்பாத மலரைப் போன்றவர். **650**

66. வினைத் தூய்மை

(செய்யப்படும் செயல் தூயதாக இருத்தல்)

1. **துணைநலம் ஆக்கம் தரூஉம்; வினைநலம்**
வேண்டிய எல்லாம் தரும்.

ஒருவர்க்கு வாய்க்கும் துணையின் நல்ல தன்மை வளத்தைத் தரும்; ஆனால், ஒருவர் தாம் மேற்கொண்ட செயலை நலமுறச் செய்யும் திறம் கொண்டிருத்தல் அவர் விரும்புபவை அனைத்தையும் தரும். 651

2. **என்றும் ஒருவுதல் வேண்டும், புகழொடு**
நன்றி பயவா வினை.

நிறைந்த புகழும் நீடித்த நலமும் தாராத செயலை, எவரும் எக்காலத்தும் செய்தல் இல்லாமல், கட்டாயம் நீக்கி விடுதல் வேண்டும். 652

3. **ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை,**
'ஆஅதும்' என்னு மவர்.

மேலும் மேலும் மேம்பாடு அடையவேண்டும் என்று எண்ணுகின்றவர். தம் புகழ் மழுங்குமாறு செய்யும் செயல்களை நினைதலும் இல்லாமல் விடுதல் வேண்டும். 663

4. **இடுக்கட் படினும் இளிவந்த செய்யார்,**
நடுக்கற்ற காட்சி யவர்.

சிறிதும் அசைதல் இல்லாத அறிவினர், தாம் எத்தகைய சிக்கலுக்கு ஆட்பட்டிருந்தாலும் தமக்கு இழிவு தரக்கூடிய செயலைச் செய்யார். 664

5. **எற்றென் றிரங்குவ செய்யற்க; செய்வானேல்**
மற்றன்ன செய்யாமை நன்று.

யான் என்ன தவறு செய்துவிட்டேன் என்று தானே வருந்துமாறான செயலை ஒருவன் செய்யாது இருப்பானாக. ஒருக்கால் அவ்வாறு செய்தான் எனினும், மீளவும் அதனைச் செய்யாமை நல்லது. 655

6. **ஈன்றாள் பசிகாண்பா னாயினும் செய்யற்க,**
சான்றோர் பழிக்கும் வினை.

தன்னைப் பெற்றவள் பசித்துக் கிடக்கும் கொடுமையை ஒருவன் தன் கண் முன்னே காண்பான் எனினும், சான்றோர் பழிக்கும் செயலைச் செய்யாதிருப்பானாக. ***656***

7. **பழிமலைந் தெய்திய ஆக்கத்திற் சான்றோர்**
கழிநல் குரவே தலை.

பழி வழியை மேற்கொண்டு ஒருவன் அடைந்த செல்வத்தினும், அதனைக் கருதாத சான்றோர் கொண்ட கொடிய வறுமை சிறப்புடையதாகும். ***657***

8. **கடிந்த கடிந்தொரார் செய்தார்க் கவைதாம்**
முடிந்தாலும் பீழை தரும்.

அறவோரால் விலக்கப்பட்டவற்றை விலக்கித் தள்ளாமல் செய்தவர்க்கு, அச்செயல் செய்து முடிந்ததாயினும் துன்பமே உண்டாக்கும். ***658***

9. **அழக்கொண்ட எல்லாம் அழப்போம்; இழப்பினும்**
பிற்பயக்கும் நற்பா லவை.

பிறர் அழுமாறு அடித்துப் பறித்துக்கொண்டவை எல்லாம் தாமும் அழுமாறே போய்விடும்; நல்வழியால் வரும் செல்வம் முதற்கண் இழப்பது போல் இருப்பினும் பின்னே பெருகிவிடும். ***659***

10. **சலத்தால் பொருள்செய் தேமார்த்தல், பசுமண்**
கலத்துள்நீர் பெய்திரீஇ யற்று.

வஞ்சத்தால் பொருள்தேடி அதனைப் பாதுகாப்பாக வைத்தல், சுடப்படாத (பச்சை) மண்பானையில் நீரைவிட்டு நிரப்பி வைத்தது போல் ஆகும். ***660***

67. வினைத்திட்பம்

(செயலாற்றும் உறுதி)

1. **வினைத்திட்பம் என்ப தொருவன் மனத்திட்பம்;
மற்றைய எல்லாம் பிற.**

செயல்உறுதி என்று அறிவாளர்களால் சொல்லப்படுவது ஒருவனது மன உறுதியேயாகும்; மற்றை உறுதிகள் எல்லாம் உறுதிகள் ஆகா. **661**

2. **ஊறொரால் உற்றபின் ஒல்காமை, இவ்விரண்டின்
ஆறென்பர் ஆய்ந்தவர் கோள்.**

வினைத்திண்மையை ஆராய்ந்தவர் கொள்கை, ஒரு செயலுக்கு வரும் தடையை நீக்குதல், அதன் மேலும் தடையுற்றதெனினும் அதற்குத் தளராமை என்னும் இரண்டு வழியுமாம் என்பர். **662**

3. **கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை இடைக்கொட்கின்
எற்றா விழுமம் தரும்.**

எடுத்த செயலைக் கடைசிவரை வெளிப்படாது நிறைவேற்றுவதே வினைத்திட்பம் ஆகும்; அதனை இடையே வெளிப்படுத்தின் நீங்காத துன்பத்தைத் தரும். **663**

4. **சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.**

எச்செயலையும் எளிதில் முடிப்பேன் எனச் சொல்லுதல் எவர்க்கும் எளிமையாம்; ஆனால், அவர்கள் சொல்லியபடியே செய்து முடித்தல் அரிதாகும். **664**

5. **வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம், வேந்தன்கண்
ஊறெய்தி உள்ளப் படும்.**

மனவலிமையால் சிறப்படைந்தவரின் செயல்திறம் ஆட்சியாளன் அறிந்து கொள்ளுமாறு சேர்ந்து பின்பு அவன் மதிக்கும் சிறப்பையும் தரும். **665**

6. **எண்ணிய எண்ணியாங் கெய்துப, எண்ணியார்**
திண்ணிய ராகப் பெறின்.

ஒரு செயலைச் செய்ய எண்ணியவர் மனத்திண்மை உடையவராகப் பெற்றால், அவர் எண்ணியவற்றை எண்ணியபடியே அடைவர். **666**

7. **உருவுகண் டெள்ளாமை வேண்டும்; உருள்பெருந்தேர்க்**
கச்சாணி அன்னார் உடைத்து.

ஒருவர் வடிவத்தை கண்டு இகழாது இருத்தல் வேண்டும். ஏனெனில் உருண்டு செல்லும் பெரிய தேர்க்கு அமைந்த அச்சின் கடையாணி போன்ற வினைத்திட்பம் உடையவரையும் உலகம் கொண்டு உள்ளது. **667**

8. **கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது**
தூக்கம் கடிந்து செயல்.

தெளிவாக ஆராய்ந்து துணிவுடன் மேற்கொண்ட செயலைச் சிறிதும் நடுக்கம் இல்லாமலும் சோர்வு இல்லாமலும் செய்தல் வேண்டும். **668**

9. **துன்பம் உறவரினும் செய்க, துணிவாற்றி**
இன்பம் பயக்கும் வினை.

துன்பம் பெரிதாக வரும் என்றாலும், முடிவில் இன்பம் உண்டாக்கும் செயலை உறுதியோடு செய்து முடிக்க வேண்டும். **669**

10. **எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்**
வேண்டாரை வேண்டா துலகு.

எத்தனை வகையான திண்மைகளை ஒருவர் அடைந்த போதும், செயல்திண்மையை விரும்பிக் கைக் கொள்ளாதவரை உலகமும் விரும்பிக் கொள்ளாது. **670**

68. வினை செயல் வகை

(செயல்களைச் செய்யும் முறை)

1. **சூழ்ச்சி முடிவு துணிவெய்தல்; அத்துணிவு**
தாழ்ச்சியுள் தங்குதல் தீது.

ஒன்றை ஆராய்தலின் முடிவு துணிவு பெறுதல் ஆகும்; அவ்வாறு துணிந்த துணிவு, காலத் தாழ்வு, முயற்சித் தாழ்வுகளில் நின்றுவிடுதல் தீமை ஆகும். 671

2. **தூங்குக தூங்கிச் செயற்பால; தூங்கற்க**
தூங்காது செய்யும் வினை.

காலந்தாழ்த்தி (மெல்லென)ச் செய்ய வேண்டும் செயல்களைக் காலந்தாழ்த்திச் செய்தல் வேண்டும். காலம் தாழ்த்தாது (விரைந்து) செய்ய வேண்டும் செயல்களைக் காலந்தாழ்த்தாது செய்தல் வேண்டும். 672

3. **ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே; ஒல்லாக்கால்**
செல்லும்வாய் நோக்கிச் செயல்.

ஒரு செயலைச் செய்ய முடிந்த வகையால் எல்லாம் செய்தல் நல்லதேயாம்; அது பொருந்தாது எனின், அதனை நிறைவேற்றும் வழியை நுணுகி அறிந்து செய்தல் வேண்டும். 673

4. **வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்**
தீயெச்சம் போலத் தெறும்.

தொடங்கிய செயல், தொடங்கிய போர் என்னும் இரண்டையும் முழுமையாக அழியாமல் அரை குறையாக விடுவதை ஆராய்ந்தால் முழுமையாக அணையாது விடப்பட்ட தீக்கங்குபோல் வளர்ந்து அழிக்கும். 674

5. **பொருள்கருவி காலம் வினையிடனோ டைந்தும்**
இருள்தீர எண்ணிச் செயல்.

ஒரு செயலைச் செய்யுங்கால் பொருள், கருவி, காலம், செயல், இடம் என்னும் ஐந்தையும் மயக்கம் நீங்க எண்ணிச் செய்தல் வேண்டும். 675

6. **முடிவும் இடையூறும் முற்றியாங் கெய்தும்**
படுபயனும் பார்த்துச் செயல்.

எடுத்த செயலை நிறைவேற்றும் வகை, செயலாற்றும் போது இடையே உண்டாகும் தடை, அதனை முடித்த போது உண்டாகும் பெரும் பயன் என்பவற்றை முன்னரே எண்ணிச் செயலாற்ற வேண்டும். 676

7. **செய்வினை செய்வான் செயல்முறை, அவ்வினை**
உள்ளறிவான் உள்ளம் கொளல்.

ஒரு செயலை வெற்றியாகச் செய்து முடிக்க விரும்புபவன் செய்ய வேண்டும் முறை, அச்செயலைச் செய்து அதன் உட்கூறுகளையெல்லாம் அறிந்த ஒருவன் கருத்தை முதற்கண் அறிந்து கொள்ளலாகும். 677

8. **வினையால் வினையாக்கிக் கோடல், நனைகவுள்**
யானையால் யானையாத் தற்று.

மேற்கொண்ட ஒரு செயலால் மேலும் ஒரு செயலை முடித்துக் கொள்ளுதல், மதங் கொண்ட களிற்று யானையைக் கொண்டு (பழகாத) பிடி யானையைப் பற்றிக் கொள்வது போன்றது. 678

9. **நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே**
ஒட்டாரை ஒட்டிக் கொளல்.

நண்பராய் இருப்பவர்க்கு நன்மை செய்வதினும் விரைந்து செய்யத்தக்கது. தன் பகையாய் இருப்பாரை விரைந்து தன்பாலாக்கிச் சேர்த்துக் கொள்வதாகும். 679

10. **உறைசிறியார் உள்நடுங்கல் அஞ்சிக் குறைபெறின்**
கொள்வர் பெரியார்ப் பணிந்து.

வினை செயல்வகையில் உறுதித்தன்மை குறைந்தவர் தம் உளத்துக்கொள்ளும் நடுக்கத்திற்குத் தாம் அஞ்சி, அக்குறை நீங்குவதற்காகத் தம்மினும் பெரியரைப் பணிந்து அவருதவி கொள்வர். 680

69. தூது

(தூது செல்வார் இயல்பு)

1. **அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்**
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு.

(நாட்டின் மேல்) அன்புடைமை, சிறந்த குடிப்பிறப்பு, ஆட்சியாளர் விரும்பும் நல்ல குணங்களை உடைமை ஆகியவை தூது சொல்லச் செல்வானுக்கு வேண்டும் பண்புகள் ஆகும். 681

2. **அன்பறி வாராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்**
கின்றி யமையாத மூன்று.

எவரிடத்தும் அன்பும் பல்வகை அறிவும் ஆராய்ந்து நயமிகச் சொல்லும் சொல்லாற்றலும் ஆகிய மூன்று தன்மைகளும் தூது சொல்வார்க்கு இன்றியமையாத் தன்மைகள். 682

3. **நூலாருள் நூல்வல்ல னாகுதல், வேலாருள்**
வென்றி வினையுரைப்பான் பண்பு.

நூலாய்ந்த அறிஞருள் நூல் வல்லவனாக விளங்குதல், வலிய படைக்கருவியுடைய பகைவரிடத்துச் சென்று (தன் நாட்டுக்கு) வெற்றியுண்டாகுமாறு தூது சொல்ல வல்ல தூதன் பண்பாகும். 683

4. **அறிவுரு ஆராய்ந்த கல்விஇம் மூன்றன்**
செறிவுடையான் செல்க வினைக்கு.

தேர்ந்த அறிவு, நல்ல தோற்றம், ஆராய்வொடு கூடிய கல்வி ஆகிய இம்மூன்றும் நிரம்பி அமைந்தவன் தூதுரைக்கும் கடமைக்குச் செல்வானாக. 684

5. **தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி**
நன்றி பயப்பதாம் தூது.

சொல்ல வேண்டுவனவற்றையெல்லாம் தொகுத்துச் சொல்லிச் சொல்லக் கூடாதவற்றை விலக்கிக் கேட்பார் மகிழுமாறு கூறித் தம் நாட்டுக்கு நன்மை உண்டாக்குபவன் தூதனாவான். 685

6. **கற்றுக்கண் அஞ்சான் செலச்சொல்லிக் காலத்தால்**
தக்க தறிவதாம் தூது.

கல்வி வல்லவனாய், வெகுண்டு பார்க்கும் பார்வைக்கு அஞ்சானாய்க், கேட்பவர் மனம் கொள்ளுமாறு சொல்லி உரிய போதில் அறிய வேண்டுவனவற்றை அறிந்து கொள்ளுதல் தூதனியல்பாம். 686

7. **கடனறிந்து காலம் கருதி இடனறிந்**
தெண்ணி உரைப்பான் தலை.

செல்லும் கடமையை அறிந்து, அதைச் செய்தற்கு ஏற்ற காலத்தை எண்ணி, செயலாற்றும் இடத்தையும் அறிந்து, தீர எண்ணி உரைப்பவன் சிறந்த தூதன். 687

8. **தூய்மை துணைமை துணிவுடைமை, இம்மூன்றின்**
வாய்மை வழியுரைப்பான் பண்பு.

தூயதன்மை, துணைநலத் தன்மை, துணிவுடைமை என்னும் இம்மூன்று தன்மைகளிலும் வாய்மையாளனாக விளங்குதல் தூது சொல்பவன் பண்பாகும். 688

9. **விடுமாற்றம் வேந்தர்க் குரைப்பான், வடுமாற்றம்**
வாய்சோரா வன்க ணவன்.

தன்நாட்டு ஆட்சியாளன் கூறுவதை வேற்று நாட்டு ஆட்சியாளனுக்குக் கூறவேண்டிய தூதன் குற்றமான சொற்களை மறந்தும் கூடக் கூறாத உறுதியாளனாக இருத்தல் வேண்டும். 689

10. **இறுதி பயப்பினும் எஞ்சா திறைவற்**
குறுதி பயப்பதாம் தூது.

தனக்கு முடிவே உண்டாவதாயினும், தம் அரசுக்குக், குறையாத அளவில் சொல்ல வேண்டும் உறுதியானவற்றைச் சொல்லி நன்மையுண்டாக்குபவனே சிறந்த தூதன். 690

70. மன்னரைச் சேர்ந்தொழுகல்

(ஆட்சியாளரொடு பழகும் வகை)

1. **அகலா தணுகாது தீக்காய்வார் போல்க**
   இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்.

   வலிய (பகைவெல்லும்) ஆட்சியரைச் சேர்ந்து செயல்படுபவர் அவரை மிகவிலகாதும், மிக நெருங்காதும், தீ மூட்டிக் குளிர் காய்பவர்போல் இருத்தல் வேண்டும். 691

2. **மன்னர் விழைய விழையாமை மன்னரால்**
   மன்னிய ஆக்கம் தரும்.

   ஆட்சியாளர் விரும்புபவற்றை அவரைச் சார்ந்தவர் விரும்பாது இருத்தல், அவரால் நிலை பெற்ற நன்மைகள் பெறும் வாய்ப்பை அது தேடித் தரும். 692

3. **போற்றின் அரியவை போற்றல்; கடுத்தபின்**
   தேற்றுதல் யார்க்கும் அரிது.

   அரசைச் சார்ந்தவர் தம்மைக் காத்துக் கொள்ள விரும்பினால் பொறுத்தற்கு அரிய தவறு தம்மிடம் வாராமல் காத்துக் கொள்ள வேண்டும். தவறு நிகழ்ந்து ஐயமுண்டாகிவிட்டால் அதனைத் தெளிவித்தல் எவருக்கும் முடியாது. 693

4. **செவிச்சொல்லும் சேர்ந்த நகையும் அவித்தொழுகல்,**
   ஆன்ற பெரியா ரகத்து.

   சிறந்த ஆட்சியாளன் முன்னிலையில் ஒருவருக்கொருவர் காதொடு காதாகப் பேசிக்கொள்ளுதலும், சேர்ந்து சிரித்தலும் இல்லாமல் அடக்கமாக நடந்து கொள்ளுதல் வேண்டும். 694

5. **எப்பொருளும் ஓரார், தொடரார்மற் றப்பொருளை**
   விட்டக்கால் கேட்க மறை.

   ஆட்சியாளன் பேசும் கமுக்கத்தைத் தானே மறைந்து கேளாமலும், அவனிடம் வினாவி அறியாமலும் அச்செய்தியை அவனே கூறும்போது மட்டும் ஆட்சியாளனோடு பழகுவார் கேட்டுக் கொள்வாராக. 695

6. **குறிப்பறிந்து காலம் கருதி வெறுப்பில**
வேண்டுப வேட்பச் சொலல்.

ஆட்சியாளரைச் சார்ந்தோர் அவர் குறிப்பறிந்து காலத்தை எண்ணி, வெறுப்பு இல்லாமல் அவர் விரும்புவதை விரும்புமாறு சொல்லுதல் வேண்டும். **696**

7. **வேட்பன சொல்லி வினையில எஞ்ஞான்றும்**
கேட்பினும் சொல்லா விடல்.

ஆட்சியாளரைச் சார்ந்தோர், அவர் கேட்க விரும்புமாறு சொல்லி, அவர் வலியுறுத்திக் கேட்பினும் பயனில்லாதவற்றை எப்பொழுதும் கூறாது விடுதல் வேண்டும். **697**

8. **இளையர் இனமுறையர்; என்றிகழார், நின்ற**
ஒளியோ டொழுகப் படும்.

ஆட்சியாளரைத் தமக்கு 'இவர் இளையர்' என்றோ, 'எம் உறவுமுறையினர்' என்றோ இகழாமல் அவரிடத்து நின்ற புகழுடன் பொருந்த, நடந்து கொள்ளுதல் வேண்டும். **698**

9. **கொளப்பட்டேம் என்றெண்ணிக் கொள்ளாத செய்யார்**
துளக்கற்ற காட்சி யவர்.

அசைதல் இல்லாத நல்லறிவாளர் யாம் ஆட்சியாளரால் விரும்பப்பட்டேம் என்று எண்ணிக் கொண்டு, விரும்பாதவற்றைச் செய்ய மாட்டார். **699**

10. **பழையம் எனக்கருதிப் பண்பல்ல செய்யும்**
கெழுதகைமை கேடு தரும்.

'யாம் ஆட்சியாளர்க்குப் பழமையான தொடர்பு உடையேம்' என எண்ணிப் பண்பற்றவற்றைச் செய்யும் உறவுமுறை உரிமை, கேட்டை உண்டாக்கும். **700**

71. குறிப்பறிதல்

(பிறர் உள்ளக் கருத்தை அவர் கூறாமலே அறிதல்)

1. **கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்
மாறாநீர் வையக் கணி.**

ஒன்றை வெளிப்படக் கூறாது இருந்தும் அதனைக் குறிப்பால் அறிய வல்லவன், எக்காலத்தும் வற்றாத நீர்சூழ்ந்த உலகுக்கு அணிகலம் போல்வான். 701

2. **ஐயப் படாஅ தகத்த துணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல்.**

ஐயப்பாடு இல்லாமல் ஒருவன் உள்ளக் கருத்தை உணரக் கூடியவனை, மெய்யுணர்வுடைய முனிவனுக்கு ஒப்பாகக் கொள்ளுதல் வேண்டும். 702

3. **குறிப்பிற் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல்.**

வெளிப்படத் தோன்றும் குறிப்புகளால் உள்ளத்தின் உட்குறிப்பை அறியவல்லவரைத் தம் அரிய உடைமைகளுள் அவர் விரும்பும் எதனையும் கொடுத்தும் துணையாகக் கொள்ளத்தகும். 703

4. **குறித்தது கூறாமைக் கொள்வாரோ டேனை
உறுப்போ ரனையரால் வேறு.**

உள்ளத்தில் உள்ளதை உரையாமலே கண்டு கொள்பவரோடு, மற்றையோர் உறுப்பமைதியால் ஒத்தவராகத் தோன்றினாலும் அறிவு நிலையில் மிக வேறு பட்டவர் ஆவர். 704

5. **குறிப்பிற் குறிப்புணரா வாயின், உறுப்பினுள்
என்ன பயத்தவோ கண்?**

புறக்குறிகளால் அகக்குறிப்பை அறியமாட்டார் என்றால், ஒருவர் உறுப்புகளுள் கண்கள் என்ன பெரும் பயன்களைச் செய்வனவாகும்? 705

6. **அடுத்தது காட்டும் பளிங்குபோல், நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்.**

தன்னை நெருங்கியதன் வடிவையும் வண்ணத்தையும் தெளிவாகக் காட்டும் கண்ணாடி போல், நெஞ்சத்தில் மிகுந்து தோன்றும் உணர்வை முகம் வெளிப்படக் காட்டும். *706*

7. **முகத்தின் முதுக்குறைந்த துண்டோ? உவப்பினும்
காயினும் தான்முந் துறும்.**

விருப்பானாலும் வெறுப்பானாலும் உள்ளதைக் காட்டும் முகத்தைப் பார்க்கிலும் பேரறிவுடையது எதுவும் உண்டோ? (இல்லை) *707*

8. **முகம்நோக்கி நிற்க அமையும், அகம்நோக்கி
உற்ற துணர்வார்ப் பெறின்.**

உள்ளக் குறிப்பைக் கொண்டு, ஆங்குள்ள எண்ணத்தை அறியவல்லாரைப் பெற்றால், அவர்தம் முகத்தை நோக்கி நிற்கும் அளவில் (உரையாடி அறிவது போன்ற) தெளிவுண்டாகும். *708*

9. **பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும் கண்ணின்
வகைமை உணர்வார்ப் பெறின்**

கண்காட்டும் குறிப்பு வகைகளைக் கண்டு கொள்ளும் திறத்தைப் பெற்றால், பிறர்மனத்திலுள்ள பகைமை நட்பு என்பவற்றை அவர் சொல்லால் சொல்லாமல் அவர் கண்களே சொல்லிவிடும். *709*

10. **நுண்ணியம் என்பார் அளக்குங்கோல் காணுங்கால்
கண்ணல்ல தில்லை பிற.**

கூர்மையான அறிவுடையோம் என்பவர், பிறர் கருத்தை அளக்கும் அளவுகோல் ஆராய்ந்து பார்த்தால், அவர் கண்ணை அல்லது பிற இல்லை. *710*

72. அவை அறிதல்

(கூட்டத்தினர் இயல்பறிந்து பேசுதல்)

1. **அவையறிந் தாராய்ந்து சொல்லுக; சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்.**

சொல்லின் விரிவை அறிந்த தூய அறிவினர், தாம் சொல்லவிருக்கும் அவையின் தகுதியை அறிந்து வேண்டும் வகையால் ஆராய்ந்து சொல்வாராக. 711

2. **இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக, சொல்லின்
நடைதெரிந்த நன்மை யவர்.**

சொல்லும் சொல்லின் ஒழுங்கினைத் தெரிந்த நல்லறிவாளர், தாம் சொல்லும் அவையின் தகுதி தெரிந்து, சொல்வதை நன்குணர்ந்து சொல்வாராக. 712

3. **அவையறியார் சொல்லல்மேற் கொள்பவர், சொல்லின்
வகையறியார் வல்லதூஉம் இல்.**

அவையின் தன்மையை அறியாமல் சொல்லுதலை மேற்கொண்டவர், தாம் சொல்லுகின்ற சொல்லின் கூறுபாட்டினை அறியாதவர்; அவர் சொல்ல வல்ல பொருளும் இல்லை. 713

4. **ஒளியார்முன் ஒள்ளிய ராதல்; வெளியார்முன்
வான்சுதை வண்ணம் கொளல்.**

அவையறிந்தார், சிறந்த அறிவாளர்முன் சிறந்த அறிவாளராக விளங்க வேண்டும்; வெள்ளை அறிவினர்முன், அவரினும் வெள்ளை அறிவினராய் வெண்சுண்ணாம்பு நிறம் போல் தோன்ற வேண்டும். 714

5. **நன்றென்ற வற்றுள்ளும் நன்றே, முதுவருள்
முந்து கிளவாச் செறிவு.**

நல்லது என்று உயர்ந்தோரால் சொல்லப்பட்டவற்றுள் எல்லாம் நல்லது, பேரறிஞர் அவையில் முந்திக் கொண்டு பேசுதல் இல்லாத அடக்கமாகும். 715

6. **ஆற்றின் நிலைதளர்ந் தற்றே, வியன்புலம்**
ஏற்றுணர்வார் முன்னர் இழுக்கு.

விரிந்த புலமையால் ஆராயவல்ல அறிஞர் முன்னர்ச் சொற் குற்றமுண்டாகப் பேசுதல், பேராற்று வெள்ளத்தில் நீந்தும் ஒருவன் தன் நிலையில் தளர்ந்தது போல்வதாகும். **716**

7. **கற்றறிந்தார் கல்வி விளங்கும், கசடறச்**
சொல்தெரிதல் வல்லா ரகத்து.

குற்றமற்ற சொல்லாய்வாளர் உள்ள அவையின் கண்ணே கற்று அறிந்த புலமையாளரின் கல்வித் திறம் நன்கு விளங்கித் தோன்றும். **717**

8. **உணர்வ துடையார்முன் சொல்லல், வளர்வதன்**
பாத்தியுள் நீர்சொரிந் தற்று.

கேட்டறியும் ஆர்வம் இருக்கும் அவையில் ஒன்றைச் சொல்லுதல், தானே வளரும் பயிருள்ள பாத்தியில் நீர் சொரிந்தாற் போலும் நன்மையாம். **718**

9. **புல்லவையுள் பொச்சாந்தும் சொல்லற்க, நல்லவையுள்**
நன்கு செலச்சொல்லு வார்.

பேரறிஞர் கூடியுள்ள அவையில் திறமையாகப் பேச வல்லவர், அறிவிலாக் கீழோர் அவையில் தம்மை மறந்தும் கூடப் பேசாது இருப்பாராக. **719**

10. **அங்கணத்துள் உக்க அமிழ்தற்றால், தம்கணத்தர்**
அல்லார்முன் கோட்டி கொளல்.

தம் தகுதியொடு பொருந்தி வராதவர் முன், சிறந்த கருத்துகளை ஒருவர் கூறுதல், சலதாரையில் கவிழ்க்கப்பட்ட பாலமிழ்து போல்வதாம். **720**

73. அவையஞ்சாமை

(கூட்டத்தின் நிலையறிந்து அஞ்சாது பேசுதல்)

1. **வகையறிந்து வல்லவை வாய்சோரார், சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்.**

சொல்லின் தொகுப்பை அறிந்த தூய அறிவினர், அவையின் வகையினை அறிந்து, புலமை மிக்கோர் அவையில் சொற்சோர்வு உண்டாகச் சொல்ல மாட்டார். 721

2. **கற்றாருள் கற்றார் எனப்படுவர், கற்றார்முன்
கற்ற செலச்சொல்லு வார்.**

கல்வி வல்லாருள் கல்வி வல்லார் என்று சொல்லப்படுபவர் எவரெனின், கற்ற பெருமக்களின் அவையில், தாம் கற்றவற்றை, அவர் மனத்துப் பதியுமாறு சொல்லுபவர். 722

3. **பகையகத்துச் சாவார் எளியர்; அரியர்
அவையகத் தஞ்சா தவர்.**

பகையிடத்திற்குச் சென்று அஞ்சாது நின்று சாகின்றவர் காணுதற்கு எளியர்; கற்றோர் அவையிடத்திற்குச் சென்று அஞ்சாமல் சொல்ல வல்லவர் காணுதற்கு அரியர். 723

4. **கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாம்கற்ற
மிக்காருள் மிக்க கொளல்.**

கற்ற அறிஞர் முன், தாம் கற்றதை அவர்மனம் கொள்ளுமாறு சொல்லி, தம்மினும் மிகக் கற்றோரிடத்தில் மிகுந்துள்ள அறிவைப் பெறுதல் வேண்டும். 724

5. **ஆற்றின் அளவறிந்து கற்க, அவையஞ்சா
மாற்றம் கொடுத்தற் பொருட்டு.**

கற்றோர் அவையில் அச்சமில்லாமல் மறுமொழி கொடுத்தற் பொருட்டு, கற்கும் வழியில் அளவை முறையறிந்து (தடைவிடை அறிந்து) கற்பாராக. 725

6. **வாளொடென் வன்கண்ண ரல்லார்க்கு? நூலொடென்
நுண்ணவை அஞ்சு பவர்க்கு?**

வலிய வீரர் அல்லாதவர்க்குப் படைக் கருவிகளுடன் என்ன தொடர்பு? அதுபோல் நுண்ணிய அறிஞர் அவையில் உரையாட அஞ்சுபவர்க்கு, அறிவு நூல்களுடன் என்ன தொடர்பு? (எதுவும் இல்லை) 726

7. **பகையகத்துப் பேடிகை ஒள்வாள், அவையகத்
தஞ்சு மவன்கற்ற நூல்.**

கற்றறிந்தோர் அவையில் உரையாற்ற அஞ்சுபவன் கற்ற நூலறிவு, பகைவரொடு போரிடும் களத்தில் கோழையின் கையில் உள்ள சிறந்த படைக்கருவி போல்வதாம். 727

8. **பல்லவை கற்றும் பயமிலரே, நல்லவையுள்
நன்கு செலச்சொல்லா தார்.**

சான்றோர் பேரவையில் நன்றாக அவர் மனம் கொள்ளுமாறு சொல்ல மாட்டாதவர், பலப் பல நூல்களைக் கற்றிருப்பினும் அவற்றால் பயனில்லாதவரே. 728

9. **கல்லா தவரின் கடையென்ப, கற்றறிந்தும்
நல்லார் அவையஞ்சு வார்.**

கற்க வேண்டியவற்றைக் கற்றிருந்தும் அதனை நல்லவர் அவையில் சொல்ல அஞ்சுபவர், கற்றறியாதவரினும் கீழ்ப்பட்டவரே ஆவர். 729

10. **உளரெனினும் இல்லாரொ டொப்பர், களனஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார்.**

நல்லோர் அவைக்கு அஞ்சித் தாம் கற்றவற்றை அவர் கொள்ளுமாறு சொல்லத் திறமில்லாதவர், கல்வியுடையவர் எனினும் கல்வி இல்லாதவரோடு ஒப்பாவர். 730

74. நாடு

(நாட்டின் சிறப்பியல்பு)

1. **தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்**
செல்வரும் சேர்வது நாடு.

குறையாத விளைவும், தகுதி வாய்ந்த பெருமக்களும் கேடில்லாத செல்வரும் ஒருங்கே சேர்ந்திருப்பது சிறந்த நாடாகும். *731*

2. **பெரும்பொருளால் பெட்டக்க தாகி, அருங்கேட்டால்**
ஆற்ற விளைவது நாடு.

மிகுந்த பொருள்களால் விரும்பத் தக்கதாகி, இயற்கை செயற்கைக் கேடுகளின் இடையேயும் மிக விளைவது நல்ல நாடாகும். *732*

3. **பொறையொருங்கு மேல்வருங்கால் தாங்கி, இறைவற்**
கிறையொருங்கு நேர்வது நாடு.

எவ்வளவு பாரம் மேன்மேலும் வருவதாயினும் அதனைத் தாங்கி, ஆள்பவருக்குச் செலுத்த வேண்டும் வரி வகைகளை முழுமையாகச் செலுத்தும் மக்களைக் கொண்டிருப்பது நாடாகும். *733*

4. **உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்**
சேரா தியல்வது நாடு.

கடுமையான பசி, ஒழியாத நோய், அழிவு செய்யும் பகை என்னும் தீமைகள் சேராமல் அமைதியாக நடைபெறுவது நாடாகும். *734*

5. **பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்**
கொல்குறும்பும் இல்லது நாடு.

பல்வேறுபட்ட தன்னலக் குழுக்களும், பாழாக்கும் உட்பகைகளும், அரசை ஆட்டிப்படைக்கும் கொலைக்கு அஞ்சாத குறும்புத் தன்மையரும் இல்லாததே நல்ல நாடாகும். *735*

6. **கேடறியாக் கெட்ட விடத்தும், வளங்குன்றா**
நாடென்ப நாட்டின் தலை.

எளிதில் கேடு அடைவதை அறியாததாகவும், ஒருக்கால் கெட்ட இடத்தும் தன் வளமை குறையாததாகவும், இருக்கும் நாடே முதன்மையான நாடாகும். ***736***

7. **இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்**
வல்லரணும் நாட்டிற் குறுப்பு.

மழை நீர், ஊற்று நீர் ஆகிய இருவகை நீரும், வளம் நிரம்பிய மலையும், நிலத்து வழியே ஓடிவரும் அருவி ஆறு முதலிய நீரும், வலிய அரணும் நாட்டிற்கு உறுப்புகளாம். ***737***

8. **பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்**
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து.

நோயில்லாமை, செல்வப் பெருக்கு, நல்ல விளைவு, விரும்பத்தக்க இன்பம், வலிய பாதுகாப்பு என்னும் இவ்வைந்தும் நாட்டிற்கு அணிகலம் போல்வன. ***738***

9. **நாடென்ப நாடா வளத்தன; நாடல்ல**
நாட வளந்தரும் நாடு.

நாடு என்று அறிவினரால் சொல்லப்படுவது, தேடி வருந்தாமல் வளங்களைத் தன்னிடத்துக் கொண்டதாகும்; வருந்தித் தேடி வளந்தரு நாடு சிறந்த நாடாகாது. ***739***

10. **ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே,**
வேந்தமை வில்லாத நாடு.

எவ்வளவு வளங்களைத் தன்னிடத்துப் பொருந்தி இருப்பினும் சிறந்த ஆட்சியைப் பொருந்தாத நாடு பயனில்லா நாடேயாம். ***740***

75. அரண்

(பாதுகாப்பு)

1. **ஆற்று பவர்க்கும் அரண்பொருள்; அஞ்சித்தற்**
போற்று பவர்க்கும் பொருள்.

தம் வலிமையைக் காட்ட விரும்புபவர்க்கும் அரண் பயனுடையதாகும்; அது போல், தங்கள் உயிர்க்கு அஞ்சிப் பாதுகாத்துக் கொள்ள விரும்புபவர்க்கும் அரண் பயனுடையதாகும். 741

2. **மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்**
காடும் உடைய தரண்.

ஆழமான நீர் அகழியும் விரிந்த மண் பரப்பும் பெரிய மலையும் அணியணியாய் உள்ள இருண்ட காடும் கொண்டது அரணாகும். 742

3. **உயர்வகலம் திண்மை அருமைஇந் நான்கின்**
அமைவரண் என்றுரைக்கும் நூல்.

ஏறுதற்கு அரிய உயரம், இயங்குதற்குத் தக்க அகலம், அழித்தற்கு அரிய வலிமை, கடத்தற்கு அருமை என்னும் இந்நான்கும் உடையது அரண் எனப் படைத்துறை நூல்கள் கூறும். 743

4. **சிறுகாப்பிற் பேரிடத்த தாகி, உறுபகை**
ஊக்கம் அழிப்ப தரண்.

காக்க வேண்டிய இடம் சிறியதாய், உள்ளே பரந்த இடத்தைப் பெற்றதாய், வலிய பகையின் ஊக்கத்தை அழிக்க வல்லதாய் அமைந்தது அரணாகும். 744

5. **கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகி, அகத்தார்**
நிலைக்கெளிதாம் நீர தரண்.

பகைவரால் பற்றுதற்கு அருமை உடையதாய், உள்ளிருப்பார்க்கு வேண்டிய அளவு உணவு உடையதாய், உள்ளிருப்பார் தங்கிப் போர் செய்தற்கு எளிதானதாய் அமைந்தது அரண். 745

6. **எல்லாப் பொருளும் உடைத்தாய், இடத்துதவும்**
நல்லாள் உடைய தரண்.

வேண்டும் எல்லாப் பொருள்களும் தன்னிடத்து உடையதாய், போர் வந்த இடத்தில் உதவுகின்ற வலிய வீரர்களைக் கொண்டதாய் அமைந்தது அரணாகும். 746

7. **முற்றியும் முற்றா தெறிந்தும் அறைப்படுத்தும்**
பற்றற் கரிய தரண்.

முற்றுகை இட்டும், முற்றுகையிடாது அழித்தும், உள்ளிருப்பாரை வஞ்சத்தால் வயப்படுத்தியும் பகைவரால் பற்றிக் கொள்வதற்கு அரியது அரண் ஆகும். 747

8. **முற்றாற்றி முற்றி யவரையும் பற்றாற்றிப்**
பற்றியார் வெல்வ தரண்.

விருப்பத்துடன் கோட்டையைக் காத்துக் கொண்டிருக்கும் உள்மதிலார், பெரிய அளவில் போர் புரிந்து முற்றுகையிட்டவரையும் வெல்ல அமைந்தது அரண் ஆகும். 748

9. **முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து**
வீறெய்தி மாண்ட தரண்.

போர் முனையில் பகைவர் வீழ்ந்து அழியுமாறு செயல்திறங்களில் மேம்பட்ட போர்க் கருவிகளைத் தன்னிடத்துக் கொண்டது சிறந்த அரணாகும். 749

10. **எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி**
இல்லார்கண் இல்ல தரண்.

எத்தகைய சிறப்புடையதாக அரண் அமைந்திருந்தது ஆயினும், செயலாற்றும் திறம் இல்லாதவர்களிடத்தில் அது பயனற்றதாகி விடும். 750

76. பொருள் செயல் வகை

(பொருளை ஆக்கும் வகை)

1. **பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்**
பொருளல்ல தில்லை பொருள்.

ஒரு பொருட்டாக மதிக்கத் தகாதவரையும், பொருட்டாக மதிக்குமாறு செய்யும் பொருளை அல்லாமல், சிறந்த பொருள் வேறு இல்லை. *751*

2. **இல்லாரை எல்லாரும் எள்ளுவர்; செல்வரை**
எல்லாரும் செய்வர் சிறப்பு.

செல்வமில்லாதவரை இவர் அவர் என்றில்லாமல் எல்லாருமே இகழ்வர்; செல்வமுடையவரை இவர் அவர் என்றில்லாமல் அனைவரும் சிறப்பாக நடத்துவர். *752*

3. **பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்**
எண்ணிய தேயத்துச் சென்று.

பொருள் என்று சொல்லப்படும் அணையா விளக்கு, அதனை உடையவர் நினைத்த இடங்களுக்கெல்லாம் சென்று அவரைப் பற்றி அறியாமலிருந்த அறியாமை என்னும் இருளை அழிக்கும். *753*

4. **அறனீனும்; இன்பமும் ஈனும்; திறனறிந்து**
தீதின்றி வந்த பொருள்.

பொருள் தேடும் வழிகளை அறிந்து, தீய வழியால் அன்றி நல்வழியால் வந்த பொருள், அறத்தையும் கொடுக்கும்; இன்பத்தையும் கொடுக்கும். *754*

5. **அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்**
புல்லார் புரள விடல்.

அருட்பண்புக்கும் அன்புப் பண்புக்கும் பொருந்தி வாராத பொருளாக்க முறைகளைக் கொள்ளாமல் அப்பால் போக விட்டுவிட வேண்டும். *755*

6. **உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்.**

அரசுரிமை வகையால் வந்தடையும் பொருளும், வரிவகையால் வரும் பொருளும், தன் பகைவரை அழித்தல் வகையால் வரும் பொருளும் ஆட்சியாளன் பெறும் பொருள்களாம். **756**

7. **அருளென்னும் அன்பீன் குழவி, பொருளென்னும்
செல்வச் செவிலியால் உண்டு.**

அன்பு என்னும் தாய் பெற்ற அருள் என்னும் குழந்தை, பொருள் என்னும் வளமான செவிலித் தாயால் வளர்வதாகும். **757**

8. **குன்றேறி யானைப்போர் கண்டற்றால், தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை.**

தன் கையிலே பொருளை வைத்துக் கொண்டு செய்பவன் செயல், மலை மேல் ஏறிக் கொண்டு அம் மலைக்குக் கீழே நடைபெறும் யானைப் போரைக் கண்டது போலாம். (எடுத்த செயல், இடையூறு இல்லாமல் எளிதாக நிறைவேறும்) **758**

9. **செய்க பொருளை; செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரிய தில்.**

எவரும் தம்மிடம் பொருளை ஆக்குதல் வேண்டும்; ஏனெனில் பகைப்பவர் செருக்கை அழிக்கும் கூர்மையான படைக்கருவி, அதனைத் தவிர வேறொன்றும் இல்லை. **759**

10. **ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க் கெண்பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு.**

புகழுண்டாகின்ற நெறியில் பொருளை மிகுதியாகச் சேர்த்துக் கொண்டவர்க்கு, மற்றை அறம், இன்பம் என்னும் இரண்டு பொருள்களும் எளிதாகச் சேரும். **760**

77. படை மாட்சி

(படையின் பெருமை)

1. **உறுப்பமைந் தூறஞ்சா வெல்படை, வேந்தன்**
வெறுக்கையுள் எல்லாம் தலை.

நிலம், நீர், வான் என்னும் படைப் பிரிவுகள் அமைந்து பகைவரால் வரும் துன்பத்திற்கு அஞ்சாத வெற்றிப் படையே ஆட்சியாளனுக்குள்ள செல்வங்களுள் எல்லாம் முதன்மையான செல்வமாகும். 761

2. **உலைவிடத் தூறஞ்சா வன்கண் தொலைவிடத்துத்**
தொல்படைக் கல்லால் அரிது.

தம் நாட்டுக்கு அப்பாலாம் தொலைவிடத்தில், தம் படை சிதறிப் போகும் நிலையிலும் தமக்கு வரும் இடையூற்றுக்கு அஞ்சாத வலிமை, பழமையான மரபுப் படைக்கு அல்லாமல் பிறபடைக்கு அமைதல் அரிது.762

3. **ஒலித்தக்கால் என்னாம் உவரி? எலிப்பகை**
நாகம் உயிர்ப்பக் கெடும்.

எலிகள் கடல் போல் கூடிப் பகை கொண்டு ஒலி எழுப்பினாலும் ஆவது என்ன? பாம்பொன்று பெருமூச்சுவிட்ட அளவானே அவையெல்லாம் ஓடிப்போகும் (வலிமை மிக்க வீரன் ஒருவனைக் கண்ட அளவிலேயே வாய் வீரர் கூட்டம் அஞ்சி ஓடும்) 763

4. **அழிவின் றறைபோகா தாகி வழிவந்த**
வன்க ணதுவே படை.

மனத்தளர்ச்சி இல்லாத தாகவும் காட்டிக் கொடுத்தல் முதலிய வஞ்சனைக்கு ஆளாகாததாகவும் அமைந்து, பழமை தொட்டு வந்த வல்லாண்மை உடையதே சிறந்த படையாகும். 764

5. **கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்**
ஆற்ற லதுவே படை.

தன்னைக் கூறுபடுத்தும் காலக்கோளே (கூற்று) சீற்றம் கொண்டு தாக்கவரினும் அஞ்சாமல் ஒன்று கூடி எதிர்த்து நிற்கும் ஆற்றல் உடையதே படை ஆகும். 765

6. **மறமானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்**
எனநான்கே ஏமம் படைக்கு.

வீரமும், மானமும், பகை வீரரை அன்றி மற்றவர்க்கு இடையூறு செய்யாத பெருமையான செல்லுகையும், போர்ச் செயலில் கொள்ளும் தெளிவும் என்னும் நான்குமே படைக்குப் பாதுகாப்பு ஆகும். 766

7. **தார்தாங்கிச் செல்வது தானை, தலைவந்த**
போர்தாங்கும் தன்மை அறிந்து.

எதிரிட்டு வந்த பகைப்படையின் போரைத் தடுக்கும் வகையை அறிந்து முன்னே வரும் படையைத் தடுத்து நிறுத்தி அதன் மேற்சென்று பொருவதே போர்ப்படையாகும். 767

8. **அடற்றகையும் ஆற்றலும் இல்லெனினும் தானை**
படைத்தகையால் பாடு பெறும்.

பகைமேற் சென்று அழிக்கும் திறமையும், பகைப்படை வந்து தாக்கின் அதனைத் தடுக்கும் ஆற்றலும், ஒரு படைக்கு இல்லை எனினும் அப்படையின் தோற்றம் நடைப் பெருமைகளால் உயர்வு பெறும். 768

9. **சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும்**
இல்லாயின் வெல்லும் படை.

இழிந்த பழக்க வழக்கங்களும் நீங்கா வெறுப்பும் வறுமைத் துயருமில்லாது அமைந்ததே வெற்றி கொள்ளும் படையாகும். 769

10. **நிலைமக்கள் சால உடைத்தெனினும், தானை**
தலைமக்கள் இல்வழி இல்.

போரில் நிலை பெற நிற்கும் பழமையான வீரர் பலரையுடையதாக இருப்பினும், தகுதி வாய்ந்த தலைமக்கள் இல்லாத படை தகுதி இல்லாத படையே ஆகும். 770

78. படைச் செருக்கு

(படையின் பெருமிதம்)

1. **என்னைமுன் நில்லன்மின் தெவ்விர்; பலர்என்னை**
முன்னின்று கல்நின் றவர்.

"பகைவரே, என் தலைவன் முன் போரிடுதற்கு நில்லாதீர், இதற்கு முன், என் தலைவன் முன்னே நின்று போரிட்டு இறந்தமையால் நடுகல்லாக நின்றவர் பலராவர்." 771

2. **கான முயல்எய்த அம்பினில், யானை**
பிழைத்தவேல் ஏந்தல் இனிது.

காட்டில் தாவியோடும் முயலுக்குக் குறி வைத்து வெற்றி கொண்ட அம்பை ஏந்துதலைக் காட்டிலும், பெருமிதமாக எதிரிடும் யானைமேல் குறி வைத்துத் தப்பிய வேலைப் பிடித்தல் பேரின்பம் தருவதாகும். (எளியவரை வெல்வதனினும் வலியவரைப் போரிட நினைப்பதும் பெருமையாகும்.) 772

3. **பேராண்மை என்ப தறுகண்; ஒன்றுற்றக்கால்**
ஊராண்மை மற்றதன் எஃகு.

ஒருவர்க்குப் பேராண்மை என்று சொல்லப்படுவது போர்க்களத்தில் காட்டும் வீரமாம்; அக்களத்தில் பகைவர்க்கு ஒரு குறைபாடு வந்ததானால், உடனே செய்யும் உதவி, அப்பேராண்மையிற் சிறந்த பேராண்மையாகும். 773

4. **கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்**
மெய்வேல் பறியா நகும்.

தன் கையில் இருந்த வேலை, ஒரு யானை மேல் ஏவிப் போக விட்டு வருகின்றவன், தன் உடல் மேல் பட்ட வேலைப் பறித்துப் போர் செய்தற்குக் கருவி வாய்த்தது என மகிழ்வான். 774

5. **விழித்தகண் வேல்கொண் டெறிய, அழித்திமைப்பின்**
ஓட்டன்றோ வன்க ணவர்க்கு.

போர்க்களத்தில் பகைவர் வேலைக் கொண்டு எறிய, திறந்திருந்த தம் கண்ணை மூடித் திறந்தார் எனினும் அது வலிய வீரர்க்குப் பழியாகும். 775

6. **விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்**
வைக்கும்தன் நாளை எடுத்து.

சிறந்த வீரன், போர்க்குச் சென்று புகழ் அடையாத நாள்களையெல்லாம், தன் வாழ்நாள்களுள் பயனிலா நாள்களாக எண்ணிக் கழித்து வைப்பான் (விழுப்புண் - புகழுக்குக் காரணமான புண்) **776**

7. **சுழலும் இசைவேண்டி, வேண்டா உயிரார்**
கழல்யாப்புக் காரிகை நீர்த்து.

உலகளாவிய புகழை விரும்பி, உயிரைப் பொருளாக எண்ணாத வீரர், வீரக்கழல் அணிதல், அக்கழலுக்குப் பேரழகு செய்யும் தன்மையதாகும். **777**

8. **உறின்உயிர் அஞ்சா மறவர், இறைவன்**
செறினும்சீர் குன்றல் இலர்.

போர் உண்டாயின் தம் உயிருக்கு அஞ்சாத வீரர், ஆட்சியாளன் ஒருக்கால் தம்மேல் சினங்கொண்டிருந்தாலும் அது நோக்கித் தம் பகையிடத்து வீறு காட்டுதலில் குறையார். **778**

9. **இழைத்த திகவாமைச் சாவாரை, யாரே**
பிழைத்த தொறுக்கிற் பவர்.

'இது செய்யேன் எனில் உயிர்விடுவேன்' என்று சொல்லிய வஞ்சினம் தப்பாமல் உயிர் விடுபவரை, 'இவர் இது செய்தார் அல்லர்' என்று சொல்லித் தண்டிப்பவர் எவர்? **779**

10. **புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்கா**
டிரந்துகோள் தக்க துடைத்து.

தம்மைக் காக்கும் தலைமையாளர் கண்ணில் நீர் பெருகுமாறு சாகின்ற சாவு வருமானால் அது கெஞ்சிக் கேட்டும் பெற்றுக் கொள்ளத் தக்க பெருமையுடையதாகும். **780**

79. நட்பு

(தோழமைச் சிறப்பு)

1. **செயற்கரிய யாவுள நட்பின்? அதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு?**

ஒருவர் வாழ்வில் நட்புச் செய்தல்போல் செய்தற்கு அரியவை எவை உள்ளன? செயலாற்றும் போதும் அந்நட்புப் போல் அரிய பாதுகாப்பாக இருப்பவை எவை உள்ளன? (எவையும் இல்லை) 781

2. **நிறைநீர நீரவர் கேண்மை, பிறைமதிப்
பின்நீர பேதையார் நட்பு.**

அறிவாளர் நட்பு, வளர்பிறை போல் படிப்படியே வளர்ந்து முழுமையாம் தன்மையது; அறிவிலார் நட்பு, முழுமதி படிப்படியே தேய்ந்து இல்லாமல் போகும் தன்மையது. 782

3. **நவில்தொறும் நூல்நயம் போலும், பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு.**

படிக்குந்தோறும் சிறந்த நூலில் உண்டாகும் (உள்ளார்ந்த) இன்பம் போல் பழகுந்தோறும் பண்பு மிக்கவர் நட்பு இன்பத்தை உண்டாக்கும். 783

4. **நகுதற் பொருட்டன்று நட்டல்; மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு.**

ஒருவரோடு ஒருவர் நட்புக் கொள்வது சிரித்து மகிழ்வதற்காக மட்டுமன்று; வரம்பு மீறிச் செல்லும் இடத்தில் முற்படச் சென்று இடித்துக் கூறுவதற்கும் ஆகும். 784

5. **புணர்ச்சி பழகுதல் வேண்டா; உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்.**

நட்புரிமை உண்டாவதற்கு ஒருவரை ஒருவர் கூடுதலும் பழகுதலும் வேண்டுவன அல்ல; உள்ளத்தால் கொள்ளும் ஒத்த உணர்வே நட்பாகிய உரிமையைத் தந்து விடும். 785

6. **முகம்நக நட்பது நட்பன்று; நெஞ்சத்**
தகம்நக நட்பது நட்பு.

முகம் மட்டும் மலருமாறு நட்புக் கொள்வது நட்பாகாது; முகத்துடன் நினைவின் உள்ளிடமாகிய மனமும் மலருமாறு நட்புக் கொள்வதே நட்பாகும். 786

7. **அழிவி னவைநீக்கி ஆறுய்த் தழிவின்கண்**
அல்லல் உழப்பதாம் நட்பு.

நண்பனுக்கு கேடாவனவற்றை விலக்குதல், அவனை நல்வழியில் செலுத்துதல், (தவிர்க்க முடியாமல்) கேடு வருமாயின் அவனொடும் துன்புறுதல் என்பன நட்பியல்புகள் ஆகும். 787

8. **உடுக்கை இழந்தவன் கைபோல, ஆங்கே**
இடுக்கண் களைவதாம் நட்பு.

இடுப்பு உடை பறி கொடுத்தவனின் கை தானே போய் உடனே மறைத்து உதவுதல் போல், நண்பனுக்குத் துன்பம் வருங்கால் உடனே போய் அத்துன்பத்தை நீக்குதல் நட்பாகும். 788

9. **நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனில், கொட்பின்றி**
ஒல்லும்வாய் ஊன்றும் நிலை.

நட்பிற்கு அமைந்த மேலான இருப்பிடம் யாது என்றால், மனச்சுழற்சி இல்லாமல் தன்னால் முடிந்த இடங்களிலெல்லாம் உறுதிப்பாடாக இருந்து உதவுதலாகும். 789

10. **'இனையர் இவரெமக் கின்னம்யாம்' என்று**
புனையினும் புல்லென்னும் நட்பு.

இவர் எமக்கு இத்தகைய அன்பினர்; யாம் அவர்க்கு இத்தகைய தன்மையுடையோம் என்று தம்முள், புனைந்து கூறினும் அது கீழானது என்று சொல்லப்படும் நட்பாகும். 790

80. நட்பாராய்தல்

(தோழமைக்கு உரியவரை ஆராய்தல்)

1. **நாடாது நட்டலின் கேடில்லை; நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு.**

ஆராயாது நட்புச் செய்வதைப்போல் கேடானது இல்லை; ஏனெனில், நட்புக் கொண்டபின் நட்புக் கொண்டவர்க்கு அதனை விடுவது எளிது இல்லை. 791

2. **ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை, கடைமுறை
தான்சாம் துயரம் தரும்.**

பலகாலும் பலவகையும் ஆராய்ந்து கொள்ளாதவனின் நட்பு, இறுதியில் தானே நொந்து சாவது போலும் துயரத்தைத் தரும். 792

3. **குணனும் குடிமையும் குற்றமும் குன்றா
இனனும் அறிந்துயாக்க நட்பு.**

ஒருவனது குணத்தையும் அவனது குடிப் பிறப்பையும் குறைகளையும் குறைவில்லாத தொடர்பினரையும் அறிந்து நட்புச் செய்தல் வேண்டும். 793

4. **குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்
கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு.**

நல்ல குடியில் பிறந்து, தனக்கு உண்டாகும் பழிக்கு வெட்கமுறுகின்றவனை, அவன் விரும்புகின்றவற்றைக் கொடுத்தும் நட்புக் கொள்ளுதல் வேண்டும். 794

5. **அழச்சொல்லி அல்லது இடித்து வழக்கறிய
வல்லார்நட் பாய்ந்து கொளல்.**

செருக்கும்போது அழுமாறு சொல்லியும், தவறும் போது இடித்துக் கூறியும், உலக வழக்கியல் அறிய வல்லவர் நட்பை, ஆராய்ந்து தேடிக் கொள்ளுதல் வேண்டும். 795

6. **கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை**
நீட்டி அளப்பதோர் கோல்.

வறுமையும் இடரும் வருவதிலும் ஒரு நன்மை உண்டு! அதுவே, நெருக்கடி நிலையிலும் நம் நண்பர் இவர் என்பதை நீள அளந்து காட்டுகின்ற அளவு கோலாகும். **796**

7. **ஊதியம் என்ப தொருவற்குப் பேதையார்**
கேண்மை ஒரீஇ விடல்.

ஒருவனுக்கு மேலான வருவாய் என்று சொல்லப்படுவது, அறிவிலிகளின் நட்பை அறவே விலக்கி விடுதல் ஆகும். **797**

8. **உள்ளற்க உள்ளம் சிறுகுவ; கொள்ளற்க**
அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு.

ஒருவன் தன் உள்ளத்தைச் சிறுகச் செய்வனவற்றை நினையாதிருத்தல் வேண்டும்; அவ்வாறே, துன்பம் வரும்போது கை விட்டுச் செல்வார் நட்பைக் கொள்ளாதிருத்தல் வேண்டும். **798**

9. **கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை**
உள்ளினும் உள்ளம் சுடும்.

கேடுவரும் பொழுதில் கைவிட்டுச் செல்பவர் நட்பு, (போர்க்களத்தில் நின்று பகைவரால்) அழிவுறுங்காலத்தில் நினைத்தாலும் நினைத்த உள்ளத்தைச் சுடுவதாகும். **799**

10. **மருவுக மாசற்றார் கேண்மை; ஒன் றீத்தும்**
ஒருவுக ஒப்பிலார் நட்பு.

குற்றமற்றவர் நட்பினை அவர் விரும்பும் ஒன்றைக் கொடுத்தும் தழுவிக் கொள்க; பொருந்தாதார் நட்பினை அவர் விரும்பும் ஒன்றைக் கொடுத்தாவது விலக்கிக் கொள்க. **800**

81. பழைமை

(நெடுங்காலத் தொடர்பின் தன்மை)

1. **பழைமை எனப்படுவ தியாதெனின் யாதும்**
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு.

பழைமை என்று உயர்ந்தோரால் சொல்லப்படுவது எது என்றால், அது மிகப் பழகிய நண்பர் தம் உரிமையால் செய்வனவற்றைச் சிறிதும் அழித்திடாது ஏற்றுக் கொள்ளும் நட்பாகும். 801

2. **நட்பிற் குறுப்புக் கெழுதகைமை மற்றதற்**
குப்பாதல் சான்றோர் கடன்.

நட்பு என்னும் ஓர் உருவுக்கு உறுப்புகளாவன, நண்புடையார் செய்யும் உரிமைச் செயல்கள்; அந்த உரிமைச் செயல்களுக்குச் சுவை சேர்ப்பவராக அமைதல் உயர்ந்தோர் கடமையாம். 802

3. **பழகிய நட்பெவன் செய்யும், கெழுதகைமை**
செய்தாங் கமையாக் கடை?

உரிமையால் நண்பர்கள் செய்தவற்றைத் தான் செய்தனபோல் ஒப்பி அமையாத இடத்தில், பழைமையாய் அமைந்ததாம் நட்பு என்ன பயனைச் செய்ததாகும். 803

4. **விழைதகையான் வேண்டி இருப்பர், கெழுதகையான்**
கேளாது நட்டார் செயின்.

உரிமை நண்பு உடைமையால் தம்மைக் கேளாமல் ஒன்றை நண்பர் செய்தால், அந்த உரிமையை விரும்பும் தன்மையால் அச் செயலையும் விரும்பியிருப்பர் பழைமையர். 804

5. **பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுணர்க**
நோதக்க நட்டார் செயின்.

வருந்தத் தக்கவற்றை நண்பர் ஒருக்கால் செய்தார் ஆயினும், அதனை அறியாமையால் செய்தது என்றோ மிகுந்த உரிமையால் செய்தது என்றோ உணர்தல் வேண்டும். 805

6. **எல்லைக்கண் நின்றார் துறவார், தொலைவிடத்தும்**
தொல்லைக்கண் நின்றார் தொடர்பு.

தொலைவான இடத்தில் தாம் தொல்லைப்படுங்கால் நிலைபெற நின்றவர் பழந்தொடர்பை, நட்பின் உயர் எல்லையில் நின்றவர் என்றும் கைவிடார். 806

7. **அழிவந்த செய்யினும் அன்பறார், அன்பின்**
வழிவந்த கேண்மை யவர்.

அன்பின் வழியால் உண்டாகிய உரிமை நட்பினை உடையவர், பழகியவர் தமக்கு அழிவு தரும் செயல்களைச் செய்தார் எனினும், அதனை நோக்கி அன்பு நீங்கார். 807

8. **கேளிழுக்கம் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு**
நாளிழுக்கம் நட்டார் செயின்.

தம் பழைமையான நண்பர் குற்றம் செய்தார் எனக் கூறவும் ஒப்பாத நட்புறுதி உடையவர்க்கு அந்நண்பர் குற்றம் செய்யின் அது நட்புக் கொண்ட நாளுக்கெல்லாம் இழிவுடையதாகி விடும். 808

9. **கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை**
விடாஅர் விழையும் உலகு.

இடையறவு படுதல் இல்லாமல் தொடர்ந்து வந்தவரின் பழைமையான நட்பினைக் கைவிடாது போற்றுபவரை, உயர்ந்தோரும் விரும்பிப் போற்றுவர். 809

10. **விழையார் விழையப் படுப, பழையார்கண்**
பண்பின் தலைப்பிரியா தார்.

பழைமையான நண்பரிடத்தில் தம் உரிமை இயல்பில் இருந்தும் நீங்காதவர், தம்மை விரும்பாதவராலும் விரும்பப்படுபவர் ஆவர். 810

82. தீ நட்பு

(தீயவரோடு கொண்ட தோழமை)

1. **பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை**
பெருகலின் குன்றல் இனிது.

(நீர் வேட்கையுள்ள போதில்) பருகுவார் போன்ற நட்பார்வம் உடையவர் எனினும், பண்பு இல்லாதவர் நட்பு, பெருகுவதைப் பார்க்கிலும் குறைவதே நன்மையாம். 811

2. **உறின்நட் டறின்ஒருஉம் ஒப்பிலார் கேண்மை**
பெறினும் இழப்பினும் என்?

வளம் உள்ள காலத்தில் நட்பாயிருந்து, வளம் போகும் காலத்தில் தாமும் போகும் மக்கட் போலிகளின் நட்பைப் பெற்றால்தான் என்ன? இழந்தாலும் தான் என்ன? 812

3. **உறுவது சீர்தூக்கும் நட்பும், பெறுவது**
கொள்வாரும், கள்வரும் நேர்.

தமக்கு வரும் பயனையே அளவிட்டுப் பார்க்கும் நட்பினரும், நட்பைக் குறித்துப் பாராது அவர் பொருளையே கொள்ளக் கருதுவாரும், (உடன் பழகியிருந்து கவரும்) கள்வரும் தன்மையால் ஒப்பானவர். 813

4. **அமரகத் தாற்றறுக்கும் கல்லாமா அன்னார்**
தமரின் தனிமை தலை.

போர்வந்த பொழுதில் கீழறுப்புச் செய்யும் நல்லதைக் கல்லாத விலங்கு போன்றவர் தம் நண்பராக இருத்தலினும் தனித்து இருத்தலும் நலமாகும். 814

5. **செய்தேமம் சாராச் சிறியவர் புன்கேண்மை**
எய்தலின் எய்தாமை நன்று.

நட்புச் செய்தும் பாதுகாப்புத் தாராத சிறுமையரின் தீய நட்பை அடைவதிலும், அடையாதிருப்பதே நன்மையாகும். 815

6. **பேதை பெருங்கெழீஇ நட்பின், அறிவுடையார்**
ஏதின்மை கோடி உறும்.

அறிவிலியின் மிக நெருங்கிய நட்பைப் பார்க்கிலும் அறிவுடைய நல்லவன் பகைமை கோடி மடங்கு நல்லதாகும். **816**

7. **நகைவகைய ராகிய நட்பின், பகைவரால்**
பத்தடுத்த கோடி உறும்.

சிரித்து மகிழ்வதையே நட்பாகக் கொண்டவர் நட்பை விட, (பண்புடைய) பகைவரால் பலப்பல கோடி நன்மைகள் உண்டாகும். **817**

8. **ஒல்லும் கருமம் உடற்று பவர்கேண்மை**
சொல்லாடார் சோர விடல்.

தம்மால் செய்ய முடியும் செயலையும் செய்ய விடாமல் கெடுப்பவர் நட்பைச் சொல்லுதலும் இல்லாமல், நழுவுமாறு விட்டு விடுதல் நல்லது. **818**

9. **கனவினும் இன்னாது மன்னோ, வினைவேறு**
சொல்வேறு பட்டார் தொடர்பு.

செய்யும் செயல் வேறாகவும், சொல்லும் சொல் வேறாகவும் அமைந்தவர் நட்பு, கனவில் காணினும் துன்பம் தருவதாம். **819**

10. **எனைத்தும் குறுகுதல் ஓம்பல், மனைக்கெழீஇ**
மன்றில் பழிப்பார் தொடர்பு.

வீட்டில் தனித்திருக்கும் போது நெருங்கியிருந்து, பலர் கூடிய அவையில் பழிப்பவர் நட்பைச் சிறிதளவும் நெருங்க விடாமல் காத்துக் கொள்ள வேண்டும். **820**

83. கூடா நட்பு

(மனத்தொடு பொருந்தாத தோழமையியல்பு)

1. **சீரிடங் காணின் எறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு.**

உள்ளத்தொடு பொருந்தாமல் பொருந்தியவர் போல் காட்டுவார் நட்பு, சரியான இடம் வாய்க்கக் கண்டால் தாங்குவதுபோல இருந்து வெட்டுதற்கு உதவும் (கொல்லர்) பட்டடைக்கு ஒப்பாகும். *821*

2. **இனம்போன் றினமல்லார் கேண்மை, மகளிர்
மனம்போல் வேறு படும்.**

ஒன்றுபட்டவர்போல் காட்டி ஒன்றுபடாதவர் நட்பு, இருமனப் பெண்டிர் மனம் போல் உள்ளொன்றும் புறத்தொன்றுமாய் வேறுபட்டிருக்கும். *822*

3. **பலநல்ல கற்றக் கடைத்தும், மனநல்லர்
ஆகுதல் மாணார்க் கரிது.**

பலவகையான நல்ல நூல்களைக் கற்றிருந்தாலும் அந்நூற்கல்வியின் பயனாக நன்மனத்தாராக நட்புக் கொள்ளல், மாண்பு இல்லாதவர்க்கு அரிதாகும். *823*

4. **முகத்தின் இனிய நகாஅ, அகத்தின்னா
வஞ்சரை அஞ்சப் படும்.**

முகத்தளவில் இனியவராக மகிழ்வு காட்டி, மனத்தளவில் தீமையைக் கொண்டுள்ள வஞ்சகரோடு நட்புக் கொள்ளுதற்கு அஞ்சுதல் வேண்டும். *824*

5. **மனத்தின் அமையா தவரை, எனைத்தொன்றும்
சொல்லினால் தேறற்பாற் றன்று.**

உள்ளத்தால் ஒன்றுபடப் பொருந்தி வராதவரை அவர் சொல்லைக் கொண்டு எவ்வளவு சிறிதளவாயினும் தெளிந்து நம்புதல் ஆகாது. *825*

6. **நட்டார்போல் நல்லவை சொல்லினும், ஒட்டார்சொல் ஒல்லை உணரப் படும்.**

உள்ளார்ந்த அன்புடைய நண்பர் போல் நல்லவற்றைச் சொன்னார் எனினும், உள்ளத்தால் பொருந்தாதவர் சொல், விரைவில் உண்மை உணரச் செய்து விடும். 826

7. **சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க வில்வணக்கம் தீங்கு குறித்தமை யான்.**

வில்வளைதல், தீமையை விளைப்பதற்காகவே அமைதலால், பகைவரிடத் துண்டாகும் பணிவான சொற்களை உண்மையெனக் கொள்ளாது விடுக. 827

8. **தொழுதகை யுள்ளும் படையொடுங்கும், ஒன்னார் அழுதகண் ணீரும் அனைத்து.**

பகைவர் தொழுகின்ற கையினுள்ளும் கொலைக் கருவி மறைந்திருக்கும்; அவர் அழுத கண்ணீரும் அது போன்றதேயாம். 828

9. **மிகச்செய்து தம்எள்ளு வாரை நகச்செய்து நட்பினுள் சாப்புல்லற் பாற்று.**

வெளிப்பட நட்பை மிகச் செய்து, உள்ளே நம்மை இகழ்பவரை, நாமும் வெளிப்பட அவர் மகிழுமாறு செய்து உள்ளத்து நட்பை ஒழிந்துபோகும் படி செய்தல் முறைமை. 829

10. **பகைநட்பாம் காலம் வருங்கால், முகநட் டகநட் பொரீஇ விடல்.**

பகையாக இருந்தவர் நண்பினராக வருங்காலம் உண்டாயின், அவர்க்கு முகத்தான் நட்புக் காட்டி, அகத்தான் நட்பை ஒதுக்கி விடுதல் வேண்டும். 830

84. பேதைமை

(அறியாமை)

1. **பேதைமை என்பதொன் றியாதெனின் ஏதங்கொண்**
டூதியம் போக விடல்.

பேதைமை என்று சொல்லப்படுவது ஒன்று எது என்றால், கேடானவற்றைக் கைக்கொண்டு நன்மையானவற்றைக் கைவிடுதலாகும். *831*

2. **பேதைமை யுள்ளெல்லாம் பேதைமை; காதன்மை**
கையல்ல தன்கண் செயல்.

அறியாமைகளுள் எல்லாம், அறியாமையாவது ஒழுக்க மற்ற தன்மைகளின் மேல் மிகுந்த விருப்பங் காட்டும் செயலாகும். *832*

3. **நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்**
பேணாமை பேதை தொழில்.

நாணத் தக்கவற்றுக்கு நாணாமை, தேட வேண்டியவற்றைத் தேடாமை, அன்பு செலுத்தத் தக்காரிடத்து அன்பு செலுத்தாமை, போற்றத்தக்க எவற்றையும் போற்றாமை என்பவை அறிவிலியின் செயலாகும். *833*

4. **ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்**
பேதையின் பேதையார் இல்.

நன்றாகக் கற்றுணர்ந்தும், கற்றவற்றைப் பிறர்க் குரைத்தும், தான் அவ்வழியில் அடங்கி நடவாத அறிவிலாரின் அறிவிலார் இல்லை. *834*

5. **ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்**
தான்புக் கழுந்தும் அளறு.

அறியாமையாகிய ஒன்றற்கே ஆட்பட்டுச் செயல் புரியும் அறிவிலி, பின்வரும் எக்காலமும் துன்பமென்னும் புதைசேற்றுள் புகுந்து அழுந்துவான். *835*

6. **பொய்படும் ஒன்றோ புனைபூணும் கையறியாப்**
பேதை வினைமேற் கொளின்.

செயலாற்றும் வகையறியாத அறிவிலி ஒரு செயலைச் செய்ய மேற்கொண்டால், அச்செயல் நிறைவேறாமை என்பதொன்று மட்டுமா? நிறைவேறாமைக்குப் பிறர் மேல் பழிபுனைந்துரைத்தலும் செய்யும். **836**

7. **ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர், பேதை**
பெருஞ்செல்வம் உற்றக் கடை.

அறிவிலி ஒருவன் பெருஞ்செல்வத்தைப் பெற்ற போது அதனைத் தொடர்பில்லாத எவரெவரோ வேண்டுமாறெல்லாம் நுகர, அவன் உற்றார் உறவினர் உண்ணும் உணவின்றியும் பசித்துக் கிடப்பர். **837**

8. **மையல் ஒருவன் களித்தற்றால், பேதைதன்**
கையொன் றுடைமை பெறின்.

அறிவில்லான் ஒருவன் தன் கையில் பெருஞ் செல்வம் ஒன்றைப் பெறுவானாயின் அது, வெறியால் மயங்கி-யிருப்பவன் ஒருவன், மேலும் மதுவுண்டு மயங்கினாற் போன்றது. **838**

9. **பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண்**
பீழை தருவதொன் றில்.

மிகவும் இனிமையாவது, அறிவிலார் உறவாகும்; ஏனெனில் அவ்வுறவு, (அறிவாளர் உறவு போல்) பிரியுமிடத்து எந்தவொரு துன்பமும் தருவது இல்லை. **839**

10. **கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால், சான்றோர்**
குழாஅத்துப் பேதை புகல்.

கல்வி வல்ல சான்றோர் அவையில், அறிவிலி ஒருவன் புகுதல், தூயதல்லாததை மிதித்த காலைக் கழுவாமல், தூய்மை போற்றப்படும் இடத்தில் வைத்தல் போன்றது. **840**

85. புல்லறிவாண்மை

(அற்ப அறிவினர் தன்மை)

1. **அறிவின்மை இன்மையுள் இன்மை, பிறிதின்மை
இன்மையா வையா துலகு.**

இல்லாமைகளுள் எல்லாம் இல்லாமையாவது அறிவில்லாமை; மற்றை இல்லாமைகள் உண்டாயினும் அவற்றை இல்லாமையாக உலகம் கருதுவது இல்லை. 841

2. **அறிவிலான் நெஞ்சுவந் தீதல், பிறிதியாதும்
இல்லை பெறுவான் தவம்.**

அறிவிலான் மனமுவந்து ஒன்றைத் தருதற்குப் பிறிதொரு காரணமுமில்லை; அது பெறுகின்றவன் தவவேடப் பேறேயாகும். 842

3. **அறிவிலார் தாம்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்கும் செய்தல் அரிது.**

அறிவில்லாதவர் தமக்குத் தாமே உண்டாக்கிக் கொள்ளும் துன்பம், பகைவராலும் செய்தற்கு அருமை உடையதாகும். 843

4. **வெண்மை எனப்படுவ தியாதெனின், 'ஒண்மை
உடையம்யாம்' என்னும் செருக்கு.**

அறிவில்லாத வெள்ளைத் தன்மை என்று சொல்லப்படுவது எது என்றால், அறிவிலார் 'யாம் ஒளிமிக்க அறிவுடையோம்' என்று கொள்ளும் பெருமிதமாகும். 844

5. **கல்லாத மேற்கொண் டொழுகல், கசடற
வல்லதூஉம் ஐயம் தரும்.**

தாம் படியாதவற்றையும், படித்ததாக மேற்கொண்டு நடத்தலால், அவர்கள் குற்றமறப் படித்துத் தெளிந்ததும் பிறர்க்கு ஐயம் தருவதாகி விடும். 845

**6. அற்றம் மறைத்தலோ புல்லறிவு, தம்வயின்
குற்றம் மறையா வழி.**

தம்மிடத்து உண்டாகிய குற்றத்தை உணர்ந்து அதனை நீக்காத (மறையாத) விடத்துத் தம் மறைவு உறுப்புகளை உடையால் மறைத்தல் மட்டும் நல்லறிவாகி விடுமோ? அது புல்லறிவேயாம். 846

**7. அருமறை சோரும் அறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு.**

கமுக்கமாக வைக்கத் தக்க அரிய செய்திகளையும் எளிதாகச் சொல்லி விடும் அறிவில்லாதவன், (பிறர் செய்யாத) பெருந்துன்பத்தையும் தானே தனக்குச் செய்து கொள்வான். 847

**8. ஏவவும் செய்கலான்; தான்தேறான்; அவ்வுயிர்
போஒம் அளவும்ஓர் நோய்.**

ஏவியவாறு செய்யவும் மாட்டான்; தானாகவும் தெளிந்த செய்யவும் மாட்டான்; அத்தகையன்; உயிர் நீங்கிப் போகுமளவும் (தொடர்புடையார்க் கெல்லாம்) ஒரு நோயே ஆவான். 848

**9. காணாதாற் காட்டுவான் தான்காணான்; காணாதான்
கண்டானாம் தான்கண்ட வாறு.**

அறியாத ஒருவனுக்கு அறிவிக்க முற்படுபவனும் அறியாதவனே ஆவான்; அவ்வறியாதவன் (தவறாக) அறிந்திருந்தவாறே அறிவானே அன்றி வேறு அறியான். (அவனுக்கு அறிவு புகட்ட முடியாது) 849

**10. உலகத்தார் உண்டென்ப தில்லென்பான், வையத்
தலகையா வைக்கப் படும்.**

உயர்ந்தோர், உண்மைப் பொருளாகக் கூறுவனவற்றை இன்மைப் பொருள் என்பவன், இவ்வுலகில் பேயனாகக் கொள்ளப்படுவான். 850

86. இகல்

(மாறுபாட்டின் தன்மை)

1. **இகலென்ப எல்லா உயிர்க்கும், பகலென்னும்
பண்பின்மை பாரிக்கும் நோய்.**

எல்லா உயிர்களுக்கும் பிரித்தல் என்னும் பண்பில்லாமையைப் பெருக்கும் கொடிய துன்பத்தை அறிவுடையோர் 'இகல்' என்று கூறுவர். 851

2. **பகல்கருதிப் பற்றா செயினும், இகல்கருதி
இன்னாசெய் யாமை தலை.**

தம்மோடு பிரிந்திருத்தல் கருதி, ஒருவர் விரும்பாத செயலைச் செய்தாலும், அம்மாறுபாடு கருதி அவர்க்குத் தீமை செய்யாதிருத்தல் சிறப்பு ஆகும். 852

3. **இகலென்னும் எவ்வநோய் நீக்கின், தவலில்லாத்
தாவில் விளக்கம் தரும்.**

ஒருவன் இகல் என்று சொல்லப்படும் துன்ப நோயை நீக்கிவிட்டால், அஃது அவனுக்குக் கெடுதல் இல்லாததும் குற்றமில்லாததுமாம் புகழைத் தரும். 853

4. **இன்பத்துள் இன்பம் பயக்கும், இகலென்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்.**

இகல் என்று சொல்லப்படும் துன்பத்துள் பெரிய துன்பம் ஒருவனிடத்து இல்லாது ஒழியுமானால், அது அவனுக்கு இன்பத்துள் பெரிய இன்பத்தைத் தரும். 854

5. **இகலெதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே
மிகலூக்கும் தன்மை யவர்?**

மனத்துத் தோன்றுகின்ற மாறுபாட்டைத் தாமே விலக்கி நடக்க வல்லவரை, மாறுபாட்டில் மேலும் வளர்க்கும் தன்மையவர் எவர்? (எவருமில்லை) 855

6. **இகலின் மிகலினி தென்பவன் வாழ்க்கை**
தவலும் கெடலும் நணித்து.

மாறுபாட்டில் மிகுதலை இனிது என்பவனின் வாழ்க்கை, அழிவதும் வளமை கெடுவதும் விரைவில் உண்டாக்கும். **856**

7. **மிகல்மேவல் மெய்ப்பொருள் காணார், இகல்மேவல்**
இன்னா அறிவி னவர்.

மாறுபாடு என்பதைத் தம்மிடத்துக் கொண்ட தீய அறிவினர், அதனை மேலும் மிகுதிப்படக் கொள்வாராயின் (எளிதாகக் காணும்) உண்மைப் பொருளையும் காணமாட்டார். **857**

8. **இகலிற் கெதிர்சாய்தல் ஆக்கம்; அதனை**
மிகலூக்கின் ஊக்குமாம் கேடு.

மாறுபாட்டிற்கு எதிர் நில்லாமல் ஒதுங்கிச் செல்லுதல் நன்மையாகும். அம்மாறுபாட்டை மிகுமாறு ஊக்கப்படுத்தினால், அது அழிவையே ஊக்கப்படுத்தும். **858**

9. **இகல்காணான் ஆக்கம் வருங்கால், அதனை**
மிகல்காணும் கேடு தரற்கு.

நன்மை வரும் போதில் மாறுபாட்டை நினையான்; ஆனால், தனக்குத்தானே கேடு தருவதற்கு அம்மாறுபாட்டை மிகுதியாகக் கொள்வான். **859**

10. **இகலானாம் இன்னாத வெல்லாம்; நகலானாம்**
நன்னயம் என்னும் செருக்கு.

மாறுபாடு என்பதனாலேயே தீமையானவை எல்லாம் உண்டாகும்; நல்ல நட்பு என்பதனால், நல்லுதவி என்னும் பெருமிதம் உண்டாகும். **860**

87. பகை மாட்சி

(பகையின் சிறப்பியல்பு)

1. **வலியார்க்கு மாறேற்றல் ஓம்புக; ஓம்பா**
மெலியார்மேல் மேக பகை.

தம்மினும் வலியவர்க்குப் பகையாதலைத் தவிர்த்துக் கொள்க; தம்மைக் காத்துக் கொள்ளுதலில்லாத மெலியவர் மேல் பகை கொள்வதை விரும்புக. *861*

2. **அன்பிலன்; ஆன்ற துணையிலன்; தான்துவ்வான்;**
என்பரியும் ஏதிலான் துப்பு?

அன்பு இல்லாதவனாகவும் அமைந்த துணை இல்லாதவனாகவும் தானும் வலிமை இல்லாதவனாகவு-மிருப்பவன் பகைவன் வலிமையை எவ்வாறு அழிப்பான்? (அழியான்) *862*

3. **அஞ்சும்; அறியான்; அமைவிலன்; ஈகலான்**
தஞ்சம் எளியன் பகைக்கு.

அஞ்சுபவனாய், அறியாதவனாய், பொருந்துதல் இல்லாதவனாய், ஈகையற்றவனாய் இருப்பவன், பகைவனுக்கு மிக எளியனாவன். *863*

4. **நீங்கான் வெகுளி நிறையிலன், எஞ்ஞான்றும்**
யாங்கணும் யார்க்கும் எளிது.

எப்போதும் சீறுபவனாய், நெஞ்சை நிறுத்தும் உறுதி இல்லாதவனாய் இருப்பவன், எப்பொழுதும் எங்கும் எவர்க்கும் எளியவன் ஆவன். *864*

5. **வழிநோக்கான்; வாய்ப்பன செய்யான்; பழிநோக்கான்;**
பண்பிலன்; பற்றார்க் கினிது.

செயலாற்றும் வழியை ஆராயான், வெற்றிக்கு வாய்ப்பான செயலைச் செய்யான், தன் மேல் வரும் பழியை எண்ணான், பண்பாடு இல்லான் இத்தகையன் பகை, பகைவர்க்கு இனிதாகும். *865*

6. **காணாச் சினத்தான்; கழிபெருங் காமத்தான்;
பேணாமை பேணப் படும்.**

விளைவை எண்ணிப் பாராத சினத்தினன், மிகப் பெருங் காமத்தினன் என்னும் இவர்கள் பகைமை பகைவரால் விரும்பிக் கொள்ளப்படும். (ஏனெனில் அப்பகையை வெல்லல் எளிது) *866*

7. **கொடுத்தும் கொளல்வேண்டும் மன்ற, அடுத்திருந்து
மாணாத செய்வான் பகை.**

தன்னை அடுத்து நெருங்கியிருந்து கொண்டு, தன் தகுதிக்குப் பொருந்தாத செயல்களைச் செய்பவன் எளிய பகையை, ஏதேனும் சிறந்த ஒன்றைக் கொடுத்தாவது கொள்ள வேண்டும். (அப்பகையை வெல்லல் எளிது) *867*

8. **குணனிலனாய்க் குற்றம் பலவாயின், மாற்றார்க்
கினனிலனாம் ஏமாப் புடைத்து.**

குணநலமில்லாதவனாய்க் குற்றங்கள் பலவற்றை உடையவனாய் ஒருவன் இருப்பின், அவன் துணை இல்லாதவன் ஆவன்; அத்தகையவனால் அவன் பகைவர்க்குப் பாதுகாப்பாகும். *868*

9. **செறுவார்க்குச் சேணிகவா இன்பம், அறிவிலா
அஞ்சும் பகைவர்ப் பெறின்.**

போரியல் அறிவு இல்லாத அஞ்சும் பகைவரைப் பெற்றால், அவரை அழிக்க முனைந்தவர்க்கு வெற்றி இன்பம் அப்பால்பட்டுச் செல்லாது; அடுத்தே இருக்கும். *869*

10. **கல்லான் வெகுளும் சிறுபொருள் எஞ்ஞான்றும்
ஒல்லானை ஒல்லா தொளி.**

போர்க்கலை கல்லாதவனைப் பகைத்துக் கொள்ளும் சிறுசெயலைக் கூடச் செய்யாதவனை எக்காலத்தும் புகழ் அடையாது. *870*

88. பகைத்திறம் தெரிதல்

(பகையின் இயல்பை ஆராய்தல்)

1. **பகையென்னும் பண்பி லதனை ஒருவன்**
நகையேயும் வேண்டாற்பாற் றன்று.

பகை என்று சொல்லப்படும் பண்பில்லாத செயலை ஒருவன் தன் விளையாட்டுக்காகக் கூட விரும்புதல் கூடாது. 871

2. **வில்லே ருழவர் பகைகொளினும், கொள்ளற்க**
சொல்லே ருழவர் பகை.

படைக் கருவியை ஏராகக் கொண்டு உழுபவராம் வீரர் பகையை ஒருவன் கொண்டாலும், சொல்லை ஏராகக் கொண்டு உழுபவராம் அறிஞர் பகையைக் கொள்ளாது விடுக. 872

3. **ஏமுற் றவரினும் ஏழை, தமியனாய்ப்**
பல்லார் பகைகொள் பவன்.

தனியனாக நின்று பலபேர் பகையைத் தேடிக் கொள்பவன், பித்துக் கொண்டவனிலும் அறிவில்லாதவன் ஆவன். 873

4. **பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்**
தகைமைக்கண் தங்கிற் றுலகு.

பகையாய் இருந்தாரையும் நட்பாகக் கொண்டு, நடக்கும் பண்புடையவனின் பெருந்தன்மையில் உலகம் நிலைத்துள்ளது. 874

5. **தன்துணை இன்றால், பகையிரண்டால், தானொருவன்**
இன்துணையாக் கொள்கவற்றின் ஒன்று.

தனக்குத் தக்க துணை இல்லை; ஆனால் பகை இரண்டாக உளது; அந்நிலையில், அப்பகை இரண்டனுள் ஒன்றை (யாதானும் ஒருவழியால்) தன் இனிய துணையாக்கிக் கொள்ள வேண்டும். 875

6. **தேறினும் தேறா விடினும் அழிவின்கண்**
தேறான் பகாஅன் விடல்.

பகையாக இருந்து கூடியவனை முன்னர்த் தெளிந்திருந்தாலும், தெளியாதிருந்தாலும் தனக்குக் கேடு வரும் பொழுதில், தெளியாமலும் பிரிந்து போக விடாமலும் விட்டு வைக்க வேண்டும். 876

7. **நோவற்க நொந்த தறியார்க்கு; மேவற்க**
மென்மை பகைவ ரகத்து.

தான் வருந்தியதை அறியாதவர்க்குத் தன் வருத்தத்தைக் கூறாதிருக்க வேண்டும்; அதுபோல் பகைவரிடத்துத் தன் வலிமை இல்லாமையைக் காட்டாதிருக்க வேண்டும். 877

8. **வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்**
பகைவர்கண் பட்ட செருக்கு.

வெற்றிவகையை அறிந்து, தன்னை அந்நிலைக்கு ஆளாக்கி, உறுதியால் காத்துக் கொண்டால், பகைவரிடத்தில் உண்டாகிய பெருமிதம் அழியும். 878

9. **இளைதாக முள்மரம் கொல்க; களையுநர்**
கைகொல்லும் காழ்த்த விடத்து.

இளையதாக இருக்கும்போதே முள் மரமாம் முளையைப் பிடுங்கி அழித்துவிட வேண்டும்; அது வளர்ந்து முதிர்ந்து விட்டால் அதனை அகற்றுவார் கையை வருத்தும் (பகையைத் தோன்றும் போதே அழித்துவிட வேண்டும்) 879

10. **உயிர்ப்ப உளரல்லர் மன்ற, செயிர்ப்பவர்**
செம்மல் சிதைக்கலா தார்.

தம்மைப் பகைத்தவரின் வலிமையை ஒரு முகமாகத் தாக்கி அழியாது விட்டவர், அவர்தம் தாக்குதலால் மூச்சு விடும்படியாய் உயிரோடு இருப்பவர் ஆகார் (பகைவரால் எளிதில் அழிக்கப்படுவர்). 880

89. உட்பகை

(உடனிருந்து அழிக்கும் பகை)

1. **நிழல்நீரும் இன்னாத இன்னா; தமர்நீரும்**
இன்னாவாம் இன்னா செயின்.

நிழலில் உள்ள நீர் குடிக்க இனிதே எனினும் தீமையைச் செய்யுமாயின் அது தீயதேயாம்; அதுபோல் தம்மவர் நல்லியல்பும் இனிதாயினும் அவர் தீமையைச் செய்யின் அது தீயதேயாம். 881

2. **வாள்போல் பகைவரை அஞ்சற்க; அஞ்சுக**
கேள்போல் பகைவர் தொடர்பு.

வாளைப் போல் வெளிப்படையாகத் தாக்கும் பகைவரைக் கண்டு அஞ்ச வேண்டுவதில்லை; உறவு போல் இருந்து கெடுக்கும் பகைவர் தொடர்புக்கே அஞ்சுதல் வேண்டும். 882

3. **உட்பகை அஞ்சித்தற் காக்க; உலைவிடத்து**
மட்பகையின் மாணத் தெறும்.

உட்பகை உடையவர்க்கு அஞ்சி, விழிப்பாக இருந்து தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும்; ஒரு சோர்வுண்டாகிய போது அளற்று மண்ணாகிய (புதை சேறாகிய) பகையினும் (அது உள்வாங்கி) மிக அழிக்கும். 883

4. **மனமாணா உட்பகை தோன்றின், இனமாணா**
ஏதம் பலவும் தரும்.

மனம் சீராகாத உட்பகை ஒருவனுக்கு உண்டாகுமானால், அது அவன் இனம் சீராகாத குற்றம் பலவற்றையும் தரும். 884

5. **உறல்முறையான் உட்பகை தோன்றின், இறல்முறையான்**
ஏதம் பலவும் தரும்.

நெருங்கிய உறவு முறையினால் ஒருவனுக்கு உட்பகை தோன்றினால், அஃது அவனுக்கு இறக்கும் முறையாகத் துன்பம் பலவற்றைத் தரும். 885

6. **ஒன்றாமை ஒன்றியார் கட்படின், எஞ்ஞான்றும்**
பொன்றாமை ஒன்றல் அரிது.

நெருங்கியவர்களிடத்து நெருங்காத உட்பகை உண்டாயின், அழியாதிருத்தல் அமைதல் எப்பொழுதும் இல்லை. (அழிதல் உறுதி). *886*

7. **செப்பின் புணர்ச்சிபோல் கூடினும் கூடாதே**
உட்பகை உற்ற குடி.

செப்புச் சிமிழும் மூடியும் கூடி ஒன்று போல் பொருந்தியிருந்தாலும் ஒன்றாகாது; அதுபோல் உட்பகை கொண்ட குடியும் ஒன்று போல் பொருந்தி இருந்தாலும் ஒன்றாகாது. *887*

8. **அரம்பொருத பொன்போலத் தேயும், உரம்பொருது**
உட்பகை உற்ற குடி.

உட்பகை உண்டான குடி, அரத்தினால் அராவப்பட்ட இரும்பு போல் வலிமை குறைக்கப்பட்டுத் தேய்ந்து போகும். *888*

9. **எட்பக வன்ன சிறுமைத்தே யாயினும்**
உட்பகை உள்ளதாம் கேடு.

எள்ளின் பிளவினை ஒத்த சிறிதளவே பிளவு உடையது எனினும் உட்பகை (ஒரு குடியை) அழித்துவிடும் கேடு உடையதாகும். *889*

10. **உடம்பா டிலாதவர் வாழ்க்கை, குடங்கருள்**
பாம்போ டுடனுறைந் தற்று.

உள்ளத்தால் ஒன்றுபடாதவர் ஓரிடத்துக் கூடி வாழும் வாழ்க்கை, ஒரு சிறு குடிசையில் பாம்புடன் கூடி வாழ்வது போன்றது. *890*

90. பெரியாரைப் பிழையாமை

(பெரியாரை மதித்து நடவாமையால் வரும் கேடு)

1. **ஆற்றுவார் ஆற்றல் இகழாமை, போற்றுவார்**
போற்றலுள் எல்லாம் தலை.

எடுத்துக் கொண்ட செயலைச் சீராகச் செய்து முடிக்கும் பெரியார் திறத்தை இகழாமை, தம்மைக் காத்துக் கொள்வார் காவலுள் எல்லாம் தலைமையானதாகும். 891

2. **பெரியாரைப் பேணா தொழுகின், பெரியாரால்**
பேரா இடும்பை தரும்.

செயற்கரிய செய்யும் பெரியவரை மதியாமல் ஒருவர் நடந்தால், அப்பெரியாரால் அவர்க்கு எவ்வகையாலும் நீங்காத துன்பத்தை அது கொடுக்கும். 892

3. **கெடல்வேண்டின் கேளாது செய்க, அடல்வேண்டின்**
ஆற்று பவர்கண் இழுக்கு.

ஒருவன் தான் கெடுவதை விரும்பினானாயின் பெரியவர் சொல்வழி நில்லாதவனாய்ச் செயல் புரிவானாக; தன்னை அழிக்க வேண்டின் செயலாற்றல் மிக்கவர்க்குத் தவறு செய்வானாக. 893

4. **கூற்றத்தைக் கையால் விளித்தற்றால், ஆற்றுவார்க்**
காற்றாதார் இன்னா செயல்.

எதனையும் செய்யவல்ல ஆற்றலுடையவர்க்கு ஆற்றல் இல்லாதார் தீமை செய்தல், தம் முடிவு காலத்தைத் தானே கைந் நீட்டி அழைப்பது போன்றதாம். 894

5. **யாண்டுச்சென்று யாண்டும் உளராகார், வெந்துப்பின்**
வேந்து செறப்பட் டவர்.

கடுமையான வலிமையமைந்த ஆட்சியாளனின் சீற்றத்திற்கு ஆட்பட்டவர், அவனுக்குத் தப்பி எங்குச் செல்லினும் உயிரோடு இருப்பவர் ஆகார். 895

6. **எரியால் சுடப்படினும் உய்வுண்டாம்; உய்யார்**
பெரியார்ப் பிழைத்தொழுகு வார்.

*தீயால் சுடப்பட்டாலும் ஒருவர்க்குத் தப்பிப் பிழைக்கும் வழி உண்டு; ஆனால், ஆற்றல்மிக்க பெரியார்க்குத் தவறு செய்தவர் தப்பிப் பிழைக்க மாட்டார். **896***

7. **வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளும் என்னாம்,**
தகைமாண்ட தக்கார் செறின்?

*பண்பால் சிறந்த பெரியவர் சீற்றம் கொள்வராயின் அதற்கு ஆட்பட்டவர், பலவகைப் பெருமையுடைய வாழ்க்கையும் மேம்பட்ட செல்வமும் கொண்டிருந்தாலும் என்ன பயனாம்? (என்ன பயனும் இல்லை) **897***

8. **குன்றன்னார் குன்ற மதிப்பின், குடியொடு**
நின்றன்னார் மாய்வர் நிலத்து.

*நிலத்தில் அழியாச் செல்வத்தால் நிலை பெற்றவர் எனினும் அவரை மலை போன்ற பெருமை யுடையவர் குறைவு பட நினைப்பாராயின், குடும்பத்துடன் அழிவர். **898***

9. **ஏந்திய கொள்கையார் சீறின், இடைமுரிந்து**
வேந்தனும் வேந்து கெடும்.

*உயர்ந்த கொள்கைகளையுடைய பெரியார் சீற்றத்திற்கு ஆட்பட்டால் மாப்பெரும் ஆட்சியாளனும் தன் ஆட்சியை இடையே இழந்து கெடுவான். **899***

10. **இறந்தமைந்த சார்புடைய ராயினும் உய்யார்,**
சிறந்தமைந்த சீரார் செறின்.

*சிறந்தமைந்த பெரியார் சீற்றங் கொள்வராயின் வரம்பு கடந்தமைந்த துணை நலமும் வாய்ப்பும் உடையவர் ஆயினும் தப்பிப் பிழையார். **900***

91. பெண் வழிச்சேறல்

(இன்ப விருப்பால் பெண்ணிற்கு அடிமையாகிச் செல்லுதல்)

1. **மனைவிழைவார் மாண்பயன் எய்தார்; வினைவிழைவார்
வேண்டாப் பொருளும் அது.**

வரம்பற்ற காமத்தால் அடிமையாகித் தம் மனைவியை விரும்புபவர் பெருமைக்குரிய பயனை அடையார்; எடுத்த செயலைச் செய்து முடிக்க விரும்புகின்றவர் விரும்பாத பொருள் அதுவேயாகும். 901

2. **பேணாது பெண்விழைவான் ஆக்கம்; பெரியதோர்
நாணாக நாணுத் தரும்.**

செய்யும் செயற்பாட்டில் அக்கறையில்லாது பெண்வழி நிற்பவன் உயர்வு, மிகப்பெரிய வெட்கத்திற்கு இடமாகித் தலைக்குனிவைத் தரும். 902

3. **இல்லாள்கண் தாழ்ந்த இயல்பின்மை, எஞ்ஞான்றும்
நல்லாருள் நாணுத் தரும்.**

தன் மனையாளிடத்துத் தாழ்ந்து நிற்கும் (இழி தன்மையாம்) பண்பிலாத் தன்மை, எந்நாளும் நல்லவரிடையே வெட்கத்தை உண்டாக்கும். 903

4. **மனையாளை அஞ்சும் மறுமையி லாளன்
வினையாண்மை வீறெய்தல் இன்று.**

மனைவிக்கு அஞ்சி நடத்தலால் மேல்வரும் புகழை இழப்பவன், தான் கொண்ட செயலாற்றலில் சிறப்படைதல் இல்லை. 904

5. **இல்லாளை அஞ்சுவான் அஞ்சுமற் றெஞ்ஞான்றும்
நல்லார்க்கு நல்ல செயல்.**

தன் மனையாளுக்கு அஞ்சி நடக்கின்றவன் எந்நாளும் நன்மக்களுக்கு நல்லவை செய்தலுக்கு அஞ்சிக் கிடப்பான். 905

6. **இமையாரின் வாழினும் பாடிலரே, இல்லாள்**
அமையார்தோள் அஞ்சு பவர்.

புகழுடம்பாளர் போலப் புகழ்வாழ்வு வாழ்ந்தாலும் மனையாளின் மூங்கில் போன்ற தோளைத் தழுவும் இன்பத்துக்காக அஞ்சித் தாழ்பவர் எப்புகழும் இல்லாதவரே. ***906***

7. **பெண்ணேவல் செய்தொழுகும் ஆண்மையின், நாணுடைப்**
பெண்ணே பெருமை உடைத்து.

பெண் ஏவியவாறெல்லாம் செய்து நடக்கும் ஆடவனினும் இயல்பான சிறந்த வெட்கத்தைக் கொண்ட பெண்ணே பெருமை உடையவளாம். ***907***

8. **நட்டார் குறைமுடியார்; நன்றாற்றார்; நன்னுதலாள்**
பெட்டாங் கொழுகு பவர்.

நல்ல நெற்றியையுடைய மனையாள் அழகுக்கு அடிமையாய் அவள் விரும்பியவாறு நடப்பவர், தம் நண்பர்க்கு வேண்டும் குறைகளை நீக்க மாட்டார்; பிற நல்ல செயல்களும் செய்ய மாட்டார். ***908***

9. **அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்**
பெண்ணேவல் செய்வார்கண் இல்.

பெண் ஏவல் கேட்டு நடப்பவர்க்கு, அறச் செயலும் இல்லை; சிறந்த பொருட் செயலும் இல்லை; மற்றை இன்பச் செயல் தானும் (அஞ்சுதலால்) இல்லை. ***909***

10. **எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க் கெஞ்ஞான்றும்**
பெண்சேர்ந்தாம் பேதைமை இல்.

மதிக்கத்தக்க நெஞ்ச விரிவு உடையவர்க்கு எக்காலத்தும் பெண்வழிச் செல்லுகின்ற அறியாமை இல்லை. ***910***

92. வரைவின் மகளிர்

(நல்லநெறி வரம்பில் நில்லாத மகளிர்)

1. **அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடியார்
இன்சொல் இழுக்குத் தரும்.**

அன்பினால் விரும்பாமல் பெறுகின்ற பொருளையே விரும்பும் கண்கவரும் அணிகலம் அணிந்த மகளிர், இனிதாகச் சொல்லும் சொல் இழிவுண்டாக்கும். **911**

2. **பயன்தூக்கிப் பண்புரைக்கும் பண்பில் மகளிர்
நயன்தூக்கி நள்ளா விடல்.**

வருகின்ற பயனை அளந்து, அதற்குத் தக இனிக்கப் பேசும் பண்பில்லாத மகளிர் (போலி மயக்கை) நன்றாக ஆராய்ந்து நெருங்காது விடுதல் வேண்டும். **912**

3. **பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம், இருட்டறையில்
ஏதில் பிணம்தழீஇ யற்று.**

பொருளையே குறியாகக் கொண்ட மகளிரைப் போலியாகத் தழுவுதல், இருண்டதோர் அறையுள் கிடக்கும் அயலார் பிணத்தைத் தழுவுவது போன்றது. **913**

4. **பொருட்பொருளார் புன்னலம் தோயார், அருட்பொருள்
ஆயும் அறிவி னவர்.**

அருளாகிய பொருளை ஆராயும் அறிவு மிக்கார், பொருளையே பொருட்டாகக் கொள்ளும் மகளிர் அற்பமான இன்பத்தைப் பொருந்தார். **914**

5. **பொதுநலத்தார் புன்னலம் தோயார், மதிநலத்தின்
மாண்ட அறிவி னவர்.**

(பொருள் தருவார்க் கெல்லாம்) இன்பத்தைப் பொதுவாக்கும் மகளிரின் இழிந்த இன்பத்தை, மதிவளத்தால் பெருமையுற்ற பேரறிவாளர் பொருந்தார். **915**

6. **தந்நலம் பாரிப்பார் தோயார், தகைசெருக்கிப்**
புன்னலம் பாரிப்பார் தோள்.

பிறரை வயப்படுத்தும் கலைத் திறத்தால் செருக்குற்றுத், தம் புன்மையான இன்ப நலத்தை விலை பேசும் மகளிர் தோளைத், தம் பண்பு நலம் பரப்பும் சான்றோர் தழுவார். **916**

7. **நிறைநெஞ்சம் இல்லவர் தோய்வர், பிறநெஞ்சில்**
பேணிப் புணர்பவர் தோள்.

இன்பம் அல்லாத பிறவற்றை நெஞ்சில் விரும்பிக் கொண்டு கூடும் மகளிர் தோளை, ஒழுக்கத்தில் உறுதியான நெஞ்சம்இல்லாதவரே தழுவுவர். **917**

8. **ஆயும் அறிவின ரல்லார்க் கணங்கென்ப**
மாய மகளிர் முயக்கு.

வஞ்சனையில் வல்ல மகளிரின் தழுவுதல், ஆராயும் அறிவுடையவர் அல்லாதவர்க்கு உயிர் கொல்லியாகும், என்று அறிவுடையார் கூறுவர். **918**

9. **வரைவிலா மாணிழையார் மென்தோள் புரையிலாப்**
பூரியர்கள் ஆழும் அளறு.

ஒழுக்க வரம்பு இல்லாத மகளிரின் மெல்லிய தோள், உயர்வில்லாத கீழ்மக்கள் தாமே சென்று அழுந்துகின்ற சேறு போல்வதாம். **919**

10. **இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்**
திருநீக்கப் பட்டார் தொடர்பு.

ஒரே காலத்தில் இருமனப்பட ஒழுகும் மகளிரும், மதி மயக்கும் கள்ளும், உள்ளதையெல்லாம் இழக்கச் செய்யும் சூதும் செல்வத்தினின்று நீக்கப்பட்டவர் பெற்ற தொடர்புடையவை ஆகும். **920**

93. கள்ளுண்ணாமை

(மயக்கும் குடிவகை குடியாமை)

1. **உட்கப் படாஅர்; ஒளியிழப்பர், எஞ்ஞான்றும்
கட்காதல் கொண்டொழுகு வார்.**

எப்போதும் குடியில் பேராவல் கொண்டிருப்பவர், தம் பகைவரால் அஞ்சப்பட மாட்டார்; தமக்குளதாகிய மதிப்பையும் இழப்பார். 921

2. **உண்ணற்க கள்ளை; உணில்உண்க சான்றோரால்
எண்ணப் படவேண்டா தார்.**

மயக்கும் குடிவகைகளைக் குடித்தல் வேண்டா; குடிக்க விரும்பினால் குடிப்பாராக, சான்றோரால் நினைக்கப் படுதலை விரும்பாதவர். (புகழுற விரும்புவார் குடியார்) 922

3. **ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால்; என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி?**

பேரன்புடைய பெற்றவள் முகத்திலும் குடி, வெறுப்பை உண்டாக்குவதாகும்; அவ்வாறாகவும், பண்புமிக்க சான்றோர் முகத்தில் அது எத்தகையதாகும்? (மிக வெறுப்புடையதாகும்) 923

4. **நாண் என்னும் நல்லாள் புறங்கொடுக்கும், கள்ளென்னும்
பேணாப் பெருங்குற்றத் தார்க்கு.**

குடித்தல் என்று சொல்லப்படும், குடும்ப நலம் பேணாத பெரிய குற்றத்தை உடையார்க்கு முன்னர், நாணம் என்று சொல்லப்படும் நல்லவள், நில்லாமல் புறங்காட்டிப் போய் விடுவாள். 924

5. **கையறி யாமை உடைத்தே, பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல்.**

கையில் இருக்கும் பொருளைக் கொடுத்துத், தன் உடலில் மயக்கத்தைக் கொள்ளுதல், ஒழுக்க இயல் அறியாமை உடையதாகும். 925

**6. துஞ்சினார் செத்தாரின் வேறல்லர்; எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்.**

உறங்கினவர் என்பவர் (தோற்றத்தில்) இறந்தவர்க்கு வேறானவர் அல்லர்; அவ்வாறே எந்நாளும் மயக்கும் குடிகளைக் குடிப்பவர் நஞ்சுண்பவர்க்கு வேறானவர் அல்லர். **926**

**7. உள்ளொற்றி உள்ளூர் நகப்படுவர், எஞ்ஞான்றும்
கள்ளொற்றிக் கண்சாய் பவர்.**

எப்போதும் மயக்கும் குடியோடு கூடியிருந்து கண்ணுறங்குபவர், உள்ளூரினரால் உள்ள செய்திகள் எல்லாம் அறியப்பட்டு நகைத்து இகழப்படுவர். **927**

**8. 'களித்தறியேன்' என்பது கைவிடுக, நெஞ்சத்
தொளித்ததூஉம் ஆங்கே மிகும்.**

'யான் குடித்தறியேன்' என்று கூறுவதைக் குடியன் கை விடுக; அவன் குடித்த போது, அவன் மனத்தில் ஒளித்து வைத்திருந்தவை அனைத்தும் மிக வெளிப்பட்டு விடும்! (குடித்ததை அவன் உளறுதலே காட்டிவிடும்) **928**

**9. களித்தானைக் காரணம் காட்டுதல், கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று.**

குடித்து மயங்கி இருப்பவனை, அப்பொழுதில் அறிவுரை சொல்லித் தெளிவிக்க முயலுதல், ஆழ்ந்த நீருள் மூழ்கியவனைத் தீப்பந்தம் கொண்டு தேடுவது போல்வதாம். **929**

**10. கள்ளுண்ணாப் போழ்தில் களித்தானைக் காணுங்கால்
உள்ளான்கொல் உண்டதன் சோர்வு.**

குடியன் ஒருவன், தான் குடியாத போதில், குடித்தான் ஒருவன் கொண்ட மயக்கத்தைக் கண்டேனும் 'தனக்கும் அது வந்திருக்குமே' என எண்ணிப்பார்க்க மாட்டானோ? (எண்ணிப் பார்த்திருந்தால் குடியான்) **930**

94. சூது

(சூழ்ச்சியாக (சூதாக)ப் பொருள் பறிக்கும் வகைகள்)

1. **வேண்டற்க வென்றிடினும் சூதினை; வென்றதூஉம்**
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று.

வெற்றியே வருவதாயினும் சூதை விரும்பாமை வேண்டும்; சூதில் கொண்ட வெற்றியும், தூண்டிலில் கோத்த இரும்பு முள்ளை மீன் கௌவிக் கொண்டது போல்வதாம். *931*

2. **ஒன்றெய்தி நூறிழக்கும் சூதர்க்கும் உண்டாங்கொல்**
நன்றெய்தி வாழ்வதோர் ஆறு?

ஒன்றைப் பெற்று அதுபோல் நூறு மடங்கை இழக்கும் சூதாடியர்க்கு, நலம் பெற்று வாழ்வதோர் வழி உண்டோ? (இல்லை) *932*

3. **உருளாயம் ஓவாது கூறின், பொருளாயம்**
போஒய்ப் புறமே படும்.

உருளுகின்ற சூது கருவியை ஓயாது உருட்டிச் சூதாடினால், பொருள் வருவாய் அவனை, விட்டுப் போய், அவனுக்கு மாறானவர் இடத்தே தங்கும். *933*

4. **சிறுமை பலசெய்து சீரழிக்கும் சூதின்**
வறுமை தருவதொன் றில்.

ஒருவனுக்குப் பலவகை இழிவுகளையும் உண்டாக்கி, அவன் புகழையும் கெடுக்கும் சூதைக் காட்டிலும், வறுமை தரும் பிறிதொன்று இல்லை. *934*

5. **கவறும் கழகமும் கையும் தருக்கி**
இவறியார் இல்லாகி யார்.

சூதாடு கருவியும் சூதாடுமிடமும் சூதாடும் கைத்திறமும் பொருளென இறுமாந்தவர், தம்மிடம் உள்ளவையெல்லாம் இல்லாதவராகி விடுவார். *935*

6. **அகடாரார்; அல்லல் உழப்பர்;சூ தென்னும்**
முகடியான் மூடப்பட் டார்.

சூது எனப்படும் மறைப்பால் (முகடியால்) மறைக்கப் பட்டவர், தம் வயிற்றுக்கு வேண்டும் அளவு உணவு தானும் உண்ணப் பெறார்; (பொருளில்லாமையால் உண்டாம் மற்றைத்) துன்பங்களையும் அடைவர். **935**

7. **பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்,**
கழகத்துக் காலை புகின்.

சூதாடுமிடத்திற்கு நாளும் புகுந்தால், அப்புகுதல், பழமையாக வாய்த்த செல்வத்தையும் நல்ல பண்புகளையும் இல்லாமல் செய்யும். **936**

8. **பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ, அருள்கெடுத்**
தல்லல் உழப்பிக்கும் சூது.

சூதாட்டில் கலந்து விட்டால் அது பொருளைக் கெடுக்கும்; பொய்யை மேற் கொள்ளச் செய்யும்; அருளை அழிக்கும்; பலவகையான தொல்லைகளிலும் உழலச் செய்யும். **938**

9. **உடைசெல்வம் ஊண்ஒளி கல்விஎன் றைந்தும்**
அடையாவாம் ஆயம் கொளின்.

சூதாட்டத்தைக் கைக் கொண்டால், கொண்டவரிடத்து உடை, செல்வம், உணவு, புகழ், கல்வி என்னும் ஐந்தும் அடையமாட்டா. **939**

10. **இழந்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல், துன்பம்**
உழத்தொறூஉம் காதற் றுயிர்.

துன்பம் அடையுந்தோறும் உயிரின்மேல் ஆவலே உண்டாகும்; அதுபோல் சூதாட்டத்தில் பொருள் இழப்பு உண்டாகுந்தோறும், அவ்வாட்டத்தை விடாது ஆடும் ஆவலே உண்டாகும். **940**

95. மருந்து

(நோய் தீர்க்கும் வழி)

1. **மிகினும் குறையினும் நோய்செய்யும், நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று.**

மருத்துவ நூலாளர் ஊதை (வளி) பித்தம் கோழை என எண்ணிய மூன்றும், மிகுந்தாலும் குறைந்தாலும் உடலில் பல்வேறு நோய்களை உண்டாக்கும். 941

2. **மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய
தற்றது போற்றி உணின்.**

ஒருவன் தான் உண்ட உணவு செரிமானம் ஆயதைத் தெளிவு செய்து கொண்டு உண்பானாயின், அவன் உடல் நலத்திற்கு மருந்து என வேறொன்று வேண்டுவதில்லை. 942

3. **அற்றால் அளவறிந் துண்க; அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு.**

முன் உண்ட உணவு செரித்து அற்றுப் போகுமானால், தன் செரிமான அளவறிந்து உண்ணுதல் வேண்டும்; அது, சீரிய உடலைப் பெற்றவன் அதனை நெடுங்காலம் காக்கும் வகையாகும். 943

4. **அற்ற தறிந்து, கடைப்பிடித்து, மாறல்ல
துய்க்க துவரப் பசித்து.**

உண்ட உணவு செரித்ததை அறிந்து, பின் மிகப் பசித்து, தன் உடலுக்கு மாறுபாடு ஆகாததைத் தெரிந்து உறுதியாகக் கொண்டு உண்ண வேண்டும். 944

5. **மாறுபா டில்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபா டில்லை உயிர்க்கு.**

உடலுக்கு மாறுபாடு செய்யாத உணவை, மிக உண்ணுதல் வேண்டும் என்னும் ஆர்வத்தை மறுத்து, அதனை அளவோடு உண்டால் உயிர்வாழ்வுக்குத் தொல்லை தரும் நோய் இல்லை. 945

6. **இழிவறிந் துண்பான்கண் இன்பம்போல் நிற்கும்,**
கழிபேர் இரையான்கண் நோய்.

உண்ட உணவு அற்றுப் போனதை அறிந்து உண்பவன் இடத்து, இன்பம் நிலைபெறுவது போல், மிகப் பேரளவு உண்பவன் இடத்து நோய் நிலை பெறும். **946**

7. **தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்,**
நோயள வின்றிப் படும்.

வயிற்றுப் பசித் தீயின் அளவுக்கு அல்லாமல் அதனைத் தெரியாதவனாய் மிகுதியாக உண்டால், அவனுக்கு நோயும் அளவில்லாமல் மிகுதிப்படும். **947**

8. **நோய்நாடி, நோய்முதல்நாடி, அதுதணிக்கும்**
வாய்நாடி வாய்ப்பச் செயல்.

நோய் இன்னதென ஆராய்ந்து நோய்வந்த காரணத்தை ஆராய்ந்து, நோயைத் தீர்க்கின்ற வழியை ஆராய்ந்து அவ்வழியில் தவறாமல் மருத்துவம் செய்தல் வேண்டும். **948**

9. **உற்றான் அளவும் பிணியளவும் காலமும்**
கற்றான் கருதிச் செயல்.

மருத்துவ நூல்களைக் கற்றுத் தேர்ந்தவன், நோயுற்றவன் உடல் அகவை ஆகிய அளவையையும், நோயின் தாக்க நிலை பரவு நிலை ஆகிய அளவையையும், நோயுள்ள காலத்தையும் கருதி மருத்துவம் செய்தல் வேண்டும். **949**

10. **உற்றவன்; தீர்ப்பான்; மருந்துழைச் செல்வானென்**
றப்பால்நாற் கூற்றே மருந்து.

மருத்துவம் என்பது நோயுற்றவன், நோயைத் தீர்க்கும் மருத்துவன்; நோய் தீர்க்கும் மருந்து; பக்கத்திலிருந்து உதவுவான் என்னும் அப் பகுதிப்பட்ட நான்கு பிரிவுகளையுடையது. **950**

96. குடிமை

(நல்ல குடிவழியினர் (மரபினர் பங்காளியினர்) தன்மை)

1. **இற்பிறந்தார் கண்அல்ல தில்லை, இயல்பாகச்**
செப்பமும் நாணும் ஒருங்கு.

நல்ல குடியில் பிறந்தவர்களிடத்து அல்லாமல் மற்றவர்களிடத்து, நடுவு நிலைமையும் பழிநாணும் தன்மையும் ஒருசேர இயல்பாக அமைவது இல்லை. 951

2. **ஒழுக்கமும் வாய்மையும் நாணும்இம் மூன்றும்**
இழுக்கார் குடிப்பிறந் தார்.

உயர்குடியில் பிறந்தவர், ஒழுக்கம், வாய்மை, நாணம் ஆகிய இந்த மூன்று தன்மைகளில் இருந்தும் தவறி நடவார். 952

3. **நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும்**
வகைஎன்ப வாய்மைக் குடிக்கு.

மெய்யான நற்குடியில் பிறந்தவர்க்கு, முக மலர்ச்சி, கொடை, இனியவைகூறல், பிறரைப் பழித்துக் கூறாமை என்னும் நான்கும் சிறந்தவை என்பர். 953

4. **அடுக்கிய கோடி பெறினும், குடிப்பிறந்தார்**
குன்றுவ செய்தல் இலர்.

அடுக்கப்பட்ட பலகோடி அளவான செல்வத்தைப் பெற்றாலும், நல்லகுடியில் பிறந்தார் தம் குடிக்குக் குறைவுண்டாவதாகும் செயலைச் செய்யார். 954

5. **வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும், பழங்குடி**
பண்பில் தலைப்பிரிதல் இன்று.

மிகப் பழமையாம் குடியில் பிறந்தவர், தாம் கொடுத்தற்குரிய செல்வம் இல்லாமல் சுருங்கிய இடத்தும் தம் நற்பண்பில் இருந்து நீங்குவது இல்லை. 955

6. **சலம்பற்றிச் சால்பில செய்யார்மா சற்ற**
குலம்பற்றி வாழ்தும்என் பார்.

குற்றமற்ற குடிமரபொடு வாழ்வோம் என்பவர், ஆரவாரம் கொண்டு பண்பற்ற செயல்களைச் செய்ய மாட்டார். *956*

7. **குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம், விசும்பின்**
மதிக்கண் மறுப்போல் உயர்ந்து.

நற்குடிப் பிறந்தோரிடத்துத் தோன்றும் சிறு குற்றமும் வானத்து முழுமதியில் தோன்றும் கறை போல் பலரும் அறியப் பெருகித் தோன்றும். *957*

8. **நலத்தின்கண் நாரின்மை தோன்றின், அவனைக்**
குலத்தின்கண் ஐயப் படும்.

நன்மையானவற்றில் ஒருவனுக்குப் பற்று இல்லாமை தோன்றினால் அவன் பிறந்த நற்குடிப் பிறப்பிடத்தே (உலகோர்) ஐயப்படுவர். *958*

9. **நிலத்தில் கிடந்தமை கால்கட்டும்; காட்டும்**
குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல்.

நிலத்தின் இயல்பை அதில் முளைத்த முளை வெளிப்படக் காட்டும். அதுபோல், குடிப்பெருமை விரும்பினால் எவர்க்கும் பணிவுடையனாதல் வேண்டும். *959*

10. **நலம்வேண்டின் நாணுடைமை வேண்டும்; குலம்வேண்டின்**
வேண்டுக யார்க்கும் பணிவு.

ஒருவன் நன்மையை விரும்பினால் பழிக்குநாணும் தன்மை வேண்டும். அதுபோல், குடிப்பெருமை விரும்பினால் எவர்க்கும் பணிவுடையனாதல் வேண்டும். *960*

97. மானம்

(தன்மதிப்பில் குறையாத தன்மை)

1. **இன்றி யமையாச் சிறப்பின வாயினும்
குன்ற வருப விடல்.**

இவற்றைச் செய்யாமல் வாழ முடியாது என்னும் சிறப்புடையவை என்றாலும், மானம் குறையுமாறாக வருவனவற்றைச் செய்யாது விடுதல் வேண்டும். *961*

2. **சீரினும் சீரல்ல செய்யாரே, சீரொடு
பேராண்மை வேண்டு பவர்.**

சிறப்பையும் மிகுந்த உறுதிப்பாட்டையும் (மானத்தையும்) நிலையாக விரும்புபவர், சிறந்த வாய்ப்பு ஏற்படினும் சிறப்பில்லாச் செயல்களைச் செய்யார். *962*

3. **பெருக்கத்து வேண்டும் பணிதல்; சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு.**

செல்வப்பேறு பதவிப்பேறு முதலாம் பெருக்கத்தின் போது, பணிவுடைமை வேண்டும்; அந்நிலை இல்லாத சுருக்கத்தின் போது, உயர்ந்த பெருமித நிலை வேண்டும்; (இவ்விரு இயல்புகளும் மானமாம்) *963*

4. **தலையின் இழிந்த மயிரனையர், மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை.**

மாந்தர், தம் உயர்ந்த ஒழுக்க நிலையில் இருந்தும் தாழ்ந்த (மானமிழந்த) விடத்துத், தலையில் இருந்து கழிந்து வீழ்ந்த மயிருக்கு ஒப்பாவர். *964*

5. **குன்றின் அனையாரும் குன்றுவர், குன்றுவ
குன்றி அனைய செயின்.**

மலைபோன்ற உயர்ந்தவரும், மானத்தில் இழிந்த செயல்களை ஒரு குன்றிமணி அளவாகச் செய்வராயினும், இழிந்தவராகி விடுவர். *965*

6. **புகழின்றால்; புத்தேள்நாட் டுய்யாதால்; என்மற்
றிகழ்வார்பின் சென்று நிலை?**

வாழுங்காலத்தும் புகழைத் தாராது; வணங்கப்படும் புகழுலக நிலையையும் தாராது; ஆகவும் தன்னை இகழ்பவர்க்குப் பின்னே சென்று மானத்தில் தாழ்ந்து நிற்கின்ற நிலை, என்ன? **966**

7. **ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின், அந்நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று.**

உளத்தோடு ஒட்டாத பகைவர்க்குப் பின்னே சென்று, ஒருவன் மானங்கெட வளமாக வாழ்தலினும், அப்பொழுதே அவ்வாழ்வை இழந்தான் எனப்படுதல் நலமாகும். **967**

8. **மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை, பெருந்தகைமை
பீடழிய வந்த இடத்து.**

ஒருவன் தனது பெரிய தன்மைக்குரிய மானம் அழியவந்த இடத்தில், உடலைப் பேணி வாழும் வாழ்க்கை சாவாமைக்கு மருந்தாகி விடுமோ? (ஆகாது) **968**

9. **மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்.**

குளிர்க்காப்பாம் மயிர் நீங்கினால் உயிரோடு வாழாத கவரிமா என்னும் விலங்கினைப் போன்றவர் தமக்கு மானக்கேடு வருமெனின் தம் உயிரைவிட்டு விடுவர். **969**

10. **இளிவரின் வாழாத மானம் உடையார்
ஒளிதொழு தேத்தும் உலகு.**

இழிவு வந்த இடத்து, அதன் மேலும் உயிர் வாழாது இறந்த மானமுடையவரின் புகழை, உலகோர் வணங்கி வாழ்த்துவர். **970**

98. பெருமை

(பெருமையின் தன்மை)

1. **ஒளிஒருவற் குள்ள வெறுக்கை; இளிஒருவற்**
கஃதிறந்து வாழ்தும் எனல்.

ஒருவற்குப் பெருமையாவது உள்ளத்தின்கண் உண்டாகும் ஊக்கமுடைமையே; அவ்வூக்கம் இன்றி வாழ்வோம் என வாழ்வது அவர்க்கு இழிவாகும். 971

2. **பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்பொவ்வா**
செய்தொழில் வேற்றுமை யான்.

எல்லா உயிர்களுக்கும் பிறப்பு ஒத்த தன்மையதே, அதுபோல், தொழில்களும் ஒத்தவையே எனினும், அவற்றைச் செய்யும் செயல்நிலை வேறுபாட்டால் சிறப்பு ஒத்தவையாகா. 972

3. **மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர்; கீழிருந்தும்**
கீழல்லார் கீழல் லவர்.

மேல்நிலையில் இருப்பினும், மேலான பண்பு இல்லாதவர் மேலோர் அல்லர்; அவ்வாறே, கீழ்நிலையில் இருப்பினும், கீழான பண்பு இல்லாதவர் கீழோர் அல்லர். 973

4. **ஒருமை மகளிரே போலப் பெருமையும்**
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு.

ஒருப்பட்ட கற்புடைய மகளிரைப்போல ஆடவன் ஒருவனும், தன்னைத்தான் காத்துக் கொண்டு ஒழுகினால் பெருமையும் அவனுக்கு உண்டு (ஒருவனுக்கு ஒருத்தி என்பதே உயர் ஒழுக்கம்) 974

5. **பெருமை உடையவர் ஆற்றுவார், ஆற்றின்**
அருமை உடைய செயல்.

பெருமைத் தன்மை உடையவர், செய்தற்கு அருமையுடைய செயலைச் செய்தற்கு உரிய வழியில் செய்து முடிப்பார். 975

6. **சிறியார் உணர்ச்சியுள் இல்லை, பெரியாரைப்
பேணிக்கொள் வேம்என்னும் நோக்கு.**

பெருமைக்குரியவரைப் போற்றி, அவர் வழியைக் கொள்வோம் என்னும் கொள்கை, சிறுமைப் பண்பினர் உள்ளத்தில் தோன்றுவதில்லை. ***976***

7. **இறப்பே புரிந்த தொழிற்றாம், சிறப்புந்தான்
சீரல் லவர்கண் படின்.**

பாராட்டப்படும் பெருமை, சிறப்பற்ற கீழோர்க்குத் தரப்படுமாயின் அது, வரம்பு கடந்து செய்யும் செயலாகவே அமையும். ***977***

8. **பணியுமாம் என்றும் பெருமை; சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து.**

பெருந்தன்மையாளர், எக்காலமும் பணிவுடையவராக இருப்பர்; சிறுதன்மையாளர் எக்காலமும் தம்மைத்தாமே புகழ்ந்து பாராட்டிக் கொள்வர். ***978***

9. **பெருமை பெருமிதம் இன்மை; சிறுமை
பெருமிதம் ஊர்ந்து விடல்.**

பெருமைக்குணம் என்பது செருக்கு இல்லாததாய் இருக்கும்; சிறுமைக் குணமோ பெருமிதத்தின் மேல்ஏறி முடிந்தஅளவும் ஊர்ந்து செல்வதாகும். ***979***

10. **அற்றம் மறைக்கும் பெருமை; சிறுமைதான்
குற்றமே கூறி விடும்.**

பெருமைத் தன்மை, பிறர் பெருமையைக் கூறிச் சிறுமையை மறைக்கும்; சிறுமைத் தன்மையோ, பிறர் பெருமையை மறைத்துச் சிறுமையையே கூறிப் பரப்பும். ***980***

99. சான்றாண்மை

(பண்புகளால் நிறைந்து அவற்றை ஆளுந்தன்மை)

1. **கடனென்ப நல்லவை எல்லாம், கடனறிந்து**
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.

தம் கடமையை உணர்ந்து, சான்றாண்மையைக் கடைப்பிடிப்பவர்க்கு, நன்மையானவற்றை எல்லாம் செய்தல் கடமை என்று ஆய்ந்தோர் கூறுவர். 981

2. **குணநலம் சான்றோர் நலனே; பிறநலம்**
எந்நலத் துள்ளதூஉம் அன்று.

சான்றோர் சிறப்பு என்று சொல்லப்படுவது பண்புச் சிறப்பே ஆகும். அப்பண்புச் சிறப்பு, பிற சிறப்புகளாகிய எந்தச் சிறப்புகளிலும் உள்ளடங்காத உயர்வினதாகும். 982

3. **அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ**
டைந்துசால் பூன்றிய தூண்.

சால்பு என்ற (நிறைகுணமாகிய) மாடத்தைத் தாங்கி நிற்கும் தூண்கள் அன்பு, நாணம், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை ஆகிய ஐந்துமாம். 983

4. **கொல்லா நலத்தது நோன்மை; பிறர்தீமை**
சொல்லா நலத்தது சால்பு.

உறுதிப்பாடு என்பது, கொலை புரியாமை என்னும் அறத்தை அடிப்படையாகக் கொண்டது; சால்பு என்பது, பிறர் குற்றத்தைச் சொல்லாத நிறை குணத்தை அடிப்படையாகக் கொண்டது. 984

5. **ஆற்றுவார் ஆற்றல் பணிதல்; அதுசான்றோர்**
மாற்றாரை மாற்றும் படை.

செயலாற்றுதலில் தேர்ந்தவரின் வலிமையாவது பணிவுடைமையாகும்; அது சால்புடையவர் தம் பகைவரைப் பகை நீங்கச் செய்து நண்பராக மாற்றும் படைக் கருவியாகும். 985

6. சால்பிற்குக் கட்டளை யாதெனின், தோல்வி துலையல்லார் கண்ணும் கொளல்.

சால்பு என்னும் பொன்னுக்கு மாற்றுக் காணும் உரைகல் யாது என்றால், தமக்கு இணையாகாத மெலியவர் இடத்திலும், தம் தோல்வியை ஏற்றுக் கொள்ளுதலாகும். *986*

7. இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால், என்ன பயத்ததோ சால்பு?

தமக்குத் தீயவை செய்தார்க்கும் நல்லவையே செய்யாதபோது, சால்புடைமை என்ன பயனுடையதாகும்? (ஒரு பயனும் ஆகாது) *987*

8. இன்மை ஒருவற் கிளிவன்று, சால்பென்னும் திண்மைஉண் டாகப் பெறின்.

சான்றாண்மை என்று சொல்லப்படும் உறுதிப்பாடு ஒருவற்கு உண்டானால், இல்லாமை என்னும் வறுமை இழிவாகாது. *988*

9. ஊழி பெயரினும் தாம்பெயரார்; சான்றாண்மைக் காழி எனப்படு வார்.

சான்றாண்மை என்னும் நிறைபண்புக்குக் கடல் போன்றவர், இயற்கை தம் நிலையில் இருந்து மாறினாலும், தம் நிலையில் இருந்து மாறார். *989*

10. சான்றவர் சான்றாண்மை குன்றின், இருநிலந்தான் தாங்காது மன்னோ பொறை.

சான்றாண்மை உடையவரின் சால்பு குறையுமாயின், இப்பேருலகம் தன் சுமையையும் தான்தாங்க மாட்டாதது ஆகிவிடும். *990*

100. பண்புடைமை

(நல்ல குணங்கள் உடைமை)

1. **எண்பதத்தால் எய்தல் எளிதென்ப, யார்மாட்டும்
பண்புடைமை என்னும் வழக்கு.**

எவரும் எளிதாகக் காண்பதற்கு உரியவராக விளங்குவதால் பண்புடைமை என்று பாராட்டப்படும் நல்ல நெறியை எளிதில் அடையலாம் என்று ஆய்ந்தோர் கூறுவர். **991**

2. **அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல், இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு.**

அன்புடையனாதலும் சிறந்த குடியில் பிறத்தலும் ஆகிய இரண்டும், பண்புடைமை என்று உலகத்தார் உரைக்கும் நல்வழிகளாம். **992**

3. **உறுப்பொத்தல் மக்களொப் பன்றால்; வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு.**

உடல் உறுப்புகள் ஒத்திருத்தல் மக்களொடு ஒத்தது ஆகாது; பொருந்தி அமைந்த பண்புகள் ஒத்திருத்தலே, மெய்யான ஒப்பாகும். **993**

4. **நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு.**

முறைமையையும், நன்மை செய்தலையும் விரும்பிய பயன்பாடு உடையவர்களின் பண்புடைமையை உலகோர் பாராட்டி மகிழ்வர். **994**

5. **நகையுள்ளும் இன்னா திகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு.**

விளையாட்டில் கூட பிறரை இகழ்ந்து பேசுதல் துன்பந் தருவதேயாம்; பிறர் உள்ளம் உணர்ந்து நடப்பவரிடத்துப், பகைமையுள்ள பொழுதும் பண்பு அமைந்த சொற்களே உண்டாம். **995**

6. **பண்புடையார்ப் பட்டுண் டுலகம்; அதுஇன்றேல்**
மண்புக்கு மாய்வது மன்.

உலக நடைமுறை பண்புடையவர்களிடத்துப் பொருந்தி இருப்பதால் அது தடைப்படாமல் நிகழ்கின்றது; இல்லையானால் அது மண்ணுள் புகுந்து மறைந்து அழிந்துவிடும். *996*

7. **அரம்போலும் கூர்மைய ரேனும், மரம்போல்வர்**
மக்கட்பண் பில்லா தவர்.

மக்கட்பிறப்புக்குரிய பண்புடைமை இல்லாதவர் அறிவில் அரத்தைப் போலும் கூர்மையாளரே எனினும், அறிவில் கடைப்பட்ட (ஓரறிவுடைய) மரத்திற்கு ஒப்பானவரே ஆவர். *997*

8. **நண்பாற்றா ராகி நயமில செய்வார்க்கும்**
பண்பாற்றா ராதல் கடை.

நட்புக்குத் தக்க செயலைச் செய்யாதவராய்த் தீமையையே, செய்கின்றவர்க்கும், பண்பொடு கூடிய நன்மைகளைச் செய்யாதவர் ஆதல் பண்புடையவர்க்கு இழிவாகும். *998*

9. **நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்**
பகலும்பாற் பட்டன் றிருள்.

பிறரொடு கலந்து மகிழும் திறமுடையவர் அல்லாதவர்க்கு, மிகப் பெரிய இவ்வுலகம், பகற் பொழுதும் கூட இருள் மூடப்பட்ட பொழுதேயாம். *999*

10. **பண்பிலான் பெற்றபெருஞ் செல்வம், நன்பால்**
கலந்தீமை யால்திரிந் தற்று.

பண்பு இல்லாதவன் பெற்ற பெரிய செல்வம் எவர்க்கும் பயன்படாது கெடுதல், நல்லபால் அதனையுடைய ஏனத்தின் குற்றத்தால் கெட்டுப் பயன்படாது போவது போன்றது. *1000*

101. நன்றியில் செல்வம்

(எவர்க்கும் நன்மையில்லாத செல்வம்)

1. **வைத்தான்வாய் சான்ற பெரும்பொருள், அஃதுண்ணான்**
செத்தான் செயக்கிடந்த தில்.

வாழும் இடமெல்லாம் நிரம்பிய பெரும் பொருளைத் தேடி அதனைப் பிறர்க்கும் உதவாமல் தானும் உண்ணாமல் வைத்தவன் உயிரோடு இருப்பினும் இறந்தவனே; அப் பொருளால் செய்ய அமைந்த பயனுமில்லை. 1001

2. **பொருளானாம் எல்லாமென் றீயா திவறும்**
மருளானாம் மாணாப் பிறப்பு.

'விரும்பும் எல்லாமும் பொருளால் ஆகும்' என்று பிறர்க்கு உதவாது இறுகப் பிடிக்கும் பொருள் மயக்கத்தால் பெருமையிலாப் பிறவி என்னும் பழியுண்டாகும். 1002

3. **ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்**
தோற்றம் நிலக்குப் பொறை.

பொருள் தேடுவதையே விரும்பி, அப்பொருட் பயனாம் புகழை விரும்பாத மக்கள் மண்ணில் பிறத்தல், இந் நிலத்துக்குப் பாரம். 1003

4. **எச்சமென் றென்எண்ணும் கொல்லோ, ஒருவரால்**
நச்சப் படாஅ தவன்?

எவராலும் விரும்பப்படாத ஒருவன் தன் காலத்தின் பின்னே (பழியை அன்றி) எஞ்சி நிற்பது என்று எதனை எண்ணுவானோ! (அறிந்திலோம்) 1004

5. **கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க் கடுக்கிய**
கோடிஉண் டாயினும் இல்.

பிறர்க்கு வழங்குவதும் தாம் நுகர்வதுவும் இல்லார்க்குப் பலகோடி பொருள் இருந்தாலும் அவை இல்லாதவையே யாகும். 1005

6. **ஏதம் பெருஞ்செல்வம் தான்துவ்வான், தக்கார்க்கொன்**
றீதல் இயல்பிலா தான்.

தான் நுகராதவனாகவும் தக்கவர்க்கு ஒன்று கொடுக்கும் இயல்பு இல்லாதவனாகவும் இருப்பவன் பெற்றுள்ள பெரிய செல்வம் உலகுக்கு ஒரு நோயாகும். **1006**

7. **அற்றார்க்கொன் றாற்றாதான் செல்வம், மிகநலம்**
பெற்றாள் தமியள்மூத் தற்று.

வறியவர்க்கு அவர் வேண்டும் ஒன்றை உதவாதவன் செல்வம், எல்லா நலங்களும் ஒருங்கே பெற்ற நன்மகள் ஒருத்தி மண வாழ்வு கொள்ளாது தனித்திருந்தே மூப்படைந்ததைப் போன்ற பயனில்லாததாகும். **1007**

8. **நச்சப் படாதவன் செல்வம், நடுவூருள்**
நச்சு மரம்பழுத் தற்று.

(கருமித்தனம் உடைமையால்) எவராலும் விரும்பப் படாதவனது செல்வம், ஊரின் நடுவிடத்தே கொடிய நஞ்சுமரம் பழுத்திருப்பது போன்றது. **1008**

9. **அன்பொரீஇத் தற்செற் றறம்நோக்கா தீட்டிய**
ஒண்பொருள் கொள்வார் பிறர்.

அன்பை நீக்கி, அறத்தை எண்ணாமல், தன்னையும் வருத்திக் கொண்டு, ஒருவன் தேடி வைத்த பொருளின் பயனை, அயலாரே கொள்வர். **1009**

10. **சீருடைச் செல்வர் சிறுதுனி, மாரி**
வறங்கூர்ந் தனைய துடைத்து.

சிறப்புடைய கொடைச் செல்வர் அடைந்த சிறிய வறுமை, மழை பெய்யாமல் வறண்டு போன தன்மை உடையது. (இரண்டுமே நாட்டுக்குக் கேடாகும்) **1010**

102. நாணுடைமை

(பழிச்செயல்களைச் செய்தற்கு வெட்குதல்)

1. **கருமத்தால் நாணுதல் நாணு; திருநுதல்**
நல்லவர் நாணுப் பிற.

ஒருவன் தான் செய்த தகாத செயலுக்காக நாணுதல் (இங்குக் கூறப்படும்) நாணமாகும்; அழகிய நெற்றியுடைய மகளிர் இயல்பாக நாணும் நாணுதல் வேறொன்றாகும். 1011

2. **ஊண்உடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல**
நாணுடைமை மாந்தர் சிறப்பு.

ஊணும் உடையும் பிறவும் மக்களுக்கு எல்லாம் வேறு வேறானவை அல்ல; பொதுவுடைமை யானவை. ஆனால், நாணுடைமை என்பது நன்மாந்தர்க்கே சிறப்பாக அமைந்த ஒன்றாகும். (பொதுவுடைமை நிலைபெற நாணுடைமையே காப்பாகும்) 1012

3. **ஊனைக் குறித்த உயிரெல்லாம்; நாண்என்னும்**
நன்மை குறித்தது சால்பு.

உயிர்களின் வாழ்வெல்லாம் உணவைக் குறித்தே இயங்குவன. ஆனால், சான்றாண்மை என்பது, நாணுடைமை என்னும் நல்ல தன்மையைக் குறித்து இயங்குவதாகும். 1013

4. **அணியன்றோ நாணுடைமை சான்றோர்க் கஃதின்றேல்**
பிணியன்றோ பீடு நடை.

சான்றோர்க்கு நாணுடைமை என்னும் பண்பு அணிகலமாம்; அந்நாணுடைமை இல்லாதபோது, அவர்தம் பெருமித நடை நோய் நடையேயாம். 1014

5. **பிறர்பழியும் தம்பழியும் நாணுவார், நாணுக்**
குறைபதி என்னும் உலகு.

பிறர்க்கு உண்டாகிய பழியையும் தமக்கு உண்டாகிய பழியையும் எண்ணி நாணுகின்றவரை 'நாணுடைமைக்கு உறைவிடம்' என்று உயர்ந்தோர் பாராட்டுவர். 1015

6. **நாண்வேலி கொள்ளாது மன்னோ, வியன்ஞாலம்**
பேணலர் மேலா யவர்.

மேன்மக்கள் நாணம் என்னும் வேலியைத் தமக்குப் பாதுகாப்பாகக் கொள்வதை அல்லாமல் இப்பெரிய உலகம் கிடைப்பதாயினும் அதனைக் கொள்ள மாட்டார். *1016*

7. **நாணால் உயிரைத் துறப்பர்; உயிர்ப்பொருட்டால்**
நாண்துறவார் நாணாள் பவர்.

நாணம் என்னும் உயர்ந்த பண்பைக் கொண்டவர் அந்நாணம் கருதி உயிரை விடுவாரே அல்லாமல், உயிரைப் பொருட்டாகக் கருதி நாணத்தை விடமாட்டார். *1017*

8. **பிறர்நாணத் தக்கது தான்நாணா னாயின்,**
அறம்நாணத் தக்க துடைத்து.

பிறர் நாணத் தக்கதை ஒருவன் நாணாமல் செய்வான் ஆனால், அவனைக் கண்டு அறமே நாணுகின்ற இழிவு உடையது. (அவனை அறம் நீங்கும்) *1018*

9. **குலம்சுடும் கொள்கை பிழைப்பின்; நலம்சுடும்**
நாணின்மை நின்றக் கடை.

கொள்கை தவறி ஒருவன் நடந்தால் அது அவன் குடிப்பிறப்பைக் கெடுக்கும்; ஆனால் நாணிலாத் தன்மையொடு ஒருவன் நின்றால் அது அவன் நலங்களை எல்லாம் ஒருங்கே கெடுக்கும். *1019*

10. **நாணகத் தில்லார் இயக்கம், மரப்பாவை**
நாணால் உயிர்மருட்டி யற்று.

நாணுடைமையைத் தம்மிடத்துக் கொள்ளாதவர் உயிரோடு இயங்குதல், மரப்பொ(ய்)ம்மை ஒன்று, அதில் கட்டப்பட்ட கயிற்றால் இயங்கி, உயிருள்ளதாக மயக்குவது போன்றதாகும். *1020*

103. குடி செயல்வகை

(தான் பிறந்த குடியை உயர்த்தும் வகை)

1. **கருமம் செயஒருவன் 'கைதூவேன்' என்னும்**
   பெருமையின் பீடுடைய தில்.

   "யான் செய்யும் கடமையைச் செய்தற்கு, ஒருவன் கையை (துணையை) வேண்டேன்" என்னும் பெருமையினும் உயர்வுடைய பெருமை குடிக்கு வேறு இல்லை. 1021

2. **ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்**
   நீள்வினையால் நீளும் குடி.

   விடாமுயற்சி விரிந்த அறிவு என்னும் இரண்டும் கூடிய இடையறாத செயலால், ஒருவனது குடியின் வளமும் பெருமையும் உயரும். 1022

3. **'குடி செய்வல்' என்னும் ஒருவற்குத் தெய்வம்**
   மடிதற்றுத் தான்முந் துறும்.

   'என் குடியை மேம்படுத்துவேன்' என்னும் ஒருவனுக்கு வாழ்வாங்கு வாழும் பெருமக்கள் தம் உடையை மடித்துக் கட்டிக் கொண்டு உதவுதற்கு முன்வந்து நிற்பர். (தாமே வந்து உதவுவாரைத் தெய்வம் போல் உதவியதாகக் கூறுவது உலக வழக்கு) 1023

4. **சூழாமல் தானே முடிவெய்தும், தம்குடியைத்**
   தாழா துஞற்று பவர்க்கு.

   தம் குடியைக் காலத் தாழ்வு இல்லாமல் உயர்த்தும் முயற்சியைச் செய்பவர்க்கு, அதற்குரிய வழியை அவர் ஆராய்வதற்கு முன்னரே, அது வெற்றியாக முடிந்து விடும். 1024

5. **குற்ற மிலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்**
   சுற்றமாச் சுற்றும் உலகு.

   குற்றம் இல்லாதவனாய்த் தன்குடி மேம்படுதற்கு ஆகும் முயற்சியை மேற்கொண்டு வாழ்பவனை, உலகத்தவர் விரும்பித் தம் சுற்றமாகச் சூழ்ந்து கொள்வர். 1025

6. **நல்லாண்மை என்ப தொருவற்குத் தான்பிறந்த**
இல்லாண்மை ஆக்கிக் கொளல்.

ஒருவனுக்கு நல்ல ஆண்மை என்று சொல்லப்படுவது, அவன் பிறந்த குடியைப் பிற குடிகளினும் மேம்பட்டதாக்கிக் கொள்வதேயாம். ***1026***

7. **அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்**
ஆற்றுவார் மேற்றே பொறை.

போர்க்களத்தில் போர் தாங்கும் பொறுப்பு வலியவன் மேல் அமைவதுபோல், குடும்பக் களத்தும் பொறுப்பைத் தாங்குவார் மேலேயே பொறுப்பு அமையும். ***1027***

8. **குடிசெய்வார்க் கில்லை பருவம்; மடிசெய்து**
மானம் கருதக் கெடும்.

குடியை மேம்படச் செய்ய முயல்வார்க்குக் கால நிலை என்பது ஒன்று இல்லை; அவர், சோம்பலுற்று மானத்தைக் கருதிக் கொண்டு இருப்பின் குடிகெடும். ***1028***

9. **இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ, குடும்பத்தைக்**
குற்றம் மறைப்பான் உடம்பு?

குடும்பத்திற்குக் குற்றம் வராமல் அகற்றுதற்கு முயல்பவன் உடல், துன்பம் என்னும் பொருளுக்கே கொள்கலமாக (இருப்பிடமாக) அமைவதோ? (இல்லை) ***1029***

10. **இடுக்கண்கால் கொன்றிட வீழும், அடுத்தூன்றும்**
நல்லாள் இலாத குடி.

நெருங்கித் தாங்கும் நல்ல முயற்சியாளி இல்லாத குடியாகிய ஆலமரம், 'இடுக்கண்' எனப்படும் காற்று அலைத்து அழித்திட வீழ்ந்துபடும். ***1030***

104. உழவு

(உழவுத் தொழிலின் சிறப்பு)

1. **சுழன்றும்ஏர்ப் பின்ன துலகம்; அதனால்**
உழந்தும் உழவே தலை.

எவ்வெத் தொழில்களைச் செய்ய விரும்பித் திரிந்தாலும் உலகோர் உழவர்களுக்குப் பின்னேயே நிற்பர், ஆதலால் எவ்வளவு துன்பப் பட்டாலும் உழவே தலைமையான தொழிலாகும். (உழவுத் தொழிலே எல்லாத் தொழில்களுக்கும் அடிப்படை) *1031*

2. **உழுவார் உலகத்தார்க் காணி, யஃதாற்றா**
தெழுவாரை எல்லாம் பொறுத்து.

உழுதொழில் செய்வார், அத்தொழில் செய்யாது பிற முயற்சிகளில் வாழ்பவர்களையெல்லாம் தாங்குவதால் அவர்களே உலகத்தார் என்னும் தேர்க்கு அச்சாணி போன்றவர். *1032*

3. **உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்**
தொழுதுண்டு பின்செல் பவர்.

உழுதொழில் செய்து அதனால் உணவைப்பெற்று உண்டு வாழ்பவரே வாழ்பவர் ஆவர். மற்றையோர் அவரைத் தொழுது உண்டு பின் செல்பவரே ஆவர். *1033*

4. **பலகுடை நீழலும் தம்குடைக்கீழ்க் காண்பர்**
அலகுடை நீழ லவர்.

ஏர் என்னும் குடை நிழலை உடைய உழவர், தம் குடைநிழலின் கீழே, ஆட்சியாளரின் பலகுடைகளும், நிழல் செய்யக் காண்பர் (உழவின் வளத்துள் அரசின்வளம் ஒடுங்கும்) *1034*

5. **இரவார்; இரப்பார்க்கொன் றீவர்; கரவாது**
கைசெய்தூண் மாலை யவர்.

உழைத்து உண்பதை, மரபாகக் கொண்ட உழவர், பிறரொருவரைப்போய் இரக்கமாட்டார்; அன்றியும், தம்மிடம் இரந்து வந்தவர்க்கு ஒளியாமலும் கொடுப்பார். *1035*

6. **உழவினார் கைம்மடங்கின் இல்லை, 'விழைவதூஉம் விட்டேம்'என் பார்க்கு நிலை.**

'எப்பற்றையும் விட்டு விட்டோம்' என்னும் துறவியர்க்கும் உழவினைச் செய்வார் செயலொடுங்கிப் போனால், அத்துறவில் வாழும் நிலை இல்லை. *1036*

7. **தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும் வேண்டாது சாலப் படும்.**

ஒரு பங்குப் புழுதி காற்பங் காகுமாறு பல்கால் உழுது மண்ணை உலரவிட்டால் கைப்பிடியளவாம் எருவும் வேண்டாமல் பயிரின் விளைவு மிகவுண்டாம். *1037*

8. **ஏரினும் நன்றால் எருவிடுதல்; கட்டபின் நீரினும் நன்றதன் காப்பு.**

உழுதலினும் எருவிடுதல் நல்லது; அதன்பின் களைவெட்டி நீர் விடுதலினும், நோய் முதலாம் அழிவுகளிலிருந்து காத்தல் மிக நல்லது. *1038*

9. **செல்லான் கிழவன் இருப்பின், நிலம்புலந் தில்லாளின் ஊடி விடும்.**

நிலத்திற்கு உரியவன் நாள்தோறும் நிலத்திற்குச் சென்று செய்வன செய்யாது சோம்பியிருந்தால், அந்நிலம் கணவன் பேணுதலைப் பெறாத மனையாள்போல வெறுப்புற்றுப் பயன்தராது போய்விடும். *1039*

10. **இலமென் றசைஇ இருப்பாரைக் காணின், நிலமென்னும் நல்லாள் நகும்.**

'யாம் எதுவும் இல்லோம்' என்று சோர்ந்து போய் இருக்கும் நிலவுரிமையாளரைக் கண்டால், நிலம் என்று சொல்லப்படும் நன்மகள் நகைப்பாள். *1040*

105. நல்குரவு

(வறுமை)

1. **இன்மையின் இன்னாத தியாதெனின், இன்மையின்**
இன்மையே இன்னா தது.

ஒருவனுக்கு வறுமையைக் காட்டிலும் துன்பம் தருவது எது என்றால், அவ்வறுமை போலத் துன்பம் தருவது அவ்வறுமையே பிறிதொன்று இல்லை. *1041*

2. **இன்மை எனஒரு பாவி மறுமையும்**
இம்மையும் இன்றி வரும்.

வறுமை என்று சொல்லப்படும் இணையில்லாத பாவியானவன், பின்னாள் நலமும் இந்நாள் நலமும் இல்லாதவனாகச் செய்ய வருவான். *1042*

3. **தொல்வரவும் தோலும் கெடுக்கும் தொகையாக,**
நல்குரவு என்னும் நசை.

வறுமை என்று சொல்லப்படும் (இல்லையே என ஏங்கும்) விருப்பம், பழமையான குடிப்பிறப்பையும் புகழையும் முழுமையாகக் கெடுத்துவிடும். *1043*

4. **இற்பிறந்தார் கண்ணேயும் இன்மை, இளிவந்த**
சொற்பிறக்கும் சோர்வு தரும்.

வறுமைக் கொடுமையானது, நற்குடிப்பிறந்தாரிடத்தும், அவர்குடிப் பிறப்பொடு பொருந்தாத இழிசொல் சொல்லும் தளர்ச்சியை உண்டாக்கும். *1044*

5. **நல்குரவு என்னும் இடும்பையுள், பல்குறைத்**
துன்பங்கள் சென்று விடும்.

வறுமை என்னும் இக்கட்டான நிலைமை உண்டாகும் போது, அதன் வழியாகப் பலப்பல துன்பங்களும் தாம்தாமே வந்து சேரும். *1045*

6. **நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும், நல்கூர்ந்தார்**
சொற்பொருள் சோர்வு படும்.

சிறந்த பொருளைப் பற்றித் தெளிவாக உணர்ந்து சொன்னாலும், வறுமைக்கு ஆட்பட்டவர் சொல்லும் சொல், அதன் பொருட்சிறப்பை இழந்துவிடும். ***1046***

7. **அறம்சாரா நல்குரவு ஈன்றதா யானும்**
பிறன்போல நோக்கப் படும்.

அறநெறிப்படாத வறுமையாளன், அவனைப் பெற்ற தாயினாலும் அயலான்போல (வெறுப்புடன்) பார்க்கப் படுவான். ***1047***

8. **இன்றும் வருவது கொல்லோ, நெருநலும்**
கொன்றது போலும் நிரப்பு?

நேற்றும் தவறாமல் வந்து, கொல்வதுபோல் துன்புறுத்திய வறுமை, இன்றும் வந்து சேருமோ? (இன்றேனும் வாராதிருக்க வழி காண்பேன்) ***1048***

9. **நெருப்பினுள் துஞ்சலும் ஆகும்; நிரப்பினுள்**
யாதொன்றும் கண்பா டரிது.

நெருப்பினுள் ஒருவேளை ஒருவன் உறங்கினாலும் உறங்குதல்கூடும்; ஆனால், வறுமை என்னும் நெருப்பினுள் எவரும் எவ்வகையாலும் கண்ணை மூடவும் முடியாது. ***1049***

10. **துப்புரவு இல்லார் துவரத் துறவாமை**
உப்பிற்கும் காடிக்கும் கூற்று.

நுகர்தற்கு வேண்டும் வாய்ப்பு எதுவும் இல்லாதவர் அந்நுகர்வை முழுமையாக விடாது இருத்தல், பிறருடைய உப்புக்கும் புளித்த நீர்க்கும் கேடேயாகும். ***1050***

106. இரவு

(கருவி பொறித்திறம் ஆக்கம் முதலியவை இல்லாமையால் கேட்டுப் பெறுகின்ற நிலை)

1. **இரக்க இரத்தக்கார்க் காணின், கரப்பின்**
அவர்பழி தம்பழி யன்று.

ஒன்றைக் கேட்டுப் பெறத்தக்காரைக் காண வாய்ப்பின், அவரைக் கேட்டு அதைப் பெறுக; அவர் கொடாது மறைப்பின், அஃது அவர் பழியாகும்; கேட்பவர் பழியாகாது. *1051*

2. **இன்பம் ஒருவற் கிரத்தல்; இரந்தவை**
துன்பம் உறாஅ வரின்.

ஒருவரிடம் கேட்கப் பெற்ற ஒன்று துன்பமுறாத வகையில் கிடைக்குமானால், கேட்டுப் பெறுதலும் ஒருவனுக்கு இன்பமேயாம். *1052*

3. **கரப்பிலா நெஞ்சின் கடனறிவார் முன்நின்**
றிரப்புமோர் ஏஎர் உடைத்து.

ஒளித்தல் இல்லாத மனத்தோடு, பொருளுடையவர்க்குரிய கடமையை அறிந்தவர் முன்னே நின்று, ஒன்றைக் கேட்பதும் ஓர் அழகுடையதே யாம். *1053*

4. **இரத்தலும் ஈதலே போலும், கரத்தல்**
கனவிலும் தேற்றாதார் மாட்டு.

கொடாது மறைப்பதைக் கனவுப் போதிலும்கூடக் கருதாதவர் இடத்தில், ஒன்றைக் கேட்டு நிற்றலும் ஈவதே போன்ற பெருமிதம் உடையதாகும். *1054*

5. **கரப்பிலார் வையகத் துண்மையால், கண்நின்**
றிரப்பவர் மேற்கொள் வது.

நேரில் நின்று இரந்து கேட்பவர், அவ்விரத்தலை விடாமல் மேற்கொள்வது, தம்மிடத்து உள்ளதை ஒளியாமல் கொடுப்பவர் சிலர் உலகில் உள்ளமையால் தான்! *1055*

6. **கரப்பிடும்பை இல்லாரைக் காணின், நிரப்பிடும்பை எல்லாம் ஒருங்கு கெடும்.**

உள்ளதை மறைத்தலாகிய துன்பம் இல்லாதவரைக் கண்டால், இரப்பவரின் இல்லாமைத் துன்பம் அனைத்தும், ஒருமொத்தமாக நீங்கும். **1056**

7. **இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின், மகிழ்ந்துள்ளம் உள்ளுள் உவப்ப துடைத்து.**

தம்மைப் பழித்துப் பேசாதும் நகையாடாதும் கொடுக்கும். நல்லோரைக் கண்டால், இரந்து கேட்பவர், உள்ளம் மகிழ்ந்து உள்ளுக்குள் இன்பமுறுதல் உடையது. **1057**

8. **இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம் மரப்பாவை சென்றுவந் தற்று.**

இரப்பவர்கள் இல்லையானால் குளிர்ந்த பெரிய உலகத்துள்ள மாந்தர் இயக்கம், கயிற்றால் இயக்கப் படும். மரப்பாவை சென்று வருவது போலாம். **1058**

9. **ஈவார்கண் என்னுண்டாம் தோற்றம், இரந்துகோள் மேவார் இலாஅக் கடை?**

ஒருவரிடம் ஒன்றைக் கேட்டுப் பெறுதலை விரும்புவார் இல்லாத இடத்துக், கொடையாளரிடத்து என்ன பெருமை உண்டாகும்? (எதுவும் இல்லை) **1059**

10. **இரப்பான் வெகுளாமை வேண்டும்; நிரப்பிடும்பை தானேயும் சாலும் கரி.**

பிறரிடம் ஒன்றைக் கேட்டு வாங்க வருபவன் சினங் கொள்ளாமை வேண்டும்; தன்னுடைய தேவைக்கு வேண்டியதும் தன்னிடம் இல்லாது இருப்பதே அதற்குச் சான்றாகும். **1060**

107. இரவச்சம்

(கல்வி பொறித்திறம், ஆக்கம் முதலியன இல்லாமையால் கேட்டுப் பெறும் நிலையில் தன்மானம் இழக்க அஞ்சுதல்)

1. **கரவா துவந்தீயும் கண்ணன்னார் கண்ணும்**
   இரவாமை கோடி யுறும்.

   கேட்டதை ஒளியாமல் மகிழ்ந்து தரும் கண் போன்ற அருளுடையவர் இடத்தும், ஒன்றை (மானம் கெட) இரந்து கேளாதிருத்தல் கோடி மடங்கு நலமாகும். *1061*

2. **இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின், பரந்து**
   கெடுக உலகியற்றி யான்.

   இரந்து பெற்றுத்தான் ஒருவன் வாழ வேண்டுமென்னும் நிலைமை உண்டாயின், அவ்வாறு வாழச் சட்டங்களை இயற்றிய ஆட்சியாளன், அலைந்து கெடுவானாக. *1062*

3. **'இன்மை இடும்பை; இரந்துதீர் வாம்'என்னும்**
   வன்மையின் வன்பாட்ட தில்.

   இல்லாமை என்பது, தொல்லை மிக்க தாதலால், 'அதனை இரந்து பெறுதலால் நீக்குவோம்' என்னும் வன்கொடுமையிலும் வன்கொடுமையானது இல்லை. *1063*

4. **இடமெல்லாம் கொள்ளாத் தகைத்தே, இடமில்லாக்**
   காலும் இரவொல்லாச் சால்பு.

   இல்லாமையைத் தீர்த்துக் கொள்ள வகையெதுவுமில்லாத நிலையிலும் (மானம் கெட) இரத்தலை மேற்கொள்ளாத சான்றாண்மை, உலகிடமெல்லாம் கொள்ளாத விரிந்த பெருமையுடையது. *1064*

5. **தெண்ணீர் அடுபுற்கை ஆயினும் தாள்தந்த**
   துண்ணலின் ஊங்கினிய தில்.

   தெளிந்த நீரிலே வேக வைக்கப்பட்ட புல்லரிசிக் கூழே எனினும், தன் முயற்சியால் வந்ததை உண்பதைக் காட்டிலும் பெரிய இன்பமாவது பிறிது இல்லை. *1065*

6. **ஆவிற்கு நீரென் றிரப்பினும், நாவிற்
இரவின் இளிவந்த தில்.**

'ஆவிற்கு நீர் உதவுக' என்று பிறரிடம் இரந்து கேட்பினும் நாவிற்கு அந்த இரப்பைப் போல இழிவாவது, வேறொன்று இல்லை. *1066*

7. **இரப்பன் இரப்பாரை எல்லாம், 'இரப்பின்
கரப்பார் இரவன்மின்' என்று.**

"நீங்கள் ஒருவரிடம் ஒன்றை இரந்து கேட்பின் அவர் இல்லை என்பார்; ஆதலால், இரந்து கேளாது விடுக" என்று இரந்து கேட்பாரை எல்லாம் யானும் இரந்து கேட்பேன். *1067*

8. **இரவென்னும் ஏமாப்பில் தோணி, கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்.**

இரத்தலென்னும் பாதுகாப்பற்ற 'படகு', வைத்துக் கொண்டே இல்லை என்று சொல்வதாம் 'பாறை' தாக்குதலால் பிளந்து போய் விடும். (ஆதலால் இரத்தல் வேண்டா.) *1068*

9. **இரவுள்ள உள்ளம் உருகும்; கரவுள்ள
உள்ளதூஉம் இன்றிக் கெடும்.**

இரத்தலை நினைக்கும் போது உள்ளம் உருகிப் போகும்; இரந்து கேட்பவனிடம் 'இல்லை' என்று சொல்லி ஒளிப்பவனை நினைக்கும் போது, உருகிய அது, இல்லாமல் உலர்ந்து காய்ந்து போகும். *1069*

10. **கரப்பவர்க்கு யாங்கொளிக்கும் கொல்லோ, இரப்பவர்
சொல்லாடப் போஒம் உயிர்?**

இரந்து கேட்பவர் 'இல்லை' என்று சொல்லிய அளவிலேயே உயிர் போவதாய் இருக்க, அதனை வைத்துக் கொண்டே 'இல்லை' என்பவரிடத்து உயிர் போகாமல் எங்கே ஒளிந்து கொண்டிருக்குமோ? *1070*

108. கயமை

(இழிந்த தன்மையுடையவர்)

1. **மக்களே போல்வர் கயவர்; அவரன்ன**
ஒப்பாரி யாம்கண்ட தில்.

இழிந்த மக்களும் (கயவர்) தோற்றத்தால் நன்மக்களைப் போலவே இருப்பர்; அவரைப் போல முழுது ஒப்பாகத் தோற்றத்தில் இருப்பவரை யாம் கண்டது இல்லை. 1071

2. **நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்;**
நெஞ்சத் தவலம் இலர்.

நல்லவற்றை அறிந்தவரினும் கயவர் நலமுடையவர்; ஏனெனில் அவர்க்கு உண்டாகும் நல்லவை பற்றிய கவலையை இவர் கொள்ளுதல் இலர். (இது புகழ்வது போலப் பழிப்பது) 1072

3. **தேவ ரனையர் கயவர், அவருந்தாம்**
மேவன செய்தொழுக லான்.

விரும்புவதை எல்லாம் செய்தலுடையவர் 'தேவர்' என்று சொல்வா ருளர்; அவ்வாறாயின், தாம் விரும்புவனவெல்லாம் செய்யும் கயவர் தேவர் ஒப்பவரே (இதுவும் புகழ்வது போலப் பழிப்பதே) 1073

4. **அகப்பட்டி யாவாரைக் காணின், அவரின்**
மிகப்பட்டுச் செம்மாக்கும் கீழ்.

கீழோன், தனக்கு உட்பட்ட கீழானவரைக் கண்டானானால், அவரினும் கீழ் ஒழுக்கத்தில் மேம்பட்டு இறுமாப்புக் கொள்வான். 1074

5. **அச்சமே கீழ்கள தாசாரம்; எச்சம்**
அவாவுண்டேல் உண்டாம் சிறிது.

கீழ்மக்கள் நல்லதைப் பற்றுவதெல்லாம் தண்டனை கிடைக்குமென்னும் அச்சத்தாலேயாம்; மற்றும், தம் விருப்பம் நிறைவேறும் என்பதாலும் சிறிது உண்டாகும். 1075

6. **அறைபறை அன்னர் கயவர், தாம்கேட்ட**
மறைபிறர்க் குய்த்துரைக்க லான்.

கயவர் தாம் கேட்ட மறைவான செய்திகளைப் பிறர் கேளாத போதும் தாமே தேடிப் போய்ச் சொல்லி விடுவர்; ஆதலால், அடிக்கும் பறை போன்றவர் அவர். **1076**

7. **ஈர்ங்கை விதிரார் கயவர், கொடிறுடைக்கும்**
கூன்கைய ரல்லா தவர்க்கு.

கன்னத்தில் அடித்து உதைக்கும் குவித்த (மடங்கிய) கையை உடையவர் அல்லாதவர்க்குக் கயவர் தம் ஈரக் கையையும் உதற மாட்டார். **1077**

8. **சொல்லப் பயன்படுவர் சான்றோர்; கரும்புபோல்**
கொல்லப் பயன்படும் கீழ்.

ஒரு சொல் சொல்லிய அளவிலேயே சான்றோர் பயன்படுவர்; ஆனால், கீழ்களோ கரும்பை ஆட்டிப் பிழிந்தாற் போல வருந்தினால்தான் பயன்படுவர். **1078**

9. **உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின், பிறர்மேல்**
வடுக்காண வற்றாகும் கீழ்.

பிறர் உடுப்பதைக் காணினும், உண்பதைக் காணினும் பொறாமல், அவரிடத்துக் குற்றமில்லாது இருந்தாலும் குற்றத்தைப் படைத்துக் கூறவல்லது கீழ். **1079**

10. **எற்றிற் குரியர் கயவர்? ஒன் றுற்றக்கால்**
விற்றற் குரியர் விரைந்து.

தமக்கு ஒரு குறை உண்டானால், அதனை நீக்குவதற்காகத் தம்மை விரைந்து விற்றற்குரியர் கயவர்; அதனை அல்லாமல் அவர் வேறு எதற்கு உரியர்? **1080**

திருக்குறள் வாழ்வியலுரை

இன்பம்

உயிர் தளிர்க்கச் செய்யும்

உறைவு இடம்.

109. தகையணங்குறுத்தல்

(மணப்பருவமுற்ற கன்னியைக் கண்ட காளையை அவள் அழகு வருத்துதல்)

1. **அணங்குகொல்; ஆய்மயில் கொல்லோ! கணங்குழை மாதர்கொல்! மாலும்என் நெஞ்சு.**

யான் காணும் உருவம், வருத்தும் தெய்வப் பெண்ணோ? அழகிய மயிலோ? திரண்ட கூந்தலையுடைய மாதோ? என் நெஞ்சமறியாமல் மயங்குகின்றது. 1081

2. **நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல், தாக்கணங்கு தானைக்கொண் டன்ன துடைத்து.**

என்னால் நோக்கப்பட்ட இவள், என் நோக்குக்கு எதிராக நோக்குவது, தாக்கி அழிக்கும் தெய்வப் பெண் ஒருத்தி தன் படையைக் கொண்டு வந்து தாக்கினால் போன்றது. 1082

3. **பண்டறியேன் கூற்றென் பதனை; இனியறிந்தேன்; பெண்தகையால் பேரமர்க் கட்டு.**

முன்னெல்லாம் கூற்று என்பதை யான் அறிந்திலேன்; இப்பொழுதே அறிந்தேன்; அது பெண் தன்மையுடன் பெரும்போர் செய்யும் கண்ணை உடையது! 1083

4. **கண்டார் உயிருண்ணும் தோற்றத்தால், பெண்தகைப் பேதைக் கமர்த்தன கண்.**

பெண் தன்மை சிறந்த இளையவளாகிய இவள் கண்கள், கண்டவர் உயிரை வருத்தும் தோற்றமுடையவையாக இருத்தல், (இவள் இளமையொடு) மாறுபட்டனவாகும். 1084

5. **கூற்றமோ, கண்ணோ, பிணையோ மடவரல் நோக்கம்இம் மூன்றும் உடைத்து.**

இம்மெல்லியலாளின் கண் வருத்துவதால் கூற்றமோ, என்னை நோக்குவதால் கண்ணோ, மருண்டு பார்த்தலால் மானோ இந்த மூன்று தன்மைகளும் உடையதாக உள்ளது இது. 1085

6. **கொடும்புருவம் கோடா மறைப்பின், நடுங்கஞர்**
செய்யல மன்னிவள் கண்.

வளைந்த புருவங்கள் வளையாமல் நேராக இருந்து மறைக்குமென்றால், இவள் கண்கள் யான் நடுங்கத்தக்க துன்பத்தைச் செய்ய மாட்டா! **1086**

7. **கடாஅக் களிற்றின்மேல் கட்படாம், மாதர்**
படாஅ முலைமேல் துகில்.

இக்காதலாளின் நிமிர்ந்த மார்பகங்களின் மேல் ஆடை, மதங்கொண்ட ஆண் யானையின் மேல் இடப்பட்ட முகபடாம் போன்றது. **1087**

8. **ஒண்ணுதற் கோஒ உடைந்ததே, ஞாட்பினுள்**
நண்ணாரும் உட்குமென் பீடு.

போர்க்களத்தில் வலிய பகைவரும் அஞ்சி நடுங்கத் தக்க என் பெருமிதம், இவள் ஒளி பொருந்திய நெற்றிக்கு ஆற்றாமல் தோற்று விட்டதே! **1088**

9. **பிணையேர் மடநோக்கும் நாணும் உடையாட்**
கணியெவனோ ஏதில தந்து.

பெண் மானின் அழகிய மெல்லிய நோக்கும், நாணமும் (இயற்கை) அணிகலங்களாகக் கொண்ட இவட்கு, மற்றும் அயலான அணிகலங்களை அணிந்து விட்டது எதற்காகவோ? **1089**

10. **உண்டார்கண் அல்ல தடுநறாக் காமம்போல்**
கண்டார் மகிழ்செய்தல் இன்று.

காய்ச்சப்பட்ட மது, உண்டார்க்கு மகிழ்ச்சியைத் தருமேயல்லாது, இவள் காதலைப் போலக் கண்டார்க்கு மகிழ்ச்சியை தருவது இல்லை. **1090**

110. குறிப்பறிதல்

(மணப்பருவமுற்ற கன்னியும் காளையும் ஒருவர்க்கு ஒருவர் இசையும் உள்ளக் குறிப்பு அறிதல்)

1. **இருநோக் கிவளுண்கண் உள்ள தொருநோக்கு**
நோய்நோக் கொன்றந்நோய் மருந்து.

இவளுடைய ஒளியமைந்த கண்களில் உள்ள பார்வைகள் இரண்டாயின. அவற்றுள்ஒன்று, நோய்ப் பார்வை; மற்றொன்று, நோயை நீக்கும் மருந்து போன்ற பார்வை. 1091

2. **கண்களவு கொள்ளும் சிறுநோக்கம், காமத்தில்**
செம்பாகம் அன்று பெரிது.

யான் காணாத பொழுதில் என்னைக் கள்ளமாகக் காணும் இவளின் கடைக்கண் பார்வை, இன்பத்தில் சரிபாதியானதன்று; அதனினும் பெரிது. 1092

3. **நோக்கினாள்; நோக்கி இறைஞ்சினாள்; அஃதவள்**
யாப்பினுள் அட்டிய நீர்.

'என்னைப் பார்த்தாள்; யான் அவளைப் பார்த்த அளவில் நாணத்தால் தலை தாழ்ந்தாள்; அது மணவாழ்வு என்னும் பயிர் வளர்வதற்குரிய பாத்தியில் அவள் பாய்ச்சிய நீராகும்.' 1093

4. **யான்நோக்குங் காலை நிலன்நோக்கும்; நோக்காக்கால்**
தான்நோக்கி மெல்ல நகும்.

யான் அவளைப் பார்க்கும்போது அவள் நிலத்தைப் பார்ப்பாள்; யான் அவளைப் பாராதிருந்தால் அவள் என்னைப் பார்த்து மெல்லென நகுவாள். 1094

5. **குறிக்கொண்டு நோக்காமை யல்லால், ஒருகண்**
சிறக்கணித்தாள் போல நகும்.

நேருக்கு நேர் குறிவைத்துப் பாராமை அல்லாமல், ஒரு கண்ணைச் சுருக்கி பார்த்தாற் போலப் பார்த்துத் தன்னுள் மகிழ்வாள். 1095

6. **உறாஅ தவர்போல் சொலினும், செறாஅர்சொல்
ஒல்லை உணரப் படும்.**

தொடர்பு இல்லாதவர் போலத் தமக்குள் பேசிக் கொண்டாலும் அச் சொற்கள் காதலர் சொற்கள் (செறாஅர் சொல்) என்று பிறரால் விரைவில் அறியப்படும். **1096**

7. **செறாஅச் சிறுசொல்லும் செற்றார்போல் நோக்கும்
உறாஅர்போன் றுற்றார் குறிப்பு.**

சினந் தராத கடுமை காட்டும் சிறிய சொல்லும் வெறுத்தார் போன்று பார்க்கும் பார்வையும் தொடர்பு இல்லார் போன்று தொடர்பு உள்ளார் செய்யும் குறிப்புச் செயல்களாகும். **1097**

8. **அசையியற் குண்டாண்டோர் ஏஎர்யான் நோக்கப்
பசையினள் பைய நகும்.**

யான் ஏக்கத்துடன் அவளைப் பார்த்தபோது அன்புடையளாய் அவள் மெல்லென நகுவாள்; ஆதலால், அசையும் கொடி போலும் மெல்லியலாளின் நகையில் ஓர் அழகிய குறிப்புளது. **1098**

9. **ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலார் கண்ணே உள.**

யாதும் தொடர்பிலா அயலாரைப் போலத் தங்களுக்குள் பொதுப் பார்வை பார்த்துக் கொள்ளுதலும் உள்ளத்தால் ஒன்றுபட்ட காதலர்கள் இடத்தில் உண்டு. **1099**

10. **கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின், வாய்ச் சொற்கள்
என்ன பயனும் இல.**

காதலரின் கண்களொடு கண்கள் இணைந்து ஒத்த பார்வை பார்க்குமானால், அதற்குமேல் அவர்கள் வெளிப்படப் பேசும் பேச்சால் எப்பயனும் இல்லை. **1100**

111. புணர்ச்சி மகிழ்தல்

(மணப்பருவமுற்ற கன்னியும் காளையும் மணங்கொண்டு புணர்ச்சியை மகிழ்ந்து கூறுதல்)

1. **கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்**
ஒண்டொடி கண்ணே உள.

"ஒளியுடைய வளையல்களை அணிந்த என்னவளிடத்திலே கண்டும் கேட்டும் உண்டும் முகர்ந்தும் தொட்டும் அடைகின்ற ஐம்புல இன்பங்களும் ஒருங்கே உள்ளன". 1101

2. **பிணிக்கு மருந்து பிறமன்; அணியிழை**
தன்நோய்க்குத் தானே மருந்து.

"எந்த நோய்க்கும் மருந்து, பிறிதொரு பொருளாகும்; ஆனால், அணிகலம் அணிந்த என்னவளால் உண்டாகிய நோய்க்கு மருந்து பிறிதொன்று இல்லை; அவளே மருந்தாவள்." 1102

3. **தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்**
தாமரைக் கண்ணான் உலகு?

அவரவர் விரும்புகின்ற காதலியரின் மெல்லிய தோள்மேல் துயிலும் இனிய துயிலைப் பார்க்கிலும் தாமரைக் கண்ணான் உலகில் கிடைப்பதாகச் சொல்லப்படும் இன்பம் இனிதாகுமோ? ஆகாது. 1103

4. **நீங்கின் தெறூஉம், குறுகுங்கால் தண்ணென்னும்**
தீயாண்டுப் பெற்றாள் இவள்?

விலகினால் சுடும்; நெருங்கினால் குளிரும்; இத்தகைய வியப்பான தீயை, என்னவள் எவ்விடத்திலே இருந்து பெற்றாள்? 1104

5. **வேட்ட பொழுதின் அவையவை போலுமே,**
தோட்டார் கதுப்பினாள் தோள்.

பூங்கொத்துகளை அணிந்த கூந்தலை உடைய என்னவள் தோள்கள், விரும்பிய பொழுதில் விரும்பிய பொருள்கள் கிடைத்து இன்பம் செய்வன போலவே இன்பம் செய்கின்றன. 1105

6. **உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலால், பேதைக்
கமிழ்தின் இயன்றன தோள்.**

சேருந்தோறும், வாடிய உயிர் தளிர்க்குமாறு தொடுதலால், என்னவளாம் இவ்விளம்பெண்ணுக்குத் தோள்கள் அமிழ்த்தினால் செய்யப்பட்டன போலும்! 1106

7. **தம்மில் இருந்து தமதுபாத் துண்டற்றால்,
அம்மா அரிவை முயக்கு.**

அழகிய மாந்தளிர் நிறம் அமைந்த என்னவளின் தழுவுதல், தமக்கு உரிமையாம் இல்லத்தில் இருந்து, தம் உழைப்பால் வந்த உணவைப் பலரொடும் பகுத்துண்டாற் போலும் இன்பம் செய்வது. 1107

8. **வீழும் இருவர்க் கினிதே, வளியிடை
போழப் படாஅ முயக்கு.**

காற்றும் நடுவே புகுதற்கு முடியாதவாறு நெருங்கித் தழுவும் தழுவுதல், ஒத்த அன்புடைய துணைவன், துணைவி ஆகிய இருவர்க்கும் இணையில்லாத இன்பமாகும். 1108

9. **ஊடல் உணர்தல் புணர்தல் இவை, காமம்
கூடியார் பெற்ற பயன்.**

பிணங்குதலும், பிணங்குதல் நீங்குதலும், கூடி இன்புறுதலும் ஆகியவை, நிலையான அன்பு கூடிய துணைவன் துணைவியர் பெற்ற பயன்களாம். 1109

10. **அறிதோ றறியாமை கண்டாற்றால், காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு.**

நூல்களை ஆராயுந்தோறும் அறியாமை புலப்பட்டுப் புதுப்புது இன்பம் தோன்றுதல் போல், நல்ல அணிகலங்களை அணிந்த என்னவளைக் கூடுந்தோறும் புதுப்புது இன்பம் தோன்றுவதாம். 1110

112. நலம் புனைந்துரைத்தல்

(துணைவியின் அழகைத் துணைவன் மிகுதியும் வியந்து பாராட்டுதல்)

1. **நன்னீரை வாழி அனிச்சமே; நின்னினும்
மென்னீரள், யாம்வீழ் பவள்.**

"அனிச்சமே வாழ்வாயாக! நீ மெல்லிய தன்மை உடையை எனினும், எம்மைக் கவர்ந்த எம்மவள் உன்னைப் பார்க்கிலும் மிக மெல்லிய தன்மை உடையவள்." **1111**

2. **மலர்காணின் மையாத்தி நெஞ்சே, இவள்கண்
பலர்காணும் பூவொக்கும் என்று.**

"நெஞ்சே! என்னவள் கண்கள் பலராலும் காணப்படும் மலர்களைப் போலும் என்று, மலர்களைக் காணும் பொழுதுகளில் எல்லாம் நீ மயங்குகின்றாய்!" (நீ அறிவிலாய்! இவள் கண்களைப் பிறர், அறியார்) **1112**

3. **முறிமேனி, முத்தம் முறுவல், வெறிநாற்றம்,
வேல்உண்கண் வேய்த்தோ ளவட்கு.**

"யான் விரும்பும் என்னவளுக்கு, தளிர்போலும் உடல்; முத்துப் போலும் பல்; இயற்கை மணம்; வேல் போலும் ஒளியுடையகண்; மூங்கில் போலும் தோள்". **1113**

4. **காணிற் குவளை கவிழ்ந்து நிலனோக்கும்,
மாணிழை 'கண் ஒவ்வேம்' என்று.**

"குவளை மலர்கள் காணமுடிந்தனவாக என்னவளைக் கண்டால் இவள் கண்களுக்கு ஒப்பாக மாட்டோம் என்று நாணமுற்றுத் தலையை மேல் நோக்காது கவிழ்ந்து நிலத்தைப் பார்க்கும்." **1114**

5. **அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள்; நுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை.**

"மெல்லிய அனிச்சப்பூக்களின் காம்புகளைக் கொய்யாமல் அப்படியே என்னவள் சூடியுள்ளாள்; ஆதலால் (அச்சுமை தாங்க மாட்டாள் இவள்) இடுப்பு முரியும் வருத்தம் நோக்கிப் பறைகள் மங்கலமாய் ஒலிக்க மாட்டா." **1115**

6. மதியும் மடந்தை முகனும் அறியா
பதியிற் கலங்கிய மீன்.

"விண்மீன்கள் மதியத்தையும், என்னவளின் முகத்தையும் வேற்றுமை கண்டு அறிய மாட்டாதனவாகத் தாம் இருக்கும் இடத்தில் இருந்து பெயர்ந்து நடுங்குவனவாயின." **1116**

7. அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல,
மறுவுண்டோ மாதர் முகத்து?

"குறைப்பகுதி முழுதும் நிரம்பி விளங்கும் முழு நிலவுக்குள்ளது போல என்னவளின் முகத்தில் கறையுண்டோ? இல்லை!". **1117**

8. மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி.

"முழுமதியே! வாழ்வாயாக! என்னவளின் முகத்தைப் போல் (மாற்றமும் மறுவும் இல்லாமல்) ஒளி செய்ய வல்லமை உடையையானால் என் காதலுக்கு அவளைப் போலவே நீயும் உரிமை ஆவாய்." **1118**

9. மலரன்ன கண்ணாள் முகமொத்தி யாயின்
பலர்காணத் தோன்றல் மதி.

"முழுமதியே! பலர்காணத் தோன்றாத மலர் போலும் கண்ணையுடைய என்னவளின் முகத்தினை ஒத்திருக்க நீ விரும்பினை என்றால், பலரும் காணுமாறு தோன்றா திருப்பாயாக." **1119**

10. அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்.

"அனிச்சத்தின் மெல்லிய பூவும், அன்னத்தின் நொய்மையான இறகும் என்னவளின் மெல்லிய அடிகளுக்கு முற்றிய நெருஞ்சிமுள் போல வருத்தும் தன்மையன". **1120**

113. காதற் சிறப்புரைத்தல்

(துணைவனும் துணைவியும் தம் காதல் மிகுதி கூறுதல்)

1. **பாலொடு தேன்கலந் தற்றே, பணிமொழி**
வாலெயி றூறிய நீர்.

"இனிய மெல்லிய மொழியுடைய என்னவளின் தூய பற்களிடத்தில் இருந்து சுரந்த நீர், ஆவின் பாலொடு மலைத்தேன் கலந்தாற் போன்ற சுவை உடையது". 1121

2. **உடம்பொ டுயிரிடை என்னமற் றன்ன**
மடந்தையொ டெம்மிடை நட்பு.

"என்னவளாம் இம்மங்கை நல்லாளுடன் எமக்குளதாகிய தொடர்பு, உடலுடன் உயிருக்கு உள்ள தொடர்பு எத்தகையதோ அத்தகையது". 1122

3. **கருமணியிற் பாவாய்நீ போதாய்; யாம்வீழும்**
திருநுதற் கில்லை இடம்.

"என் கண்ணின் கருமணியில் தங்கியுள்ள பாவையே, நீ அங்கிருந்து அப்பால் செல்வாயாக; ஏனெனின், யான் விரும்பும் அழகிய நெற்றியை உடைய என்னவள் இருக்க ஏற்ற இடம் வேறு இல்லை". 1123

4. **வாழ்தல் உயிர்கன்னள் ஆயிழை; சாதல்**
அதற்கன்னள் நீங்கு மிடத்து.

"ஆராய்ந்தெடுத்த அணிகலங்களை அணிந்த என்னவள் என்னொடு கூடுமிடத்து உயிர் உடலோடு கூடி இருக்கும் வாழ்வு போல்வது; நீங்குமிடத்து உயிர் உடலில் இருந்து நீங்கும் சாதல் போல்வது". 1124

5. **உள்ளுவன் மன்யான் மறப்பின்; மறப்பறியேன்**
ஒள்ளமர்க் கண்ணாள் குணம்.

"ஒளி செய்தலும் போரிடுதலும் அமைந்த கண்ணையுடைய என்னவளின் குணத்தை யான் மறந்தால் அல்லவோ நினைப்பேன் அவளை மறத்தல் என்பதே இல்லையே". 1125

6. **கண்ணுள்ளிற் போகார்; இமைப்பின் பருவரார்**
நுண்ணியரெம் காத லவர்.

"எம் அன்பர் எம் கண்ணின் உள்ளே இருந்து வெளியே போகவும் மாட்டார்; கண்ணுள் இருப்பினும் யாம் இமைக்கும் போது துன்புறவும் மாட்டார்; அவர் அத்தகைய நுட்பமானவர்." ***1126***

7. **கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்**
எழுதேம் கரப்பாக் கறிந்து.

"எம் அன்பர் கண்ணின் உள்ளே உள்ளார்; ஆதலால் அவர் மறைந்து விடுவார் என்பதை அறிந்து யாம் எம் கண்ணுக்கு மை எழுதுதலையும் விட்டு விட்டோம்." ***1127***

8. **நெஞ்சத்தார் காத லவராக, வெய்துண்டல்**
அஞ்சுதும் வேபாக் கறிந்து.

"எம்மவர் எம் நெஞ்சத்திலேயே உள்ளார். ஆதலால் யாம் வெப்பமான உணவை உண்டால் அவர் வெப்பமுறுவார் என எண்ணி அஞ்சுகின்றோம்." ***1128***

9. **இமைப்பின் கரப்பாக் கறிவல்; அனைத்திற்கே**
ஏதிலர் என்னுமிவ் வூர்.

என் கண்ணை இமைத்தால் அவ்வளவில் கண்ணினுள் இருக்கும் என்னவர் மறைந்து விடுவார் என்பதை அறிவேன்; ஆதலால் கண்ணை இமையேன்; இதற்கே அவரை அன்பிலாதவர் என்று பழிக்கிறதே இவ்வூர்; (காப்பதற்கு மூடிய கண்ணைக் கவலையால் மூடியதாக ஊர்பழிக்கும் என்றது.) ***1129***

10. **உவந்துறைவர் உள்ளத்துள் என்றும்; இகந்துறைவர்**
ஏதிலர் என்னுமிவ் வூர்.

என்னவர் எப்பொழுதும் என் உள்ளத்தில் இனிமையாய் இருக்கிறார்; எனினும் அவர் என்னைப் பிரிந்துறைகிறார்; அன்பில்லார் என்று கூறுகிறதே இவ்வூர் (இது என்ன அறியாமை உடையது) ***1130***

114. நாணுத்துறவு உரைத்தல்

(காதல் மிகுதியால் நாணம் நீங்கியமை உரைத்தல்)

1. **காமம் உழந்து வருந்தினார்க் கேமம்**
மடல்அல்ல தில்லை வலி.

காதல் என்னும் நோயுற்று வருந்தினவர்க்குப் பாதுகாப்பானது, நாணமின்றிக் காதலை வெளிப்படுத்துதலே; அதனை அல்லது வலிமையான பாதுகாவல் வேறு இல்லை. 1131

2. **நோனா உடம்பும் உயிரும் மடலேறும்,**
நாணினை நீக்கி நிறுத்து.

காதலியைப் பெறாமையால் உண்டாகிய நோயைத் தாங்கமாட்டாத உடலும் உயிரும் நாணத்தை அப்பாலே நிறுத்தி விட்டுக் காதலை வெளிப்படுத்த (மடலேற)த் துணிந்தன. 1132

3. **நாணொடு நல்லாண்மை பண்டுடையேன்; இன்றுடையேன்**
காமுற்றார் ஏறும் மடல்.

முன்னாளில் நாணமும் பகைவரும் பாராட்டும் நல்ல ஆண்மையும் உடையவனாக இருந்தேன்; இந்நாளிலோ, காதல் நோயுற்றார் நாணமின்றி வெளிப்படுத்துதல் போலவே வெளிப் படுத்துதலுடையேன். 1133

4. **காமக் கடும்புனல் உய்க்குமே, நாணொடு**
நல்லாண்மை என்னும் புணை.

நாணத்தொடு நல்லாண்மை என்னும் படகுகளைக் காதல் என்னும் பெருவெள்ளம் அடித்துக் கொண்டே போய்விடுமே! வேறு என்ன செய்வது? 1134

5. **தொடலைக் குறுந்தொடி தந்தாள், மடலொடு**
மாலை உழக்கும் துயர்.

தொடுந்தணிந்த சிறிய வளையல்களையுடையவள், எனக்கு நாணமின்றி வெளிப்படுத்தும் துணிவோடு (மடலோடு) மாலைப் பொழுதில் அடையும் துயரையும் அல்லவோ கொடையாகத் தந்துள்ளாள். 1135

6. **மடலூர்தல் யாமத்தும் உள்ளுவேன், மன்ற**
படல்ஒல்லா பேதைக்கென் கண்.

"என் துயரை அறியாதவளாகிய அவளுக்காக என் கண்கள் மூடுதலும் செய்ய மாட்டா; ஆதலால், நள்ளிரவுப் பொழுதிலும் அதனை நாணமின்றி வெளிப்படுத்தவே (மடலேறவே) நினைவேன்." ***1136***

7. **கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்**
பெண்ணிற் பெருந்தக்க தில்.

"கடல்போல் பெருகும் காதல் துயர் அடைந்தாலும் அதைத் தாங்கிக் கொண்டு நாணமின்றி வெளிப் படுத்துதலை (மடலேறுதலை) எண்ணாத பெண் பிறப்பினும் பெருமை மிக்க பிறப்புப் பிறிதொன்று இல்லை". ***1137***

8. **நிறையரியர் மன்அளியர் என்னாது, காமம்**
மறையிறந்து மன்று படும்.

"இவர் மனத்தை அடக்கிக் காக்க முடியாதவர், மிகுந்த இரக்கத்திற்கும் உரியவர்" என்று எண்ணிப் பாராமல் காதல் மறைவைக் கடந்து ஊரறிய வந்து விட்டதே! (இஃதென்ன?) ***1138***

9. **அறிகிலார் எல்லாரும் என்றேஎன் காமம்**
மறுகின் மறுகும் மருண்டு.

என்னை எவரும் அறியார் என்பதால்தான் என் காதல் செய்தி, இவ்வூர்த் தெருவிலே மயங்கிச் சுழல்கின்றது போலும். ***1139***

10. **யாம்கண்ணிற் காண நகுப அறிவில்லார்,**
யாம்பட்ட தாம்படா வாறு.

"யாம் காதலால் பட்ட துன்பத்தைத் தாம் படாமையால் அறிவில்லாத ஊரவர், எம்முன்னே நின்று, யாம் எம் கண்ணால் காணுமாறு நகைக்கின்றனர் போலும்!" ***1140***

115. அலர் அறிவுறுத்தல்

(காதல் மிகுதியைப் பலரும் பலபடப் பேசுதல்)

1. **அலரெழ ஆருயிர் நிற்கும்; அதனைப்**
பலர்அறியார் பாக்கியத் தால்.

காதல் மிகுதி பற்றிப் பலரும் பலபடப் பேசும் (அலர்) பரவுதலால் தான், அரிய உயிர் உடலில் தங்கி நிற்கின்றது; அதனைப் பலரும் பகுத்தறிய மாட்டார்; அறிவாரானால் அலர் கூறியிரார். *1141*

2. **மலரன்ன கண்ணாள் அருமை அறியா**
தலரெமக் கீந்ததிவ் வூர்.

"மலர்போன்ற கண்ணை உடையவளின் அரிய நலங்களை அறியாமல் இந்த ஊர் அலரை எமக்குக் கொடையாகத் தந்துளது; (எளியள் என்றால் அதனைத் தந்திராது)". *1142*

3. **உறாஅதோ ஊரறிந்த கௌவை? அதனைப்**
பெறாஅது பெற்றன்ன நீர்த்து.

"ஊர் முழுவதுமாக அறியப்பட்ட அலர்ச் செய்தி அப்படியே உண்மையாகாதோ! அதனைப் பெறாத போதும் பெற்றடைந்தது போன்ற பெரிய இன்பமுடையது அது". *1143*

4. **கவ்வையால் கவ்விது காமம்; அதுவின்றேல்**
தவ்வென்னும் தன்மை இழந்து.

"ஊரவர் சொல்லும் அலர்ச் சொல்லாலேயே காதல் நன்கு வளர்வதாயிற்று; அவ்வலர் இல்லையானால், காதல் தன் தன்மை இழந்து குறைந்து போயிருக்கும்". *1144*

5. **களித்தொறும் கள்ளுண்டல் வேட்டற்றால், காமம்**
வெளிப்படுந் தோறும் இனிது.

"கட்குடியர் கள்ளுண்டு மயங்கும் போதெல்லாம் அக் கட்குடியை விரும்புவது போல், அலர்ச் சொல் வெளிப்பட்டுக் கேட்கும் போதெல்லாம் காதல் விரும்பத் தக்க தாயிற்று." *1145*

6. **கண்டது மன்னும் ஒருநாள்; அலர்மன்னும்**
திங்களைப் பாம்புகொண் டற்று.

“நாங்கள் ஒருவரை ஒருவர் கண்டது ஒரே ஒரு நாளே. ஆனால் அதனால் உண்டாகிய அலர்ச் சொல்லோ நிலவைப் படர் நிழல் (பாம்பு) பற்றுவது போல் உலகறிந்தது ஆயிற்று’.’ ***1146***

7. **ஊரவர் கௌவை எருவாக, அன்னைசொல்**
நீராக நீளுமிந் நோய்.

“நாங்கள் கொண்ட காதல்நோய் என்னும் பயிர், ஊரார் உரைக்கும் அலரே எருவாகவும், தாய் சொல்லும் கடுஞ்சொல்லே நீராகவும் நன்கு வளர்வதாயிற்று”. ***1147***

8. **‘நெய்யால் எரிநுதுப்பேம்’ என்றற்றால், ‘கௌவையால்**
காமம் நுதுப்பேம்’ எனல்.

“அலர் எழுப்புவதால் காதல் தீயை அணைப்போம் என்று கருதுதல்; பற்றி எரியும் தீயை நெய்யால் அணைப்போம் என்று முயலுதல் போல்வதாம்”. ***1148***

9. **அலர்நாண ஒல்வதோ, அஞ்சலோம் பென்றார்**
பலர்நாண நீத்தக் கடை?

‘அஞ்சாதே! காத்திரு’ என்று அன்று கூறிய என்னவர், பலரும் நாணுமாறு நம்மை விட்டுப் பிரிந்தால், நாம் ஊர் சொல்லும் அலர்க்கு நாணுதல் தகுமோ? (தகாது) ***1149***

10. **தாம்வேண்டின் நல்குவர் காதலர், யாம்வேண்டும்**
கௌவை எடுக்குமிவ் வூர்.

“யாம் விரும்புகின்ற அலர்ச் சொல்லை, இவ்வூர் எடுத்துரைக்கின்றது. ஆனால் என்னவர் ஏற்றுக் கொண்டால் அல்லவோ பயனாகும்”. ***1150***

116. பிரிவாற்றாமை

(துணைவன் பிரிவைத் துணைவி தாங்காது வருந்துதல்)

1. **செல்லாமை உண்டேல் எனக்குரை, மற்றுநின்**
வல்வரவு வாழ்வார்க் குரை.

என்னைப் பிரிந்து செல்லாமை உண்டானால் எனக்குச் சொல்க. அதனை விடுத்துப் பிரிந்து விரைவில் வருவேன் என்பதைச் சொல்வதானால், அப்பிரிவைத் தாங்கி உயிரோடு இருப்பார்க்கே சொல்க. *1151*

2. **இன்கண் உடைத்தவர் பார்வல்; பிரிவஞ்சும்**
புன்கண் உடைத்தால் புணர்வு.

அவரை எதிர் பார்த்து நிற்றல் இன்பமுடையதாக உள்ளது. அவர் வந்து கூடிய பின்னர், அவர் சென்று விடுவார் என்ற பிரிவுக்கு அஞ்சும் துன்பம் உண்டாகி விடுகின்றது. *1152*

3. **அரிதரோ தேற்றம், அறிவுடையார் கண்ணும்**
பிரிவோ ரிடத்துண்மை யான்.

பிரிவால் உண்டாகும் துயரை நன்றாக அறிந்த என் துணைவரிடத்தும் பிரிவு ஒரு வழியாக உண்டாதலால் அவரைத் தெளிந்து நம்புவது என்பது அரிதேயாம். *1153*

4. **அளித்தஞ்சல் என்றவர் நீப்பின், தெளித்தசொல்**
தேறியார்க் குண்டோ தவறு?

"மிகுந்த அன்பு காட்டி, அஞ்சாதே என்று கூறிய துணைவர் பிரிந்து சென்றால் அவர் உறுதியாகச் சொன்ன சொல்லை நம்பி இருந்தவர்க்கு அதனால் குற்றம் உண்டாகுமோ? (உண்டாகாது). *1154*

5. **ஓம்பின் அமைந்தார் பிரிவோம்பல்; மற்றவர்**
நீங்கின் அரிதால் புணர்வு.

"என்னுயிரைக் காத்துக் கொள்வதானால் என் துணைவனைப் பிரியவிடாமல் காத்துக் கொள்வதே; அது தவிர்த்து அவர் நீங்கினால், மீண்டும் அவரைக் கூடுதல் அரிதாகும். *1155*

6. **பிரிவுரைக்கும் வன்கண்ண ராயின், அரிதவர்**
நல்குவர் என்னும் நசை.

“பிரிந்து செல்வேன் என்று சொல்லும் கொடுமையுடையவர் துணைவரென்றால், ‘அதன் பின்னும், அவர் அருள் செய்வார் என ஆசைப்படுவது நிறைவேறுமா? அரிதாகும். ***1156***

7. **துறைவன் துறந்தமை தூற்றாகொல், முன்கை**
இறைஇறவா நின்ற வளை?

“என் முன்கையின் மணிக்கட்டைக் கடவாமல் கிடந்த வளையல் கழன்று வீழ்வதே, தலைவன் பிரிந்து சென்றதை ஊரார் அறியத் தூற்றி விடாதோ? ***1157***

8. **இன்னா தினனில்லூர் வாழ்தல்; அதனினும்**
இன்னா தினியார்ப் பிரிவு.

ஒத்த உணர்வுடையவர் இல்லாத ஊரில் இருந்து வாழ்வது துன்பமிக்கது; அதனினும் துன்ப மிக்கது இனிய துணைவரைப் பிரிந்து ஆங்கு வாழ்வது! ***1158***

9. **தொடிற்சுடி னல்லது காமநோய் போல**
விடிற்சுடல் ஆற்றுமோ தீ?

“தீ, தொட்டால் சுடுவது அல்லது காமத் தீயைப் போல், தொடுதலை விட்டுச் சென்றால் சுடுகின்ற தன்மையை உடையதாகுமோ? (ஆகாது) ***1159***

10. **அரிதாற்றி அல்லல்நோய் நீக்கிப் பிரிவாற்றிப்**
பின்னிருந்து வாழ்வார் பலர்.

“துணைவரைப் பிரிய நேரும் என்பதைப் பொறுத்துப், பிரியுங்கால் உண்டாகும் துன்பத்தை நீக்கிப், பிரிந்த பின்னரும் பொறுத்திருந்து, அதன் பின்னும் உயிரோடு வாழ்பவர் பலராகலாம்; என்னால் முடியாது. ***1160***

117. படர் மெலிந்து இரங்கல்

(துணைவன் பிரிவுத் துன்பத்தால் மெலிந்து துணைவி வருந்துதல்)

1. **மறைப்பேன்மன் யானிஃதோ நோயை; இறைப்பவர்க்
ஊற்றுநீர் போல மிகும்.**

"இதோ எனக்கு உண்டாகிய பிரிவு நோயைப் பிறர் அறியாவாறு மறைப்பேன்; ஆயினுமென்ன? இறைப்பவர்க்கு ஊற்றில் சுரந்து மிகுகின்ற நீர் போல அது பெருகிக் கொண்டே உள்ளது. 1161

2. **கரத்தலும் ஆற்றேன்இந் நோயை; நோய்செய்தார்க்
குரைத்தலும் நாணுத் தரும்.**

"யான் உற்ற இப்பிரிவு நோயைப் பிறர் அறியாமல் மறைக்கவும் முடியவில்லை. இந்நோயைத் தந்த துணைவர்க்கு உரைக்கலாமெனினும், அது எனக்கு நாணத்தைத் தருவதாகவே உள்ளது. 1162

3. **காமமும் நாணும் உயிர்காவாத் தூங்கும் ; என்
நோனா உடம்பி னகத்து.**

என் வலிமையற்ற உடலின் இடத்தில் உயிரையே காவுதடி (காவடி)யாகக் கொண்டு பிரிவால் உண்டாகிய காதல் நோய் ஒரு பக்கமும் அதனை வெளியிட்டுச் சொல்ல முடியாத நாணம் ஒரு பக்கமும் தொங்குகின்றன. 1163

4. **காமக் கடல்மன்னும் உண்டே ; அதுநீந்தும்
ஏமப் புணைமன்னும் இல்.**

காதலென்று சொல்லப்படும் ஒரு கடல் இருக்கவே இருக்கிறது; ஆனால், அதனை நீந்துவதற்குப் பாதுகாப்பான படகு எதுவுமில்லையே. 1164

5. **துப்பின் எவனாவர் மற்கொல், துயர்வரவு
நட்பினால் ஆற்று பவர்.**

நட்பாக இருந்த காலத்திலேயே துன்பம் வரச் செய்த துணைவர், வல்லாண்மை காட்டும் நிலையில் எத்தகையராக இருப்பர்? 1165

6. **இன்பம் கடல்மற்றுக் காமம்; அஃதடுங்கால்**
துன்பம் அதனிற் பெரிது.

காதலால் வரும் இன்பம் கடலளவு பெரியது; ஆனால் அக்காதல் பிரிவால் வருந்தும் போது உண்டாகும் துன்பம் அக்கடலை விடப் பெரியது ஆகும். **1166**

7. **காமக் கடும்புனல் நீந்திக் கரைகாணேன்,**
யாமத்தும் யானே உளேன்.

காதலெனப்படும் கடுமையான வெள்ளத்தை நீந்திக் கரை காணற்கு இல்லேன்; நள்ளிரவிலும் எனக்குத் துணை யாருமின்றி யானாகவே உள்ளேன். **1167**

8. **மன்னுயிர் எல்லாம் துயிற்றி அளித்திரா**
என்னல்ல தில்லை துணை.

தான் உறங்காமல் உலகத்து உயிர்களையெல்லாம் உறங்கச் செய்கின்ற இவ்விரவின் நிலை இரங்கத் தக்கது. துணைவரின் பிரிவால் உறங்காமலிருக்கும் என்னை அல்லது, எவருமே அதற்குத் துணை இல்லை. **1168**

9. **கொடியார் கொடுமையின் தாம்கொடிய, இந்நாள்**
நெடிய கழியும் இரா.

காதலித்துப் பிரிந்த கொடியவர் செய்யும் கொடுமைகளினும் இவ்விரவுப் பொழுதுகள் மிகக் கொடுமையானவை; எவ்வளவு நெடும் பொழுது சென்று விடிகின்றன இவை! **1169**

10. **உள்ளம்போன் றுள்வழிச் செல்கிற்பின், வெள்ளநீர்**
நீந்தல மன்னோஎன் கண்.

காதலர் உள்ள இடத்திற்குச் சென்று விடும் உள்ளத்தைப் போன்று, இக்கண்களும் சென்றால் என்ன? அவ்வாறு சென்றால், வெள்ளமாகப் பெருகும் நீரில் இவை நீந்த வேண்டாவே! **1170**

118. கண் விதுப்பழிதல்

(கண்கள் துணைவனை விரைந்து பார்க்க வேண்டும் என்னும் துடிப்பால் வருந்துதல்)

1. **கண்தாம் கலுழ்வ தெவன்கொலோ, தண்டாநோய்
தாம்காட்ட யாம்கண் டது.**

என் கண்கள் ஏன் அழுகின்றன; யான் கொண்டுள்ள தீராத நோய் அக்கண்கள் துணைவரைக் காண்பித்தலால் அல்லவோ உண்டாயின. ஆக, அவை அழுவானேன்?
1171

2. **தெரிந்துணரா நோக்கிய உண்கண், பரிந்துணராப்
பைதல் உழப்ப தெவன்?**

பின்னே வருவதைத் தெரிந்து கொள்ளாமல் துணைவரைப் பார்த்த கண்கள் இப்பொழுது தம் தவற்றை உணராமல் துன்பப்படுவது ஏன்? *1172*

3. **கதுமெனத் தாம்நோக்கித் தாமே கலுழும்
இதுநகத் தக்க துடைத்து.**

என் கண்கள் அன்று, தாமே துணைவரை விரைந்து நோக்கின; இன்றும் அவை தாமே அழுது வழிகின்றன; முரண்பட்ட இச்செயல்களை நினைக்க நகைப்பாக உள்ளது. *1173*

4. **பெயலாற்றா நீர்உலந்த உண்கண், உயலாற்றா
உய்வில்நோய் எண்கண் நிறுத்து.**

மை பூசப்பட்ட என் கண்கள், தப்பிப் பிழைக்க முடியாத தீரா நோயை என்னிடத்தில் நிறுத்தி விட்டு, நீர் வடிப்பதற்கும் முடியாத வகையில் வற்றிப் போய் விட்டன.
1174

5. **படலாற்றா பைதல் உழக்கும், கடலாற்றாக்
காமநோய் செய்தஎன் கண்.**

கடலும் அளவால் ஒப்பாகாத காதல் நோயை உண்டாக்கிய என் கண்கள், இப்பொழுது மூடி உறங்குதற்கும் முடியாமல் துன்பப்படுகின்றன. *1175*

6. **ஓஒ இனிதே எமக்கிந்நோய் செய்தகண்**
தாஅம் இதற்பட் டது.

ஓ ஓ! மிக இனிமையானதேயாகும்! எமக்கு இந்தக் காதல் நோயை உண்டாக்கிய கண்கள், தாமே இந்த நோயில் நன்றாக மாட்டிக் கொண்டன! **1176**

7. **உழந்துழந் துள்நீர் அறுக, விழைந்திழைந்து**
வேண்டி அவர்க்கண்ட கண்.

விரும்பியும் உருகியும் துணைவரைக் கண்ட கண்கள் துன்புற்றுத் தம் (வெளி நீரே அன்றி) உள்ளே உள்ள நீருமில்லாமல் வற்றிப் போவதாக! **1177**

8. **பேணாது பெட்டார் உளர்மன்னோ, மற்றவர்க்**
காணா தமைவில கண்.

பேணும் விருப்பமில்லாமலே பேணும் விருப்பமிருப்பதாகக் காட்டிய என் துணைவர் உள்ளார்! அத்தகையர் உள்ளமை அறிந்தும் அவரைக் காண முடியாமல் என் கண்கள் அமைதியற்றுள்ளன. **1178**

9. **வாராக்கால் துஞ்சா; வரின்துஞ்சா; ஆயிடை**
ஆரஞர் உற்றன கண்.

துணைவர் வாராத பொழுதிலும் கண்கள் உறங்க மாட்டா; அவர் வந்த போதிலும் உறங்க மாட்டா; இவற்றால் என் கண்கள் பெருந்துன்பம் அடைந்தன! **1179**

10. **மறைபெறல் ஊரார்க் கரிதன்றால், எம்போல்**
அறைபறை கண்ணா ரகத்து.

அடிக்கும் பறை போல உண்மையை வெளிப்படுத்தி விடும் கண்ணையுடைய எம்மைப் போன்றவரிடத்து, ஊரவர்க்கு எம் கமுக்கமான செய்தியை அறிதல் அரிதன்று! எளிதேயாம்! **1180**

119. பசப்புறு பருவரல்

(பசலை என்னும் நிறவேறுபாடு காரணமாகத் தோன்றிய வருத்தத்தைக் கூறுதல்)

1. **நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன்; பசந்தஎன்
பண்பியார்க் குரைக்கோ பிற?**

விரும்பிய துணைவர்க்கு நான் கொடுக்கக் கூடாத பிரிவு ஒப்புதலைக் கொடுத்தேன்; அதனால், யான் அடைந்த பசலை நோய்க்குக் காரணமான என் அறியாத் தன்மையை எவர்க்குச் சொல்வேன்? 1181

2. **அவர்தந்தார் என்னும் தகையால் இவர்தந்தென்
மேனிமேல் ஊரும் பசப்பு.**

என் அன்புத் துணைவர் தந்தார் என்னும் உரிமையால் இப்பசலை நோய் படர் கொடியைப் போல் என் உடற்பந்தல் மேல் ஏறிப் படர்வது ஆயிற்று! 1182

3. **சாயலும் நாணும் அவர்கொண்டார், கைம்மாறா
நோயும் பசலையும் தந்து.**

துன்பத்தையும் பசலையையும் எனக்குக் கொடுத்து விட்டு அவற்றுக்குக் கைமாற்றாக என் பொலிவான தோற்றத்தையும் நாணும் பண்பையும் துணைவர் பறித்துக் கொண்டார்! 1183

4. **உள்ளுவன் மன்யான்; உரைப்ப தவர்திறமால்;
கள்ளம் பிறவோ பசப்பு.**

யான் துணைவரையே நினைக்கின்றேன்; சொல்வதும் அவர் நற்குணத்தையே சொல்கின்றேன்; அவ்வாறாகவும் இப்பசலை நோய் வஞ்சகமாக என்மேல் வந்துள்ளதே! 1184

5. **உவக்காண்எம் காதலர் செல்வார்; இவக்காண்என்
மேனி பசப்பூர் வது.**

தோழி! உதோ பார்! எம் துணைவர் பிரிந்து செல்கின்றார்! இதோ பார்! அதற்குள்ளாகவே என் உடலில் பசப்பு நோய் ஊர்ந்து படர்வதாயிற்று. 1185

6. **விளக்கற்றம் பார்க்கும் இருளேபோல், கொண்கன்**
முயக்கற்றம் பார்க்கும் பசப்பு.

வெளிச்சத்தின் முடிவைப் பார்த்துப் பரவுதற்குக் காத்துக் கொண்டிருக்கும் இருட்டைப் போல், துணைவன் தழுவுதலின் முடிவைப் பார்த்துப் பரவுதற்குக் காத்துக் கொண்டிருக்கும் பசப்பு நோய். 1186

7. **புல்லிக் கிடந்தேன்; புடைபெயர்ந்தேன்; அவ்வளவில்**
அள்ளிக்கொள் வற்றே பசப்பு.

துணைவரோடு தழுவிக் கிடந்தேன்; சிறிதே விலகினேன்; அவ்வளவுக்குள் பசலையோ அள்ளிக் கொள்ளும் படியாய் நிறைந்தது. 1187

8. **பசந்தாள் இவள்என்ப தல்லால், இவளைத்**
துறந்தார் அவர்என்பார் இல்.

இவள் பசலை நோய் அடைந்தாள், என்று பழிக்கின்றனர். ஆனால், துணைவர் இவளை விட்டுப் பிரிந்து போனார் எனக் கூறுவார் இல்லை. 1188

9. **பசக்கமன் பட்டாங்கென் மேனி, நயப்பித்தார்**
நன்னிலையர் ஆவர் எனின்.

தம் பிரிவை நம்மை ஏற்குமாறு செய்த துணைவர், அதனால் நல்ல நிலையினராக விளங்குவார் என்றால், அதற்காக என் உடல் என்றும் பசப்பாகவே கூட அமைவதாக! 1189

10. **பசப்பெனப் பேர்பெறுதல் நன்றே, நயப்பித்தார்**
நல்காமை தூற்றா ரெனின்.

நம்மைத் தம் பிரிவை ஏற்கச் செய்த துணைவர் பிரிந்து சென்று வருத்துவதைப் பிறர் பழித்துக் கூறார் என்றால், யான் பசலை என்னும் பெயர் பெறுதலும் கூட நலமேயாம். 1190

120. தனிப்படர் மிகுதி

(துணைவி தனிமையால் அடையும் துன்ப மிகுதி)

1. **தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே,
காமத்துக் காழில் கனி.**

விரும்புவ ராகவும் விரும்பப் படுவராகவும் அமைந்த துணைவன் துணைவியரே இன்பம் என்று சொல்லப்படும் விதையில்லாத கனியைப் பெற்றவர் ஆவர். 1191

2. **வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால், வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி.**

"விரும்பும் துணைவிக்கு விரும்பும் துணைவன் செய்யும் அன்புப் பெருக்கு உழவர்க்குப் பருவம் தவறாமல் மழை பெய்தது போன்றது. 1192

3. **வீழுநர் வீழப் படுவார்க் கமையுமே,
வாழுநம் என்னும் செருக்கு.**

"யாம் நிறைவான வாழ்வு வாழ்வோம் என்னும் பெருமிதம் எல்லார்க்குமா கிட்டும்? விரும்புபவரால் விரும்பப் படுவார்க்கு அல்லவோ அமையும்! 1193

4. **வீழ்ப் படுவார் கெழீஇயிலர், தாம்வீழ்வார்
வீழப் படாஅர் எனின்.**

தாம் விரும்புகின்றவர், தம்மை விரும்பா ராயினார் என்றால், விரும்பப்படுகின்றவர் பழந்தொடர் புடையவர் அல்லர் என்பதையன்றி என்ன செய்வது? 1194

5. **நாம்காதல் கொண்டார் நமக்கெவன் செய்பவோ,
தாம்காதல் கொள்ளாக் கடை?**

நம்மால் விரும்பப்பட்டவர், நம்மேல் விருப்பங் கொள்ளாத போது, நமக்கு வேறு என்னதான் நன்மையைச் செய்து விடப்போகிறார்? 1195

6. **ஒருதலையான் இன்னாது காமம்;காப் போல**
இருதலை யானும் இனிது.

ஒரு பக்கமாகக் காதல் அமைந்திருத்தல் துன்பமாகும்; காவுதடிபோல் (காவடி போல்) இரண்டு பக்கங்களிலும் காதல் அமைந்திருக்குமானால் இன்பமாம். *1196*

7. **பருவரலும் பைதலும் காணான்கொல், காமன்**
ஒருவர்கண் நின்றொழுகு வான்.

காமன் என்பான் ஒருவர்பால் நின்று தன் செயலை நடத்துதலால், அவ்வொருவர் படும் நோயையும், துன்பத்தையும் அறியான் போலும்! *1197*

8. **வீழ்வாரின் இன்சொல் பெறாஅ துலகத்து**
வாழ்வாரின் வன்கணார் இல்.

விரும்பிய துணைவரின் இனிய சொல்லைப் பெற மாட்டாமல், உலகத்தில் வாழ்கின்ற துணைவியரினும் வலிய கொடுமையானவர் இல்லை! *1198*

9. **நசைஇயார் நல்கார் எனினும், அவர்மாட்**
டிசையும் இனிய செவிக்கு.

நாம் விரும்பியவர் அன்பு காட்டார் என்றாலும்; அவரைப் பற்றிய புகழைக் கேட்டலும், நம் செவிக்கு இனிமையாக உள்ளது. *1199*

10. **உறாஅர்க் குறுநோய் உரைப்பாய்; கடலைச்**
செறாஅஅய் வாழிய நெஞ்சு.

நெஞ்சே நீ வாழ்வாயாக! நம்மை வருந்தச் செய்யும் கடல்மேல் நீ சினந்து உரையாதே! நம்மேல் அன்பு கொள்ளாத துணைவர்க்கு நாம் அடையும் துன்பத்தைக் கடலே உரைப்பாயாக. *1200*

121. நினைந்தவர் புலம்பல்

(துணைவனை நினைந்து துணைவி தனிமையில் வருந்தியுரைத்தல்)

1. **உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால், கள்ளினும் காமம் இனிது.**

காதலை நினைத்தாலும்கூட நீங்காத பெரு மகிழ்ச்சியைத் தருகின்றது; ஆதலால், குடித்தால் தான் களிப்புண்டாகும் மதுவினும் காதல் இனியது ஆகும். 1201

2. **எனைத்தொன் றினிதேகாண் காமம்;தாம் வீழ்வார் நினைப்ப வருவதொன் றில்.**

விரும்புகின்ற துணைவரை நினைத்த அளவில் வருகின்றதோர் இன்பம் பிறிதொன்று இல்லை; ஆதலால், காதல் எவ்வளவு சிறிது என்றாலும் அது இனியதேயாம். 1202

3. **நினைப்பவர் போன்று நினையார்கொல், தும்மல் சினைப்பது போன்று கெடும்.**

தும்மல் வருவதுபோல் வந்து நின்றுவிட்டதே; துணைவர் நினைப்பவர்போல் காட்டி, நினையாதவராய் இருக்கின்றார் போலும்! 1203

4. **யாமும் உளேங்கொல் அவர்நெஞ்சத் தெம்நெஞ்சத்து ஓஒ உளரே அவர்.**

ஓ! ஓ! எம் நெஞ்சத்தில் எம் துணைவர் உள்ளாரே! அதுபோல் அவர் நெஞ்சத்தில் நாமும் உள்ளவராய் இருப்போமோ? 1204

5. **தம்நெஞ்சத் தெம்மைக் கடிகொண்டார் நாணார்கொல் எம்நெஞ்சத் தோவா வரல்.**

தம் நெஞ்சத்தில் எம்மை வராதவண்ணம் காத்துக் கொண்ட துணைவர், எம் நெஞ்சத்தில் ஓயாமல் வருகின்றாரே! அவர் வெட்கப்பட மாட்டாரோ? 1205

6. மற்றியான் என்னுள்ளேன் மன்னோ, அவரோடுயான்
உற்றநாள் உள்ள உளேன்.

துணைவரோடு யான் இனிதாகக் கூடியிருந்த நாளை நினைத்துக் கொள்வதால் தான் உயிரோடு உள்ளேன்; அதனால் அன்றி, மற்று எதனால் உயிரோடும் உள்ளேன்?
1206

7. மறப்பின் எவனாவன் மற்கொல்! மறப்பறியேன்
உள்ளினும் உள்ளம் சுடும்.

என் துணைவரை யான் என்றும் மறந்தறியேன்; நினைத்தாலும் மனம் சுடவே செய்கின்றது; ஆனால் அவரை நினையாமல் மறந்து விட்டால் யான் என்ன ஆவேன்?
1207

8. எனைத்து நினைப்பினும் காயார்; அனைத்தன்றோ
காதலர் செய்யும் சிறப்பு!

துணைவரை எவ்வளவு மிகுதியாக நினைத்தாலும் அதற்காகச் சீற்றமடைய மாட்டார்; அத்தகையது அன்றோ அவர் எமக்குச் செய்கின்ற சிறந்த உதவி!
1208

9. விளியும்என் இன்னுயிர் வேறல்லம் என்பார்
அளியின்மை ஆற்ற நினைத்து.

நீயும் நானும் வேறானவர் அல்லர் என்ற துணைவரின் இரக்கமில்லாத் தன்மையை மிக எண்ணிப் பார்க்க, என் இனிய உயிர் அழிகின்றது.
1209

10. விடாஅது சென்றாரைக் கண்ணினால் காணப்
படாஅதி வாழி மதி.

நிலவே வாழ்வாயாக! நினைவைவிட்டு நீங்காராய் நீங்கிச் சென்ற துணைவரை யான் கண்ணினால் காண வேண்டும். அதனால் மறையாது ஒளி செய்வாயாக!
1210

122. கனவு நிலை உரைத்தல்

(துணைவி தான்கண்ட கனவின் இயல்பை உரைத்தல்)

1. **காதலர் தூதொடு வந்த கனவினுக்கு**
யாதுசெய் வேன்கொல் விருந்து?

காதலர் வருவார் என்னும் தூதுடன் எனக்குக் கனவு வந்தது; அக்கனவுக்கு நன்றியாக நான் என்ன விருந்தினைச் செய்வேன்! *1211*

2. **கயலுண்கண் யானிரப்பத் துஞ்சின், கலந்தார்க்**
குயலுண்மை சாற்றுவேன் மன்.

கெண்டைமீன் போலும் கண்ணே! யான் வேண்டுவது போல் நீ உறங்கினால் அல்லவோ கனவில் வரும் துணைவர்க்கு யான் தப்பிப் பிழைத்திருக்கும் உண்மையைச் சொல்வேன். *1212*

3. **நனவினான் நல்கா தவரைக் கனவினான்.**
காண்டலின் உண்டென் உயிர்.

நனவுப் பொழுதிலே வந்து நன்மை செய்யாத துணைவரைக் கனவுப் பொழுதிலே காண்பதால் தான் என் உயிர் உடலினின்று நீங்காமல் உள்ளது. *1213*

4. **கனவினான் உண்டாகும் காமம், நனவினான்**
நல்காரை நாடித் தரற்கு.

நனவுப் பொழுதில் வந்து நன்மை செய்யாத துணைவரைத் தேடித் தருவதற்குக் கனவுப் பொழுது உதவுதலால் அதன்மேல் எனக்கு ஆவல் உண்டாகின்றது. *1214*

5. **நனவினாற் கண்டதூஉம் ஆங்கே; கனவும்தான்**
கண்ட பொழுதே இனிது.

நனவிலே துணைவரைக் கண்டதும் அப்பொழுதுக்கு இன்பம் ஆயிற்று; கனவும் அவ்வாறே அவரைக் காணும் அப்பொழுதுக்கு இன்பம் ஆயிற்று. *1215*

6. **நனவென ஒன்றில்லை யாயின், கனவினான்**
காதலர் நீங்கலார் மன்.

உறங்காத பொழுது என ஒரு பொழுது எனக்கு இல்லை என்றால், எப்போதும் கனவினாலே என் துணைவர் என்னோடு நீங்காமல் இருப்பார். 1216

7. **நனவினான் நல்காக் கொடியார், கனவினான்**
என்எம்மைப் பீழிப் பது?

நனவுப் பொழுதிலே வந்து உதவாத கொடிய துணைவர், கனவுப் பொழுதிலே வந்து எம்மைத் துன்புறுத்துவதற்கு என்ன உரிமை உடையர்? 1217

8. **துஞ்சுங்கால் தோள்மேல ராகி, விழிக்குங்கால்**
நெஞ்சத்த ராவர் விரைந்து.

யான் உறங்கும்போது என் தோளின் மேல் இருப்பவரான துணைவர், விழிக்கும் போதில்; உடனே நெஞ்சில் இருப்பவராகி விடுகின்றார்;(என்ன மயக்கம் இது!) 1218

9. **நனவினான் நல்காரை நோவர், கனவினான்**
காதலர்க் காணா தவர்.

கனவில் தம் துணைவரைக் கண்டுமகிழ மாட்டாதவரே நனவில் வந்து நன்மை செய்யாத அவரைக் குறித்து வருந்தியுரைப்பார். (யான் அவ்வாறு உரையேன்) 1219

10. **நனவினான் நம்நீத்தார் என்பர்; கனவினான்**
காணார்கொல் இவ்வூ ரவர்.

நனவுப் பொழுதில் நம் துணைவர் நம்மைவிட்டுச் சென்று விட்டார் என்று கூறுவர்; இவ்வூரவர் அவரவர் கனவினில் அவரவர் துணைவரைக் காண மாட்டார் போலும்! 1220

123. பொழுதுகண்டு இரங்கல்

(மாலைப் பொழுதைக் கண்டு துணைவி வருந்துதல்)

1. **மாலையோ அல்லை; மணந்தார் உயிருண்ணும்
வேலைநீ; வாழி பொழுது.**

மாலையே! நீ மாலை என்னும் பொழுது அன்று துணைவரோடு கூடியிருந்து பிரிந்த மகளிர் உயிரைக் குடிக்கும் வேல் ஆயினை! நீ வாழ்க! *1221*

2. **புன்கண்ணை வாழி மருள்மாலை, எம்கேள்போல்
வன்கண்ண தோநின் துணை?**

மயக்கமுறுத்துகின்ற மாலைப் பொழுதே! நீ மிக்க துன்பம் உடையாய்; எம் துணைவரைப்போல் உன் காதல் துணையும் வன்கொடுமையுடையது தானோ? *1222*

3. **பனிஅரும்பிப் பைதல்கொள் மாலை; துனிஅரும்பித்
துன்பம் வளர வரும்.**

நடுக்கம் தோன்றிப் பசப்பு நிறங்கொண்ட மாலைப் பொழுது, எனக்குத் துணைவர்மேல் வெறுப்பு உண்டாகித் துன்பம் பெருகுமாறு வருவதாயிற்று. *1223*

4. **காதலர் இல்வழி மாலை கொலைக்களத்
தேதிலர் போல வரும்.**

துணைவர் என்னுடன் இல்லாமல் பிரிந்து சென்ற நிலையில், மாலைப்பொழுது, கொலைக் களத்திற்கு வருகின்ற பகைவர்போல என்னை வருத்த வருகின்றது. *1224*

5. **காலைக்குச் செய்தநன் றென்கொல்? எவன் கொல்யான்
மாலைக்குச் செய்த பகை?**

நான் காலைப் பொழுதுக்குச் செய்த நன்மை என்னவென்று அறியேன்! அதுபோல், மாலைப் பொழுதுக்குச் செய்த தீமையும் என்னவென்று அறியேன்! *1225*

**6. மாலைநோய் செய்தல், மணந்தார் அகலாத
காலை அறிந்த திலேன்.**

என் துணைவர் என்னைவிட்டு நீங்காமல் இருந்த பொழுதில் மாலைப்பொழுது இவ்வாறு வருந்தச் செய்தலை அறியேன்; அவரில்லாத இப்பொழுதே அறிந்தேன். **1226**

**7. காலை அரும்பிப் பகல்எல்லாம் போதாகி
மாலை மலரும்இந் நோய்.**

காதல் என்னும் இந்த நோய் காலைப்பொழுதில் அரும்புபோல் தோன்றிப் பகற்பொழுதெல்லாம் மொக்குப்போல் திரண்டு, மாலைப்பொழுதில் மலர் போல் விரிகின்றது. **1227**

**8. அழல்போலும் மாலைக்குத் தூதாகி, ஆயன்
குழல்போலும் கொல்லும் படை.**

ஆயன் ஊதுகின்ற புல்லாங்குழல் தீயைப் போல் சுடுகின்ற மாலைப் பொழுதுக்குத் தூதாகிக் கொலை செய்வதற்கென்றே வருகின்ற படைக்கருவி போலும்! **1228**

**9. பதிமருண்டு பைதல் உழக்கும், மதிமருண்டு
மாலை படர்தரும் போழ்து.**

அறிவை மயங்கச் செய்து மாலைப்பொழுது பெருகி வரும்போது, என் துன்ப நிலைமைக்காக இவ்வூரினர் மயங்கித் துன்பப் படுவர். **1229**

**10. பொருள்மாலை யாளரை உள்ளி மருள்மாலை
மாயும்என் மாயா உயிர்.**

பிரிவைத் தாங்கிக் கொண்டு இதுவரை இறவாமல் இருந்த என் உயிர் பொருள் தேடுதலையே இயல்பாக உடைய துணைவரை நினைத்து இம்மயக்கும் மாலைப் பொழுதில் அழிகின்றது. **1230**

124. உறுப்பு நலன் அழிதல்

(துணைவியின் உறுப்புகளின் அழகு குறைதல்)

1. **சிறுமை நமக்கொழியச் சேண்சென்றார் உள்ளி,**
நறுமலர் நாணின கண்.

“நமக்குத் துன்பத்தைத் தந்து நெடுந்தொலை பிரிந்து சென்ற துணைவரை எண்ணி வருந்துவதால் கண்கள் தம் பொலிவை இழந்தன; அதனால், அவற்றுக்கு நாணமுற்ற மலர்களைக் கண்டு நாணுவன ஆயின. 1231

2. **நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்,**
பசந்து பனிவாரும் கண்.

“நிறம் வேறுபட்டுக் கண்ணீர் வழிய நிற்கும் கண்கள், நம்மை விரும்பிய துணைவர் நன்மை செய்யாமையைப் பிறர்க்குத் தாமே சொல்லி விடும் போலும். 1232

3. **தணந்தமை சால அறிவிப்ப போலும்,**
மணந்தநாள் வீங்கிய தோள்.

“துணைவரொடு கூடியிருந்த நாளில் பருத்திருந்த தோள்கள், இப்போது மெலிவடைந்தமையால், அவர் பிரிந்து சென்றதை மிக நன்றாக அறிவிப்பன போலும். 1233

4. **பணைநீங்கிப் பைந்தொடி சோரும், துணைநீங்கித்**
தொல்கவின் வாடிய தோள்.

“துணைவரைப் பிரிந்து வாடுதலால் தம் அழகை இழந்து விட்ட தோள்கள் தம் பருமை நீங்கி வளமான வளையல்களும் கழன்றுவிடுமாறு ஆயின. 1234

5. **கொடியார் கொடுமை உரைக்கும், தொடியொடு**
தொல்கவின் வாடிய தோள்.

“செறிவு நீங்கிக் கழலும் வளையல்களொடு, பழைய அழகு இழந்து வாடிவிட்ட தோள்கள்; பிரிந்து சென்ற துணைவரின் கொடுமையைப் பிறர் அறிய உரைக்கின்றன. 1235

6. **தொடியொடு தோள்நெகிழ நோவல், அவரைக்**
கொடியர் எனக்கூறல் நொந்து.

தோழி! வளையல் கழல்வதையும் தோள் மெலிவதையும் கண்டு, என் துணைவரைக் கொடியவர் என்று வருந்திக் கூறாது விடுக; கூறின் அதற்காக யான் வருந்துவேன்.

1236

7. **பாடு பெறுதியோ நெஞ்சே! கொடியார்க்கென்**
வாடுதோள் பூசல் உரைத்து.

"நெஞ்சே! என்னைப் பிரிந்த கொடிய துணைவர்க்கு; என் தோள் மெலிதலால் உண்டாகிய பழியை உரைத்து, அதனால் நீ பெருமை பெறுவாயோ? **1237**

8. **முயங்கிய கைகளை ஊக்கப் பசந்தது**
பைந்தொடிப் பேதை நுதல்.

"இறுகத் தழுவிய கைகளைச் சற்றே தளர்த்தி விட்ட அளவில் பசுமையான வளையலை அணிந்த துணைவியின் நெற்றியின் நிறம்மாறி விட்டது. **1238**

9. **முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற**
பேதை பெருமழைக் கண்.

"தழுவுதலின் இடை வெளியில் குளிர்ந்த காற்றுப் புகுதலால், துணைவியின் பெரிய குளிர்ந்த கண்கள் நிறம் மாறி விட்டன. **1239**

10. **கண்ணின் பசப்போ பருவரல் எய்தின்றே,**
ஒண்ணுதல் செய்தது கண்டு.

"துணைவியின் ஒளியுடைய நெற்றியில் உண்டாகிய நிறம் மாறுதலைக் கண்டதால், கண்ணில் உண்டாகியிருந்த நிறம் மாறுதல் துன்புற்றது. **1240**

125. நெஞ்சொடு கிளத்தல்

(துணைவி தன் துயரை நெஞ்சுக்குக் கூறுதல்)

1. **நினைத்தொன்று சொல்லாயோ நெஞ்சே, எனைத்தொன்றும்**
எவ்வநோய் தீர்க்கும் மருந்து?

"நெஞ்சே! யான் அடைந்த துன்பத்தைத் தீர்க்கத் தக்க மருந்து ஏதாவது ஒன்றை நீ ஆய்ந்து பார்த்து, நான் நலம் பெற ஒருவழி சொல்ல மாட்டாயா? **1241**

2. **காதல் அவரில ராகநீ நோவது**
பேதைமை ; வாழிஎன் நெஞ்சு.

"என் நெஞ்சே! நீ வாழ்வாயாக! காதல ராகிய அவர் எம்மோடும் காதல் இல்லாதவராக இருக்க நீ அவரைக் குறித்து எண்ணி வருந்திக் கொண்டிருப்பது அறியாமையாகும். **1242**

3. **இருந்துள்ளி என்பரிதல் நெஞ்சே? பரிந்துள்ளல்**
பைதல்நோய் செய்தார்கண் இல்.

நெஞ்சே! நமக்கு இவ்வாறு வருந்தும் நோயைச் செய்த துணைவரிடத்து, நம்மைக் குறித்த இரக்கம் இல்லை; அவ்வாறாக, நாம் இங்கிருந்து அவரை நினைத்து வருந்துவது எதற்காக? **1243**

4. **கண்ணும் கொளச்சேறி நெஞ்சே; இவையென்னைத்**
தின்னும் அவர்க்காணல் உற்று.

நெஞ்சே! துணைவரைக் காணவேண்டுமென்று கண்கள் என்னை அரிக்கின்றன; நீ அவரைக் காணச் செல்லுங்கால் இக்கண்களையும் உடன்கொண்டு செல்வாயாக. **1244**

5. **செற்றார் எனக்கை விடலுண்டோ நெஞ்சேயாம்**
உற்றால் உறாஅ தவர்?

நெஞ்சே! நாம் விரும்பினாலும் நம்மை நெருங்காத துணைவர், எம்மை வெறுத்தார் என்று கைவிடுதலும் எம்மால் உண்டாகுமோ? **1245**

6. **கலந்துணர்த்தும் காதலர்க் கண்டால், புலந்துணராய்**
பொய்க்காய்வு காய்திஎன் நெஞ்சு.

நெஞ்சே! கூடிக் கலந்து ஊடி உணர்த்தும் துணைவரை நீ கண்டால், அவரை வெறுத்திட அறிய மாட்டாய்? என்மேல் பொய்யாகச் சினந்துரைக்கின்றாயே என்ன? **1246**

7. **காமம் விடுஒன்றோ நாண்விடு நன்னெஞ்சே**
யானோ பொறேன்இவ் விரண்டு.

என் நல்ல நெஞ்சமே! நீ, ஒன்று காமத்தை விட்டுவிடு; அல்லது நாணத்தை விட்டுவிடு; நான் இந்த இரண்டையும் ஒருவேளையில் தாங்க மாட்டேன். **1247**

8. **பரிந்தவர் நல்காரென் றேங்கிப் பிரிந்தவர்**
பின்செல்வாய் பேதைஎன் நெஞ்சு.

என் நெஞ்சே! பிரிந்து சென்ற துணைவர் இரக்கம் கொண்டு வந்து உதவுவார் என்று வருந்திக் கொண்டு, மீண்டும் அவர் பின்னே செல்கின்றாய்! நீ எத்தகைய அறிவிலி! **1248**

9. **உள்ளத்தார் காத லவராக, உள்ளிநீ**
யாருழைச் சேறிஎன் நெஞ்சு.

என் நெஞ்சே! துணைவர் நெஞ்சத்தில் இருப்பவராய் இருக்கவும், நீ அவரை நினைத்துத் தேடிக் கொண்டு எவரிடத்துச் செல்கின்றாய்? **1249**

10. **துன்னாத் துறந்தாரை நெஞ்சத் துடையேமா**
இன்னும் இழத்தும் கவின்.

நம்மோடு நெருங்காமல் நீங்கிச் சென்ற துணைவரை நெஞ்சத்தில் உடையவராய் இருப்போமாக, அதனால் யாம் மேலும் எம் அழகை இழப்போம். **1250**

126. நிறையழிதல்

(துணைவி மனத்தில் அடக்க வேண்டியதை அடக்க முடியாமல் வாய் விட்டுச் சொல்லுதல்)

1. **காமக் கணிச்சி உடைக்கும், நிறையென்னும்
நாணுத்தாழ் வீழ்த்த கதவு.**

நாணம் எனப்படும் தாழ்ப்பாள் போடப்பட்ட நிறை என்னும் கதவினைக் காதல் என்னும் கோடரி உடைத்து விடும். **1251**

2. **காம மெனஒன்றோ கண்ணின்றென் நெஞ்சத்தை
யாமத்தும் ஆளும் தொழில்.**

காதல் என்னும் கொடுமையானது ஒன்று இரக்கமில்லாமல், என் மனத்தை நள்ளிரவுப் பொழுதிலும் தன் ஆட்சிக்கு அடிமைப்படுத்தி விடுகின்றது. **1252**

3. **மறைப்பேன்மன் காமத்தை யானோ; குறிப்பின்றித்
தும்மல்போல் தோன்றி விடும்.**

யான் முயன்று எனக்கு உண்டாம் காதல் வேட்கையை உறுதியாக மறைப்பேன்; ஆனால் தும்மல் உண்டாவது போல் யான் அறியாமல் அது வெளிப்பட்டு விடும். **1253**

4. **நிறையுடையேன் என்பேன்மன் யானோ; என்காமம்
மறையிறந்து மன்று படும்.**

யானோ மிகவும் அடக்கமுடையேன் என்று கூறுவேன்; ஆனால், என் காதலோ மறைப்பைத் தானே கடந்து ஊரறிய வெளிப்பட்டு விடும். **1254**

5. **செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை, காமநோய்
உற்றார் அறிவதொன் றன்று.**

வெறுப்புற்று நீங்கின துணைவரைப் பின்பற்றி இரந்து செல்லாத பெருந்தகைமை காதல் நோய் கொண்டவர் அறிந்து கொள்ளக் கூடிய ஒன்று அன்று. **1255**

6. **செற்றவர் பின்சேறல் வேண்டி அளித்தரோ**
எற்றென்னை உற்ற துயர்.

நம்மை வெறுத்தவர் பின்னே நாம் செல்லுதல் வேண்டும் என்று என்னை வருத்துகின்ற துயரம் எத்தன்மைத்து? அது இரங்கத்தக்கதாம்? **1256**

7. **நாணென ஒன்றோ அறியலம், காமத்தால்**
பேணியார் பெட்ப செயின்.

நாம் பேணிய துணைவர் நம்மைப்பேணி விரும்புவன செய்தால் அவ்விருப்பத்தால் நாணம் என்னும் ஒன்றைப் பற்றி நாம் அறியவும் விரும்ப மாட்டோம். **1257**

8. **பன்மாயக் கள்வன் பணிமொழி யன்றோநம்**
பெண்மை உடைக்கும் படை?

பலவகை மயக்கச் செயல்களைச் செய்யவல்ல காதலராம் கள்வரின் பணிவு மிக்க சொல்லன்றோ, நம் பெண்மையை உடைக்கின்ற படைக்கலமாயிற்று. **1258**

9. **புலப்ப லெனச்சென்றேன்; புல்லினேன், நெஞ்சம்**
கலத்த லுறுவது கண்டு.

கூடக்கூடாது; பிணங்க வேண்டும் என்று சென்றேன்; ஆனால் என் நெஞ்சம் அவரோடு கலப்பதைக் கண்டு என் வன்மையை விட்டுவிட்டுத் தழுவினேன். **1259**

10. **நிணந்தீயில் இட்டன்ன நெஞ்சினார்க் குண்டோ,**
புணர்ந்தூடி நிற்பேம் எனல்?

கொழுப்பினைத் தீயில் இட்டாற்போல உருகும் நெஞ்சினை உடைய துணைவியர்க்குக் கூடிப் பிணங்குவோம் என்னும் உறுதிப்பாடு உண்டோ? (இல்லை) **1260**

127. அவர்வயின் விதும்பல்

(துணைவன் வருகையை எதிர்பார்த்துத் துணைவியின் மனம் விரைதல்)

1. **வாளற்றுப் புற்கென்ற கண்ணும்; அவர்சென்ற**
நாளொற்றித் தேய்ந்த விரல்.

"துணைவர் பிரிந்து சென்ற நாள்களைச் சுவரில் குறித்தலால் விரல்கள் தேய்ந்து விட்டன; அவரை நோக்கி நோக்கிக் கண்களும் தம் ஒளியை இழந்து மழுங்கி விட்டன" **1261**

2. **இலங்கிழாய்! இன்று மறப்பின் என் தோள்மேல்**
கலங்கழியும் காரிகை நீத்து.

"விளங்கும் அணிகலன்களை அணிந்தவளே! துணைவர் இன்றும் மறப்பார் என்றால் என் அழகு நீங்கித் தோள் மெலிந்து வளையல் கழன்று விடும்". **1262**

3. **உரன்நசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்**
வரல்நசைஇ இன்னும் உளேன்.

"தம் ஆற்றலைக் காட்டுதலை விரும்பித் தம் ஊக்கமே துணையாகப் பிரிந்து சென்ற துணைவர் வருவதை விரும்பி, இன்னும் உயிரோடு உள்ளேன்". **1263**

4. **கூடிய காமம் பிரிந்தார் வரவுள்ளிக்**
கோடுகொ டேறும்என் நெஞ்சு.

"கூடியிருந்த காதலை மறந்து பிரிந்து சென்ற துணைவர் வருவதை விரும்பி, என் மனம் மரத்தின் கிளைமேல் ஏறி அவர் வரும் வழி பார்த்திருக்கும்". **1264**

5. **காண்கமன் கொண்கனைக் கண்ணாரக் கண்டபின்**
நீங்கும்என் மென்தோள் பசப்பு.

"யான் என் துணைவனைக் கண்ணாரக் காண வேண்டும். அவ்வாறு கண்டபின் என் தோளில் அமைந்துள்ள நிறமாற்றம் தானே நீங்கி விடும்". **1265**

6. **வருகமன் கொண்கன் ஒருநாள்; பருகுவன்**
பைதல்நோய் எல்லாம் கெட.

"என் துணைவன் ஒருநாள் வருவானாக; வந்தால் என் நிறமாற்ற நோயெல்லாம் முற்றாகக் கெடுமாறு இன்பம் துய்ப்பேன்". **1266**

7. **புலப்பேன்கொல்; புல்லுவேன் கொல்லோ; கலப்பேன்கொல்**
கண்ணன்ன கேளிர் வரின்?

"என் கண்போன்றவராகிய துணைவர் வந்துவிட்டால் அப்பொழுதில் யான் பிணங்கி நிற்பேனோ? தழுவி நிற்பேனோ? கூடிக் கலப்பேனோ? அறியேன்!" **1267**

8. **வினைகலந்து வென்றீக வேந்தன்; மனைகலந்து**
மாலை அயர்கம் விருந்து.

ஆட்சியாளனுக்காக எம் துணைவன் போரில் வெற்றி கொள்வானாக; யாம் எம் மனையில் துணையொடு கலந்து மாலைப் பொழுதில் இனிய விருந்து கொண்டாடுவோமாக. **1268**

9. **ஒருநாள் எழுநாள்போல் செல்லும், சேண் சென்றார்**
வருநாள்வைத் தேங்கு பவர்க்கு.

"நெடுந் தொலைவு சென்ற துணைவர் வரும் நாளை மனத்து வைத்து ஏங்குபவர்க்கு, ஒருநாள் செல்லுதல் ஏழுநாள் செல்லுதல்போல் நீண்டு கழியும்." **1269**

10. **பெறின்என்னாம், பெற்றக்கால் என்னாம், உறின்என்னாம்**
உள்ளம் உடைந்துக்கக் கால்?

மனம் உடைந்து உயிர் பிரியும் நிலை உண்டானால் துணைவன் வரப் பெற்றால் என்ன? நெருங்கப் பெற்றால் என்ன? தழுவப் பட்டால்தான் என்ன? (எப்பயனும் இல்லை) **1270**

128. குறிப்பறிவுறுத்தல்

(துணைவன் துணைவியர் தம் குறிப்பினை ஒருவர்க்கு ஒருவர் அறிவுறுத்துதல்)

1. **கரப்பினுங் கையிகந் தொல்லாநின் உண்கண்**
உரைக்க லுறுவதொன் றுண்டு.

"துணைவியே! நீ மறைத்தாய் ஆயினும் உன் கட்டுக்குள் அடங்காமல் மீறி உன் கண்கள் உரைப்பதாய் அமைந்த செய்தி ஒன்று உள்ளது". 1271

2. **கண்நிறைந்த காரிகைக் காம்பேர்தோள் பேதைக்குப்**
பெண்நிறைந்த நீர்மை பெரிது.

"கண்ணில் நிரம்பித் தோன்றும் பேரழகமைந்த மூங்கில் போன்ற அழகிய தோள்களையுடையவளுக்குள்ள பெண்மைக் குணம் பிறரினும் மிகுதியானதே யாம்". 1272

3. **மணியில் திகழ்தரு நூல்போல், மடந்தை**
அணியில் திகழ்வதொன் றுண்டு.

"அழகிய மணியின் ஊடே விளங்கித் தோன்றும் நூலைப் போல, என் துணைவியின் அழகுக்குள்ளே விளங்குவதாகிய நல்ல குறிப்பு ஒன்றுள்ளது". 1273

4. **முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல், பேதை**
நகைமொக்குள் உள்ளதொன் றுண்டு.

"திரண்டு விரியவுள்ள மொக்கினுள்ளே இருக்கும் நறுமணத்தைப் போல், என் துணைவியின் புன்முறுவலுக்குள்ளே மறைந்து கிடக்கும் நல்ல குறிப்பொன்று உண்டு". 1274

5. **செறிதொடி செய்திறந்த கள்ளம், உறுதுயர்**
தீர்க்கும் மருந்தொன் றுடைத்து.

"செறிந்த வளையல்களை அணிந்தவள் செய்து விட்டுச் சென்ற குறிப்பு, யான் அடைகின்ற பெருந்துயரைத் தீர்க்கும் மருந்தொன்று அவளிடத்து உள்ளதைக் காட்டும்". 1275

6. பெரிதாற்றிப் பெட்பக் கலத்தல், அரிதாற்றி அன்பின்மை சூழ்வ துடைத்து.

"மிகப் பெரிதாக அன்பு செய்து, விருப்புடன் கூடும் செய்கை பொறுத்தற்கு அரிய அன்பில்லாப் பிரிவு வர இருப்பதைக் குறிப்பதாய் உள்ளது." **1276**

7. தண்ணந் துறைவன் தணந்தமை, நம்மினும் முன்னம் உணர்ந்த வளை.

"குளிர்ந்த அழகிய துறைக்குரிய துணைவன் பிரிந்து சென்றமை நம்மைக் காட்டிலும் நம் வளையல்கள் முன்னமே உணர்ந்து கொண்டன போலும்! அவை சுழல்வன ஆயின". **1277**

8. நெருநற்றுச் சென்றார்எம் காதலர், யாமும் எழுநாளேம் மேனி பசந்து.

"எம் துணைவர் நேற்றைப் பொழுதுதான் பிரிந்து சென்றார்; ஆனால், யாம் எம் உடலில் நிறமாற்றம் கொண்டு ஏழு நாள்கள் ஆய்விட்டன!". **1278**

9. தொடிநோக்கி மென்தோளும் நோக்கி அடிநோக்கி, அஃதாண் டவள்செய் தது.

"துணைவி சுழலும் வளையலை நோக்கினாள்; மெலிந்த தோளை நோக்கினாள்; அடியை நோக்கினாள்; அவள் செய்தது அவ்வளவேயாம்!". **1279**

10. பெண்ணினால் பெண்மை உடைத்தென்ப, கண்ணினால் காமநோய் சொல்லி இரவு.

(வாயால் சொல்லாமல்) தம் கண்ணினால் தாம், அடைந்த காதல் நோயைச் சொல்லித் தீர்க்குமாறு கணவனை வேண்டும் பெண்தன்மையால், பெண்மை மேலும் சிறப்புடையது என்று கூறுவர். **1280**

129. புணர்ச்சி விதும்பல்

(துணைவன் துணைவியர் கூடுதற்கு விரைதல்)

1. **உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்**
கள்ளுக்கில் காமத்திற் குண்டு.

"நினைத்த அளவில் களிப்பு உண்டாதலும், காணும் அளவில் மகிழ்வு உண்டாதலும் மதுவுக்கு இல்லை; ஆனால் அவை காதலுக்கு உண்டு". 1281

2. **தினைத்துணையும் ஊடாமை வேண்டும், பனைத்துணையும்**
காமம் நிறைய வரின்.

பனையளவு மிகுதியாகக் காதல் நிரம்பி வருமானால் அப்பொழுதில் காதலர் இருவரும் தினையளவு கூடப் பிணங்குதல் இல்லாமல் இருத்தல் வேண்டும். 1282

3. **பேணாது பெட்பவே செய்யினும், கொண்கனைக்**
காணா தமையல கண்.

"காதலர் நாம் விரும்புமாறு நடவாமல் அவர், தாம் விரும்புமாறே நடந்து கொண்டார் என்றாலும் அவரைக் காணாமல் இருக்க எம் கண்கள் இசைவதில்லை". 1283

4. **ஊடற்கண் சென்றேன்மன் தோழி; அதுமறந்து**
கூடற்கண் சென்றதென் நெஞ்சு.

"தோழியே பிணங்குவேன் என எண்ணிக் கொண்டு துணைவரிடம் யான் சென்றேன்; ஆனால் என் நெஞ்சம் அதனை மறந்து அவரொடு கூடுதற்குச் சென்று விட்டது". 1284

5. **எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல், கொண்கன்**
பழிகாணேன் கண்ட இடத்து.

"கண்ணுக்கு மை எழுதும் போது, அக்கண் மைஎழுதும் கோலைக் காணாதிருத்தல் போல், துணைவரை நேரில் காணும்போது அவர் செய்த தவறுகளைக் காண மாட்டேன்". 1285

6. **காணுங்கால் காணேன் தவறாய; காணாக்கால்
காணேன் தவறல் லவை.**

"யான் துணைவரை நேரில் காணும் பொழுதில் அவர் செய்த தவறாயவற்றைக் கருத மாட்டேன்; அவரை நேரில் காணாத பொழுதில், அவர் செய்த தவற்றை அன்றிப் பிறவற்றைக் கருதமாட்டேன்". 1286

7. **உய்த்தல் அறிந்து புனல்பாய் பவரேபோல்
பொய்த்தல் அறிந்தென் புலந்து?**

"தம்மை இழுத்துக் கொண்டு போய்விடும் என்பதை அறிந்து கொண்டு வெள்ளத்துள் பாய்ந்து கெடுபவரைப் போல், அறிந்து கொண்டே பொய்யாகப் பிணங்கிக் கெடுவதால் என்ன பயன்?". 1287

8. **இளித்தக்க இன்னா செயினும், களித்தார்க்குக்
கள்ளற்றே கள்வநின் மார்பு.**

"உள்ளங்கவர் கள்வனே! இழிவு தரத்தக்க கொடுமைகளை நீ எமக்குச் செய்தாலும், மதுவுண்டு மயங்குபவர்க்கு மேலும் மேலும் மயக்கம் தரும். மதுவே போல், இன்பம் தருவது நின்மார்பு ஆகும்". 1288

9. **மலரினும் மெல்லிது காமம்; சிலர்அதன்
செவ்வி தலைப்படு வார்.**

காதல் என்பது மெல்லிய மலரினும் மெல்லியது; ஆதலால், அதன் சரியான பக்குவம் அறிந்து, அதன் பயனை நன்கு கொள்பவர் மிகச் சிலரே. 1289

10. **கண்ணின் துனித்தே கலங்கினாள், புல்லுதல்
என்னினும் தான்விதுப் புற்று.**

"கண்ணால் பிணங்கித் துணைவி தடுமாறினாள்; ஆனால், தழுவுதலில் என்னினும் அவள் மிக விரைவு கொண்டாள்". 1290

130. நெஞ்சொடு புலத்தல்

(துணைவன் துணைவியர் அவரவர் மனத்தோடு பிணங்குதல்)

1. **அவர்நெஞ் சவர்க்காதல் கண்டும், எவன்நெஞ்சே**
நீஎமக் காகா தது?

"நெஞ்சே! துணைவரின் நெஞ்சம், அவர்க்காகவே அமைந்து இருப்பதைக் கண்டபின்னும், நீ எமக்கு ஆகாததாக இருப்பது ஏன்?" **1291**

2. **உறாஅ தவர்க்கண்ட கண்ணும், அவரைச்**
செறாஅரெனச் சேறிஎன் நெஞ்சு.

"நெஞ்சே! நம்மொடு பொருந்தாத துணைவரைக் கண்ட பின்னரும், அவர் நம்மை வெறுக்க மாட்டார் என அவர்பால் செல்கின்றாயே! என்ன காரணம்?" **1292**

3. **கெட்டார்க்கு நட்டார்இல் என்பதோ? நெஞ்சேநீ**
பெட்டாங் கவர்பின் செலல்.

"நெஞ்சே! பிரிந்த துணைவரை விரும்பி நீ அவர் பின்னே செல்லுதல் நிலையில் கெட்டுப் போனவர்க்கு நண்பராவார் இலர்" என்று (பழமொழி) கூறுவதற்காகவோ? **1293**

4. **இனியன்ன நின்னொடு சூழ்வார்யார் நெஞ்சே?**
துனிசெய்து துவ்வாய்காண் மற்று.

"நெஞ்சே! துணைவரைக் காணும் போது பிணங்கி அவரொடு கலந்து கூடி மகிழ மாட்டாய்; அத்தகைய உன்னோடு கூடிக் கலந்து எண்ணுபவர் எவர்?" **1294**

5. **பெறாஅமை அஞ்சும்; பெறின்பிரி வஞ்சும்;**
அறாஅ இடும்பைத்தென் நெஞ்சு.

"துணைவரை அடையப் பெறாத போது, அதற்கு அஞ்சும்; அவரைப் பெற்றுத் துய்க்கும்போது வர இருக்கும் பிரிவுக்கு அஞ்சும்; இவ்வகையால் நீங்காத் துன்பமுடையது என் நெஞ்சு". **1295**

6. **தனியே இருந்து நினைத்தக்கால், என்னைத்**
தினிய இருந்ததென் நெஞ்சு.

"யான் துணைவரைப் பிரிந்து தனியே இருந்து நினைக்கும் வேளையில், என்னை அரித்துத் தின்பதற்கென்றே இருந்தது என் நெஞ்சு". 1296

7. **நாணும் மறந்தேன், அவர்மறக் கல்லாஎன்**
மாணா மடநெஞ்சிற் பட்டு.

"துணைவரை, மறக்கமுடியாத - தகுதியற்ற அறிவில்லாத - என் நெஞ்சத்திற் சிக்கி யான் விடக்கூடாத நாணத்தையும் விட்டு விட்டேன்". 1297

8. **எள்ளின் இளிவாம்என் றெண்ணி, அவர்திறம்**
உள்ளும் உயிர்க்காதல் நெஞ்சு.

"உயிரின் மேல் விருப்பம் மிகக் கொண்ட நெஞ்சு பிரிந்து சென்ற துணைவரை இகழின், இழிவாம் என்று எண்ணி, அவர்தம் உயர்வுகளையே நினைத்துக் கொண்டுள்ளது". 1298

9. **துன்பத்திற்கு யாரே துணையாவார், தாமுடைய**
நெஞ்சம் துணையல் வழி?

"துன்பப் பொழுதில், நீங்காத் துணையாக இருக்க வேண்டிய தம்முடைய நெஞ்சமே, தமக்குத் துணையாக இல்லாதபோது பிறர் எவரே துணையாக இருப்பார்?". 1299

10. **தஞ்சம் தமரல்லர் ஏதிலார், தாமுடைய**
நெஞ்சம் தமரல் வழி.

ஒரு துணைவிக்குத் தம் நெஞ்சமே தம் உறவாக இல்லாமல் துணைவரிடம் சென்றுவிடும் போது, அயலார் உறவில்லாதவராக இருத்தல் மிக எளிதேயாம். 1300

131. புலவி

(பொய்ச்சினம் கொள்ளல்)

1. **புல்லா திராஅப் புலத்தை; அவர்உறும்**
அல்லல்நோய் காண்கம் சிறிது.

"தலைவர் கொள்ளும் காதல்நோயின் துயரைச் சிறிது பொழுது காண்போம்; அதற்காக, அவர் தழுவ வருங்கால் தழுவாமல் இருந்து சற்றே பொய்ச்சினம் கொள்வாயாக". 1301

2. **உப்பமைந் தற்றால் புலவி, அதுசிறிது**
மிக்கற்றால் நீள விடல்.

"புலவி என்பது உணவுக்கு அளவாகப் போடும் உப்புப் போன்றது; அதனைச் சிறிதளவேனும் மிக விடுதல் உணவில் உப்பு மிகுதல் போலவே சுவையற்ற தாக்கும்". 1302

3. **அலந்தாரை அல்லல்நோய் செய்தற்றால், தம்மைப்**
புலந்தாரைப் புல்லா விடல்.

"தம்மொடும் புலவி கொண்டு இருப்பவரை வயப்படுத்தித் தழுவாது விடுதல், துன்பமுற்றவர்க்கு மேலுமோர் துன்பம் செய்ததாகும்." 1303

4. **ஊடி யவரை உணராமை, வாடிய**
வள்ளி முதலரிந் தற்று.

"ஊடியிருப்பவரின் உள்ளக் குறிப்பை உணர்ந்து அரவணைத்துக் கொள்ளாதவர் செயல், நீர்ப்பதமின்றி வாடிப்போய் இருக்கும் கொடியை அடியொட்ட அறுத்து விட்டது போலாம்". 1304

5. **நலத்தகை நல்லவர்க் கேஎர், புலத்தகை**
பூவன்ன கண்ணா ரகத்து.

"நல்லியல்புகள் எல்லாம் அமைந்த இனிய துணைவர்க்குத் தனி அழகாவது, பூப்போலும் கண்ணையுடைய துணைவியிடத்து உண்டாகும் ஊடற் சிறப்பேயாகும்". 1305

6. **துனியும் புலவியும் இல்லாயின், காமம்
கனியும் கருக்காயும் அற்று.**

பெரிதளவு சினத்தலாகிய துனி இல்லை என்றால் காமம், மிக முதிர்ந்த கனிபோல் சுவையற்றதாகும்; சிறிதளவு சினத்தலாகிய புலவி இல்லை என்றால் காமம், இளங்காய்போல் துவர்ப்பாகும். **1306**

7. **ஊடலின் உண்டாங்கோர் துன்பம், புணர்வது
நீடுவ தன்றுகொல் என்று.**

"ஊடுவதிலும் கூட அப்போது உண்டாகும். ஒரு துன்பம் உண்டு; அது கூடியிருக்கக் கூடிய பொழுது நீட்டித்திராதோ என்பது". **1307**

8. **நோதல் எவன்மற்று நொந்தாரென், றஃதறியும்
காதலர் இல்லா வழி.**

"இவர் துன்புற்றார் என்பதை உணர்ந்து உதவி செய்யும் துணைவர் இல்லாத இடத்தில், அவரை நினைந்து வருந்தியிருப்பதால் என்ன பயன்?". **1308**

9. **நீரும் நிழலது இனிதே; புலவியும்
வீழுநர் கண்ணே இனிது.**

தண்மையான நீரும் நிழல் சார்ந்திருப்பின் மிக இனிதாம்; அவ்வாறே ஊடுதலும் விரும்பத்தக்க துணைவர் இடத்தே தான் இனிதாகும். **1309**

10. **ஊடல் உணங்க விடுவாரோ டென்நெஞ்சம்
கூடுவேம் என்ப தவா.**

ஊடியிருக்கும் பொழுதில் அதனைத் தணியாமல் வருந்த விடுபவரை, விட்டு விடாமல், 'அவரோடு கூடுவோம்' என்று என்நெஞ்சம் முயல்வது அதன் ஆசைப்பெருக்கேயாம். **1310**

132. புலவி நுணுக்கம்

(பொய்ச் சினத்தின் நுண்ணிய தன்மை)

1. **பெண்ணியலார் எல்லாரும் கண்ணின் பொதுவுண்பர்**
நண்ணேன் பரத்தநின் மார்பு.

"பரத்தனே பெண்ணியல்பு கொண்டாரெல்லாரும் தம் கண்களால் உன்னைப் பொது ஊணாகக் கொண்டு உண்பர்; ஆதலால் நின் மார்பை நான் நெருங்க மாட்டேன்". **1311**

2. **ஊடி இருந்தேமாத் தும்மினார், யாம்தம்மை**
நீடுவாழ் கென்பாக் கறிந்து.

"நாம் துணைவரொடும் ஊடி இருந்தோம்; அப்போது நாம் அவரை 'நீடுவாழ்க' என்று வாழ்த்துவோம் என்று எண்ணிக் கொண்டு தும்மினார்". **1312**

3. **கோட்டுப்பூச் சூடினும் காயும், 'ஒருத்தியைக்**
காட்டிய சூடினீர்' என்று.

"கொம்பிலே பூத்த மலரைச் சூடினாலும், எவளோ ஒருத்திக்கு ஒரு குறிப்பாகக் காட்டுதற்காக இதனைச் சூடினீர்" என்று ஊடுவாள். **1313**

4. **'யாரினும் காதலம்' என்றேனா, ஊடினாள்**
'யாரினும் யாரினும்' என்று.

'நாம் எவரினும் காதலுடையோம்' என்று துணைவன் கூறவும் "எவரைப் பார்க்கிலும்?", "எவரைப் பார்க்கிலும்" என்று சொல்லித் துணைவி ஊடினாள். **1314**

5. **'இம்மைப் பிறப்பில் பிரியலம்' என்றேனாக்**
கண்ணிறை நீர்கொண் டனள்.

"இப்போது நாம் பிரியமாட்டோம்" என்று யான் கூறிய அளவில், "அவ்வாறானால் எப்போது பிரிவோமோ" என்று கண்ணில் நீர் ததும்ப நின்று ஊடினாள். **1315**

6. **'உள்ளினேன்' என்றேன் மற்'றென் மறந்தீர்' என்றென்னைப் புல்லாள் புலத்தக் கனள்.**

"நின்னை நான் நினைத்தேன் என்று கூறினேன்; அதனைக் கேட்ட துணைவி, ஏன் இடையே மறந்துவிட்டீர்; என்று சொல்லி என்னைத் தழுவாமல் ஊடினாள்". **1316**

7. **வழுத்தினாள் தும்மினே னாக; அழித்தழுதாள் 'யாருள்ளித் தும்மினீர்' என்று.**

யான் "தும்மினேன்; அது கண்டு நீடுவாழ்க" என்று வாழ்த்தினாள்; உடனே, தன் ஊடுதலை நினைத்து வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, "யார் நினைத்துத் தும்மினீர்" என்று அழுதாள். **1317**

8. **தும்முச் செறுப்ப அழுதாள், 'நுமர்உள்ளல் எம்மை மறைத்திரோ' என்று.**

"தும்மல் உண்டாக அதை நான் அடக்கிய அளவில்; அழுதுகொண்டே, "உமக்கு உறவானவர் உம்மை நினைப்பதை நாம் அறியாதவாறு மறைத்தீரோ" என்றாள்". **1318**

9. **தன்னை உணர்த்தினும் காயும், 'பிறர்க்குநீர் இந்நீரர் ஆகுதிர்' என்று.**

"ஊடியிருந்த துணைவியின் பிணங்குதலைத் தீர்த்தாலும் பிறரிடத்தும் நீர் இத்தகையராக இருப்பீர் போலும் என்று சினங்கொள்வாள்". **1319**

10. **நினைத்திருந்து நோக்கினும் காயும்; அனைத்து 'நீர் யாருள்ளி நோக்கினீர்' என்று.**

"துணைவியின் அழகை நினைத்துக் கொண்டு அவளை உற்றுப் பார்த்தாலும், 'அதனை எவர் அழகொடு ஒப்பிட்டு நினைத்துக் கொண்டு என்னைப் பார்த்தீர்' என்று சினங்கொள்வாள்". **1320**

133. ஊடலுவகை

(ஊடுதலால் உண்டாகும் மகிழ்ச்சியை நினைந்து உவத்தல்)

1. **இல்லை தவறவர்க் காயினும், ஊடுதல்**
வல்ல தவரளிக்கு மாறு.

"துணைவரிடத்துத் தவறேதும் இல்லை என்றாலும் துணைவி ஊடல் கொள்ளுதல் அவர் தம்மை மேலும் சிறப்பாக அரவணைத்துக் கொள்ளுதலை விரும்பியேயாகும்".
1321

2. **ஊடலில் தோன்றும் சிறுதுனி, நல்லளி**
வாடினும் பாடு பெறும்.

*"ஊடும் வேளையில் உண்டாகும் சிறிய துன்பத்தால் துணைவரின் நல்ல அன்பு அப்பொழுதில் குறைவதாகத் தோன்றினாலும் அதன்பின் பெருமை பெறும்". **1322***

3. **புலத்தலின் புத்தேள்நா டுண்டோ, நிலத்தொடு**
நீரியைந் தன்னா ரகத்து?

*"நிலத்தொடு நீர் இரண்டறக் கலந்தாற் போலப் பொருந்தியவர் இடத்து, ஊடல் கொள்வதினும் உயர்ந்த இன்ப இடமென ஒன்று உண்டோ? இல்லை!" **1323***

4. **புல்லி விடாஅப் புலவியுள் தோன்றும்என்**
உள்ளம் உடைக்கும் படை.

*"துணைவரைத் தழுவிக் கொண்டு விடாமல் இன்புறச் செய்தற்கு உதவும் ஊடலிலே, என் மனஉறுதியை உடைக்கும் படைக்கலம் உருவாகின்றது!" **1324***

5. **தவறில ராயினும் தாம்வீழ்வார் மென்தோள்**
அகறலின் ஆங்கொன் றுடைத்து.

*"தவறு எதுவும் இல்லாதவர் எனினும், தாம் விரும்புகின்றவரின் மெல்லிய தோளைத் தழுவுதல் விடுத்து, அகலுவதிலும் ஒரு தனி இன்பம் உள்ளது". **1325***

6. **உணலினும் உண்ட தறல்இனிது; காமம்**
புணர்தலின் ஊடல் இனிது.

உண்ணும் சுவையால் உண்டாகும் இன்பத்தினும் அவ்வுணவு செரித்தலால் உண்டாகும் இன்பம் மிகுதியாம்; அதுபோல், கூடியிருத்தலினும் ஊடியிருத்தலில் உண்டாகும் இன்பம் மிகுதியாம். *1326*

7. **ஊடலில் தோற்றவர் வென்றார்; அதுமன்னும்**
கூடலின் காணப் படும்.

"ஊடற் போரில் தோற்றுப் போனவர் எவரோ அவரே, வெற்றி கொண்டவர்; அவ்வெற்றி, அவர்கள் கூடும்போதில் நன்கு விளங்கிவிடும்". *1327*

8. **ஊடிப் பெறுகுவம் கொல்லோ, நுதல்வெயர்ப்பக்**
கூடலில் தோன்றிய உப்பு?

"நெற்றியில் வியர்வை உண்டாகக் கூடுதலில் தோன்றும் இன்சுவையை, நாம் மீண்டும் ஊடுதல் வழியாகப் பெறுவோமா?" *1328*

9. **ஊடுக மன்னோ ஒளியிழை யாம்இரப்ப**
நீடுக மன்னோ இரா.

"ஒளிமிக்க அணிகலம் அணிந்த இவள் மிக ஊடுவாளாக! இவள் ஊடல் தணிவதற்காக யாம் கெஞ்சும்படியாக இரவுப் பொழுது மிகவும் நீள்வதாக!" *1329*

10. **ஊடுதல் காமத்திற் கின்பம்; அதற்கின்பம்**
கூடி முயங்கப் பெறின்.

ஊடுதல், காமத்திற்கு இன்பம் ஆகும்; அதனினும் ஊடியவரை வயப்படுத்திக் கூடித் தழுவுதல் உயர்ந்த இன்பம் ஆகும். *1330*

♦*♦*♦

செய்யுள் முதற்குறிப்பு
அகர வரிசை

(எண் - செய்யுள் எண்)

அஃகாமை	178
அஃகி அகன்ற	175
அகடாரார்	936
அகப்பட்டி ஆவாரை	1074
அகரமுதல	1
அகலாது அணுகாது	691
அகழ்வாரைத்	151
அகனமர்ந்து ஈதலின்	92
அகனமர்ந்து செய்யாள்	84
அங்கணத்துள்	720
அசையியற்கு	1098
அச்சமுடையார்க்கு	534
அச்சமே கீழ்	1075
அஞ்சாமை அல்லால்	497
அஞ்சாமை ஈகை	382
அஞ்சும் அறியான்	863
அஞ்சுவ தஞ்சாமை	428
அஞ்சுவதோரும்	366
அடக்கம் அமரருள்	121
அடல் வேண்டும்	343
அடற்றகையும்	768
அடுக்கிய கோடி	954
அடுக்கிவரினும்	625
அடுத்ததுகாட்டும்	706
அணங்கு கொல்	1081
அணி அன்றோ	1014
அந்தணர் என்போர்	30
அந்தணர் நூற்கும்	543
அமரகத்து ஆற்றறுக்கும்	814
அமரகத்து வன்	1027
அமிழ்தினும்	64
அமைந்தாங்	474
அரங்கின்றி	401
அரம்பொருத	888
அரம்போலும்	997
அரிதரோ	1153
அரிதாற்றி	1160
அரியஎன்று	537
அரியகற்று	503
அரியவற்றுள்	443
அருங்கேடன்	210
அருஞ்செவ்வி	565
அருட்செல்வம்	241
அருமறைசோரும்	847
அருமை உடைத்	611
அரும்பயன்	198
அருவினை	463
அருளல்ல	254
அருளில்லார்க்கு	247
அருளென்னும்	757
அருளொடும்	755
அருள்கருதி	285
அருள்சேர்ந்த	243
அருள்வெஃகி	176

அலந்தாரை	1303
அலரெழ ஆருயிர்	1141
அலர்நாண	1149
அல்லல்அருள்	245
அல்லவைதேய	96
அல்லற்பட்டு	555
அவர் தந்தார்	1182
அவர் நெஞ்சு	1291
அவா இல்லார்க்கு	368
அவா என்ப	361
அவாவினை ஆற்ற	367
அவி சொரிந்து	259
அவையறிந்து	711
அவையறியார்	713
அவ்வித்து அழுக்	167
அவ்விய நெஞ்சத்	169
அழக்கொண்ட	659
அழச்சொல்லி	795
அழல்போலும்	1228
அழிவதூஉம்	461
அழிவந்த செய்யினும்	807
அழிவினவை	787
அழிவின்றறை	764
அழுக்கற்று	170
அழுக்காறு அவா	35
அழுக்காறு உடையார்	165
அழுக்காறு உடையான்	135
அழுக்காறு என	168
அழுக்காற்றின்	164
அளவல்ல	289
அளவளாவில்லா	523
அளவறிந்தார்	288
அளவறிந்து	479
அளவின்கண்	286
அளித்தஞ்சல்	1154
அறங்கூறான்	181
அறஞ்சாரா	1047
அறஞ்சொல்லும்	185
அறத்தாறு இது	37
அறத்தாற்றின்	46
அறத்தான்	39
அறத்திற்கே	76
அறத்தினூஉங்கு	32
அறம்பொருள்	501
அறவாழி	8
அறவினை யாதெனில்	321
அறவினையும்	909
அறனழீஇ	182
அறனறிந்து ஆன்ற	635
அறனறிந்து மூத்த	441
அறனறிந்து வெஃகா	179
அறனியலான்	147
அறனிழுக்கா	384
அறனெனப்	49
அறன் ஆக்கம்	163
அறன் ஈனும்	754
அறன்கடை	142
அறன்நோக்கி	189
அறன் வரையான்	150
அறிகிலார்	1139
அறிகொன்று	638
அறிதொறு அறி	1110
அறிந்தாற்றிச்	515
அறிவற்றம்	421
அறிவிலார்	843
அறிவிலான்	842
அறிவினான்	315
அறிவினுள் எல்லாந்	203

அறிவின்மை	841	அன்றறிவாம்	36
அறிவுடையார் ஆவ	427	ஆகா றளவிட்டி	478
அறிவுடையார் எல்லாந்	430	ஆகூழால்	371
அறிவுரு ஆராய்ந்த	684	ஆக்கமுங் கேடும்	642
அறுவாய்	1117	ஆக்கம் அதர்வினாய்	594
அறைபறை	1076	ஆக்கம் இழந்தே	593
அற்கா இயல்பிற்றுச்	333	ஆக்கம் கருதி	463
அற்ற தறிந்து	944	ஆங்கமை	740
அற்றம் மறைக்கும்	980	ஆபயன் குன்றும்	560
அற்றம் மறைத்தலோ	846	ஆயும் அறிவினர்	918
அற்றவர் என்பார்	365	ஆய்ந்தாய்ந்து	792
அற்றாரைத்	506	ஆரா இயற்கை	370
அற்றார் அழிபசி	226	ஆவிற்கு நீரென்று	1066
அற்றார்க்கொன்று	1007	ஆள்வினையும்	1022
அற்றால் அளவறிந்து	943	ஆற்றாரும் ஆற்றி	493
அற்றேமென்று	626	ஆற்றின் அளவறிந்தீக	477
அனிச்சப்பூக்	1115	ஆற்றின் அளவறிந்துகற்க	725
அனிச்சமும்	1120	ஆற்றின் ஒழுக்கி	48
அன்பகத்தில்லா	78	ஆற்றின் நிலைதளர்ந்	716
அன்பறி வாராய்ந்த	682	ஆற்றின் வருந்தா	468
அன்பறிவு தேற்றம்	513	ஆற்றுபவர்க்கும்	741
அன்பிலன்	862	ஆற்றுவார் - இக	891
அன்பிலார்	72	ஆற்றுவார் - பசி	225
அன்பிற்கும்	71	ஆற்றுவார் - பணி	985
அன்பின் வழியது	80	இகலானாம்	860
அன்பின் விழையார்	911	இகலிற் கெதிர்	858
அன்பீனும்	74	இகலின் மிகலினிது	856
அன்புடைமை - இவ்	992	இகலெதிர்	855
அன்புடைமை - வேந்	681	இகலென்ப	851
அன்புநாண்	983	இகலென்னும்	853
அன்பும் அறனும்	45	இகல்காணான்	859
அன்புற் றமர்ந்த	75	இகழ்ச்சியிற்	539
அன்பொரீஇத்	1009	இகழ்ந்தெள்ளாது	1057
அன்போடி யைந்த	73	இடமெல்லாம்	1064

இடனில் பருவத்தும்	218	இருமனப் பெண்டிரும்	920
இடிக்குந்துணை	447	இருமை வகை	23
இடிபுரிந்தெள்ளுஞ்	607	இருவே றுலகத்து	374
இடிப்பாரை	448	இருள்சேர்	5
இடுக்கட் படினும்	654	இருள்நீங்கி	352
இடுக்கண்கால்	1030	இலக்கம்	627
இடுக்கண் வருங்கால்	621	இலங்கிழாய்	126
இடும்பைக்கு இடும்பை	623	இலமென்று அசைஇ	1040
இடும்பைக்கே	1029	இலமென்று வெஃகுதல்	174
இடைதெரிந்து	712	இலர்பலராகிய	270
இணரூழ்த்தும்	650	இலனென்னும்	223
இணர்எரி தோய்	308	இலன் என்று	205
இதனை இதனால்	517	இல்லதென்	53
இமைப்பின்	1129	இல்லாரை	752
இமையாரின்	906	இல்லாளை	905
இம்மைப் பிறப்பில்	1315	இல்லாள்கண்	903
இயல்பாகும்	344	இல்லை தவறவர்க்கு	1321
இயல்பினான்	47	இல்வாழ்வான்	41
இயல்புளிக்	545	இவறலும்	432
இயற்றலும்	385	இழத்தொறூஉம்	940
இரக்க	1051	இழிவறிந்து	946
இரத்தலின்	229	இழுக்கல்	415
இரத்தலும்	1054	இழுக்காமை	536
இரந்தும்	1062	இழைத்தது	779
இரப்பன் இரப்பாரை	1067	இளித்தக்க	1288
இரப்பாரை	1058	இளிவரின்	970
இரப்பான்	1060	இளைதாக	879
இரவார் இரப்	1035	இளையர் இன	698
இரவுள்ள	1069	இறந்தமைந்த	900
இரவென்னும்	1068	இறந்த வெகுளியின்	531
இருநோக்கு	1091	இறந்தார்	310
இருந்துள்ளி	1243	இறப்பே புரிந்த	977
இருந்தோம்பி	81	இறல் ஈனும்	180
இருபுனலும்	737	இறுதி பயப்பினும்	690

இறைகடியன்	564
இறைகாக்கும்	547
இற்பிறந்தார் - கண்ணை	951
இற்பிறந்தார் - கண்	1044
இனத்தாற்றி	568
இனம் போன்று	822
இனி அன்ன	1294
இனிய உளவாக	100
இனைத்துணைத்	87
இனையர் - இவர்	790
இன்கண் உடைத்தவர்	1152
இன்சொலால் ஈத்து	387
இன்சொலால் ஈரம்	91
இன்சொல் இனி	99
இன்பத்துள் இன்பம்	854
இன்பத்துள் - விழை	629
இன்பம் இடையறா	369
இன்பம் ஒருவற்கு	1052
இன்பம் கடல்	1166
இன்பம் விழை - இடும்	628
இன்பம் விழை - வினை	615
இன்மை இடும்பை	1063
இன்மை எனஒரு	1042
இன்மை ஒருவற்கு	988
இன்மையின் இன்னா	1041
இன்மையின் இன்னாது	558
இன்மையுள் இன்மை	153
இன்றியமையாச்	961
இன்றும் வருவது	1048
இன்னா எனத்தான்	316
இன்னா செய்தாரை	314
இன்னா செய்தார்க்கும்	987
இன்னாது இரக்கப்	224
இன்னாது இனனில்	1158
இன்னாமை இன்பம்	630
ஈட்டம் இவறி	1003
ஈதல் இசைபட	231
ஈத்துவக்கும்	228
ஈர்ங்கை விதிரார்	1077
ஈவார்கண்	1059
ஈன்றபொழுதிற்	69
ஈன்றாள்பசி	656
ஈன்றாள் முகத்தேயும்	923
உடம்பாடு இலாதவர்	890
உடம்பொடு உயிரிடை	1122
உடுக்கை	788
உடுப்பதூஉம்	1079
உடை செல்வம்	939
உடைத்தும்	473
உடைமையுள்	89
உடையரெனப்படுவது	591
உடையார்முன்	395
உட்கப் படா அர்	921
உட்பகை	883
உணர்வ துடையார்	718
உணலினும்	1326
உண்டார்கண்	1090
உண்ணற்க	922
உண்ணாது	160
உண்ணாமை உள்ளது	255
உண்ணாமை வேண்டும்	257
உதவி வரைத்தன்று	105
உப்பமைந்	1302
உயர்வகலம்	743
உயிர் உடம்பின்	330
உயிர்ப்ப உளரல்லர்	880
உய்த்தல்	1287
உரமொருவற்கு	600

உரனென்னும்	24
உரன்நசைஇ	1263
உருவுகண்டு	667
உருளாயம்	933
உரைப்பார்	232
உலகத்தார்	850
உலகத்தோடு	140
உலகம்தழீஇய	425
உலைவிடத்து	762
உவக்காண்	1185
உவந்துறைவர்	1130
உவப்பத் தலைக்கூடி	394
உழந்துழந்து	1177
உழவினார்	1036
உழுதுண்டு	1033
உழுவார்	1032
உழைப்பிரிந்து	530
உளபோல்	574
உளரெனினும்	730
உளரென்னும்	406
உளவரை தூக்காத	480
உள்ளக் களித்தலும்	1281
உள்ளத்தார்	1249
உள்ளத்தால் உள்ள	282
உள்ளத்தால் பொய்	294
உள்ளம் இலாதவர்	598
உள்ளம் உடைமை	592
உள்ளம் போன்று	1170
உள்ளற்க	798
உள்ளியது எய்தல்	540
உள்ளியதெல்லாம்	309
உள்ளினும்	1201
உள்ளினேன்	1316
உள்ளுவதெல்லாம்	596
உள்ளுவன் - உரை	1184
உள்ளுவன் - மறப்பின்	1125
உள்ளொற்றி	927
உறங்குவது	339
உறல்முறையான்	885
உறாஅ தவர்க்கண்ட	1292
உறாஅ தவர்போல்	1096
உறாஅதோ	1143
உறாஅர்க்கு	1200
உறின்உயிர்	778
உறின்நட்டு	812
உறுதோறு	1106
உறுபசியும்	734
உறுபொருளும்	756
உறுப்பமைந்து	761
உறுப்பொத்தல்	993
உறுவதுசீர்	813
உறைசிறியார்	680
உற்றநோய் நீக்கி	442
உற்றநோய் நோன்றல்	261
உற்றவன்	950
உற்றான் அளவும்	949
ஊக்கமுடையான்	486
ஊடலில் தோற்றவர்	1327
ஊடலில் தோன்றும்	1322
ஊடலின் உண்டாங்	1307
ஊடல் உணங்க	1310
ஊடல் உணர்தல்	1109
ஊடற்கண்	1284
ஊடிப் பெறுகுவங்	1328
ஊடி யவரை	1304
ஊடி யிருந்தே	1312
ஊடுக மன்னோ	1329
ஊடுதல்	1330

ஊனுடை	1012
ஊனைக் குறித்த	1013
ஊதியம் என்பது	797
ஊரவர் கௌவை	1149
ஊருணிநீர்	215
ஊழி பெயரினும்	989
ஊழிற் பெருவலி	380
ஊழையும்	620
ஊறொரால்	662
எச்சமென்று	1004
எட்பக வன்ன	889
எண்சேர்ந்த	910
எண்ணித் துணிக	467
எண்ணிய எண்ணி	666
எண்ணியார்	494
எண்ணென்ப	392
எண்பதத்தால்	991
எண்பதத்தான்	548
எண்பொருள வாகச்	424
எதிரதாக் காக்கும்	429
எந்நன்றி	110
எப்பொருளும் ஓரார்	695
எப்பொருள் எத்	355
எப்பொருள் யார்	423
எய்தற்கரியது	489
எரியால் சுடப்	896
எல்லாப் பொருளும்	746
எல்லார்க்கும் எல்லாம்	582
எல்லார்க்கும் நன்றாம்	125
எல்லா விளக்கும்	299
எல்லைக்கண்	806
எவ்வ துறைவது	426
எழுதுங்கால்	1285
எழுபிறப்பும்	62
எழுமை எழுபிறப்பும்	107
எளிதென	145
எள்ளாத எண்ணி	470
எள்ளாமை	281
எள்ளின் இளிவாம்	1298
எற்றிற் குரியர்	1080
எற்றென்று	655
எனைத்தானும் எஞ்	317
எனைத்தானும் நல்	416
எனைத் திட்பம்	670
எனைத்துணையர்	144
எனைத்து நினைப்	1208
எனைத்தும் குறுகுதல்	820
எனைத்தொன்றும்	1202
எனைப்பகை	207
எனைமாட்சி	150
எனைவகையான்	514
என்பி லதனை	77
என்றும் ஒருவுதல்	652
என்னைமுன்	771
ஏதம் பெருஞ்	1006
ஏதிலார் ஆரத்	837
ஏதிலார் குற்றம்	190
ஏதிலார் போலப்	1099
ஏந்திய கொள்கை	899
ஏமுற் றவரினும்	873
ஏரினும் நன்றால்	1038
ஏரின் உழாஅர்	14
ஏவவும் செய்கலான்	848
ஐந்தவித்தான்	25
ஐயத்தின் நீக்கி	353
ஐயப் படாஅது	702
ஐயுணர்வு	358
ஒட்டார்பின்	967

ஒண்ணுதற்கோ	1088	ஒன்றாக நல்லது	323
ஒண்பொருள்	760	ஒன்றாமை	886
ஒத்த தறிவான்	214	ஒன்றானும்	128
ஒப்புரவினால்	220	ஒன்றெய்தி	932
ஒருதலையான்	1196	ஒன்னார்த்	264
ஒருநாள் எழுநாள்	1269	ஓஒ இனிதே	1176
ஒருபொழுதும்	337	ஓஒதல் வேண்டும்	653
ஒருமைக்கண் தான்	398	ஓதி உணர்ந்தும்	834
ஒருமைச் செயலாற்	835	ஓம்பின் அமைந்தார்	1155
ஒருமை மகளிரே	974	ஓர்த்துள்ளம்	357
ஒருமையுள் ஆமை	126	ஓர்ந்துகண்	541
ஒலித்தக்கால்	763	கடலன்ன	1137
ஒல்லும் கருமம்	818	கடலோடா	496
ஒல்லும் வகையான்	33	கடனறிந்து	687
ஒல்லும் வாயெல்லாம்	673	கடன் என்ப	981
ஒல்வதறிவது	472	கடாஅ உரு	585
ஒழுக்கத்தின் எய்துவர்	137	கடாஅக் களிற்றிற்	1087
ஒழுக்கத்தின் ஒல்கார்	136	கடிதோச்சி	562
ஒழுக்கத்து நீத்தார்	21	கடிந்த கடிந்	658
ஒழுக்க முடையவர்க்	139	கடுஞ்சொல்லன்	566
ஒழுக்கமும்	952	கடுமொழியும்	567
ஒழுக்கம் உடைமை	133	கடைக் கொட்கச்	663
ஒழுக்கம் விழுப்பம்	131	கணைகொடிது	279
ஒழுக்காறாக்	161	கண்களவு	1092
ஒளியார் முன்	714	கண்டது மன்னும்	1146
ஒளியொருவற்கு	971	கண்டார் உயிர்	1084
ஒறுத்தாரை	155	கண்டுகேட்டு	1101
ஒறுத்தார்க்கு	156	கண்ணிற்கு அணி	575
ஒறுத்தாற்றும்	579	கண்ணின் துனி	1290
ஒற்றினான் ஒற்றி	583	கண்ணின் பசப்போ	1240
ஒற்றும் உரைசான்ற	581	கண்ணுடையர்	393
ஒற்றொற்றி	588	கண்ணும் கொளச்	1244
ஒற்றொற்று	589	கண்ணுள்ளார்	1127
ஒன்றா உலகத்து	233	கண்ணிள்ளின்	1129

கண்ணோட்டத்	572	கழாஅக்கால்	840
கண்ணொடு கண்	1100	களவினால் ஆகிய	283
கண்ணோட்டம் இல்	577	களவின்கண்	284
கண்ணோட்டம் என்	571	களவென்னும்	287
கண்தாம்	1171	களித்தறியேன்	928
கண் நிறைந்த	1272	களித்தானை	299
கண்நின்று	184	களித்தொறும்	1145
கதங்காத்து	130	கள்வார்க்கு	290
கதுமெனத்தாம்	1173	கள்ளுண்ணா	930
கயலுண்கண்	1212	கறுத்தின்னா	312
கரத்தலும்	1162	கற்க கசடற	391
கரப்பவர்க்கு	1070	கற்றதனா லாய	2
கரப்பிடும்பை	1056	கற்றறிந்தார்	717
கரப்பிலா நெஞ்	1053	கற்றாருள் கற்றார்	722
கரப்பிலார் வையக	1055	கற்றார் முன்	724
கரப்பினுங்	1271	கற்றில னாயினும்	414
கரவா துவந்து	1061	கற்றீண்டு	356
கருமஞ் சிதையாமல்	578	கற்றுக்கண்	686
கருமணியிற்	1123	கனவினான்	1214
கருமத்தால்	1011	கனவினும்	819
கருமம் செய	1021	காக்கா பொருளா	122
கருவியும் காலமும்	631	காக்கை கரவா	527
கலங்காது கண்ட	668	காட்சிக் கெளியன்	386
கலந்துணர்த்தும்	1246	காணாச் சினத்தான்	866
கல்லா ஒருவன்	405	காணாதான்	849
கல்லாத மேற்	845	காணிற்குவளை	1114
கல்லா தவரின்	729	காணுங்கால்	1286
கல்லா தவரும்	403	காண்கமன்	1265
கல்லாதான் ஒட்பம்	404	காதல காதல்	440
கல்லாதான் சொற்	402	காதலர் இல்வழி	1224
கல்லார்ப் பிணிக்	570	காதலர் தூதொடு	1211
கல்லான் வெகுளும்	870	காதல் அவரிலராக	1242
கவறும் கழகமும்	985	காதன்மை	507
கவ்வையால்	1144	காமக் கடல்	1164

காமக் கடும்புனல் உய்	1134	குறிப்பறிந்து	696
காமக் கடும்புனல் நீந்	1167	குறிப்பிற் குறிப்புணரா	705
காமக் கணிச்சி	1251	குறிப்பிற் குறிப்புணர்வா	703
காமமும் நாணும்	1163	குற்றமே காக்க	434
காமமென	1252	குற்றம் இலனாய்	1025
காமம் உழந்து	1131	குன்றன்னார்	898
காமம் விடு	1247	குன்றின் அனையாரும்	965
காமம் வெகுளி	360	குன்றேறி	758
காலத்தினாற்	102	கூடிய காமம்	1264
காலம் கருதி	485	கூத்தாட்டு	332
காலாழ் களரில்	500	கூழும் குடியும்	554
காலை அரும்பி	1227	கூறாமை நோக்கி	701
காலைக்குச் செய்த	1225	கூற்றத்தை	894
கான முயலெய்த	772	கூற்றமோ	1085
குடம்பை	338	கூற்றம் குதித்தலும்	269
குடிசெய்வல்	1023	கூற்றுடன்று	765
குடிசெய்வார்க்கு	1028	கெடல்வேண்டின்	893
குடிதழீஇக்	544	கெடாஅ வழிவந்த	809
குடிபுறங்	549	கெடுங்காலை	799
குடிப்பிறந்தார்	957	கெடுப்பதூஉங்	15
குடிப்பிறந்து குற்றத்	502	கெடுவல்யான்	116
குடிப்பிறந்து தன்கண்	794	கெடுவாக	117
குடிமடிந்து	604	கெட்டார்க்கு	1293
குடியாண்மை	609	கேடறியா	736
குடியென்னும்	601	கேடில்விழுச்	400
குணநலம்	982	கேடும் பெருக்கமும்	115
குணமென்னும்	29	கேட்டார்ப் பிணிக்கும்	643
குணம்நாடிக்	504	கேட்டினும் உண்டு	796
குணனிலனாய்	868	கேட்பினுங்	418
குணனும் குடிமை	793	கேளிழுக்கம்	808
குலஞ்சுடும்	1019	கைம்மாறு வேண்டா	211
குழல்இனிது	66	கையறியாமை	925
குறிக்கொண்டு	1095	கைவேல்	774
குறித்தது கூறாமை	704	கொக்கொக்க	490

கொடியார் - உரை 1235
கொடியார் - யின் 1169
கொடுத்தலும் 525
கொடுத்தும் 867
கொடுப்பது அழுக் 166
கொடுப்பதூஉம் 1005
கொடும் புருவம் 1086
கொடையளி 390
கொலைமேற் 551
கொலையிற் 550
கொலை வினையர் 329
கொல்லா நலத் 984
கொல்லாமை 326
கொல்லான் 260
கொளப்பட்டேம் 699
கொளற்கரிதாய் 745
கொன்றன்ன 109
கோட்டுப்பூ 1313
கோளில்பொறி 9
சமன் செய்து 118
சலத்தால் 660
சலம்பற்றிச் 956
சாதலின் இன்னாத 230
சாயலும் நாணும் 1183
சார்புணர்ந்து 359
சால்பிற்கு 986
சான்றவர் 990
சிதைவிடத்து 597
சிறப்பறிய 590
சிறப்பீனும் செல்வமும் 31
சிறப்பீனும் செல்வம் 311
சிறப்பொடு 18
சிறியார் உணர்ச்சி 976
சிறுகாப்பிற் 744
சிறுபடையான் 498
சிறுமை நமக்கு 1231
சிறுமை பல 934
சிறுமையும் 769
சிறுமையுள் 98
சிறைகாக்குங் 57
சிறைநலனும் 499
சிற்றினம் 451
சிற்றின்பம் 173
சினத்தைப் 307
சினமென்னும் 306
சீரிடம் காணின் 821
சீரினும் சீரல்ல 962
சீருடைச் செல்வர் 1010
சீர்மை சிறப் 195
சுடச்சுடரும் 267
சுவை ஒளி 27
சுழலும் இசை 777
சுழன்றும் ஏர்ப் 1031
சுற்றத்தால் 524
சூழாமல் 1024
சூழ்ச்சி முடிவு 671
சூழ்வார் கண் 445
செப்பம் உடை 112
செப்பின் 887
செயற்கரிய செய் 26
செயற்கரிய யாவுள 781
செயற்கை அறிந் 637
செயற்பால செய்யா 437
செயற்பால தோரும் 40
செயிரின் தலை 258
செய்க பொருளை 759
செய்தக்க 466
செய்ததேமஞ் 815

செய்யாமற் செய்த	101	தகுதி என	111
செய்யாமல் செற்	313	தக்காங்கு	561
செய்வானை நாடி	516	தக்கா ரினத்த	446
செய்வினை	677	தக்கார் தகவிலர்	114
செருக்குஞ் சினமும்	431	தஞ்சம் தமரல்லர்	1300
செருவந்த	569	தணந்தமை	1233
செல்லா இடத்து	302	தண்ணந்துறைவன்	1277
செல்லாமை	1151	தந்தை மகற்கு	67
செல்லான் கிழவன்	1039	தந்நலம்	916
செல்லிடத்துக்	301	தந்நெஞ்சத்து	1205
செல்வத்துள்	411	தமராகித்தற்	529
செல்விருந்து	86	தம்பொருள்	63
செவிகைப்பச்	389	தம்மில் இருந்து	1107
செவிக்குணவு	412	தம்மிற் பெரியார்	444
செவிச்சொல்லும்	694	தம்மின் தம்	68
செவியிற் சுவை	420	தலைப்பட்டார்	348
செவியுணவிற்	413	தலையின் இழிந்த	964
செறாஅச் சிறு	1097	தவஞ்செய்வார்	266
செறிதொடி	1275	தவமறைந்து	274
செறிவறிந்து	123	தவமும் தவமுடை	262
செறுநரைக்	488	தவறிலராயினும்	1325
செறுவார்க்கு	869	தள்ளா விளையுளும்	731
செற்றவர்பின்	1256	தற்காத்துத்	56
செற்றாரெனக்கை	1245	தனக்குவமை	7
செற்றார்பின்	1255	தனியே இருந்து	1296
சென்ற இடத்தால்	422	தன்குற்றம் நீக்கி	436
சொலல் வல்லன்	647	தன்துணை இன்றால்	875
சொல்லப் பயன்	1078	தன்னுயிர்க்கு	318
சொல்லுக சொல்லிற்	200	தன்னுயிர் தான்	268
சொல்லுக சொல்லை	645	தன்னுயிர் நீப்பினும்	327
சொல்லுதல்	664	தன்னூன் பெருக்கற்கு	251
சொல் வணக்கம்	827	தன்னெஞ்சறிவது	293
சொற்கோட்டம்	119	தன்னை உணர்த்தி	1319
ஞாலங் கருதினும்	484	தன்னைத்தான் காத	209

தாமின்புறுவது	399
தாம்வீழ்வார் தம்	1191
தாம்வீழ்வார் மென்	1103
தாம் வேண்டின்	1150
தார்தாங்கிச்	767
தாளாண்மை இல்	614
தாளாண்மை என்	613
தாளாற்றித்	212
தானம் தவம்	19
திறனல்ல	157
திறனறிந்து	644
தினற்பொருட்டால்	256
தினைத்துணைநன்றி	104
தினைத்துணையாங்	433
தினைத்துணையும்	1282
தீப்பாலதான்	206
தீயவை செய்தார்	208
தீயவை தீய	202
தீயள வன்றி	947
தீயினாற் சுட்ட	129
தீவினையார்	201
துஞ்சினார்	926
துஞ்சுங்கால்	1218
துணைநலம்	651
துப்பார்க்கு	12
துப்பின் எவனாவர்	1165
துப்புரவு	1050
தும்முச் செறுப்ப	1318
துளியின்மை	557
துறந்தாரின்	159
துறந்தார்க்குத் துப்	263
துறந்தார்க்கும் துவ்	42
துறந்தார் படிவ	586
துறந்தார் பெருமை	22
துறப்பார்மன்	378
துறைவன்	1157
துனியும்	1306
துன்பத்திற்கு	1299
துன்பம் உற	669
துன்புறூஉந்	94
துன்னாத் துறந்	1250
துன்னியார்	188
தூஉய்மை என்	364
தூங்காமை	383
தூங்குக தூங்கி	672
தூய்மை துணை	688
தெண்ணீர் அடு	1065
தெய்வத்தான்	619
தெய்வந் தொழா	55
தெரிதலும்	634
தெரிந்த இனத்	462
தெரிந்துணரா	1172
தெருளாதான்	249
தெளிவி லதனை	464
தென்புலத்தார்	43
தேரான் தெளிவும்	510
தேரான் பிறனை	508
தேவர் அனையர்	1073
தேறற்க	509
தேறினும்	876
தொகச் சொல்லி	685
தொடங்கற்க	491
தொடலைக்	1135
தொடி நோக்கி	1279
தொடிப்புழுதி	1037
தொடியொடு	1236
தொடிற்சுடின்	1159
தொட்டனைத்	396

தொல்வரவும்	1043	நல்லார்கண்	408
தொழுத கை	828	நல்லாறு என	324
தோன்றின்	236	நல்லாறு எனினும்	222
நகல்வல்லர்	999	நல்லாற்றான்	242
நகுதற் பொருட்	784	நல்லினத்தி	460
நகை ஈகை	953	நவில்தொறும்	783
நகையும்	304	நற்பொருள்	1046
நகையுள்ளும்	995	நனவினால் கண்ட	1215
நகைவகைய	817	நனவினால் நம்	1220
நசைஇயார்	1199	நனவினால் நல்காக்	1217
நச்சப் படாதவன்	1008	நனவினால் நல்காத	1213
நடுவின்றி	171	நனவென	1216
நட்டார்குறை	908	நன்மையும்	511
நட்டார்க்கு	679	நன்றறிவாரின்	1072
நட்டார் போல்	826	நன்றாகும் ஆக்கம்	328
நட்பிற்கு வீற்	789	நன்றாங்கால்	379
நட்பிற்குறுப்பு	802	நன்றாற்ற லுள்ளுந்	469
நண்பாற்றா ராகி	998	நன்றிக்கு வித்து	138
நத்தம் போல்	235	நன்றி மறப்பது	108
நயந்தவர்க்கு	1181	நன்றென்ற	715
நயந்தவர் நல்	1232	நன்னீரை	1111
நயனில சொல்லி	197	நாச்செற்று	335
நயனிலன்	193	நாடாது நட்டலிற்	791
நயனுடையான்	219	நாடென்ப	739
நயனொடு நன்றி	997	நாடொறும் நாடி	553
நயன் ஈன்று	94	நாடொறும் நாடுக	520
நயன்சாரா	194	நாணாமை	833
நலக்குரியார்	149	நாணால் உயிரை	1017
நலத்தகை	1305	நாணும் மறந்	1297
நலத்தின்கண்	958	நாணென ஒன்றோ	1254
நலம் வேண்டின்	960	நாணொடு நல்	1133
நல்குரவு	1045	நாண் அகத்தில்லார்	1020
நல்லவை	375	நாண் என்னும்	924
நல்லாண்மை	1026	நாண் வேலி	1016

நாநலம் என்னும் 641
நாம் காதல் 1195
நாளென 334
நிணந்தீயில் 1260
நிலத்தியல்பால் 452
நிலத்தில் 959
நிலவரை நீள் 234
நிலை அஞ்சி 325
நிலை மக்கள் 770
நிலையில் திரியாது 124
நில்லாத வற்றை 331
நிழல் நீரும் 881
நிறைநீர 782
நிறை நெஞ்சம் 917
நிறைமொழி 28
நிறையரியர் 1138
நிறையுடைமை 154
நிறையுடையேன் 1254
நினைத்திருந்து 1320
நினைத்தொன்று 1241
நினைப்பவர் 1203
நீங்கான் வெகுளி 864
நீங்கின் தெறூஉம் 1104
நீரும் நிழல 1309
நீரின்று அமை 20
நுணங்கிய 419
நுண்ணிய நூல் 373
நுண்ணியம் 710
நுண்மாண் 407
நுனிக்கொம்பர் 476
நூலாருள் நூல் 683
நெஞ்சத்தார் 1128
நெஞ்சில் துறவார் 276
நெடுங்கடலும் 17
நெடுநீர் மறவி 605
நெடும்புனலுள் 495
நெய்யால் 1148
நெருநல் உளன் 336
நெருநற்று 1278
நெருப்பினுள் 1049
நோக்கினாள் நோக்கி 1093
நோக்கினாள் நோக்கு 1082
நோதல் எவன் 1308
நோய் எல்லாம் 320
நோய் நாடி 948
நோவற்க 877
நோனா உடம்பும் 1132
பகச்சொல்லி 187
பகல் கருதி 852
பகல்வெல்லும் 481
பகுத்துண்டு 322
பகை என்னும் 871
பகைநட்பாக் 874
பகை நட்பாம் 830
பகை பாவம் 146
பகைமையும் 709
பகையகத்துச் 723
பகையகத்துப் 727
பசக்கமன் 1189
பசந்தாள் 1188
பசப்பென 1190
படலாற்றா 1175
படியுடையார் 606
படுபயன் 172
படைகுடி 381
படை கொண்டார் 253
பணியுமாம் 978
பணிவுடையன் 95

பணை நீங்கிப்	1234	பற்றற்ற கண்ணே	349
பண் என்னாம்	573	பற்றற்றேம்	275
பண்டறியேன்	1083	பற்றிவிடாஅ	347
பண்பிலான்	1000	பற்றுக பற்ற	350
பண்புடையார்ப்	986	பற்றுள்ளம்	438
பதிமருண்டு	1229	பனிஅரும்பி	1223
பயனில பல்லார்	192	பன்மாயக்	1258
பயனில் சொல்	196	பாடு பெறுதியோ	1237
பயன்தூக்கார்	103	பாத்தூண்	227
பயன் தூக்கிப்	912	பாலொடு தேன்	1121
பயன் மரம்	216	பிணிக்கு மருந்து	1102
பரிந்தவர் நல்கா	1248	பிணியின்மை	738
பரிந்தோம்பிக் காக்க	132	பிணையேர்	1089
பரிந்தோம்பிப் பற்	88	பிரித்தலும்	633
பரியதுகூர்ங்	599	பிரிவுரைக்கும்	1156
பரியினும்	376	பிழைத்துணர்ந்தும்	417
பருகுவார்	811	பிறப்பென்னும்	358
பருவத்தொடு	482	பிறப்பொக்கும்	972
பருவரலும்	1197	பிறர்க்கு இன்னா	319
பலகுடை	1034	பிறர்நாணத்	1018
பல சொல்லக்	649	பிறர்பழியும்	1015
பல நல்ல கற்ற	823	பிறவிப்	10
பல்குழுவும்	735	பிறன்பழி	186
பல்லவை கற்றும்	728	பிறன்பொருளான்	141
பல்லார் பகை	450	பிறன்மனை	148
பல்லார் முனிய	191	பீலிபெய்	475
பழகிய செல்வமும்	937	புகழ்இன்றால்	966
பழகிய நட்பெவன்	803	புகழ்ந்தவை	538
பழிமலைந்து	657	புகழ்பட வாழா	237
பழியஞ்சி	44	புகழ் புரிந்த	59
பழுதெண்ணும்	639	புக்கில்	340
பழைமை எனப்	801	புணர்ச்சி	785
பழையம் எனக்	700	புத்தேளுலகத்	213
பற்றற்ற கண்ணும்	521	புறந்தார்கண்	780

புலத்தலின்	1323	பேதைபெருங்	816
புலப்பலெனச்	1259	பேதைப் படுக்கும்	372
புலப்பேன்கொல்	1267	பேதைமை என்ப	831
புல்லவையுள்	719	பேதமை ஒன்றோ	805
புல்லா திராஅப்	1301	பேதமையுள்	832
புல்லிக் கிடந்தேன்	1187	பேராண்மை	773
புல்லி விடாஅப்	1324	பொச்சாப்பார்க்கு	533
புறங்குன்றி	277	பொச்சாப்புக்	532
புறங்கூறி	183	பொதுநலத்தார்	915
புறத்துறுப்பு	79	பொதுநோக்கான்	528
புறந்தூய்மை	298	பொய்படும்	836
புன்கண்ணை	1222	பொய்மையும்	292
பெண்ணியலார்	1311	பொய்யாமை அன்ன	296
பெண்ணிற்	54	பொய்யாமை பொய்	297
பெண்ணினால்	1280	பொருட் பெண்டிர்	913
பெண்ணேவல்	907	பொருட்பொருளார்	914
பெயக்கண்டும்	580	பொருளல்ல வரை	751
பெயலாற்றா	1174	பொருளல்ல வற்றை	351
பெரிதாற்றிப்	1276	பொருளற்றார்	248
பெரிதினிது	839	பொருளாட்சி	252
பெரியாரைப்	892	பொருளானாம்	1002
பெருக்கத்து	963	பொருளென்னும்	753
பெருங்கொடையன்	526	பொருள் கருவி	675
பெருமை உடை	975	பொருள் கெடுத்து	938
பெருமைக்கும்	505	பொருள் தீர்ந்த	199
பெருமைபெரு	979	பொருள் நீங்கிப்	246
பெரும்பொருளால்	732	பொருள் மாலை	1230
பெறாஅமை	1295	பொள்ளென	487
பெறின் என்னாம்	1270	பொறியின்மை	618
பெறுமவற்றுள்	61	பொறி வாயில்	6
பெற்றான்பெறின்	58	பொறுத்தல்	152
பேணாதுபெட்டார்	1178	பொறையொருங்கு	733
பேணாது பெட்பவே	1283	போற்றின்	693
பேணாதுபெண்	902	மகன் தந்தைக்கு	70

மக்களே போல்வர்	1071	மறைப்பேன்மன் கா	1253
மக்கள் மெய்	65	மறைப்பேன்மன் யா	1161
மங்கலம் என்ப	60	மற்றியான்	1206
மடலூர்தல்	1136	மற்றும் தொடர்ப்	345
மடிமடிக்	603	மனத்தது மாசாக	278
மடிமை குடிமை	608	மனத்தானாம்	453
மடியிலா	610	மனத்தின் அமையா	825
மடியுளாள்	617	மனத்துக்கண்	34
மடியை மடியா	602	மனத்துளது	454
மடுத்த வாய்	624	மனத்தொடு	295
மணிநீரும்	742	மனநலத்தின்	459
மணியில் திகழ்தரு	1273	மனநலம் நன்கு	458
மண்ணொடு	576	மனநலம் மன்	457
மதிநுட்பம்	636	மனந்தூயார்க்	456
மதியும் மடந்தை	1116	மனந்தூய்மை	455
மயிர்நீப்பின்	969	மனம்மாணா	884
மருந்தாகி	217	மனைத்தக்க	51
மருந்தென	942	மனைமாட்சி	52
மருந்தோ மற்று	968	மனையாளை	904
மருவுக மாசற்றார்	800	மனை விழைவார்	901
மலரன்ன அருமை	1142	மன்னார்க்கு	556
மலரன்ன முகம்	1119	மன்னர் விழைப	692
மலரினும்	1289	மன்னுயிரெல்	1168
மலர்காணின்	1112	மன்னுயிர் ஓம்பி	244
மலர்மிசை	3	மாதர் முகம்போல்	1118
மழித்தலும் நீட்ட	280	மாலை நோய்	1226
மறத்தல்	303	மாலையோ	1221
மறந்தும்	204	மாறுபாடு	945
மறப்பினும்	134	மிகச்செய்து	829
மறப்பின்	1207	மிகல்மேவல்	857
மறமானம்	766	மிகினும் குறை	941
மறவற்க	106	மிகுதியான்	158
மறைந்தவை	587	முகத்தான் அமர்ந்	3
மறை பெறல்	1180	முகத்தின் இனிய	824

முகத்தின் முதுக்	707	வகையறச்	465
முகநக நட்பது	786	வகையறிந்து தற்	878
முகம் நோக்கி	708	வகையறிந்து வல்	721
முகை மொக்குள்	1274	வகை ஒழிய	240
முடிவும் இடை	676	வகையிலா	239
முதலிலார்க்கு	449	வகையென்ப	238
முயக்கிடைத்	1239	வஞ்சமனத்தான்	271
முயங்கிய	1238	வருகமன்	1266
முயற்சி திருவினை	616	வருமுன்னர்	435
முரண் சேர்ந்த	492	வருவிருந்து	83
முறிமேனி	1113	வரைவிலா	919
முறைகோடி	559	வலியார்க்கு	861
முறைசெய்து	388	வலியார் முன்	250
முறைப்படச்	640	வலியில் நிலைமை	273
முற்றாற்றி	748	வழங்குவ	955
முற்றியும்	747	வழிநோக்கான்	865
முனைமுகத்து	749	வழுத்தினாள்	1317
முன்னுறக்	535	வறியார்க்கொன்று	221
மேலிருந்தும்	973	வன்கண்குடி	632
மேற்பிறந்தா	409	வாணிகஞ் செய்	120
மையல் ஒருவன்	838	வாய்மை எனப்	291
மோப்பக் குழையும்	90	வாராக்கால்	1179
யாகாவா ராயினும்	127	வாரிபெருக்கி	512
யாங்கண்ணின்	1140	வாழ்தல் உயிர்	1124
யாண்டுச் சென்று	895	வாழ்வார்க்கு	1192
யாதனின்	341	வாளற்று	1261
யாதானும்	397	வாளொடென்	726
யாமும் உளேங்	1204	வாள்போல்	882
யாமெய்யாக்	300	வானுயர்	272
யாரினும் காதலம்	1314	வானோக்கி	542
யான் எனது	346	வானின்றுலகம்	11
யான் நோக்குங்	1094	விசும்பின்	16
வகுத்தான்	377	விடாஅது	1210
வகைமாண்ட	897	விடுமாற்றம்	689

விண்ணின்று	13
வித்தும் இடல்	85
வியவற்க	439
விருந்துபுறத்	82
விருப்பறாச்	522
விரைந்து	648
விலங்கொடு	410
வில்லேருழவர்	872
விழித்தகண்	775
விழுப்புண்	776
விழுப்பேற்றின்	162
விழை தகையான்	804
விழையார்	810
விளக்கற்றம்	1186
விளிந்தாரின்	143
விளியுமென்	1209
வினைகலந்து	1268
வினைக்கண் வினைகெட	612
வினைக்கண் வினையுடை	519
வினைக்குரிமை	518
வினைசெய்வார்	584
வினைத் திட்பம்	661
வினைபகை	674
வினையால்	678
வினைவலியும்	471
வீழப்படுவார்	1194
வீழுநர் வீழ	1193
வீழும் இருவர்க்கு	1108
வீழ்நாள் படா அமை	38
வீழ்வாரின்	1198
வீறெய்தி	665
வெண்மை எனப்	844
வெருவந்த	563
வெள்ளத்தனைய இடும்	622
வெள்ளத்தனைய மலர்	595
வேட்ட பொழு	1105
வேட்பத்தாஞ்	646
வேட்பன	697
வேண்டற்க வெஃகி	177
வேண்டற்க வென்றி	931
வேண்டாமை	363
வேண்டிய வேண்டி	266
வேண்டின் உண்	342
வேண்டுங்கால்	362
வேண்டுதல்	4
வேலன்று	546
வேலொடு நின்	552
வைத்தான் வாய்	1001
வையத்துள்	50

♦✦♦



திருவள்ளுவர் நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற முப்பாலால் ஆக்கப்பட்டது. அறமும் பொருளும் காதலும் ஒரு வகுப்பார்க்கோ ஒருமதத்தார்க்கோ உரியன அல்ல. அவை மன்பதைக்கு - உலகுக்குப் பொது.

–திரு.வி.க.

செயல், செயல், செயல் சொல்வது செயலுக்கு வரவேண்டும். செயலுக்கு வருமாறு சொல்ல வேண்டும் என்னும் ஓர் அடிப்படைக் கருத்தினைத் தம் நெஞ்சில் நீளஇருத்திக் கொண்டே குறள் எழுதியவர் வள்ளுவர். செயல் அடிப்படையை யாண்டும் மறவா உள்ளத்தினர் அப்பெருமகன். ஆதலால் செயலே வள்ளுவம் எனச் செய்க.

– மூதறிஞர் வ.சு.ப. மாணிக்கனார்

திருக்குறள் மேலும் விரித்துரைக்க இயலாத கட்டுத்திட்ட அமைப்புடையது. அது சீரிய பளிங்குக் கல்பரப்பு. அதன் ஒரு சிறு கல்லின் அமைப்பிலோ வடிவிலோ வண்ணத்திலோ சிறியதொரு மாற்றம் செய்தாலும் அப்பரப்பின் முழுதுறு அழகும் பழுதுறும். குறள் தூய செந்தமிழால் இயன்றதொரு நூல். நல்லொழுக்கமே விளை நிலமாய் அமைந்த ஒரு நாட்டிலன்றி இத்தகைய நூல் தோன்றாது.

–முனைவர் இலாசரசு

The Printing House, Try - 23. Ph : 2420121